நோயும் மருந்தும்

த.கோ.பரமசிவம்

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு
பதிப்புச் சுழல்நிதி வெளியீடு

3906
07A06
U.G.
3906

மிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

நோயும் மருந்தும்

முனைவர் **த. கோ. பரமசிவம்**
தலைவர், ஓலைச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 005
தமிழ்நாடு

ISBN -81-7090-219-3

எட்டாம் உலகத்தமிழ் மாநாடு -
தமிழ்ப் பல்கலைக்கழகம், பதிப்புத்துறை -
சுழல்நிதி நூல் வெளியீடு எண்: 14

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்: 171
திருவள்ளுவர் ஆண்டு 2025 - நவம்பர் 1994

ஆசிரியர் : முனைவர் த.கோ. பரமசிவம்
தலைவர், ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தலைப்பு : நோயும் மருந்தும்

பதிப்பு : முதல் பதிப்பு 1994

விலை : 50—00

அச்சிட்டோர்: ஸ்ரீ வேலன் பிரஸ்
132, செ.பி. கோயில் தெரு
சிதம்பரம்-608 001
Ph: 20118

முனைவர் **ஔவை நடராசன்** தமிழ்ப் பல்கலைக்கழகம்
துணைவேந்தர் தஞ்சாவூர்

அணிந்துரை

சங்கம் என்ற சொல் முன்னாளில் வழக்கில் இல்லை. மன்றம் என்பது அப்பொருளில் வழங்கியது. அகன்ற இலந்தை மரத்தின் நிழலில்-மன்றத்தில் புலவர்களும், பாணர்களும் குழீஇயிருந்து தமிழ் நலம் பேசி உவந்ததைக் கேட்டு மகிழ்ந்து சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாணர்க்கும், புலவர்க்கும் அழியாப் பெருஞ் செல்வம் வழங்கினான் என்பர். இரத்திநீடிய அகன்றலை மன்றத்துக் கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி, அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன், எங்கோன் வளவன் வாழ்க! நின் பீடுகெழு நோன்றாள் பாடேனாயின் பல்கதிர்ச் செல்வன் படுவது அறியேன்' என ஆலத்தூர் கிழார் பாடும் பாடற் பொருளில் சோழர் பேரூரில் புலவர் கூடல் மிளிர்ந்ததென அறிஞர் கருதுவர். அம்மரபை ஒட்டியே பல்லாண்டுகள் கழிந்து, தண்ணார் தமிழ் வளர்க்கும் தஞ்சை மாநகரில் அருட்டுறைக்குப் பெரிய கோயிற் போலவே தமிழ் நலம்பேணும் அரிய கோயிலாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் திகழ்கிறது.

1981-ஆம் ஆண்டு மாமதுரையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் அறிவுப் பயனாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் தோற்றம் பெற்றது. கடந்த பதின்மூன்று ஆண்டு களில் இப்பல்கலைக் கழகம் உயராய்வு நிறுவனமாக ஓங்கி

வளர்ந்துள்ளது. உலகிலுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் பரவியுள்ளனர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் இப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பண்பாட்டுக் கலையரங்கமாக மிளிர வேண்டுமென்பதும் நமது நோக்கமாகும். எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழக வாகை வளாகத்தில் 1995 சனவரி 1 முதல் 5-ஆம் நாள் வரை நடைபெறுகிறது. இவ்வரிய நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு இப் பல்கலைக் கழகத்திற்குப் பத்து இலட்சநிதி வழங்கிப் பதிப்புச்சுழல் நிதியை அமைத்தது. சுழல் நிதியின் பதிப்பாக 'நோயும் மருந்தும்' என்னும் இந்நூல் இன்று தொடங்கும் உலகத் தமிழ் மாநாட்டின் போது வெளியிடப் படுகிறது. பல்லாண்டுகளாக அச்சேறாமல் இருந்த இந்நூல் தமிழுலகின் கையில் இப்போது கிடைப்பது நமது பேறாகும்.

துறைதோறும் தமிழின் சிறப்பையும் வளத்தையும் உலகுக்கு ஆய்வு நூல்களாகப் படைத்து வழங்குவது பல்கலைக் கழகத்தின் கடமையாகும். பல்கலைக்கழக அறிஞராகிய இந் நூலாசிரியர், முனைவர் த. கோ. பரமசிவம் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன். ஏட்டளவில் இருந்த பனுவல்களின் அச்சு வடிவைக் காணும் கற்றோர் போற்றவும் ஊக்கமளிக்கவும் வேண்டுகிறேன்.

15—12—94 **ஔவை நடராசன்**

தாரீர் தமிழ்ச் சுவடி

தமிழன்பர்களே! வணக்கம்.

அன்றைய அழகு தமிழை, இன்றைய நிலைக்கும் நாளைய அறிவியல் சூழலுக்கும் தக்கவாறு உருவாக்கும் அரிய பெரிய பணியில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது. மொழிக்கென உருவாகும் பல்கலைக்கழகங்களுள் தமிழ்ப் பல்கலைக்கழகம் முதன்மையானது. சீரிய முறையில் திட்டமிட்டு வளர்க்கப்பெற்று வருவது. அன்றைய அழகு தமிழின் அறிவையும், ஆழத்தையும், இலக்கியச் செறிவையும், இனிய பண்பையும், உயர் தனித்தன்மையையும் நாம் உணர்ந்து கொண்டால்தான் நாளைய தமிழைச் செவ்வனே உருவாக்கிச் செம்மொழியாக, அறிவியல் மொழியாக அதை வளர்க்க இயலும்.

இவ்வரிய பணிக்கு முதல் அடிப்படை முன்னோர்தம் அறிவுக் கருவூலமாம் ஓலைச்சுவடிகளைப் போற்றிப் பாதுகாத்தலாகும்.

நம்மிடம் எவ்வளவோ உயரிய இலக்கிய இலக்கணங்கள் உள்ளன. இவை மட்டுமா? இசை, நாடகம், முதலிய நுண்கலை நூல்கள், மருத்துவம், சோதிடம் போன்ற வாழ்வியல் நூல்கள், கட்டடக்கலை, சிற்பக்கலை போன்ற பிற அழகுக்கலை நூல்கள், புத்தம் புது அறிவியல் கலை நூல்கள் போன்று எத்தனை எத்தனையோ முன்பு பல இருந்தன; இப்பொழுதும் இருக்கின்றன.

ஆயின் இவற்றுள் பல நூல்களின் அருமை பெருமை உணராது ஆற்றில் போட்டும் நெருப்பில் கொளுத்தியும் நாம் அழித்து விட்டோம். பாதுகாக்க முடியாமல் கறையானுக்கும், பிற பூச்சிகளுக்கும் இரையான நூல்கள் எத்தனையோ? இவ் அழிவுகளினின்றும் தப்பிப் பிழைத்து இந்நாளில் நூல் வடிவில் வெளிவந்து வாழும் நூல்கள் மிகச்சிலவே.

அறிவியல் யுகத்தில் வாழும் நாம் இனியாவது இவ்வாறெல்லாம் அரிய நூல்கள் அழியாவண்ணம் பாதுகாக்க வேண்டாமா?

உங்களிடம் பாதுகாப்பின்றி அழியும் ஓலைச்சுவடிகள், அச்சு நூல்கள் எவையேனும் இருந்தால் அவற்றைக் குறித்து எங்களுக்குத் தெரிவித்தால், அவற்றைப் பெற்றுக்கொண்டு உங்கள் பெயரிலேயே பதிவு செய்துவைப்போம்; அவற்றை அறிவியல் முறைப்படி நெடுங்காலம் வாழுமாறு பாதுகாப்போம். இன்றியமையாத அரிய நூல்களைப் பதிப்பித்தும் வெளியிடுவோம். நீங்கள் கொடுத்த சுவடிகளை வெளியிடும்போது அந்நூலில் இரண்டு படிகளை உங்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதோடு அந்நூலில் உங்களின் அன்பளிப்பைக் குறிப்பிட்டு நன்றியுடன் பாராட்டுவோம்.

தாங்கள் வழங்கும் சுவடி, கிடைத்தற்கரிய சுவடியாயின் அதற்குரிய ஊக்கத்தொகையை மகிழ்வுடன் அளித்துச் சிறப்பிப்போம்.

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறைக்கு இதுவரை கல்வி நிறுவனங்களும், கோயில், மடம் போன்ற சமய நிறுவனங்களும், தனி அன்பர்களும் சுவடிகளை அன்பளிப்பாக வழங்கித் தம்பெயரைப் புகழுடன் நிலை நாட்டிக் கொண்டுள்ளனர் அந்தப் புகழாளர் பட்டியலில் தங்கள் பெயர் இடம்பெற வேண்டாமா?

உங்களிடம் இல்லையா? கவலை வேண்டா! உங்களுக்குத் தெரிந்தவர்களிடமோ, தெரிந்த இடங்களிலோ ஓலைச்சுவடிகள், பழைய நூல்கள் இருந்தால் அவை பற்றிய தகவலையாவது எங்களுக்கு அளித்து உதவவேண்டுகிறோம்.

தமிழ்ச் சுவடிகளைத் தேடித்தந்து நம் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வளம் சேர்க்க முன் வருவீர்களாக!

அன்புடன்,

ஓலைச்சுவடித் துறையினர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
துறைத்தலைவர், ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 005

UG 3906
1998

உள்ளுறை

	பதிப்புரை	— 1
1.	மருந்துப்பொருளும் குணமும்	— 29
2.	பொது நோய்கள்	— 51
3.	சுவாச நோய்கள்	— 61
4.	தோல் நோய்கள்	— 71
5.	மகளிர் நோய்கள்	— 75
6.	மேக நோய்கள்	— 79
7.	வயிற்று நோய்கள்	— 95
8.	வாத நோய்கள்	— 109
9.	வெட்டை நோய்கள்	— 123
10.	பழைய புதிய அளவைகள்	— 129
11.	மருந்து செய்முறை - மருந்து வகைகள்	— 130
12.	அருஞ்சொல்லடைவு	— 155
13.	நோயும். பிணியும்	— 165
14.	மருந்துப்பொருள்கள்	— 174

பதிப்புரை

நோயும் மருந்தும் என்னும் பெயரில் வெளிவரும் இந்நூல், ஒரு சுவடிப்பதிப்பாகும். தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையில் பாதுகாக்கப்பெற்றுவரும் ஓலைச்சுவடி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, அதிலுள்ள செய்திகளை அதில் கண்டவாறே இந்நூல் தாங்கியுள்ளது. 'பொது மக்களுக்குப் பயன்படும் வண்ணம் மலிவு விலையில் நூல்களை வெளியிட்டு, தமிழ்மொழியை மேலும் வளப்படுத்தவேண்டும்' என்னும் உயரிய திட்டம் ஒன்றை இப்பல்கலைக்கழகத்தின் மாண்புநிறை துணைவேந்தர் அவர்கள் வெளியிட்டார்கள். அத்திட்டத்தை வரவேற்ற ஓலைச்சுவடித்துறை, இவ்வாண்டு இரண்டு சித்த மருத்துவ நூல்களை வெளியிடுவதென்றும், அவை இங்குள்ள சுவடிகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும் என்றும், பொதுமக்களுக்கும் ஆய்வு மாணவர்க்கும் மருத்துவர்க்கும் பயன்படுவதாக அமையவேண்டும் என்றும் முடிவு செய்தது. அம்முடிவின் செயற்பாட்டில் 'குழந்தைகள் மகளிர் மருத்துவம்', 'நோயும் மருந்தும்' என்னும் இரண்டு நூல்கள் உருவாயின.

இத் துறையில் 1000 சுவடிகளுக்கும் மேற்பட்ட சித்த மருத்துவச்சுவடிகள் உள்ளன. அவற்றுள் பொதுமக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் நிலையில் உரைநடையமைப்பில் காணப்படும் மருத்துவச் சுவடிகள் பல·தேர்ந்தெடுக்கப்பெற்றன. அத்தகு உரைநடைச்சுவடிகளுள் நம்பிக்கைக்கும்,வெளியீட்டுக்கும் தகுதி வாய்ந்ததாகக் காணப்பட்ட சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு இவ்விரு நூல்களும் உருவாக்கப்பெற்றன என்னும் செய்தியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிப்பு நோக்கம்

இந் நூலில் காணப்படும் செய்திகளுக்குப் பதிப்பாசிரியர் பொறுப்பாக மாட்டார். சுவடியிலுள்ள செய்திகளை மொழிக் குழப்பமின்றி இன்றைய தமிழில் வெளியிடுவதுதான் இப்பதிப்பின் நோக்கமே தவிர, சுவடியில் கூறப்பட்ட மருந்து உண்மையில் நலம் பயப்பதுதானா? இன்ன நோய்க்கு இன்ன மருந்து பொருந்துமா? இதைச் செய்யும்முறை சரியாகச் சொல்லப் பட்டிருக்கிறதா? இம் மருந்துகலளைப் பயன்படுத்துவதால் பக்க விளைவுகள் ஏதேனும் தோன்றுமா? என்றெல்லாம் நாங்கள் ஆய்வு செய்து இந்நூலை வெளியிடவில்லை. சுவடியில் உள்ள வற்றைப் பலரும் படித்துணர முடியாது. ஆதலின் படித்துணர முடிந்த நாங்கள் பிறரும் எளிதாகப் படித்துணர முடிந்த நிலையில் அதனை அச்சிட்டு வழங்குகிறோம். ஆய்வு செய்வது எங்கள் நோக்கமல்ல; வெளியிடுவதே எங்கள் நோக்கம். இவ் அடிப்படையை இந்நூலுள் நுழையுமுன் உணர்வது நன்றாம். என்றாலும், பொதுமக்களும் பயன்பெறும் வண்ணம் இந்நூல் அமையவேண்டுமே என்னும் கடமையுணர்வு கருதிப் பயன் படுத்தமுடிந்த எளிய மருந்துகள், செய்முறைகள், பழகிய நோய்களுக்கான மருத்துவக்குறிப்புகள் ஆகியவற்றை மட்டுமே தேர்ந்தெடுத்து இந்நூலில் வெளியிடுகிறோம்.

இந் நூலுக்கு அடிப்படையாக அமைந்த சுவடி 'மருந்து செய் முறைகள்' என்னும் சுவடியாகும். அதில் பற்பங்கள், பாஷா ணங்கள், கட்டுகள், உப்புகள் போன்ற அரிய மருந்துகளைப் பற்றியும், அவை செய்யப்பெறும் முறைகள் பற்றியும், பல்வேறு வகைப்பட்ட நோய்கள் பற்றியும் குறிப்புகள் பலவாக உள்ளன. அவை எல்லோராலும் செய்யமுடியாதன; செய்யக் கூடாதன. மருத்துவ அறிவும் பக்குவ உணர்வும் இல்லாத சாதாரண மக்கள் அவற்றைச் செய்யப்புகின் அவை வெவ்வேறு விளைவு களைக்கூட தோற்றுவித்து விடும். இவ் அடிப்படையை உளங் கொண்டு – தீமை பெரிதும் விளைவிக்காத மருந்துகள்–எளிதில் பயன்படுத்தமுடிந்த மருந்துகள், சாதாரண நோய்கள் போன்ற வற்றை மட்டும் தெரிந்தெடுத்து அதில் கூறியவாறே இங்கு வெளியிடப்படுகிறது. எளிமையாகச் செய்ய முடிந்த மருந்துகள்

கூட குறையுடைய சொற்களில், விடுபாடுள்ள தொடர்களில் காணப்பட்டபோது அவை விடப்பட்டன. சித்தமருத்துவம் எத்தகு எளிமை கொண்டது? உணவோடு உணவாக அமைந்த அம் மருந்துப் பொருள்கள் தரும் பயன் எத்தகையது? அப் பொருள்களுள் சிலவற்றை நாம் அன்றாட உணவு முறைகளிலேயே சேர்த்திருப்பது எவ்வாறு? ஏன்? ஒரு பிணியைப் போக்கி மற்றொரு பிணியைத் தோற்றுவித்துவிடும் பிற மருத்துவமுறைகளினின்று சித்தமருத்துவம் எவ்வாறு வேறு பட்டுள்ளது? நம்மிடையே கிடைக்கும் பொருள்களை விட்டு விட்டு எங்கேயோ அரிதாகக் கிடைக்கும் மருந்துக்கு ஏன் காத்திருக்கவேண்டும்? நம மண்ணிலே தோன்றி, நம் முன்னோரால் வளர்க்கப்பெற்ற இதில் காணப்படும் உண்மைகள் பாது காக்கப்பெற வேண்டாமா? போன்ற உணர்வுகளைத் தோற்று விப்பதற்கு ஒரு அறிமுகமாகவே இந்நூல் வெளிவருகிறது. சித்தமருத்துவத்தின்பால் ஆர்வத்தைத் தூண்டுவதே இந்நூலின் நோக்கம் என்றால் அது மிகையாகாது. இனி, மருத்துவச் சுவடிகள் பற்றிய அறிமுகத்தை ஓரளவு காண்போம்.

மருத்துவச் சுவடிகள்

ஓலைச்சுவடிகள் இலக்கிய இலக்கண நூல்களைப் போலவே மருத்துவம், சோதிடம், பிற அறிவியல் நூல்களையும் தாங்கி யுள்ளன. தமிழகத்தில் கிடைத்துள்ள ஓலைச்சுவடிகளில் செம்பாதிச் சுவடிகள் மருத்துவச் சுவடிகளே என்று கூறுமாறு அவை மிகப்பலவாகக் காணக்கிடைக்கின்றன. அச் சுவடிகள் பல்வேறு தரத்தனவாக, நிலையினவாக, வகையினவாகக் காணக்கிடைக்கின்றன. அவற்றுள் காணப்படும் மருத்துவச் செய்திகள் குறைச்செய்திகளாகவும் நிறைவான விரிவான செய்திகளாகவும் உள்ளன. என்றாலும் பல்வேறு அரிய செய்திகளை, ஆய்வுகளை, ஆய்வின் பயன்களை விளக்குவன வாகப் பல சுவடிகள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் இன்றைய அறிவியல் பார்வையில் ஆய்வுசெய்தும், தரத்தை உறுதிசெய்தும் வழங்குதல் இன்றைய அறிவியல் அறிஞர்தம் கடமையாகும். மருத்துவச் சுவடிகளின் மேல் அறிஞர் சிலரின் பார்வையாவது படுதல் வேண்டும், அதனால் பல்வேறு வகைப்

பட்ட கொடிய நோய்களுள் சிலவற்றுக்காவது எளிய தரமான மருந்துகள் உருவாகும். இந்த நோக்கத்தில் தமிழ்ப் பல்கலைக் கழக மருத்துவச் சுவடிகளை அறிமுகமாக ஓரளவு காண்போம்.

தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிகள்

பண்பாடு மற்றும் அறிவியல் பார்வையில் தமிழ்மொழியை உயர்த்திக் காக்க முனைந்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம், ஓலைச்சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாத்து ஆய்வு செய்வதற்கென்றே ஓலைச்சுவடித்துறை என்ற ஒரு தனித் துறையை இயக்கிவருகிறது. இத்துறை 5000 சுவடிகளுக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளை இன்று தொகுத்துப் பாதுகாத்து வருகிறது இவற்றுள் செம்பாதிச் சுவடிகள் மருத்துவச் சுவடிகளேயாம். அச்சுவடிகளையெல்லாம் மேலோட்டமாக ஆய்வு செய்தபோது பல்வேறு மருத்துவக் கொள்கைகள், குணங்கள், பயன்கள் தெரியவந்தன. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் கொள்கையிலும், 'உணவே மருந்து-மருந்தே உணவு' என்னும் செயற்பாட்டிலும் தமிழர் எவ்வளவு அழுத்த மான நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை இங்குள்ள சுவடி களும் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

இங்குள்ள மருத்துவச்சுவடிகள் அகத்தியர், போகர், இராமதேவர், கோரக்கர், புலிப்பாணி, தட்சணாமூர்த்தி, தேரையர் போன்ற பெருஞ்சித்தர்களின் பெயரால், அமைந்த நூல்களைத் தாங்கியுள்ளன. சித்தர்களின் பெயரால் அமைந்த அந்நூல்கள் பெரும்பாலும் விருத்தப்பா வகையால் அமைந்த செய்யுள் நூல்களாகக் காட்சியளிக்கின்றன. சுவடிகளில் காணப் படும் பொதுவான வட்டாரவழக்கு, எழுத்துப்பிழைகள், சொற்பிழைகள் போன்ற பிழைகளுடன் காணப்பட்டாலும் அவை மருத்துவச் செய்திகளில் குறையுடையனவாகத் தோன்ற வில்லை. 50, 100, 200, 500, 1000, 1500 போன்ற பாடல் எண்ணிக்கைகளில் - அகத்தியர் வாலைவாகடம் - 50, அகத்தியர் வைத்திய சூத்திரம் - 300, கொங்கணர் கடைக் காண்டம் - 500, தன்வந்திரி வைத்தியம் - 208, ரோமரிஷி - 500, அகத்தியர் சாலத்திரட்டு - 1200, அகத்தியர் வைத்திய பூரணம் - 400, தட்சணாமூர்த்தி வைத்தியம் - 1500, அகத்தியர்

வைத்திய காவியம் - 1500 போன்ற பெயர்களில் அமைந்துள்ள அவை முறையாகப் படி எடுக்கப்பட்ட சுவடிகளாகும். சில சுவடிகள் பல்வேறு வைத்திய நூல்களிலிருந்து திரட்டிய செய்திகளைத் தாங்கியுள்ளன. அவை வைத்தியத்திரட்டு, அகத்தியர் பாலவாகடத்திரட்டு, வாகடத்திரட்டு, மச்சமுனி திரட்டு, புலிப்பாணி பலதிரட்டு போன்ற பெயர்களில் காணப் படுகின்றன.

பாடல் வடிவில் நூல் முழுமையாக அமைந்த சுவடிகளைப் போலவே அனுபவக் குறிப்புகளாக - உரைநடை வடிவில் நோயைப் பற்றியும், மருந்தைப் பற்றியும், செய்முறைகள் பற்றியும் விளக்கும் நூல்களும் சுவடிகளும் இங்கே காணப் படுகின்றன. நோயும் மருந்தும், நோய்க்குரிய மருந்து, மருந்து செய்முறைகள், ஒரு மருத்துவநூல், பெயர்தெரியா ஒரு வாகடம், மருத்துவச் செய்திகள் போன்ற பெயர்களில் அவை இனம் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. இத்தகு சுவடிகளில் பின்வருமாறு சில குறிப்புகள் காணப்படுகின்றன. அவை ஏடெழுதியோரால் எழுதப்பட்டன.

> 'குணவாகடம் பல பிரதிகளில் பொறுக்கி எழுதினது. கோவிந்தநாயகர் வாகடம். ஆறையூரிலிருக்கும் சரவணக்கவுண்டர் கையெழுத்து'
>
> (மருந்து செய்முறைகள், 2149)

இவ்வகைக் குறிப்புகள் இல்லாதன தெளிவின்றிக் காணப்படு கின்றன. எனினும் நோயும் மருந்தும் தனித்தனியே குறிப்பிடப் பட்டுள்ள ஏடுகள் குறைச் சுவடியாயினும் பயனுடையதாகவே காணப்படுகின்றன.

மருத்துவநூற் கொள்கை

மருத்துவம் என்பது பிறர் நலம் பேணும் பெற்றியது. தமிழ்மருத்துவம் குரு சீட பரம்பரையாக அனுபவப் பக்குவத் தால் வளர்ச்சி பெறுவதும் வாழ்வதும் ஆகும். எதையோ படித்துவிட்டு எங்கேயோ செய்வதல்ல. மருந்தின் குணம், நோயின் குணம் இவற்றை நன்குணர்ந்து பின் விளைவுகள், முறிப்பான்கள் போன்றவற்றையும் தெளிவாக உணர்ந்தாலன்றி

முழுப்பயனையும் அடையமுடியாத மருத்துவம் இது. தேர்ந்த பக்குவமற்ற மருந்துகள் எதிர்விளைவுகளைக் கூடத் தோற்று வித்துவிடும். ஒரே மருந்தைக் காலையில் உட்கொண்டால் ஒரு பலனையும், மாலையில் உட்கொண்டால் வேறொரு பலனையும் தரும். ஒரே நேரத்தில் அனுபானத்தை மாற்றிக் கொடுப்பதாலே மட்டும் மாற்றுப் பலன்களைத் தரும் மருந்துகளும் செய்முறை களும் இதில் காணப்படுகின்றன.

தூதுவளை என்னும் கொடிக்கீரை உணவுப்பொருளாகப் பயன்படுவது. இது சிறந்த மருந்தாகவும் பயன்படும விதத்தை இச் சுவடிகள் சுட்டுகின்றன.

> 'தூதுவ்ளை கற்பம்: தூதுவளை சமூலங் கொண்டுவந்து நிழலில் உலர்த்திப் பொடி செய்துகொள்ளவும். இப் பொடி நெய்யிற்கொள்ள உடம்பு பெருக்கும். தேனிற் கொள்ள உடம்பு மெலியும். இப்பொடி வெண்ணெயி லிட்டுக் காய்ச்சிக் குடிக்க தாது விர்த்திக்கும்'.
>
> (மருந்து செய்முறை, 1937)

இப்படி மிகச் சாதாரணமாகப் பயன்படும் கீரை வகைகள் கூட மருத்துவப் பண்புகளில் சூழல், உட்கொள்வோர் வயது, காலம், உடன் உண்ணும் துணைப்பொருள் போன்றவற்றால் வேறுபட்ட பலன்களைக் கொடுக்கவல்லன என்பதைத் துல்லிய மாக உணர்ந்திருந்தனர் நம்முன்னோர். எனவே, அவர்தம் மருத்துவ நூற்கொள்கை சற்றுக் கடினமாகக் கூட இருந்தது எனத் தோன்றுகிறது. கிட்டத்தட்ட இம் மருத்துவமுறைகள் (இரகசிய) மந்தண அளவிலேயே பரிபாஷைகள் மற்றும் சங்கே தங்கள் போன்றவற்றால் காக்கப்பெற்றன. அனுபவமற்றோர் பயன்படுத்துவதைத் தடை செய்வதே இதன் தொடக்க நோக்கமாகக் காணப்பட்ட போதிலும் பின்னாளில் அவை பிறரால் அறியமுடியாமலேயே மறைந்தொழிவதற்கும் காரண மாக அமைந்துவிட்டதை நாம் இன்று உணரமுடிகிறது. வெயில், மழை, தீ, வெள்ளம் போன்ற இயற்கைக் காரணங்களாலும், படித்துப்பயன்படுத்துவோர் அருகிவிட்டதால் ஏற்பட்ட கவனக் குறைவின்வழிக் கறையானுக்கும் எலிக்கும் இரையாகி அழிந்து

விட்ட எண்ணற்ற சுவடிகள் போலவே இம் மந்தண மருத்துவக் கொள்கையால் அழிந்தொழிந்த மருத்துவ முறைகள் ஏராளமாக இருக்கமுடியும் என்று தோன்றுகிறது.

நூற்குறிப்புகள்

மருத்துவச் சுவடிகளில் காணப்படும் நூல்களில் நூலுக்குப் புறம்பாகவோ அல்லது நூலின் தொடக்கமாக, முடிவாக அமைந்த நிலையிலோ சில குறிப்புகள் காணப்படுவதுண்டு. அவை பெரும்பாலும் பாயிரம் போல நூற்பயனையும் சுட்டும் நிலையில் காணப்படுகின்றன. அக்குறிப்புகள் நூலாசிரியராலோ ஏடெழுதியவராலோ எழுதப்பெற்றிருக்கவேண்டும். நூலாசிரியர் இயற்றிய குறிப்புகள் என்று உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும் அவை அக்காலத்து மருத்துவநூற் கொள்கையை அறிவதற்குத் துணைசெய்தல் காணத்தகும்.

'ஆதியங் கடவு ளானை அடியிணை போற்றி செய்து
தீதுறு வியாதி தன்னைத் தெளிவுடன் அறிய வேண்டிக்
கோதிலா நல்லோர் பேசும் குணமிகு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே நெறியுடன் உரைக்க லுற்றேன்'
(மருத்துவ நூற்றிரட்டு, 2136)

'ஆமென்ற குப்பிமுறை செந்தூ ரங்கள்
அஞ்சுசுண்ணம் அஞ்சுநீர் உருக்கின் குடோரி
தேமென்ற குகைத்திட்டம் குருமுடிக்கும் காலம்
செந்தூ ரக் காலங்கள் சத்திறங்கும் காலம்
ஓமென்ற செயநீர்தான் இறங்கும் காலம்
ஊதுமுறை புடத்திட்டம் ஆகும் காலம்
ஆமென்ற இவையெல்லாம் விவர மாக
அறியாத பயல்களுக்கும் அறிய வேண்டிப்
பாமென்ற என்நூலில் வெளியாய்ச் சொல்லிப்
பாடிவிட்டேன் எழுநூற்றுச் சில்வானம் முற்றே'
(பிரமமுனி வைத்தியம் 700,2137)

இப் பாடல்களில் முதற்பாடல், நூலின் தொடக்கத்தே யமைந்த காப்புப் பாடலாகும். இதில் தீதுறு வியாதியைத் தெளிவுடன் அறிவதற்குரிய முறையை நெறியுடன் உரைக்கும்

செய்தி காணப்படுகிறது. அச்செய்தி குணம் நிறைந்தது, நலம் பயப்பது என்பதையும் காணலாம். அடுத்த பாடல் மருந்து செய்முறைகளை விவரமாகவும் அறியாத பயல்களும் அறிந்து பயன்பெறும் பொருட்டு வெளிப்படையாகவும் வெளியிட்ட செய்தியைக் கூறுகிறது. இவ்விரு பாடல்களும் பிறர் பயன்படுத்தவேண்டும் என்னும் நோக்கிலே நூலியற்றிய செய்தியைப் பறைசாற்றுவனவாய் விளங்குகின்றன. இந்தப் போக்கிலேயே இங்குள்ள சுவடிகளில் வேறுசில பாடல்கள் அவ்வந்நூலின் பயன்பாட்டைச் சுட்டுவது போல காணப் படுகின்றன.

'ஆமப்பா அஞ்ஞூற்றைப் பார்த்தோர்க் கெல்லாம்
அருளொடு பொருளாகும் அத்தம் காணும்
ஓமப்பா வென்று .... ஓங்கும்
ஓங்கியதோர் கவனமிது உலகமெலாம் சுற்றும்
வேமப்பா நல்வினையும் தீவினையும் கெட்டு'

(கொங்கணர் ஐந்நூற்றுத்திரட்டு, 2147)

'வாதந்தான் எண்ப தாகும் வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம் சிறந்திடும் முடக்கு வாதம்
சூதமே யசந்து வாதம் தோன்றிய முகத்தில் வாதம்
போதமாம் வாதம் தீரப் பொருந்திய மருந்து கேளே'

(அகத்தியர் வைத்திய சூத்திரம், 2031)

போன்ற பாடல்கள் அந்நூலின் பயனைச் சுட்டி - நம்மை அழைத்து - உரைப்பதாக - முழுவதும் பிறர்நலம் பேணும் நோக்கிலே எழுதப்பட்டதாக உணர்த்துதல் காணத்தகும்.

இவற்றை மாற்றுகின்ற கோணத்தில் மருத்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட அறிவினையுடையார்க்கே பயன்தருவது, எழுதப் படுகின்ற நூல்களும் அக்குறிப்பிட்ட அறிவினையுடையார்க்கே யன்றிப் பிறர்க்காக எழுதப்பட்டனவல்ல என்னும் கொள்கையை வலியுறுத்துவது போல - கிட்டத்தட்ட ஆசிரியர் மாணவர் முறைக்கு மட்டுமே உரியது போல அமைந்துள்ள குறிப்புகளும் சில மருத்துவ நூல்களில் காணக்கிடக்கின்றன.

'வணக்கமுள்ள இந்நூலை வெளிவிடாதே
வஞ்சருடன் பேசாதே வாயாடாதே
இணக்கமில்லா மாந்தருடன் கூட வேண்டாம்
இனமுள்ள வைத்தியநூல் ஈய வேண்டாம்
மணக்கமலா மதிதனிலே மனத்தை வைத்து
வயித்தநூல் எண்பதுவும் வகையாய்ப் பார்த்துத்
தனக்குமிது பொருளெனவே வணங்கிப் போற்றி
சதாகாலம் குருபதத்தில் சார்வாய் முற்றே'

(இராமதேவர் சூத்திரம், 611)

இப் பாடல் வைத்திய நூல்களை வெளியிடக்கூடாதென்றும், தகுதியற்றவருடன் மருத்துவர் உறவாடக்கூடாதென்றும், மருத்துவ நூல்களைப் பிறர்க்குக் கொடுக்கக்கூடாதென்றும் கட்டுப்படுத்தும் வகையைக் காட்டுகிறது. இன்னொரு பாட்டு 'தகுதி வந்தபின் கொடுக்கலாம்' என்னும் குரு சீட பரம்பரையின் தன்மையைக் காட்டுவதாகக் காட்சியளிக்கிறது.

'கண்டக்கால் வாதமெல்லாம் அடிக்கீழ்ப் போற்றுங்
கருவான சவுக்கார மகிமை தன்னை
விண்டக்கால் மயங்கிடுவாய் நூல்கொ டாதே
வேதாந்த ஞானியென்றால் ஈவர் பாரு
தொண்டுசெய்து பதினாறு வருஷம் காத்து
சோதித்துப் பின்பவர்க்கு ஈவாய் அப்பா
சண்ட சண்ட மாருதம்போல் வெளிய தாகச்
சாற்றினதோர் வைத்தியம்ஐம் பதும்தான் முற்றே'

(தட்சிணாமூர்த்தி வைத்தியம், 2034)

ஒரு மாணவன் பதினாறு ஆண்டுக்காலமும் உடனிருந்து தொண்டு செய்து, குருவின் நம்பிக்கையைப் பெற்ற பின்னரே - குறிப்பிட்ட சோதனைகளையும் வெற்றி கண்ட பின்னரே உரிய மருத்துவ முறையைப் பெறமுடியும் என்ற தகுதியுணர்வை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

சில சுவடிகளில் காணப்படும் இத்தகு பாடல்கள் தடையை மீறி மருத்துவத்தைப் பிறர்க்கு வெளியிட்டால் வரும்

கெடுதியைக் சுட்டுவது போலப் பழியைச் சுமத்துவதுபோல அச்சமூட்டுகின்றன.

'காணேநீ இந்நூலை யார்க்குங்காட் டாதே
காட்டினால் ரவிகோடி நரகம் எய்தும்
வீணேநீ வாசிதனை அங்கென் றூணி
வேதாந்த சற்குருவை நித்தம் பூசி'
(பிரமமுனி சில்வானம், 2145)

'முற்றாகும் லோகமதில் முறைகாட் டாதே
மோசம்வரும் மோசம்வரும் உண்மை காணும்
பற்றாகச் சித்தர்பலர் பகர வில்லை
பயபக்தி யோடிதனைப் பணிந்து நில்லு
நற்றான துலாராசி கன்னி ராசி
நாயகரைத் தேடியிதை நல்க வேணும்
அற்றாது சொல்தவறிப் பலபே ருக்கும்
அளித்தால்என் சாபம்வரும் அறிந்து கொள்ளே'
(காளமேகேசர் இராசிகம், 2132)

இப் பாடல்களையெல்லாம் காணும்போது ஏதோ ஒரு தகுதிக்காக இத்தடைகள் உருவாக்கப்பட்டன என்பது புலப் படுகிறது. எனினும் காலவெள்ளத்தில் அத்தகுதித் தடைகளே வளர்ச்சியைத் தடைசெய்யும் தடைக்கற்களாகவும் அமைந்து விட்டன. இரகசியமுறை மருத்துவத்தால் பிறருக்குத் தெரியாது அழிந்த மருத்துவ முறைகளை நினைந்து நினைந்து உருக வேண்டியுள்ளது. இப்போது எஞ்சியுள்ள நூல்களையாவது அறிவியல் அறிஞர் சிலர் போற்றி ஆய்ந்து நம் மருத்துவ முறைகளைக் காப்பாற்ற மாட்டார்களா? என்னும் வேட்கையில் அறிமுக நிலையில் ஈண்டுச் சில எளிய மருந்துகளின் பயன்கள் சுட்டப்படுகின்றன.

நோயும் மருந்தும்

தமிழ் மருத்துவர்கள் நோய்க்குரிய மருந்தைத் தேர்வு செய்யுமுன் நோய் இன்னதுதான் என்பதை உறுதி செய்வதில் முனைப்பாக இருந்தனர். ஒவ்வொரு நோயிலும் உள்ள நுட்ப

மான வேறுபாடுகளைக் கண்டுணர்ந்து வகைப்படுத்தினர். நாடியின் தன்மையை ஒட்டி நோயின் அடிப்படையை மூன்றில் அடக்கியபோதிலும் நோயின் வகைகள் பல என்றனர். சுரத்தில் இத்தனைவகை, கண்ணோயில் இத்தனை வகை, வயிற்று வலியில் இத்தனை வகை என்று துல்லியமாகக் கண்டிருந்தனர். நோய் நாடி நோய்முதல் நாடி – அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும் தன்மையை முற்றாக உணர்ந்திருத்தலே மருத்துவரின் தலையாய தகுதிப்பாடாகக் கருதினர். பூத வியலுடன் உளவியலையும் இணைத்துப் பார்த்து அவர்கள் நோய்களையும் மருந்துகளையும் கணித்த தன்மை வியப்பூட்டு கிறது. வாத சுரத்தின் தன்மையை ஒரு சுவடி இவ்வாறு காட்டுகிறது.

> 'வாத சுரத்தின் குணம்: சாவது துணிவது பயப்படும், துணுக்கென்பதும், ரோமங்களை நெறிப்பதும், நடுங்கு வதும் தலைநோக்காடும் சீழ்ச்சதுவும், கைகால்விலாவும் கோடாலிபோட்டுப் புளுக்குறாப்போல (பிளப்பது போல) நோவதும் தண்ணீர் தாகமும் உண்டாகும். தொப்புள் மூத்திரம் கடுக்கும்'.
>
> (மருத்துவ நூல், 1757

இக்குறிப்பு விளக்கம் நோயைத் துல்லியமாக அறிவதில் எவ்வளவு அக்கறையுடன் நம்முன்னோர் ஈடுபட்டிருந்தனர் என்பதைக் காட்டும். நோயாளியின் சிறுநீர், மலம், உடல் மாறு பாடு-வலி போன்ற புறவேறுபாடுகளுடன் அவனது மன நிலையைப் படிப்பதும் (நோயறிந்து) மருத்துவம் செய்வார் அறியவேண்டுவது என்பதை உறுதி செய்வதாகும்.

தமிழ் மருந்துகள் பெரும்பாலும் வீட்டிலுள்ள துணைக் கருவிகளைக் கொண்டே செய்யமுடிந்த எளியமுறைகளைக் கொண்டன. குடிநீராகக் காய்ச்சுதல், பொடி செய்தல், அரைத்தல், மெழுகாக்குதல், மாத்திரையாக உருட்டல் போன்ற முறைகளில் பெரும்பாலான மருந்துகள் அடங்கிவிடுகின்றன. சரீர எரிவுக்கு எளிய மருந்து தயாரித்துப் பயன்படுத்தும் விதத்தை ஒரு சுவடி இப்படிக் கூறுகிறது.

'வல்லாரை கொண்டு வந்து ஒரு சட்டியில் போட்டு இரண்டுபடி தண்ணீர் வார்த்து இதில் கொத்து மல்லிகை சுக்கு ஒரு சீலையில் போட்டு அண்டங்கட்டி கூடப்போட்டு வேகவைத்து, வெந்தபின்பு இறுத்துக் குடிக்கவும். இதுக்குச் சரீர எரிவு நிற்கும். கருப்புப் புளி விடவும்' (மருந்து செய்முறை, 536)

பதார்த்த குணம்

மூலிகைகளின் பொதுவான மருத்துவக் குணங்களைச் சில சுவடிகள் அறிமுகப்படுத்துகின்றன. உணவுப்பொருள்களின் கலோரி அளவு, அவற்றிலுள்ள கொழுப்பு, புரதம், தாதுப் பொருள்கள் போன்றவற்றை அளந்து இக்காலத்துக் கூறுவது போல ஒவ்வொரு தாவரத்தின் பொதுக்குணம் பிறபொருள் களோடு சேரும்போது உண்டாகின்ற மாற்று விளைவுகள், அதன் ஒவ்வொரு உறுப்பின் (இலை, பூ, காய், கனி, பட்டை, வேர் போன்ற) தனித்தனிக் குணங்கள் போன்றவை பற்றி விளக்கமாகத் தெரிவிக்கும் முறையை இம்மருத்துவச் சுவடிகளில் நாம் காணலாம்.

அரைக்கீரையின் குணத்தையும் பயனையும் ஒரு வெண் பாவில் அமைத்துக் காட்டுகிறது ஒரு சுவடி.

'காய்ச்சல் குளிர்சன்னி கைநோய் பலபிணிக்கும்
வாய்ச்சகறி தானாய் வழங்குமே - காச்சமில்லாது
எல்லவர்க்கும் நல்ல இதமாம் இதமென்றே
சொல்லும் அரைக்கீரைச் சுவை'

(மருத்துவநூல், 1758)

அருகம்புல்லின் வேர் மிகச் சிறந்த மருந்தாகப் பயன் படுவதை ஒரு குறிப்பு காட்டுகிறது. அதன் வேரைப் பாலில் அரைத்துண்ண உடல் வலிவு பெற்று நரம்பு இறுகி நாடி வலுப் பெறும் என்றும் அதனால் பித்தம் குறையும், உடற்சூடு தணியும்; வாயூறல், மூலச்சூடு போன்றனவும் நீங்கும் என்றும் அச்சுவடி குறிப்பிடுகிறது.

இவ்வாறு, பல்வேறு தாவரங்களின் குணாதிசயங்கள், பயன்கள், பயன்படுத்தும் முறைகள் போன்றவற்றைப் பல்வேறு சுவடிகள் குறிப்பிடுகின்றன. ஆயின், சரியான அளவு, நேரம், போன்ற குறிப்புகள் தெளிவாக்கப்படாமல் பல சுவடிகளில் செய்திகள் காணப்படுகின்றன. அவை பட்டறிவால் பெறப்பட வேண்டும். அவற்றையெல்லாம் மருத்துவ அறிவியல் அறிஞர்கள் தாய்நாட்டு மக்கள்மேல் அக்கறை கொண்டு, தாய்நாட்டு மருத்துவ முறைகளில் நம்பிக்கை கொண்டு-மேம்போக்ககாக் கண்டு எள்ளி ஒதுக்காமல் - ஆய்வு முறைகளின் இன்றைய அறிவியல் வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்தி உண்மைகண்டு தெளிவு செய்தல் வேண்டும். அத்தகு அறிஞர் பலர் தமிழன்னைக்கு வாய்க்கவேண்டும்.

நோயும் மருந்தும் - சுவடி விவரம்

இந்நூலுக்கு அடிப்படையான சுவடி ஒன்றே; இது தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் பதிவு எண் 150-இல் மருந்து செய்முறைகள் எனும் பெயரில் பதிவு செய்யப்பெற்று விளக்க அட்டவணையுள் இடம் பெற்றதாம். இச் சுவடி இங்கு 1982-ஆம் ஆண்டு வந்து சேர்ந்தது.

சுவடி வரலாறு: திருவரங்கத்தைச் சார்ந்த டாக்டர் ஆர். எஸ். இ. ராஜன்பாபு என்பவர் தம்மிடமிருந்த 109 ஓலைச்சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார். அவர்தம் அன்பளிப்புத் தொகுதியுள் ஒன்றாக இடம் பெற்ற சுவடியே இது. இச்சுவடி அவரிடம் இருந்த வரலாறு உணரக்கூடவில்லை. அவர் தம் முன்னோர் தொகுத்து வைத்த சுவடியாக இருத்தல் கூடும். ஆயின், இதை எழுதியவர் அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தவர்தானா என்பது புலப்படவில்லை. இவ் ஓலைச்சுவடி காப்பேடுகளோ, காப்புச்சட்டங்களோ இன்றி ஏடுகளைச் சேர்த்துக் கட்டிய கட்டாக மட்டுமே காட்சியளிக்கிறது

சுவடிகளின் முன்னும் பின்னுமாக அமையும் குறிப்புகள், ஏடெழுதியோர் பெயர், ஏடுடையார் பெயர், எழுதுவித்தவர் பெயர், ஏடெழுதிய காலம், ஏட்டின் மூலம் போன்ற பல செய்தி

களைத் தருவதாக அமையும். இச்சுவடியில் அத்தகு குறிப்புகள் ஏதும் இல்லாததால் சுவடி வரலாறு குறித்து ஏதும் உணர முடியவில்லை. மொழிநிலையில் பெரும்மாற்றம் ஏதும் இல்லாததால் இது எவ்வட்டாரத்தைச் சார்ந்த சுவடி என்பதும் அறிய முடியவில்லை. எழுத்தமைதியைக் கொண்டு பார்க்கும்போது இச்சுவடி 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் எழுதப்பட்டதாகக் கருத முடிகிறது.

சுவடியில் சொல்லப்பட்ட கருத்துகள் ஓர் ஆசிரியருக்குரியனவாகவோ, ஒரு தனிப்பட்ட மருத்துவர்க்கு உடைமையானவையாகவோ கருத முடியவில்லை. அவை, பல்வேறு சுவடிகளையும், புத்தகங்களையும் பார்த்து எழுதிய குறிப்புகளாகத் தோன்றுகின்றன.

'கண்மாத்திரை கட்டைபுத்தகத்தில்
ஏடு 224-221 பார்க்கவும்'

என்னும் குறிப்பு படர்தாமரைக்கு மருந்து கூறி முடித்தவுடன் ஏட்டெண் 49-ல் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறே சில மருந்துகளில் வேறு நூற்பெயர்களும் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. 'ஏகமூலி குணம்' என்பதில் மலைவாகடம் என்பதும்; கெற்பமுண்டாக என்பதில் புலிப்பாணி 500இல் என்பதும்; பீனிசத்துக்குத் திரி என்பதில் பிரமமுனியில் திரி என்பதும் நூற்பெயருடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறே பிற மருந்துப் பெயருடன் நூற்பெயரை இணைத்து எழுதப்பட்டுள்ள இடங்களும் இச் சுவடியில் காணப்படுகின்றன.
சான்றாக,

'புலிப்பாணியில் கண்ட தந்தப்பொடி எனவும்,
அகத்தியர் பூரணம் 400-ல் திரிகடுகாதிலேகியம் எனவும்,
இரத்தினச் சுருக்கம் கபாட மாத்திரை எனவும்,
பரிபூரணம் 400-ல் மேகயெண்ணெய் எனவும்'

வருகின்ற குறிப்புகள் உள்ளன. இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போது பல்வேறு சித்தமருத்துவ நூல்களைப் படித்து அனுபவக் குறிப்புகளாக எழுதிவைக்கப்பட்ட சுவடியாக இதைக்

கருதவேண்டியிருக்கிறது. இச்சுவடிக்கு வேறு மாற்றுச்சவடிகள் இருப்பதாகத் தோன்றவில்லை. இச் சுவடி பற்றிய வரலாறு இவ்வளவே கூறமுடிம்.

சுவடி நிலை

இச் சுவடி நாட்டுப்பனை ஓலையால் அமைந்த 106 ஏடுகளைக் கொண்டதாகும். இருபுறமும் எழுதப்பெற்றுள்ளதால் 212 பக்கமும் செய்திகளைத் தாங்கிய சுவடியாக அமைந்துள்ளது. ஏடுகள் ஒன்றுபோலவே 29.5. செ.மீ. நீளமும் 3 செ.மீ. அகலமும் கொண்டதாக இருக்கின்றன. நன்கு பதப்படுத்திய ஏட்டின்மீது தெளிவாக எழுதப்பெற்றுப் பின் மை பூசப்பட்ட நிலையை ஒவ்வோரேட்டிலும் காணமுடிகிறது. ஏடுகள் அனைத்தும் வெளுறிய பழுப்பு நிறத்தில் காணப்படுகின்றன. அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பழுப்பு நிறத்திலும் சில ஏடுகள் காணப்படுகின்றன. ஆயின், கையெழுத்து மாற்றமோ காலமாற்றமோ இருப்பதாக உணரமுடியவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் பூச்சியரித்த சுவடிகள் காணப்பட்டபோதிலும் சுவடியின் நிலை நன்றாகவே உள்ளது.

முதல் ஏட்டின் முதற்கட்டம் பின்வரும் செய்தியில் தொடங்குகிறது. பெண்திரள என்னும் (பக்கத்) தலைப்பில்,

> 'திரளாத பெண்ணுக்குப் பூசணிக்காய்ச்
> சாறும் நல்லெண்ணெயும் 3 நாள்
> கொடுக்கத் திரளுவாள்'

இறுதி ஏட்டின் இறுதிப்பகுதி கவுசிகர் குழம்பு என்ற தலைப்புடன் தொடங்கி,

> 'கடுக்காய், கடுகு, இந்துப்பு, பெருங்காயம்,
> வெங்காரம். சூதம், மனோசிலை. அத்தித்
> திப்பிலி, தாரம், சீரகம், கடுகுரோகணி,
> சுத்தித்தவாளம், அதில்பாதி வறுப்பு,
> சரக்கு சரிசமன், வாளமும் சரி......' என்று

டிவுறாமல் காணப்படுகின்றது. முதல் ஏட்டின் காப்பேடும் இறுதி ஏட்டின் காப்பேடும் கிடைத்திருப்பின் இச் சுவடி பற்றிய

பல செய்திகள் தெரிந்திருக்கக்கூடும்; அதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை போலும்.

எழுத்துநிலை

இச் சுவடி இருபுறமும் எழுதப்பெற்ற ஏடுகளைக் கொண்டது. ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டுக்கு மேற்பட்ட கட்டங்களாகப் பிரித்துக்கொண்டு எழுதப்பெற்றுள்ளது. ஏட்டின் இடதுபுறத்தில் அப் பக்கத்தில் சொல்லப்படும் செய்திகளுக் கேற்ற சிறுதலைப்புகள் எழுதப்பெற்றுள்ளன. சில பக்கங்களில் கீழே ஒரு தலைப்பு மட்டுமே எழுதப்பட்டுள்ளது. சில பக்கங் களில் ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புகள் வரிசை முறையில் எழுதப்பட்டுள்ளன. பிற சுவடிகளில் காணப்படுவது போலத் தலைப்புக்கு மேலும் கீழும் இடம் காலியாக விடப்பட்டுள்ளது. ஆயின், தலைப்புகள் உடைக்காமல் எழுதப்படவில்லை. இடத்துக்குத்தக அநுபா என்றும், உயிர்மெய்யையே பிரிப்பது போல் ணம

அ நு ப லி ங க

ா ன ம் என்றும் . கு ழ ம

பு

என்றும் பலவாறு எழுதப்பட்டுள்ளன. அவை பழக்கமில்லார் படிக்கும்போது வேறு பொருளைத்தருமாறும் காட்சியளிக்கக் கூடும். ஒரு பக்கத்திற்கு 5, 6, 7, 8, 9 வரிகள் வரை எழுதப் பட்டுள்ளன. ஒவ்வொரு செய்திக்கும் முடிவில் சிறுகோடுகள் போட்டுமுடிக்கப் பெற்றுள்ளது. அடுத்த செய்திக்குச் செல்லுமுன் தலைப்பு எழுதப்பட்டு அத்தலைப்புக்கு அருகே சிறு வட்டம், புள்ளி, கோடு இவற்றுள் ஒன்று போட்டுக் காட்டப்பட்டுச் செய்திகள் தனித்தனியாகவும் தொடர்ந்தும் எழுதப் பட்டுள்ளன.

எழுத்து நிலையைப் பொறுத்தவரை சுவடி எழுத்து களினின்று இங்குக்காணப்படுவன பெருமாற்றங்கள் பெற்றதாகத் தோன்றவில்லை. வழக்கம்போல் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடாமலும், சீர்களுக்கு, சொற்களுக்கிடையே இடைவெளி யிடாமலும் எழுதப்பட்டுள்ளன. ஆயின், சொற்களின் இறுதி

எழுத்து பல இடங்களில் புள்ளியிடப்பெற்ற நிலையில் காட்சியளிக்கிறது. ஒரு பக்கத்திலே கூட புள்ளி வைத்ததும் புள்ளி வைக்காததுமாகிய இருநிலைகளைக் காண முடிகிறது. வெங்காயச்சாறு, எலுமிச்சம்பழநீர் - இவை வெஙகாயசசாறு எனவும், எலுமிசசபழநீா எனவும் புள்ளியிடாமல் எழுதப் பட்டுள்ளன. அப் பக்கத்திலேயே அடுத்த கட்டத்தில் வரும் மேகநோய் என்பது மேக நோய் என்று புள்ளியுடன், 'மூன்று நாள் உண்ணவும்' என்பது 'மூன்று நாள் உண்ணவும்' என்று புள்ளியிடப்பெற்றும் எழுதப்பட்டுள்ளன. எனவே புள்ளியிடும் கொள்கையில் இவ்வேடு எழுதியோர்க்கு ஒரு நிரந்தரப் பழக்கம் இருந்ததாக உணரமுடியவில்லை. குறில் நெடில்கள் வித்தியாசம் காட்டப்பட்டுள்ளன. ஒற்றைக் கொம்பு, இரட்டைக்கொம்பு மாறுபாடும், உகர ஊகாரங்களின் (அரையாப்பு, பூரம்) மாறுபாடும், மு,மூ,ழு,ழூ இவற்றின் மாறுபாடும் தெளிவாகத் தெரியுமாறு எழுதப்பட்டுள்ளது. 'ா' காலுக்கும் 'ர' வுக்கும் மாறுபாடில்லை. ஒன்றுபோலவே எழுதப்பட்டுள்ளன. ஆயின், சில சொற்களில் 'ர' வில் கீழ்க்கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளது.

கட்டப்பிரிவு தொடர்ந்து நேர்க்கோட்டில் அமையுமாறு தொடங்கப்பட்டுள்ளது. ஏடு முழுக்கக் கையெழுத்து ஒன்று போலவே காணப்படுகின்றது.

எழுத்துப்பிழைகள் குறைவாக இருப்பது இச்சுவடியின் தனிச்சிறப்பாகும். ழ, ள மயக்கமோ ர, ற மயக்கமோ, அதிகம் இடம் பெறவில்லை. அகத்தியர் குழம்பு என்பதை அகத்தியர் குளம்பு என்று மாற்றியோ, பலம் என்பதைப் பழம் என்றோ, குதிரைக் குளம்பு என்பதைக் குதிரைக் குழம்பு என்று மாற்றியோ பற்பம் என்பதை பர்பம் என்றோ எழுதப்பெறவில்லை. அப்படி மாற்றி எழுதியிருந்தால் மருந்தும் நோயும் எவ்வளவு பாடுபட்டி ருக்கும்; அதற்காகவே இவ்வேடு எழுதியோரை அவர்தம் மொழித்தெளிவுக்காக எவ்வளவும் பாராட்டலாம். வராகன் என்பது விராகன் எனவும் கழஞ்சு என்பது களஞ்சி எனவும் எடை என்பதில் வரும் 'எ' (சமனெடை – சமனிடை) இஆக-

பேச்சு வழக்குப் போலவே எழுதப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் தெளிவு கருதியும், மொழித்தூய்மை கருதியும் ஆங்காங்கு திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

வல்லின ஒற்று மிகுமிடம் மிகாவிடங்கள் பற்றிய விதி இத்தகு சுவடிகளில் முறைப்படி கடைப்பிடிக்கப்படுவது குறைவு. ஆயின், இச்சுவடியில் பெரும்பாலும் அவ்விதி கடைப்பிடிக்கப் பட்டுள்ளது மகிழ்ச்சி தருவதாகும்.

எழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணையாமல் கோவையாக அமையாமல் தனித்தனியாகவும், இடைவெளியின் றியும், எழுதப்பட்டுள்ளன. இவ்வமைப்பு சுவடிப்பழக்கம் குறைந் தார்க்கும் எளிதில் படித்துணர வாய்ப்புத் தருவதாக எண்ணி மகிழலாம்.

செய்தித்தேர்வு

இப் பதிப்புக்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பெற்ற ஏடு மூலிகைகளின் குணங்கள், நோய்களுக்கான மருந்துகள், மருந்துவகைகளின் வடிவங்களாம் குடிநீர், பற்பம், இரசம், பாடாணம் சுத்திமுறைகள் போன்ற பலவற்றையும் தொகுத்து வைத்திருக்கின்ற நிலையில் காணப்படுகிறது. அவற்றுள் சில அருமையாகவும், சில செய்வதற்குக் கடினமாகவும், சில வழக்கற்ற நிலையிலும், சில தொடர்பில்லாமலும், சில எளிமை யாகவும், சில குறையாக விடுபட்டும் சில பூச்சியரிப்பால் குறை பட்டும் பல நிலைகளில் காணப்படுகின்றன. மருந்துகளின் செய் முறைகளிலும் சிக்கலுக்குரிய பல மருந்துகளும் முறைகளும் கூறப் பட்டுள்ளன. அறிமுக நிலையில் அவை எல்லாம் பயன்படுமா? மருத்துவப் பட்டறிவு சிறிதுமில்லாதார் பயன்படுத்தினால் பக்கவிளைவுகள் தோன்றுமோ என்றெல்லாம் ஐயப்பாடு தோற்றும் இடங்களும் உள்ளன. தெளிவில்லாத அவற்றை முறையாகக் கற்ற மருத்துவர்களே கையாளவேண்டும். பிறர் செய்வதும் பயன்படுத்துவதும் முழு நன்மையை உண்டாக்கும் என்று கூறமுடியாது.

இந் நூல் மலிவுப்பதிப்பாக வருவதால் பலதரப்பட்டோரும் படித்துணரவேண்டிய சூழல் இருப்பதால் அத்தகு கடினமுறை

களையும் மருந்துகளையும் வெளிப்படுத்துவது அறிவுடைமை யாகத் தோன்றவில்லை. எனவே, அதிலுள்ள செய்திகளை- இன்னின்ன எடுத்துக்கொள்ளலாம் - இன்னின்ன இப்பதிப்பில் ஒதுக்கப்படலாம் என்று முடிவு செய்து, எளிய மருந்துகளையும், யாவராலும் செய்யமுடிந்த மருந்து செய்முறைகளையும் மட்டும் பிரித்தெடுத்து பதிப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நூலிலுள்ள நோய்களும் அவற்றுக்குரிய மருந்துகளும் இச்சுவடியிலிருந்து இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்ட திரட்டு என்பதை உணர்தல் வேண்டும்.

நூலமைப்பு

நோயும் மருந்தும் என்னும் இந் நூலின் தலைப்பு புதிதாகச் சூட்டப்பெற்றதேயாம். சுவடியின் குறிப்புகளில் இச்சுவடிக்குரிய பெயர் ஏதும் காணப்படவில்லை. ஆதலின் மருந்து செய்கின்ற முறைகள் பற்றி அதிகம் பேசுகின்ற இச்சுவடி அட்டவணை செய்யப்பெற்றபோது 'மருந்துசெய்முறை' என்று பெயரிடப் பெற்றது. இப்பதிப்புக்கு இச்சுவடியிலிருந்து நோய்களும் அவற்றுக்குரிய மருந்துகளும் மட்டும் திரட்டப்பட்டதால் 'நோயும் மருந்தும்' என்னும் தலைப்பில் வெளியிடுவதாயிற்று.

இச் சுவடியில் காணப்படும் நோய்கள் வகைப்படுத்தப்பட்டு, முறையாக ஒன்றன்பின் ஒன்றாக விளக்கப்பட்டுள்ளன என்று சொல்ல முடியாதபடி அமைந்துள்ளன. வயிற்றுக்கடுப்புக்கு ஓரிடத்து குறிப்பிட்ட ஒரு மருந்தைக் கூறும் சுவடி அதே நோய்க்கு வேறொரு இடத்தில் மாற்றுமருந்தொன்றைக் கூறியுள்ளது. ஒரு நோய்க்கு ஓரிடத்திலேயே பல மருந்துகளை வேறு, வேறு என்று சுட்டப்பட்ட நிலையில் தொகுத்தும் தந்திருக்கிறது. ஒரு மருந்திலேயே குணமாகும் சில நோய்களை ஓரிடத்திலே வரிசைப்படுத்தியும், அம்மருந்தின் செய்முறையைக் கூறிவிட்டு அதனால் தீரும் நோய்களைப் பட்டியல் போட்டுக் காட்டியும் கூறியுள்ளது. ஆயின், இந்நூலில் அவை முறைப் படுத்தப்பட்டு, வயிறு தொடர்பான நோய்கள், தோல் தொடர்பான நோய்கள், சுவாச உறுப்புகள் தொடர்பான நோய்கள் என உறுப்படிப்படையில் தொகுக்கப்பட்டு முறைப்

படுத்தப்பட்ட நிலையில் தரப்பட்டுள்ளன. சில நோய்களின் அடிப்படையில் தொகுக்குப்பெற்று வாதம் தொடர்பான நோய்கள், மேகம் தொடர்பான நோய்கள் என தரப்பட்டுள்ளன. இவ்வமைப்பு நோயையும் மருந்தையும் ஓரிடத்துத் தொகுத்துக்காணப் பெரிதும் பயன்படுவதாகும்.

ஒன்பது பகுதியாக அமைக்கப்பட்டுள்ள இந்நூலின் பகுதித் தலைப்புகள் பதிப்பாசிரியரால் வழங்கப்பெற்று ஒவ்வொரு பகுதிக்கும் சிறு அறிமுகமும் வரையப்பட்டுள்ளது. அவை சுவடியில் காணப்படாதன, தொகுப்பைச் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்பெற்றன.

முதல்பகுதி மருந்துகளுக்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் மருந்துப் பொருள்களின் குணங்களை அறிவிக்கும் செய்தித் தொகுப்பாக அமைக்கப்பட்டது. இப்பகுதியில், குறிப்பிட்ட ஒரு மருந்துப் பொருளை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பெறும் இஞ்சிச் சூரணம்' 'நெல்லிக்காய் லேகியம்' போன்ற மருந்துகளையும் அவ்வவ் விடத்தில் இணைத்துக் காட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் காணப்படும் மூலிகைகளும் பிற மருந்துப் பொருள்களும் இச்சுவடியில் கண்ட பொருள்களே. சித்தமருத்துவத்தில் இவையல்லாமல் இன்னும் எவ்வளவோ பொருள்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாம். எனவே, சித்தமருத்துவத்தின் மூலிகைகளும் மருந்துப்பொருள்களும் இங்குக் காணப்படும் இவ்வளவு மட்டுமே என்று நினைத்துவிடக்கூடாது. இப்பட்டியல் ஒரு சிறுதிரட்டு அவ்வளவே.

இரண்டாம் பகுதி, பொதுவாகவும் பரவலாகவும் காணப்படும் சுரம், பல்நோய், கண்ணோய் போன்ற நோய்களும் அவற்றுக்கு இச்சுவடியில் கூறப்பட்ட மருந்துகளும் பற்றி அமைக்கப்பட்டது.

மூன்றாம் பகுதி, சுவாச உறுப்புகள் தொடர்பாகத் தோன்றும் இருமல், காசம், பீனிசம், தலைவலி போன்ற நோய்கள் அவற்றுக்கான மருந்துகள் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டது.

நான்காம் பகுதி, தோலைப்பற்றிய நோய்களான சிரங்கு, சொறி, படை போன்றவற்றையும் அவற்றுக்கான மருந்துகளையும் கூறுவதாக அமைக்கப்பட்டது.

ஐந்தாம் பகுதி மகளிர் தொடர்பான இரண்டு நோய்களையும் அதற்கான மருந்துகளையும் கொண்டது.

ஆறாம் பகுதி மேகவியாதிகள் பலவற்றையும் தொகுத்து அவற்றுக்குப் பரிந்துரைக்கப்பெற்ற மருந்துகளைத் தொகுத்துக் கூறுகின்ற பகுதியாக அமைக்கப்பட்டது.

ஏழாம் பகுதி வயிறு தொடர்பான நோய்களைத் தொகுத்து, செரியாமை, வயிற்றுவலி முதலாக - மூலம் வரை பல்வேறு நோய்களையும் அவற்றுக்கான மருந்துகளையும் முறைப்படுத்திக் காட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

எட்டாம் பகுதி வாதம் தொடர்பான நோய்களைத் தொகுத்து அவற்றுக்கெல்லாம் இச்சுவடி பரிந்துரைக்கும் மருந்துகளை முறைப்படுத்திக் காட்டும் வண்ணம் நிறைவு செய்யப் பெற்றுள்ளது.

ஒன்பதாம் பகுதி வெட்டை, வெட்டைச்சூடு, வெட்டைப் புண், வெள்ளை போன்ற மந்தண நோய்களைப் பற்றிய மருந்துகளைக் கூறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

பின்னிணைப்பு

நூலின் இறுதியில் அமைக்கப்பட்டுள்ள பின்னிணைப்புகள் வாசகர்க்குப் பெரிதும் பயன்படும்வண்ணம் மிகு கவனத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பின் முதல் பகுதி இந்நூலில் கூறப்பட்ட பழைய அளவைகளுக்கு இன்றைய புதிய அளவைகள் காட்டும் பட்டியலைக் கொண்டுள்ளது. வழக்கொழிந்த பழைய அளவுகளால் நேரும் குழப்பம் இப்பட்டியலால் பெரிதும் நீங்கும் என உறுதியாக நம்பலாம்.

இரண்டாம் பின்னிணைப்பு, மருந்து செய்முறையும் மருந்து வகைகளும் என்னும் தலைப்பில் விரிவாக விளக்கப்பட்ட செய்திகளைத் தாங்கியுள்ளது. இப்பகுதியில் சித்தமருத்துவத்தின்

தனிச்சிறப்பு, அனுபானங்கள், பத்தியமுறை, மருந்துவகைகள் - வடிவங்கள் அவற்றைச் செய்யும்முறைகள் குடிநீர், சூரணம், லேகியம், மாத்திரை போன்ற மருந்து வடிவங்களின் விளக்கங்கள் ஆகியன தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி சித்த மருத்துவ அறிமுகத்துக்கும் பயிற்சிக்கும் சிறந்த தூண்டுகோலாய் விளங்குவதுடன் இந்நூற்செய்திக்கு ஊன்றுகோலாகவும் துணை புரியும் என்று கருதலாம்.

அடுத்து வருகின்ற பின்னிணைப்புகள் நோய்களின் பெயரகராதி, மருந்து மற்றும் மருந்துப்பொருள்களின் அகராதி, அருஞ்சொல்லகராதி ஆகிய சொல்லகராதிகளைக் கொண்டுள்ளன. இவ் அகராதிகள் இந்நூலில் சொல்லப்பட்ட நோய்கள் எவை? அவற்றுக்குரிய மருந்துகள் எவை? போன்ற அடிப்படை வினாக்களுக்குத் துணைபுரிவனவாகத் திகழும். ஒவ்வொரு சொல்லோடும் இணைக்கப்பட்ட பக்க எண்கள் நூலை எளிதில் புரட்டி உணரத்தக்க துணையைச் செய்யவல்லன.

பதிப்பில் செய்யப்பெற்ற மாற்றங்கள்

சுவடியிலுள்ள செய்திகளின் பொருள்மாறுபடாமல் -தெளிவு கருதி - சில சொற்கள் மட்டுமே, ஓரிரு எழுத்துக்களின் பிழை வடிவங்களை மட்டும் மாற்றம் செய்து இந்நூல் பதிக்கப் பெற்றுள்ளது. இம்மாற்றம் சுவடியின் கருத்தை மாற்றிவிடா மாற்றம் என்பதால் துணிந்து மேற்கொள்ளப்பெற்றது. சில இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

	ஏட்டில் உள்ள வடிவம்		மாற்றப்பட்ட வடிவம்
1	விராகன்	—	வராகன் (அ-இ)
	விராகனிடை	—	வராகனெடை
2	களஞ்சு	—	கழஞ்சு (ழ-ள)
3	சறுவ கடி	—	சருவகடி (ர-ற)
	விரை	—	விதை (த-ர)

4 கூட்டெழுத்துக்கள், குறியீடுகள், சுருக்கெழுத்துகள் (பலம், வருடம், மாதம், ஆக, த்து, க்கு, தமிழ் எண்கள்) போன்ற

வற்றின் ஏட்டு-வடிவங்கள் இங்கே இன்றைய அச்சு வடிவில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

5 இந்நூல் நோயும் மருந்தும் என்னும் தலைப்பில் அமைக்கப் பெற்றதால் நோயின் பெயர் மட்டும் தலைப்பில் எடுத்துக் கொள்ளப்பெற்றது. படர் தாமரைக்கு என்பது படர் தாமரை என எடுத்துக்கொள்ளப்பட்டது. அறுகம்வேர் குடிநீர் என்னும் மருந்துப்பெயரின் தலைப்பு - அதனால் நீங்கும் நோய்க்கு முதலிடம் கொடுக்கப்பெற்று அந்நோயே அதற்குத் தலைப்பாகக் காட்டப்பட்டுள்ளது.

6 ஒரு நோய்க்குப் பலமருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்ற இடங்களிலெல்லாம், நோய்ப் பெயர் தலைப்பாகக் கொடுக் கப்பட்டு - மருந்துகள் தனித்தனிப் பத்திகளில் (வேறு) (வேறு) என்ற உட்தலைப்புடன் தொடர்ந்து அமைக்கப் பட்டுள்ளது, இவ்வமைப்பு ஒரு நோய்க்கு சூழலுக்கேற்ப, வாய்ப்புக்கேற்ப எத்தனை வகைகளில் மருந்துகளைச் செய்து பயன்படுத்தமுடியும் என்பதைக் காட்டுவதாம்.

7 முடித்துக்காட்டப்பெறாத தொடர்கள் ஓரிரு எழுத்துக் களைச் சேர்த்து முடித்துக்காட்டப்பெற்றுள்ளன. ஆயின், பிறைக் கோடுகளினிடையே உள்ள செய்திகள் ஏட்டில் காணப்பட்ட செய்திகளே ஆகும்.

8 வடமொழி எழுத்துக்கள் தவிர்க்கப்பெற்ற நிலையிலேயே இவ்வேட்டின் அமைப்பு செல்கிறது. எனினும் ஓரிரு இடங் கலில் காணப்படும் சொற்களில் உள்ள வடமொழி எழுத்து கள் பொருள்மாற்றமுண்டாக்கா நிலையில் இயைபு கருதி மாற்றப்பட்டுள்ளன.

9 நோய்களின் பெயர்கள், மருந்துப்பொருள்கள், மருந்துகளின் பெயர்கள் ஏட்டில் கண்டவாறே பயன்படுத்தப்பட்டுள்ளன. கொச்சை வடிவம் அருகிய இவ்வேட்டில் ஆங்காங்கு வழக்கு வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் பொருள் மாற்றம் வந்துவிடக் கூடாதே என்பதற்காக... ஏட்டின் வடிவமே பெரிதும் பயன்படுத்தப்பெற்றுள்ளது. மூலிகை களின் பெயர்கள், நோய், மற்றும் செய்முறையின் பெயர்கள்

இன்னும் தரநிர்ணயம் பெற்று உறுதிசெய்யப்பெறவில்லை. இந்நிலையில், அமுக்கிராவா, அமுக்கிரானா, கடாயமா? கசாயமா? பூசுணையா? பூசணியா என்ற ஆய்வுக்கெல்லாம் செல்லாமல் ஏட்டில் கண்ட வடிவங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

10 இச் சுவடியில், பேச்சுவழக்குச் சொற்களாகச் சில ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. 'இதனைக் காலமே குடிக்கணும்' போன்ற அருகிய அவ்வடிவங்கள் 'இதனைக் காலையில் குடிக்கவேண்டும்' என்று பொருள் மாறுபடாமல் தெளிவு கருதி (மாற்றம் செய்து) பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

நம் முன்னோர், சித்தமருத்துவத்துக்குப் பயன்படும் மருந்துப் பொருள்களின் குணங்களை மிக நுட்பமாகவும் விரிவாகவும் ஆய்வு செய்திருக்கின்றனர். உணவுப் பொருள்களையே மருந்துப் பொருள்களாகப் பயன்படுத்துகின்ற சூழலும் மருந்தே உணவாகும் பக்குவமும் மருத்துவத்தின் அடிப்படையாக இருந்தது என்றாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் தனிக்குணம் கொண்டிருப்பதைத் துல்லியமாகக் கண்டிருந்தனர்.

தாவரங்களுக்குத் தனித்தனி குணம் இருப்பது போலவே, ஒரே தாவரததின் இலை, அரும்பு, மலர், பிஞ்சு, காய், கனி, வேர், பட்டை, தண்டு என அமைகின்ற பல்வேறு உறுப்புகளுக்கும் தனித்தனியே குணமிருப்பதாகவும் கண்டனர். மாம்பழத்துக்கு இருக்கின்ற குணம் அதன் உள்ளே இருக்கும் கொட்டைக்கு இருப்பதில்லை. புளியம்பழத்துக்கும் இப்படியே. ஏன் புளியம்கொட்டையின் பருப்புகளுக்கு ஒரு குணமும், அதன் தோலுக்கு ஒரு குணமும் இருப்பதைக் கூட துல்லியமாகக் கண்டுள்ளனர். மாம்பழத்தால் நேரும் சூட்டு நோய்களுக்கு மாம்பருப்பையே மருந்தாகக் கொடுத்துள்ளனர். கத்தரிப்பிஞ்சு பத்தியப் பொருள்களுள் ஒன்றாக இருப்பதுதான். ஆனால் அதுவே முற்றிய காயானால் கரப்பன் பொருளாகக் கருதி நீக்கியுள்ளனர். எனவே, இந்நூலுள் சொல்லப்படுகின்ற மருந்துகளுக்கு எப்பொருளை, எப்பொருளின் எப்பகுதியைப் பயன்படுத்துமாறு கூறியுள்ளனரோ அப்பொருளை அப்பகுதியைத்

தான் நாம் பயன்படுத்த வேண்டும். மாற்றுப் பொருள்களையோ இனப் பொருள்களையோ பயன்படுத்தல் கூடாது. இவ்வடிப்படையை இந்நூலைப் பயில்வார் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இச் சிறு அறிமுகத்துடன், தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித்துறை வெளியிடும் நோயும் மருந்தும் என்னும் இச்சுவடிப் பதிப்பை அணுகுவோம். படிப்போம், பயன்பெறுவோமாக.

நன்றியுரை

இந் நூல் வெளிவருவதற்கு முதற்காரணமாய்த் திகழ்பவர் இச்சுவடியை வழங்கியப் பெரியவரேயாவர். அவர்தம் அன்பளிப்பு சித்தமருத்துவச் சுவடிகளை அணுகுவதற்கும் ஆய்வதற்கும் பெரிதும் துணைநின்றது. ஓலைச்சுவடிகள் அழியாவண்ணம் பாதுகாக்கப்பெறவேண்டும், அவை வெளியிடப்பெற்று, மக்களுக்குப் பயன்படவேண்டும் என்னும் நோக்கங்களில் மிகப் பொறுப்புணர்வோடு இச்சுவடியை வழங்கிய அவரை எவ்வளவு பாரட்டினாலும் தகும். எனவே இந்நூலில் திருவரங்கத்தைச் சார்ந்த அவரை - டாக்டர் ஆர். எஸ். இராஜன் பாபு அவர்களை முதற்கண் நன்றியுடன் நினைத்து மகிழ்கின்றேன்.

தாம் பொறுப்பேற்றுக்கொண்ட நாள்முதலாக, மக்களுக்குப் பயன்படத் தக்க மலிவு விலை நூல்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட வேண்டும் என்னும உயரிய சிந்தனைக்குச் செயலாக்கம் கொடுத்துவருபவர் நம் மாண்புநிறை துணை வேந்தர் முனைவர் ஔவை. நடராசன் அவர்கள். ஓலைச் சுவடித்துறையும் மலிவு விலை நூலை உருவாக்கித்தருதல் வேண்டும் என்னும் ஆணையைப் பிறப்பித்ததோடு அவ்வப்போது அவர்கள், அப்பணி பற்றிய முன்னேற்றத்தை உசாவியறிந்து பெரிதும் ஊக்கப்படுத்தினார்கள். அவர் தம் ஊக்கமும் ஆக்கமுமே குறுகிய காலத்திலும் இந்நூல் வெளிவருதற்குத் துணைநின்றன. ஆதலின் அவர்க்குச் சிறப்புநிலையில் நன்றி பாராட்டுதல் அலுவல்முறையிலும் தனிப்பட்ட முறையிலும் பெருங்கடப்பாடாகக் கருதுகிறேன்.

இத் துறையின் விரிவுரையாளராகப் பணிபுரியும் முனைவர் வே. இரா. மாதவன் அவர்கள் சித்தமருத்துவச் சுவடிகளை ஆய்ந்து முனைவர்பட்டம் பெற்றவர். ‘இந்நூலை நாம் செய்வது தகுமா?’ என்றெல்லாம் நான் கவன்று துவண்டபோதெல்லாம் ஊக்கப்படுத்தியும், நூலமைப்பு, நூற்செய்தி ஆகியவற்றை முறைப்படுத்தியும் பெரிதும் துணைநின்றார்கள், இந்நூலின் பின்னிணைப்புகளை உருவாக்குவதில் அவர்கள் ‘அகத்தியர் வைத்திய காவியம் - 1500’ என்னும் நூல் பொருத்தமான நிலையில் வழிகாட்டியது. அவர்தம் மாணவர் திருமதி தி. லலிதா அவர்கள் பதிப்பித்த மருந்து செய்முறைகள் என்னும் நூலும் துணையாக அமைந்தது. அவர்கள் இருவர்க்கும் என் தனிப்பட்ட நன்றியைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

இச்சுவடியை முன்பு படியெடுத்து வைத்த கொல்லியங்குணம் திரு ப. கண்ணையன், உரிய நேரத்தில் தட்டச்சு செய்து வழங்கிய அன்பர், மற்றும் பல்வேறுநிலைகளில் துணைநின்ற இத்துறையினர் அனைவர்க்கும் என் நன்றி உரியது.

சுவடியிலிருந்து வெளிவரும் முதல்பதிப்பாக இந்நூல் திகழ்தலின் இதன்கண் குற்றங்கள் இருத்தல் கூடும். அக் குற்றங்களைக் கண்ணுறும் தமிழறிஞர் பெருமக்களும் மருத்துவ வல்லுநர்களும் சுட்டித் திருத்தவேண்டுகிறேன். பதிப்பு முறை யிலும், பொருண்மை முறையிலும் அவர்கள் சுட்டும் திருத்தங் களை நன்றியுடன் மேற்கொள்வது பதிப்பாசிரியனாகிய என் கடமையாகும். இந்நூலைத் தொடர்ந்து பல சுவடிப்பதிப்புகள் இத்துறையின்வழி வெளிவரவிருத்தலின் அவர்தம் வழி காட்டுதலும் திறனாய்வும் ஓலைச்சுவடித்துறைக்கும் பெரும்பயன் விளைப்பனவாம். எனவே, நூலை நுணுகிப் படித்துணர்வார்க்கும் குறைநிறை சொல்வார்க்கும் என் நன்றி உரியது.

இந்நூலுக்குத் தரும் வரவேற்பு பிற சுவடிகளையும் விரைவில் வெளியிடுவதற்கு ஊக்கமாயமையும். இந்நூல் சித்த மருத்துவ மாணவர்க்கும் பொதுமக்களுக்கும் ஓரளவேனும் பயன்படும் என்று ஓலைச்சுவடித்துறை நம்புகிறது — இச்சுவடிப் பதிப்பு தமிழுக்கும் சித்தமருத்துவத்துக்கும் இம்மியேனும் வளம் சேர்க்கும் என்னும் துணிபுடையேன்.



எட்டில் கண்ட வடிவம்

அடை	சாதிஙகமவ~கரசகறபரம வ~க	அரைதத ஒருடபபியிலடைதத	எலலாமசமலிறதத	மேகததெனனை விளககென
வாத	இரணடுமபொடிபணிமுடடைககருபீங	ஒருவேளைககுசுணடைககாயள	எலுமிசசமபழசசாறு	னைபடி-க-கரிசாலைகரபரவ
மெழுகு	காவிடடுககிளறி-ஒருநாளபகலஙம	வாக.நாளரூ-அநதிசநதிகொடு	விடுசாமமசு -அரைதது	ளலி-பொனனாஙகாணி-கற
படரதாம	நாழிகை-வெயயலிலவைததுககிணடி	ககவும.பததியமிலலைஅணடவாதம	குளிகைநிழலுலததி-பழச	றாழை-வலலாரை-யானைநெ
ரைககு	அதனைஒருசடடியிலிடடு-அடுபபிலவைதது	.படரதாமரைககு- (போம்	ாறறிலரைததிடவும-நா	ருஞசி-கோவை-சமபழநீர-மணி
கணமாத	தீயாமலகிளறிககிளறி-பசுவினெயபு	நீரடிமுததிலபருபபு-புரசங்கொடடை	ள-உ.ய-காயநதபோம	தககாளி-சீநதிததணடு-ஈருளளி
திரை	க-விடடுகிணடவும-கிணடிநீரசசுவறி-	பிபருபபு-தகரைவிரை-பொனனாவா	கணமாததிரை-கடடைபு	சசாறு-வகைககுபடிவ-
	மெழுகுபோலதீயாமலவருமபோது-	னாவேர-சலாசததுபறபம-	ததகததில-எடுஉளஉரு	சாதிககாய-சாதிபபததிரி
	எடுததுகலவததிடடு-மெழுகுபோல		உளஉக பாரககவு	ஏலம-கிரமபு-சீரகம-2

திருந்திய வடிவம்

அண்டவாதமெழுகு

சாதிலிங்கம் விராகனெடை 1, ரசகற்பூரம் விராகனெடை 1 இரண்டும் பொடிபண்ணி முட்டைக்கரு பீங்கானிலிட்டுக் கிளறி ஒரு நாள் பகல் 30 நாழிகை வெய்யிலில் வைத்துக் கிண்டி அதனை ஒரு சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து தீயாமல் கிளறிக்கிளறி பசுவினெய் படி 1 விட்டு கிண்டவும். கிண்டி நீர்ச்சுவறி மெழுகுபோல தீயாமல் வரும் போது அரைத்து ஒரு டப்பியிலடைத்து ஒரு வேளைக்கு சுண்டைக்காயளவாக நாள் 3 அந்திசந்தி கொடுக்கவும். பத்தியமில்லை. அண்டவாதம்போம். <u>படர்தாமரைக்கு</u>. நீரடிமுத்தின் பருப்பு, புரசங்கொட்டைப்பருப்பு, தகரைவிரை, பொன்னாவாளாவேர், சலாசத்து பற்பம் எல்லாம் சமனிறுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு சாமம் 4 அரைத்து குளிகை நிழலுலத்தி பழச்சாற்றி லரைத்திடவும். நாள் 20 காய்ந்துபோம். <u>கண்மாத்திரை</u>: கட்டை புத்தகத்தில் ஏடு 224, 221 பார்க்கவும். <u>மேகத்தெண்ணை</u>: விளக்கெண்ணை படி 1, கரிசாலை, கற்பூரவள்ளி, பொன்னாங்காணி, கற்றாழை, வல்லாரை, யானை நெருஞ்சி, கோவை, சம்பழநீர், மணத்தக்காளி, சீந்தித்தண்டு, ஈருள்ளிச் சாறு வகைக்கு படி ¼ சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், கிராம்பு, சீரகம் 2

இந்நூலை அழகுடன் அச்சிட்டுக் கொடுத்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரியது.

இறுதியாக, இந்நூல் வெளிவரத் தோன்றாத்துணையாய் இருந்து செயற்படுத்திய திருவருளை வாழ்த்தி வணங்கி முடிக்கின்றேன்.

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

— அப்பர் 6: 54: 8

29—12—94
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

பணிவுள்ள,
த.கோ. பரமசிவம்.

1. மருந்துப்பொருளும் குணமும்

இச் சுவடியில் மலைவாகடம் – ஏகமூலிகுணம் என்னும் தலைப்பின் கீழ் சில மூலிகைகளின் பெயர்களும் அவற்றின் குணங்களும் பயன்களும் மிகச் சுருங்கிய அளவில் எழுதப் பட்டுள்ளது. அவற்றைத் தொகுத்து அகரவரிசையில் இப்பகுதி காட்டுகிறது. மருந்துகளுக்கு அடிப்படை மருந்துப்பொருள் களாகும். நோய் வருவதற்கான காரணம் உணர்பவரே நோயைப் போக்கும் மருந்துகளை உருவாக்கமுடியும்; மருந்துப் பொருள்களின் பொதுத்தன்மையை, குணத்தை உணர்பவரால் தான் மருந்தை உருவாக்கமுடியும். இன்ன குணமுள்ள பொருள் இன்ன தன்மையுள்ள நோயைப் போக்கும். இன்ன தன்மை கொண்ட பொருட்கு மாற்றுப்பொருள் இதுவாகும். இது முறிப்பானாகும், இது துணைப்பொருளாகும்; இன்ன குணம் கொண்ட இதை இன்னபொருளோடு சேர்க்கலாம், இன்ன வற்றோடு சேர்க்கக்கூடாது, என்றெல்லாம் உணரும் பதார்த்த குண அறிவு சித்தமருத்துவத்துக்கு அடிப்படையாகும்.

பதார்த்தகுணம் உணரும் வாகட அறிவு இல்லாத மருத்துவர் ஊன்றுகோலில்லா முடவராகத் தடுமாற வேண்டி வரும். நம் அன்றாடச் சமையலிலேகூட நம்பெண்டிர் உணவுப் பொருள் ஒவ்வொன்றின் குணத்தை உணர்ந்து சமைக்கின்ற பாங்கை நாம் காணலாம். சாம்பார் பொடி எனப்படும் மிளகாய்ப்பொடி தயாரிக்கும்போது அதன் எரிப்பைக் கட்டுப் படுத்த கொத்தமல்லிவிதையைக் கூட்டியரைக்கின்றனர். துவையலில் காரம் புளிப்பு போன்றவற்றால் நேரும் பக்க விளைவுகளைத் தடுக்க தேங்காய் சேர்க்கின்றனர். இவ்வாறே பெருங்காயம், பூண்டு, மஞ்சள் போன்ற பொருள்களைக் கூட நம்பெண்டிர், சுவை மணம் கருதி மட்டும் பயன்படுத்துவ தில்லை. மருத்துவ விளைவை உணர்ந்தும் பயன்படுத்துகின்றனர் என்றால் அது மிகையாகாது. சமைத்த உணவு வகைகளை

உண்பதிலும் எதை முன்னே சாப்பிடவேண்டும், எதைப் பின்னே உண்ணவேண்டும், எதை எப்போது குடிக்கவேண்டும் யார் எதைச் சாப்பிட வேண்டும் என்பவற்றை முறைப்படுத்தி யுள்ளனர்.

வெளியூரிலிருந்து வந்த மாமியார் ஒருவர் தம் மருமகளை இப்படிக் குத்திக் காட்டுகிறார். 'ஏண்டி அவனுக்குத்தான் வயிற்றுப்புண்ணாச்சே. இப்படி இவ்வளவு புளிப்பா தினம் தக்காளி சாம்பாரும், தக்காளி சட்டினியும் வைத்தா அவன் உருப்படுவானா? இப்பதான் தெரியுது அவனுக்கு ஏன் இன்னும் 'அல்சர்' போகவில்லைனு'. அதாவது, வயிற்றுப்புண்ணுக்கு அமிலத்தன்மைகொண்ட பொருள்கள் ஆகா; தக்காளி அமிலத் தன்மை கொண்டது; வயிற்றுப்புண் கொண்ட அவருக்குத் தக்காளியைத் தாராளமாகப் பயன்படுத்தலாமா? இந்த பதார்த்தகுண அறிவு தம் மருமகளுக்கு இல்லையே, சமையல் செய்பவள் காய்கறிகளின் குணம் அறிந்திருக்கவேண்டாமா? என்பது தான் அந்நிகழ்ச்சியின் சாரம்.

நாளும் ஒவ்வொருவேளையும் தொடரும்-எல்லோரையும் பிணிக்கும் பசிப்பிணியைப் போக்கும் உணவுக்கே இப்படி யென்றால், எப்போதோ எவருக்கோ வரும் உடற்பிணிகளைப் போக்குவதற்காக உருவாக்கப்படும் மருந்துகளில் எவ்வளவு கவனம் இருக்கவேண்டும்? உணவுப்பொருள் அறிவைவிட மருந்துப்பொருள் அறிவு கூர்மையானதாக இருக்கவேண்டுமே. இதைத் தெளிவாக உணர்ந்த நம் முன்னோர் மருந்துப் பொருள்களின் குணங்களை, தன்மைகளை ஆராய்ந்து எடுத்துக் காட்டியுள்ளனர். அத்தகு ஆய்வுகளின் காரணமாக ஒருசில மூலிகை, கடைச்சரக்குகளின் ஒருசில தன்மைகளை மட்டும் பட்டியலிட்டுக்காட்டியுள்ளது இச்சுவடி. அவற்றை ஒன்று திரட்டியும், அகர வரிசைப்படுத்தியும் தருகிறது இப்பகுதி.

ஒவ்வொரு மூலிகைக்கும் இங்கு சுட்டப்பட்ட குணம் மட்டுமே உண்டு என்று எண்ணிவிடக்கூடாது. இங்கு சுட்டப் படாத குணங்களும தன்மைகளும்கூட அப்பொருள்களுக்கிருக் கின்றன. அவ்வாறே மூலிகைகளின் பயன்கள் எவ்வெவ் சூழலில்,

எவ்வெவ் மருந்துகளில் எவைஎவை பயன்படும் – என்று பயன் களைச் சுட்டும் பகுதியும் நிறைவுடையது என்று கூறிவிட முடியாது. ஒவ்வொரு மூலிகைக்கும் இங்கே சுட்டப்பட்ட பயன்களைத் தவிர வேறு பயன்பாடுகளும் உள்ளன. சான்றாக கசகசாவின் பயனை இச்சுவடி, 'பாலில் அரைத்துண்ண, வெட்டை, சிரங்கு, மேகம், எலும்புருக்கி, பித்தசூடு, நீர்க்கடுப்பு' ஆகிய நோய்களைப் போக்கும் என்று சுட்டியுள்ளது. கசகசா சீதபேதி போன்றவற்றில் பயன்படுவதைச் சுட்டவில்லை. எல்லோர்க்கும் பழக்கமான தேனின் பயன்பாட்டைக்கூட ஓர் எல்லையோடு நிறுத்திக் கொண்டது. தேனைப் பாலில் உட் கொள்ள, 'சயம், காசம், இருமல், பித்தம், வாய்வு' போம் என்று கூறுகிறது. தேனுக்கு எவ்வளவோ நோய்களைப் போக்கும் வல்லமை உண்டு என்பதையோ, பெரும்பாலன மருந்துகளின் அனுபானமாகப் பயன்படும் என்பது பற்றியோ சுட்டவே யில்லை. எனவே, இங்குக் கூறப்பட்டுள்ள மருந்துப் பொருள் களின் குணங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடக்கப்பட்டு நிறைவில்லாநிலையிலேயே கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிமுகமாக்கிக்கொண்டு இப்பகுதிக்குள் செல்லலாம்.

பொருள்களின் குணத்தை உணர்த்திய நிலையில் மட்டும் சில மூலிகைகள் காணப்படுகின்றன. இன்ன நோய்களில் பயன் படும் என்று பட்டியலிட்ட நிலையில் சில காணப்படுகின்றன. மருந்துகளில் எவ்வாறு அவை பயன்படுத்தப்படுகின்றன என்னும் சிற்றுரையுடன் சில காணப்படுகின்றன. குறிப்பிட்ட பொருளால் இன்னின்ன நோய்கள் குணமாகும் என்று சுட்டிய நிலையில் சில காணப்படுகின்றன. எல்லாவற்றையும் ஏட்டில் கண்டவாறே இப்பதிப்பில் காணலாம். மூலிகைகளின் பெயர்கள் அனைத்தும் ஏட்டில் கண்டவாறே பதிப்பிக்கப் பட்டுள்ளது. சரியான வடிவம் எது என்னும் ஆய்வுக்குள் இறங்கிக் குழப்பவோ, தெளிவு செய்யவோ இப்பதிப்பு முயல வில்லை. அது மிகப்பெரிய ஆய்வுக்குட்பட்ட சிறப்புநிலையைக் கொண்டதாம்.

மூலிகைகளின் குணங்களை பயன்பாடுகளைச் சுட்டுகின்ற இப்பகுதி வேறொரு செய்தியையும் ஆங்காங்கே இணைத்திருக்

கிறது. சில மருந்துகள், அடிப்படையான பொருளொன்றை வைத்துக்கொண்டு வேறுசில துணைப்பொருள்களையும் இணைத்துக் கொண்டு செய்யப்படுகின்றன. அத்தகு மருந்துகள் அடிப்படைப்பொருளின் பெயராலேயே மருந்துகளின் வடிவங் களையொட்டிப் பெயரிட்டு அழைக்கப்பெறும், இஞ்சி வடகம், சுக்கு லேகியம், பரங்கிப்பட்டை சூரணம், பரங்கிப்பட்டை ரசாயனம், நாயுருவி நெய் என அவை தலைமை மருந்துப் பொருளாலும், மருந்து வடிவாலும் அழைக்கப்பெறும். மூலிகை களின் குணம் கூறும் இப்பகுதி, அத்தகு சில மருந்துகளையும் - வெவ்வேறு இடங்களிலிருந்த அவற்றைத்திரட்டி அம்மருந்துப் பொருள்களின் - தன்மைகளைக் கூறுகின்ற இடங்களிலேயே இணைத்திருக்கிறது. இவ்வமைப்பு குறிப்பிட்ட மூலிகையின் பயன்பாட்டைத் தொகுத்துக் காண்பதற்கு, மிகுத்துச் சொல்வதற்கு உண்டாக்கப்பட்டதாம். இனி, சுவடி காட்டும் செய்திகளுக்குச் செல்வோம்.

அக்கிராகாரம் — நாவறட்சி, தோஷம், வாய்வு, வாதம், பித்தம், உஷ்ணம், கபம் ஆகியவற்றை அகற்றும்.

அத்தி — பெரும்பாடு நீக்கும்.

அதிமதுரம் — தாதுவிருத்தி செய்யும்.

அதிமதுரம் வராகனெடை 2, சருக்கரை வராகனெடை 1, சோம்பு வராகனெடை $\frac{1}{2}$ சித்திரமூலஞ் சூரணம் வராகனெடை -$\frac{1}{2}$ கூட்டி, சித்திரை மாதம் முதல் ஆடி மாதம் முழுதும் நாலுமாதமுண்டால் அவ்வருடத்திற்கு யாதொரு வியாதியுமில்லை. அதிமதுரத்தின் அளவில் பாதியளவு அரத்தை கூட்டி பாலிலரைத்துண்ண தாது வலுவுண்டாகும். 2:1 வராகனெடை.

பித்தஎரிவு போக்கும், தோடம் அறுக்கும், தேகக் குளிர்ச்சி உண்டாக்கும், தேககாந்தியுண்டாக்கும்.

அதிவிடயம் — கிராணிபோக்குவதில் முன்னிற்கும்.

அப்பைமூலம் — பத்தியமிருந்து இதனைப் பயன் படுத்த

மூலைக்குத்து, கடிவிடம், விடபாண்டு, காமாலை முதலியன போம்.

அமுக்கிரா வேர் — விந்துகட்டும், தேககாந்தி, காய சித்தி உண்டாக்கும். வாய்வு முதல் சர்வநோயும் போம்.

அரக்கு — அதிக சுரம் போக்கும்.

அரசு — குட்டம் போக்கும்.

அரத்தை — இருமல், ஈளை, நீர்த்தோடம், பீனிசம், வாய்வு போன்ற சுவாசக் கோளாறுகளை நீக்கும்.

அறுகம்வேர் — பாலில் அரைத்துண்ண உடல் வலிவுபெறும், நரம்பிறுகும், நாடி வலுவடையும், பித்தம் அறும், உஷ்ணம் அறும், வாயூறல் தவிர்க்கும், மூலச்சூடு குறையும்.

ஆகாசத்தாமரை — மேகம் போக்கும்.

ஆதண்டை — பீனிசம் போக்கும்.

ஆதளைவேர் — எலிவிடம் 18ம் போம். இதன் பாலைப் பசும்பாலில் கலந்துண்ண விடப்பிணிகள் எல்லாம் நீங்கும். இதன் பால் உண்டாரைச் சித்தராக்கும் தன்மையது.

ஆயில் — வாதமறுக்கும்.

ஆயில்வேர் — வாதசூலை, கிரந்தி, குட்டம் சில்விடம், கரப்பன், பிளவை, அரையாப்பு, வாதநோய் ஆகியவற்றைப் போக்கப் பயன்படும்.

ஆவாரை(பஞ்சகம்) — பாலில் 40 நாள் உண்ண நீரிழிவு அறும். பூ வுண்ண மேகம் அறும், பொன்போல் மேனி பொலிவு பெறும்.

ஆனைத்திப்பிலி — சன்னியைப் போக்கப் பயன்படும்.

இச்சில் விதை — உஷ்ணம் போக்கும்.

இஞ்சி — இரத்தத்திலுள்ள பித்தம் போக்கும்.

இஞ்சி லேகியம் : இஞ்சி பலம் 10. சிறுக பயறு போல் நறுக்கிச் சட்டியிலிட்டு ஆவின் நெய்விட்டுப் பொன்னிறமாய் வறுத்துப் பொடிபண்ணி கசகசா, பறங்கிப்பட்டை, பொற் கடுக்காய், லவங்கப்பட்டை, வகைக்குப் பலம் $\frac{1}{4}$. மிளகு. சுக்கு, கண்டதிப்பிலி, கற்கடகசிங்கி, தாணிக்காய், கிராம்பு, கருஞ்சீரகம், திப்பிலி, சாதிக்காய், தாளிசப்பத்திரி, அரத்தை, சீரகம், மதுரம், ஏலம், இந்துப்பு, சிறுநாகப்பூ, சித்திரம், ஓமம், விளங்கம், கோட்டம், வகைக்கு வராக னெடை $1\frac{1}{4}$. குங்குமப்பூ, சாதிபத்திரி, கோரோசினை வகைக்கு வராகனெடை $\frac{1}{2}$ எல்லாம் பொடிபண்ணி சர்க்கரை, பலம்- 5 கொதித்த பாகில் தூளிட்டு தேன் பலம் $2\frac{1}{2}$. நெய் பலம் 5 விட்டு அஞ்சு நாழிகை மத்தித்துக் கிளறி லேகியம் ஆக்கவும். இந்த லேகியத்தில் பாக்களவு இரு வேளையும் உட்கொள்ள உட்டணம், அசீரணம், வலி போம்.

இஞ்சி சூரணம்: இஞ்சி பலம் 8, தோலகற்றி வில்லையாக நறுக்கி, பசுவின் பால் படிவிட்டு அவித்து நிழலிலுலர்த்தி பொடிபண்ணி பாதி சீனி கலந்துண்ண (பலம் அரை - மண்டலம் -1) குலையெரிவு, வாய்நீர், பித்தம், வயிற்றுவலி போம்.

இருவாட்சி — இரத்த பித்தம் அகற்றும்.

இலவம்பிசின் — சுக்கிலம் உண்டாக்கும்.

இலுப்பை — விரணம் போக்கும்

உத்தாமணி — வாதம் போக்கும்.

எட்டிவிதை — நட்டுவக்காலி, தேள்விடம், பல விடம் போக்கும். மயக்கம் உண்டாக்கும்.

எருக்கம்வேர் — இவ்வேரை ஞாயிற்றுக்கிழமையில் கணபதி பூசை பண்ணி, பாலில் அரைத்துண்ண கிரந்தி, விடம், குட்டம், பாண்டு, செய்யான்கடி, ஆறுபுள்ளி வண்டின் கடி ஆகியவை நீங்கும்.

எலுமிச்சை — பைத்தியம் நீக்கும்.

ஏலம் (ஏலக்காய்) — உடற் தினவு போக்கும்.

ஓமம் — பசி உண்டாக்கும்.

ஓம லேகியம்: ஓமம் பலம் - 100. நீர் மரக்கால் - 4 எட்டில் 1க்கு கடாயம் செய்து படி 2க்குச் சர்க்கரை பலம் - 10 சேர்த்துப் பாகு ஆக்கி அமுக்கிரா, குக்கில், பறங்கிப் பட்டை, கார்போகரிசி, வகைக்கு பலம் - 1. சூரணித்துப் பாகிற்றூவி நெய் படி $\frac{1}{2}$ விட்டுக் கிண்டி, எடுத்துண்ண (களஞ்சியளவு ஒரு மண்டலம்) பறங்கி சூலை, சிரங்கு, குஷ்டம், கிரந்தி, புண்கள், சில்விஷம், வாய்வு, வாதம் போம்.

ஓரிலைத்தாமரை — இதனைப் பாலில் அரைத்துண்ண வெட்டைச் சூடறும், தாதுவுண்டாம்.

கசகசா — இதனைப் பாலில் அரைத்துண்ண வெட்டை, சிரங்கு, மேகம், எலும்புருக்கி, பித்தசூடு, நீர்க்கடுப்பு ஆசியவை தீரும்.

கட்டுக்கொடி — **இதன் வேர்:** கடி விடம், குட்டம் ஆகியவற்றைப் போக்கும். விந்து கட்டுண்டு நீர்த் திரட்டும்.

இலைச்சாறு: தேகபலம், உடல்கட்டு குளர்ச்சி தரும். வெட்டை போக்கும், பேதி கட்டும்.

கடுக்காய் — வயிறிளக்கும். கடுக்காய், ரோஜாப்பூ சூரணம், கற்கண்டு சர்க்கரை கூட்டி உண்டால் மலக்கட்டு அறும். இரும்பை விரைவில் உருக்க கடுக்காய் பயன்படும். பித்தத்தைப் போக்கும்.

கடுக்காய் லேகியம்: கடுக்காய் பலம் - 100 இடித்து நீர் மரக்கால் -4, 8-ல் 1 க்கு படி - 2 கடாயமிறக்கி அதில் சிவதை, இஞ்சி, மிளகு, ஓமம், கடுக்காய், திப்பிலி, வகை - 1க்கு பலம் - 1. சர்க்கரை பலம்-6 சரக்கரைத்திட்டு, பசுவின் நெய் படி-1 விட்டுக் கிண்டி லேகியம் பண்ணி

புன்னைக்கா யளவுண்ண அக்கினி மந்தம், சூலை, மலசலக் கட்டு, வாய்வுபத்து, மூலம்ஆறும் போம்.

கடுக்காய் லேகியம் (வேறு): கடுக்காய் கொட்டை தள்ளி பலம்-10, சிவதைவேர் பலம்-2, கரிசாலை பலம்-2, நிலயாவரை பலம்-2, எல்லா மிடித்து சூரணம் பண்ணி கடுகுரோகணி, கிராம்பு, திப்பிலி, சிறுநாகப்பூ, வாலுழு வையரிசி, கற்கடகசிங்கி, கருஞ்சீரகம், மிளகு, தாளிக்காய், கொத்தமல்லி தாளிசபத்திரி, வகை1க்கு பலம் $\frac{1}{4}$ இடித்து வடிகட்டி முன் மருந்திற்கூட்டி, பசுநெய், தேன் சர்க்கரை யிட்டு லேகியம் பண்ணி அந்தி சந்தி பாக்களவுண்ண, சலக்கட்டு, மலக்கட்டு, கோழைக் கட்டு, உட்டணவாய்வு, மேகச்சூடு, கை காலெரிவு, சூலையெரிவு, பிரட்டல், மூலச் சூடு, காந்தல், இளைப்பிருமல், புகைச்சல், வரட்சி, சோகை போம். பத்தியமாய்ச் சாப்பிடவும்.

கடுகு — சூலை நோயைத் தவிர்க்கும்.

கடுகுலேகியம் : கடுகு பலம்-100. நீர் மரக்கால் 4, எட்டிலொன்று கடாயமாக்கிப் பனங்கருப்பட்டி பலம்-10 சேர்த்துப் பாகாக்கி அதில் ஓமம், சுக்கு, திப்பிலி, கிராம்பு, காயம், கொத்தமல்லி, சீரகம், வாய்விளங்கம், மஞ்சள், அதிவிடயம் வகைக்குப் பலம் -1 வறுத்துப் பொடி பண்ணி பாகிலிட்டு, நல்லெண்ணெய் படி $\frac{1}{4}$ விட்டுக் கிண்டி மெழுகாயெடுத்துண்ண (புன்னைக்காயளவு) மூலரோகம், வாய்வு, திரட்சி, புளித்தேப்பம், செரியாமை, பொருமல், குன்மவாய்வு, சலமிரத்தம், புழுக்கள் போம்.

கண்டதிப்பிலி — வாய்வு, வாதம், தோடம், நாசி வறட்சி, தலைநோய், வாந்தி கைகால் ஓச்சல், சுரம் ஆகிய வற்றைப் போக்கும்.

கரிசாலை — பாண்டு நோயைப் போக்கும்.

கரியபோளம் — அனேக வகை ரோகங்களுக்குப் பயன்படும்.

முதல் வகை கற்றாழம்பாலால் செய்வது சிவந்து மஞ்சளாய் பளபளக்கும்.

இரண்டாம் வகை கருத்த மஞ்சள் நிறமாய் இருக்கும்.

மூன்றாம் வகை கருத்தும் நாற்றமுடையதாயுமிருக்கும்.

கருஞ்சீரகம் — அனேக நோய்களைப் போக்கப் பயன்படும். கிருமியைப் போக்கும்.

கற்கடகசிங்கி — அதிசாரம் போக்கும்.

கற்கண்டு — பாலில் கலந்துண்ண, பித்தம், காசம், வயிற்றுக்காந்தல், சத்தி மயக்கம், சோபம், பல மயக்கம், பயித்தியம், வெட்டைச்சூடு ஆகியன அறும்.

காட்டாத்தி — கிராணி போக்கும்.

காட்டு சதகுப்பை — குட்டம், கடி ஆகியவற்றை நீக்குவதில் முன்னிற்கும்.

கார்போகரிசி — விடம், குட்டம் ஆகியவற்றைப் போக்கும்.

கிச்சிலிக்கிழங்கு — தலைவலி போக்கும்.

கிராம்பு — இதனைப் பாலில் உண்ண சரும நோய், தோஷம், வயிறு கடுப்பு, வாய்வு, சுரம் போம். காயசித்தி உண்டாக்கும்.

கீழாநெல்லி —காமாலை தீர்க்கும்.

குக்கில் குங்கிலியம் — சூலை தவிர்கும்.

குங்குமப்பூ — தலை (சிரசு) வாதங்களைப் போக்கும்.

குந்திரிக்கம் — தலைவலி, பீனிசம் ஆகியவற்றைப் போக்கும்.

குளப்பாலைவேர் — விடக்கடி, விடக்கரப்பன், மேல் சுரப்பு, கால் சுரப்பு, சர்வ கடிவிடவீக்கம், பரு, படுவன் முதலான தோல் நோய்களைப் போக்கப் பயன்படும்.

கூகை நீறு — பிரமியம், உஷ்ணம் போக்கும்.

கொடிமுந்திரி — தோஷம் நீக்கும்.

கொத்தமல்லி — கபத்தைப் போக்கும்.

கோரோசினை — இதனைப் பாலில் 40 நாள் உண்ண சொறி, கண்ணோய் அறும். தேகம் வலிவுபெறும். நாபி கமலப்புண் ஆறும், காயசித்தி உண்டாம். முலைப் பாலில் உண்ண சிறப்புப்பலன் கிடைக்கும்.

கோஷ்டம் — வெட்டை, காந்தல், மூட்டுக்களின் நோய், கைகால் எரிவு, கத்தாழை நாற்றம், காசம், மந்தம், சருமநோய் ஆகியவற்றைப் போக்கப் பயன்படும்.

சங்கங்குப்பி — குட்டம் நீக்கும்.

சங்கம்வேர் — வண்டுகடி குட்டம் தமுதணை சொறி, தேமல், சிரங்கு, வெட்டை சூலை, கரப்பன், வீக்கம் ஆகியவற்றைப் போக்கப் பயன்படும்.

சண்பகப்பூ — இப்பூவைப் பாலில் உண்ண கண்ணோய், காசம், பித்தம், சூடு, வெட்டை, பித்த பைத்தியம், பல நோயும் நீங்கும்.

சதகுப்பை — உதிரவாதத்தைப் போக்கும்.

சந்தனம் — வெப்பமகற்றி குளிர்ச்சி உண்டாக்கும்

சந்தனாதித்தைலம்: சந்தனம் பலம் - 10, பிராயவேர், வில்வவேர், பாதிரிவேர், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், நன்னாரிவேர், முத்தக்காசு, சீதேவி வேர், பொன்னாங்கணி வேர், சிறுகீரை வேர், ஆக 10-ம் வகைக்குப் பலம்-2, மரக்கால்-4 எட்டில் 1க்கு படி $\frac{1}{2}$ கடாயம் வடித்து அதில் பசு நெய் சேர்-5 விட்டு பசுவின் பால் சேர்-5 பழச்சாறு சேர்-1, தேங்காய்ப்பால் சேர்-1, முசுமுசுக்கைச்சாறு சேர்-1, நெல்லிக்காய்ச்சாறு சேர்-1 கையாந்தகரைச்சாறு சேர்-1 கற்றாழைச்சாறு சேர்-1 ஆகியவற்றையும் கடாயத்தில் விட்டுக்கூட்டி பக்குவமா யெரிக்கும்போது அதிமதுரம், அக்கிராகாரம், கோஷ்டம், தேவதாரம், அகில், சந்தனம், சுக்கு, ஏலம், சீராகம், சோம்பு, பூலாங்கிழங்கு, கிளியூரம்

பட்டை, செண்பகப்பூ இவை வகைக்கு பலம் ½ பொடி செய்து தூவி பக்குவத்தில் வடித்து மூழ்கவும். நாள் சென்ற உதிரமேகம், உள்மூலம், புற மூலம், பெருநோய், மகோதரம், சூலை, பித்தம், கபம் போம்.

சந்தனாதி எண்ணெய்: சந்தனம் பலம் 10 அரைத்து நல்லெண்ணெய் படி 2 இதில் கரைத்து சித்தாமுட்டி, சீந்தில், இலாமிச்சை, வெட்டிவேர், நன்னாரி, காரி, வில்வம் வகைக்கு வேர்வகை பலம் 10 தரித்து இடித்து, இரு தூணி நீர்விட்டுக் குறுணியாக வடித்துப் பசும்பால் படி 3, மஞ்சிட்டி, மரமஞ்சள், சடாமாஞ்சில், விழாவரிசி, வெட்பாலை, சதகுப்பை, மல்லி, செவ்வியம், செவ்வள்ளிக்கொடி, பெருங்குரும்பை, தேவதாரம், ஏலம், கிராம்பு, சீரகம், அதிமதுரம், கசகசா, சிறுநாகப்பூ, அகில் கட்டை, செங்கழுநீர், கோட்டம், சண்பகப்பூ, கூகைநீறு, குங்குமப்பூ, கோரோசனை, கற்கண்டு, சிறுதேக்கு, தகரம், கச்சோலம், செஞ்சந்தனம், புனுகு வகை ஒன்றுக்கு பலம் ½ அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து உள்ளுக் கொண்டு தலையும் முழுகவும். பித்தம், வரட்சி, உள்வியாதி, பிரமியம், அழத்தல், கை கால் தலை எரிவு, கண்ணீர்ப்பாச்சல், கண்ணெரிவு உடலில் உள்ள சூடு உட்டிண ரோகம் எல்லாம் போம்.

சாதிக்காய் — தாதுவிருத்திக்குப் பயன் தரும்.

இதனைப்பாலில் அரைத்துக் குடிக்க விந்து கட்டும், வலுவுண்டாகும். சூடு, பித்தம், வயிற்றுக் கடுப்பு நீங்கும். தேகம் வாசனை பெறும்

சாதிப்பத்திரி — சுக்கிலவிருத்திக்குப் பெரிதும் பயன்தரும்.

சாரடை — திமிர்வாதம் போக்கும்.

சாரணைவேர் — பாண்டு, சோகை, விடபாகம், வாய்வு, வாதம் ஆகியவற்றை நீக்கும். வீக்கம், மூலம் போக்கும், பேதி உண்டாக்கும்.

சித்தாமுட்டி — சுரம் போக்கும், விதை பித்த மகற்றும்.

சித்திரவேர் — இதனைப் பாலில் அரைத்துப் பாக்களவு உட்கொள்ள - கரப்பான், சுரம், விடம், வெட்டை, அரையாப்பு, வாய்வு, சூலை, கறடு முறடு, கபம், உதிரச்சிக்கல் அறும்

சிறுதேக்கு — வாதசுரம் போக்கும்.

சிறுபுள்ளடி — கணம் அறுக்கும்.

சிறுபூளை — நீரிறக்கும்.

சீரகம் — பித்தமகற்றுவதில் முன்னிற்கும். சீரகத்தை எலுமிச்சம் பழத்தில் ஊரவைத்து உலத்தி சூரணித்து உண்டு வந்தால் வாய்நீர், பித்தம், வயிற்றுவலி போம்.

பித்தமகற்றும் சஞ்சீவி. இதனை எலுமிச்சம் சாற்றில் ஊறவைத்து நெய் சருக்கரைகூட்டி லேகியமாயுண்ண பித்த வாயுவினால் உண்டாகும் சகல நோயும் போம்.

சுக்கு — இதனைப் பாலில் அரைத்துண்ண பசி உண்டாகும்; குன்மசூலை, மூலவாய்வு, முதலான அறும்.

சுக்கு லேகியம்: சுக்கு பலம் -100. நீர் மரக்கால் 4, எட்டில் 1 வடித்து, பனைவெல்லம் பலம் 10 பாகுசெய்து, ஓமம் படி-1, கரிவேப்பிலைத்தூள் படி-1 தூவிக் கிண்டிக் கிண்டி நெய் படி $\frac{1}{2}$ விட்டு, இளம்பதமாய் இறக்கி புன்னைக்காயளவுண்ண (ஒரு மண்டலம்) கிராணி, மூலம், தசவாய்பு, அதிசாரம், கடுப்புரத்தம், பாரிசவாய்வு, பொருமல், மந்தம், செரியாமை, உள்ளேப்பம் ஆகியன போம்.

செஞ்சந்தனம் — தாகம் அகற்றும்.

செப்புநெருஞ்சி — நீருட்டணம் நீக்கும்.

சேங்கொட்டை — இதனைப் பாலில் அரைத்துண்ண நரை திரை, குட்டம், கிரந்தி, சூலை விரணம், மேகரோகம் தீரும். காயசித்தி உண்டாக்கும்.

சோம்பு — வியாதிகளைத் தடுக்கவல்லது. சோம்பைச் சூரணம்பண்ணி சமன் எடை சருக்கரை கூட்டி நித்தியம் வராகனெடை -2 உண்ண (சித்திரை முதல் ஆனிமாதம் வரை) அந்த வருடம் முழுவதும் ஒரு வியாதியும் உண்டாகாது.

தலைச்சுருளிவேர் — சகலகடிவிடம், கரப்பன், குஷ்டம், சூலை, பலவீனம், அரவுக்கடி, சொறிதினவு, சொறிசிரங்கு, சிரங்கு ஆகியவற்றைப் போக்கப் பயன்படும்,

தழுதாழை — வாத மறுக்கும்.

தாமரைப்பூ — இப்பூவைப் பாலில் அரைத்துண்ண நித்திரையில் பொங்கும் விந்து நிற்கும். சூடாறும்.

தாமரைமணி — இம்மணியால் வசியம் உண்டாகும். மூலம், மேகம், வெட்டை, கை கால் கருப்பு போம். கண் குளிர்ச்சி பெறும். காயசித்தி உண்டாகும்.

தாழம்பூ — சரும நோய்களைப் போக்கும். இதனை எண்ணெயில் ஊறவைத்து உடம்பிற் பூசிவர குட்டம், சொறி சிரங்கு நீங்கும். தாழம்வேரை சருக்கரை கூட்டி கியாழமிட்டு சர்பத்தாக்கிச் சாப்பிட தினவு சொறி மேகம் ஆகியன நீங்கும். அம்மை காணாத பிள்ளை களுக்குக் கொடுக்க அம்மை தடுக்கப்படும். அம்மை கண்டா லும் கொஞ்சமாய் நாலஞ்சு கொப்புளங்கண்டு மறையும்.

தாழம்பூவின் சுட்டசாம்பல் இரணங்களில் தூவிவர அவை காயும்.

தாளிசபத்திரி — இரைப்பு, சிலேட்டுமம், சுவாசக் கோளாறு போக்கும்.

தானிக்காய் — சுவாசக்கோளாறு நீக்கும்.

தான்றிக்காய் லேகியம் : தான்றிக்காய் பலம் - 100. நீர் மரக்கால் - 4 எட்டிலொன்று கடாயம். அதிவிடையம், சாதிக்காய், அபினி, கஞ்சா, வகை 1 க்கு பலம்-1, எல்லாம் தூள்செய்து சீனி பலம்-10, கடாயத்தில் கரைத்து, பாகு சேரில் அதில் சூரணந்தூவி, நெய்விட்டுக் கிண்டி மெழுகு பதத்திறக்கி மண்டலம் 1 உண்ண பொருமல், வாய்வு, வயிறுகடுப்பு, ரத்தம், அஸ்திசுரம், கிராணி, மூலம், பாண்டு, உட்டணநோய், நெடுநாள் வாய்வும் போம்,

திப்பிலி — சிலேட்டுமம், காசம், வாய்வு, வாத சூலை, சன்னி மூர்ச்சை ஆகிய வற்றைப் போக்கும்.

திப்பிலி லேகியம்: திப்பிலி பலம்-100. நீர் மரக்கால்-4 எட்டிலொன்றாக்கி, கடாயத்தில் கற்கண்டு பலம்-10 பொடித்திட்டு பாகு செய்து சுக்கு, கடுக்காய், அரத்தை, அக்கிராகாரம், ஓமம், சீரகம், மல்லி, வெட்பாலை, சண்பகப் பூ, கோஷ்டம் வகை 1க்கு பலம் 1, சூரணித்து பாகிற்றூவி நெய் படி -½ தேன் படி-¼ சேர்த்து மெழுகு பதம் எடுக்கவும். இதில் தானிக்காயளவுண்ண (ஒரு மண்டலம்) சிலேட்டுமம், வாதம், அதிசாரம், இருமல், வாய்வு, உப்பிசம், மாந்தம், ஈளை, காசம் போம்.

திராட்சம் — மலமிளக்கும். தாதுவை விருத்தி செய்யும்.

திருநீற்றுப்பச்சிலை — சுவாசக் கோளாறுகளை நீக்கும். திருநீற்றுப்பச்சிலைச்சாறுள் சருக்கரை கூட்டியுண்ண மார்வலி, சுவாச இருமல், இருமல் போம். வாயு அறும். மென்றுதின்ன வாய் வேக்காடு அறும். இதன் விதையை நீரில் ஊறவிட்டு பாலில் உண்ண மேகம், அதிசாரம் அறும். இச் சாற்றைக் காதில் விட காது வலி நிற்கும்

துத்தி — சருமநோய்களைப் போக்கும். நீர்த் தாரைப் புண்ணையாற்றும், ரணம் புண் ஆற்றும், எண்ணெயில் கூட்டியரைத்துப்புண்ணிலிடக் காயும்.

இலையை யரைத்துப் பருக்கள் மேல் கட்ட கரையும். இலையைத்தூய நீரில் இராத்திரி ஊறவைத்து, காலையில் பிசைந்து இறுத்து பசுவின் பாலில் கூட்டியுண்ண மூல உதிரம் அறும்.

விதை மலமிளக்கும். துத்திவிதையைச் சூரணித்துப் பாலிற் கூட்டிக் காய்ச்சியுண்ண தாது விருத்தியாகும்.

துளசி — துளசி இலையை எண்ணெயில் எரித்து காதில் விட காதுவலி தீரும்*. இதன் விதையை வெந்நீரில் போட்டு கஷாயமாக்கிக் குடிக்க இருமல் அறும்.

தேள்கொடுக்கி — சிரங்கை யாற்றும்.

தேற்றாங்கொட்டை — இருமல் - மாந்தை தீர்ப்பதில் பயன் தரும்.

தேற்றாங்கொட்டை நெய்: தோற்றாங் கொட்டையை நறுக்கி இளநீரிலிட்டு ஊறவைத்து இளநீர் படி - 5, நெய் நாழி, கொட்டை பலம்-8 திப்பிலி, மிளகு, கடுகுரோகணி, கற்கடகசிங்கி, கொன்றைப்பழம், கத்தூரி மஞ்சள், வெளுத்தபிசின் மதுரம் வகைக்கு பலம் ¼ வடித்துண்ண இருமல் மந்தாரகாசம் ஓடுஉள் மாந்தை தீரும்.

தேன் — இதனைப் பாலில் கலந்துண்ண சயம், காசம், இருமல், பித்தம், வாய்வு நீங்கும். பசி உண்டாக்கும்

நத்தை சூரிவிதை — உடற்கட்டு, விந்துகட்டு, காயசித்தி உண்டாக்கும். சகல நோயகற்றும்.

நந்தியாவட்டை — கண்ணோய்கள் அகற்றும்.

நாய்க்கோட்டான்வேர் — வண்டுகடி, கடிவிடம், கிரந்தி, கரப்பன், வங்கு, சொறி, குட்டம், புண்புரை, வீக்கம், சிலந்திக்கடி, பெருவிடம் ஆகியவற்றைப் போக்கப் பயன். படும்.

---

* செவிப்பறையில் ஓட்டை இருப்பின் இதனை மேற் கொள்ளக்கூடாது என்பது இன்றைய மருத்துவர்களின் கருத்தாகும்.

நாயுருவி — மந்தம் அகற்றும்.

நாவல் — விரணம் போக்கும்.

நிலப்பனைமூலம் — விந்துகட்டும், தாது உண்டுபண்ணும், இரத்தம் விருத்தியாக்கும். உடல் வலிவுண்டாக்கும். சகல நோயகற்றும். எண்ணெயிலிட்டுக் காதில்விட செவிநோய், நாய்க்கடி போம்.

நிலாவாரை — அனேக நோய்களையகற்றும். இச் சூரணத்துடன் பாதியளவு கடுக்காய் கூட்டினால் இதன் வீரியம் கூடும்.

நீலிவேர் — பாலில் அரைத்து பாக்களவு உட் கொள்ள - விடம், கரப்பன், நரை, திரை, நடுக்கல் போம்.

நெல்லிக்காய் — உடல் உஷ்ணம் போக்கும்.

நெல்லிக்காய் லேகியம்: நெல்லிக்காய் பலம் 100. நீர் மரக்கால் 4, எட்டிலொன்று வடித்து, திரிகடுகு, திப்பிலி மூலம், கிராம்பு, கச்சோலம், ஏலம், குக்கில், வாய்விளங்கம், சீரகம், கொத்தமல்லி, வாலுழுவை, கூகைநீறு, அதிமதுரம், சர்க்கரை பலம்-10, கடாயத்தில் கரைத்து மருந்தெல்லாம் அரைத்துக் கரைத்திட்டு, பாகுபதத்தில் நெய் படி 1 சேர்த்துக் கிண்டிக்கிண்டி மெழுகு பதத்தி லெடுத்துத் தினம் பாக்களவுண்ண (அரை மண்டலம்) மேகம், அஸ்திசுரம், உழலை, காந்தி, கிராணி, வாய்வு, பொருமல், இருமல், சயம், ஈளை, சிலேற்பனம் போம்.

நெல்லிக்காய்த்தைலம்: நல்லெண்ணெய் படி 1, பசும்பால் படி 1, நெல்லிக்காய்ச்சாறு, பொன்னாங்காணி, கற்றாழை, சிறுகீரை, கரிசாலை, முசுமுசுக்கை, நந்திப்பூ, கம்மாறு வெற்றிலை வகைக்கு சாறுபடி $\frac{1}{2}$, சீரகம், மிளகு, மல்லி, நன்னாரிவேர், ஏலம், சந்தனம், சண்பகப்பூ வகைக்கு பலம் $\frac{1}{2}$, பால் விட்டரைத்திட்டுக் காய்ச்சி வடித்து முழுகவும். ஆவாரந்துளிர், சீயக்காயிட்டு முழுகவும். மேகச்சூடு பித்த மறும்.

ஆமலகாதிதைலம்: (ஆமலகம்: நெல்லிக்காய்) நெல்லிக்காய் நீர், கையாந்தகரைச்சாறு, பொன்னாங்காணிநீர், வகைக்கு படி-1 எண்ணெய் படி 1 கண்டங்கத்திரிவேர் பலம் 1, அரைத்திட்டு, காய்ச்சி வடித்து முழுகவும். பித்தமறும். மேகம் போம்.

ஆமலகதைலம்: நல்லெண்ணெய் - படி 1, பால் படி 1, நெய் படி $\frac{1}{2}$, நெல்லிக்காய்ச்சாறு, கரிச்சாலைச்சாறு, கற்றாழைச்சாறு, பொன்னாங்காணி, சிறுகீரைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, சதாவரிக்கிழங்கு, வல்லாரை, இளநீர் வகைக்குப் படி $\frac{1}{4}$. சீந்தி - நீர்த் தண்டினீர் படி $\frac{1}{4}$, எண்ணெயில் விட்டுக் கலந்து கடாயம் செய்து வெட்டிவேர், விலாமிச்சவேர், நன்னாரிவேர், வில்வவேர், சந்தனம், முத்தக்காசு, அமுக்கிரா, சிற்றாமுட்டிவேர், கீழாநெல்லி, தேவதாரம் வகைக்கு பலம் - 5, நீர்மரக்கால் 4, 8ல் -1க்குப் படி 2, அதிமதுரம், ஏலம், கிராம்பு, பெருஞ்சீரகம், சண்பக மொட்டு, பூலாங்கிழங்கு, கோட்டம், கத்தூரி மஞ்சள், சீரகம், செவ்வள்ளிக்கொடி, கிளியூரம்பட்டை, சடாமஞ்சி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, சந்தனம், சிற்றரத்தை, மஞ்சள், சிந்திரமூலம், நன்னாரி, அமுக்கிரா, கருஞ் சீரகம், வாலுழுவையரிசி, சுக்கு, மிளகு, கொத்தமல்லி, கருவாப்பட்டை, அகிற்கட்டை, பூஞ்சாந்துப்பட்டை, கிச்சிலிக்கிழங்கு, ஆக 30ம் வகைக்கு கழஞ்சு -1 பாலிலரைத் திட்டு காய்ச்சி வடித்து முழுகவும். மேகம்-21-ம், பித்தம், வாதம், கபநோய், கண்ணோய், உட்டணரோகம், சிரநோய், பினிசம், கபாலச் சூடுமுதலறும். தைலமிறக்கின உடனே சூட்டில், கோரோசினை, குங்குமப்பூ, பச்சைகற்பூரம், சாதிக்காய், சாதிபத்திரி, புனுகு, சவ்வாது. சாம்பிராணி, வகைக்கு வராகனெடை $\frac{1}{4}$, பொடித்திட்டு கலக்கி, தானிய புடமாக 15 நாள் வைத்து முழுகவும். வெந்நீர் சீயக்காயாம். தைலமிட்டுக் குளித்த அன்று புளிதள்ளவும் அல்லது ரசமுஞ் சாதமும் உண்ணவும்.

பிரமியிலை — விக்கல் தீர்க்கும்.

பிராவேர் — இதனைப் பாலில் அரைத்துண்ண வண்டுக்கடி, குட்டம் 18-ம், கச்சரமம் போம். உடற்கழும்பு அறும். மருந்திடு தீரும். மேனி மாந்தளிர்போல் அழகு பெறும்.

புங்கம்வேர் — புண்புரை, சூலை, அரையாப்பு, அரிகிரந்தி, பலகரப்பன், குட்டம், சில்விடம், கணம் ஆகிய வற்றை நீக்கும். இதன் பருப்பு கண்ணுக்கு ஆகும். இதன் எண்ணெய் வாதமகற்றும்.

புங்கு — சூலை தவிர்க்கும்.

புன்னை — புண் கிரந்தி நோய்களைப் போக்கும்.

பூவரசு — குட்டமேகம், விடம் போக்கும்.

பூனைக்காலிப்பருப்பு .... தாது உண்டாக்கும். தம்பனம் உண்டாக்கும்.

பெருங்காயம் — பசி உண்டாக்கும்.

பெருங்காய லேகியம்: பெருங்காயம், சேர்மனாதி பெருங் காயம், பலம்-25, நீர் மரக்கால் 4, எட்டி லொன்றாக்கி, சீனி பலம் -10 போட்டுப் பாகு செய்து, வெள்வெங்காயம், கடுகு, மிளகு, சுக்கு, திப்பிலி, ஓமம், சீரகம், மதுரம், கோஷ்ட்டம், வகைக்கு பலம்-1, நெய் படி $\frac{1}{4}$ விட்டுக் கிண்டி மெழுகு பதமாக்கியெடுத்து கழஞ்சியளவு உண்ண வாய்வு, வாதம் போம். பத்தியம் மிளகு,மஞ்சள். சீரகம் கொள்ளவும். கறிவகைகள் முருங்கைப்பிஞ்சு. கத்திரிப்பிஞ்சு, வாழைக்காய் சிறுகீரை, பொன்னாங்காணி, அவரைப்பிஞ்சு, அத்தி, தூதளங்காய், துவரை, நெல்லிக்காய், முசுட்டைக்கீரை கொள்ளவும். இது எல்லா மருந்துக்கும் பத்தியமாம். பால், நெய், முயல், உடும்பு, மயில், மோர், காடை, வெள்ளாட்டுவற்றல், கவுதாரி, உள்ளான், சுரும்பு, ஆமை, வரால், உழுவை, திருக்கை, நெத்திலி, இதுகளெல்லாம் பொதுவான பத்தியம்.

பேரீஞ்சு — சுரம் போக்கும்.

பொன்முசுட்டைவேர் — குட்டம், விடம், நீக்கி நீர்த்திரட்டும்
இதன் இலைச்சாறு: மலங்கட்டும், வாய்வகற்றும், பேதி கட்டும், விந்துகட்டும்.

மஞ்சள் — மந்தம் நீக்கும்.

மணித்தக்காளி — உடல் சூடு தணிக்கும்.

மரமஞ்சள் — சுவாசக் கோளாறு போக்கும்.

மிளகு — விடம் அகற்றும், கபமறுக்கும், உடலில் அழகுண்டாக்கும்.

மிளகு லேகியம்: மிளகு பலம் -100, நீர் மரக்கால் 4, எட்டில் 1 கடாயம். கற்கண்டு பலம்-10, பொடித்திட்டுக் காய்ச்சி பாகுபதத்தில், அரத்தை, அக்கிராகாரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோஷ்டம், மதுரம், தேற்றாவிதை, வாய்விலங்கம், சாதிபத்திரி, திப்பிலிமூலம், வகை 1க்கு பலம் -1, பொடி பண்ணி, பாகிற்றூவி நெய் படி அரை, தேன் படி $\frac{1}{4}$ விட்டு மெழுகுபதத்திலெடுத்துண்ண சிலேட்டுமம் 96 ம், பொருமல், வாய்வு, அக்கினிமந்தம், சூடு, காந்தல் அஸ்திசுரம், கபம், ஈளை, வாய்வு போம்.

முடக்கற்றான் — அண்டவாதம் போக்கும்.

முசுமுசுக்கை — சயம் அகற்றும்.

முத்தக்காசு — இதனைப்பாலில் அரைத்துண்ண கற்றாழை நாற்றம், வீக்கம், வறட்சி, தோஷம், வாந்தி ஆகியன போம்.

முத்தெருக்கம்செவி சமூலம் — பெண்முலை சுரக்கும், புடைக்கும், விம்மும், முகவசியம் உண்டாக்கும். மேக நோய் அகற்றும், கரப்பன், சில்விடம், சிலந்திப்புண் அகற்றும்.

மூக்குறட்டை — பீனிசம் போக்கும்.

முருங்கை — கண்ணோய்களைப் போக்கி விரணத்தை அகற்றும்.

வாகை — விரணம் போக்கும்

வாய்விளங்கம் — குடலிலுள்ள புழுக்களைத் தள்ளும்.

வாலுழுவை — குட்டம் போக்கும்.

வாழை — பெரும்பாட்டை நிறுத்தும்.

விட்டுணுகாந்தி — மேகம், சயம், காசம், இருமல், ஈளை, விடங்கள், சன்னி, வாதபித்த சிலேட்டும சுரம் ஆகிய வற்றைப் போக்கும். உடல் ஒளி பெறும்.

வீழிவேர் — குட்டம், கடிவிடம், கரப்பன், வாய்வு, அண்டவலி, பக்கவலி, விரியன்வீக்கம், வாதகாமாலை, சோகை, சொறிசிரங்கு, கிரந்தி, தமுதணை, நரை திரை ஆகியவற்றைப் போக்கப் பயன்படும்

வெண்கடுகு — குட்டம் போக்கும்.

வெந்தயம் — உடல் எரிவை நீக்கும், குளிர்ச்சி உண்டாக்கும்.

வெந்தய லேகியம்: வெந்தயம் பலம் - 100. நீர் மரக்கால் 4, எட்டிலொன்று கடாயம் பண்ணிச் சர்க்கரை பலம் 10, இட்டுப் பாகாக்கி, அதிமதுரம், கோஷ்டம், கசகசா, சீரகம், அதிவிடயம், ஓமம், சாதிக்காய், கிராம்பு, கஞ்சா, குரோசானி - ஓமம், வகைக்கு பலம் 1, பொடித்துப் பாகிற்றூவி, நெய் படி $\frac{1}{2}$ சேர்த்து மெழுகுபதம் எடுத்து அக்கினி கடுப்புக்குக் கழஞ்சியளவுண்ண - சூட்டால் வரும் கிராணி வகையெல்லாம் போம். கணச்சூடும் அறும்.

வெள்ளருகு சமூலம் — (வேர் கொடி புல் முழுதும்) குஷ்டம், சில்விடம், சிரங்கு, மேகம், சொறி, கிரந்தி, வெட்டை, வெடி சூலை, காமாலை, விடகரப்பன், வீக்கம் ஆகியவை போம். உடல் பொன் - போல் அழகுபெறும்.

வெள்ளுள்ளி — நெஞ்சடைப்பு, வாய்வு, உள்மூலம், குன்மம், சூலை, உதிரநோய், வெட்டை, சயம், வயிற்றுக் கடுப்பு, வாதம் ஆகியவற்றைப் போக்கும்.

உள்ளி லேகியம்: உள்ளி பலம் -100, நீர் மரக்கால் 4, எட்டிலொன்று கடாயத்தில் ஐங்காயம், சுக்கு, வால்மிளகு, இந்துப்பு, ஏலம், ஓமம், திப்பிலி, மிளகு, சீரகம், திரிபலை வெட்பாலை, அதிவிடயம், காயம், வகை 1க்கு பலம் 1, வாய்விளங்கம் பலம் 1, சீனி பலம் 10. பாகாக்கிச் சூரணந் தூவி பசுவினெய் படி $\frac{1}{4}$ விட்டு மெழுகு பதம் எடுத்து புன்னைக்காயளவுண்டுவர வாய்வு, வாதம், குன்மம் 8-ம் போம்.

வேலிப்பருத்திவேர் — விடம், கரப்பன், வெட்டை, கிரந்தி, சூலை, மருந்தீடு, கால் கை பிடிப்பு, வாய்வு ஆகியவற்றைப் போக்கப் பயன்படும்.

உளரி லேகியம்: உளரி கிலோ—100, நீர் பத்தலிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய் வடிகட்டிச் சூரணம், சுக்கு, வாய்விளங்கம், இந்துப்பு, ஏலம், ஓமம், திப்பிலி, மிளகு, சீரகம், இலவங்கப் பட்டை, அதிமதுரம், காட்டுச் சீரகம் வகை 10 கிராம் [illegible] 1, கிலோ 10 பாகாக்கிச் சூரணத்தைத் தூவி [illegible] [illegible] தீரும்.

வெண்புழுத்திசேவர் — வீட்டு, அம்மன், கொட்டை, [illegible] [illegible]

[illegible]

[illegible] — [illegible]

[illegible] — [illegible]

[illegible] லேகியம்: [illegible] — 100, [illegible]

[illegible]

[illegible] — [illegible]

[illegible]

[illegible] — [illegible]

[illegible]

2. பொது நோய்கள்

இரண்டாம் பகுதியாக அமையும் இப்பகுதியில், பொது வகையாக ஏற்படும் நோய்களும் அவற்றுக்குரிய மருத்துவக் குறிப்புகளும் இடம் பெற்றிருக்கின்றன. தலைப்பகுதியில் இடம் பெற்றுள்ள கண், காது, வாய், பல் போன்ற உறுப்புகளில் ஏற்படும் நோய்கள் இப்பகுதியின் முதற்கண் திரட்டப் பெற்றுள்ளன. கண்ணெரிவு, வாய்நாற்றம், அழலை, கண்ணோய் கண்புகைச்சல் போன்ற நோய்களுக்குரிய மருத்துவத்துடன், வெள்ளெழுத்து, உடல் உஷ்ணம், ஆகியவற்றுக்கும் இப்பகுதியில் மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன.

காதில் ஏற்படும் நோய்களான செவிநோய், செவிட்டுத் தன்மை ஆகிய இரண்டுக்கும் எளிய மருந்துகளை இச்சுவடி சுட்டியுள்ளது. அவற்றை இப்பகுதியில் இரண்டாவதாகக் காணலாம்.

பற்களில் தோன்றும் பல்நோய், தந்தவாய்வு, பல்லீற்றுப்புண் ஆகியவற்றுக்கு மருந்து கூறுகின்ற இச்சுவடி இன்றைய பற்பொடி நிலையில் தயாரித்துப் பயன்படுத்த முடிந்த பொடி ஒன்றையும் பரிந்துரைத்துள்ளது. அது பல்லில்தோன்றும் அனேகநோய்களைப் போக்கும் வல்மைபெற்றது. பல்நோயால் உருவாகும் புழுக்களையும் கொல்லும் தன்மைபெற்றது என்று பரிந்துரைக்கின்றது.

தலையின் உச்சியில் காட்சிப்பொருளாகவும் கவர்ச்சிப் பொருளாகவும் உள்ள மயிர் சிலருக்கு உரியவண்ணத்திலும் வேண்டிய எண்ணிக்கையிலும் இருப்பதில்லை. நம் முன்னோர் அது குறித்தும் சிந்தித்திருக்கின்றனர். அழகிய கருமயிர் தலையில் அடர்ந்து வளர்வதற்கு முக்கூட்டெண்ணெய் என்ற ஓர் எண்ணெயைப் பரிந்துரைத்துள்ளது. நம் பதிப்புக்குரிய இச்சுவடி அத்துடன், இளமையிலேயே காலமின்றியும் நரைத்து விட்ட,

தலைமயிரைக் கருமையாக்கவேண்டிய மருந்தையும் பரிந்துரைத்துள்ளது. இவ்விரண்டையும் இப்பகுதியில் காணலாம்.

சிறியவர் முதல் பெரியவர் ஈறாக எல்லாப்பருவத்தினர்க்கும் வரும் பொது நோய்களுள் சுரம், தாகம், பித்தம் போன்ற நோய்களை முதன்மையாகக்கூறலாம். இப்பகுதியின் இறுதியில் பல்வேறு சுரங்களுக்கும், தாகங்களுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளன. சுரங்களில் பலகாரணங்களால் தோன்றும் பலவகைகள் உள்ளன. இன்றைய விஷசுரங்களைப்பற்றி நம்முன்னோர் அறிந்திருந்தனரா என்பதை உறுதியாகக் கூறமுடியவில்லை. ஆயின், வாதத்தால் தோன்றும் சுரம், பித்த சிலேத்துமங்களால் தோன்றும் சுரங்கள் மற்றும் தொற்றுகளால் தோன்றும் பல்வேறு சுரவகைகளை அறிந்திருந்தனர் என்பதற்கான சான்றுகள் காணப்படுகிறன. ஒவ்வொரு சுரத்துக்கும் தனித்தனியான குறிகளையும் குறித்திருக்கின்றனர். சுரத்துக்கு, குடிநீர், லேகியம், மாத்திரை, குழம்பு, மேற்பூச்சு, எனப்பல வடிவங்களில் வகைகளில் மருந்துகள் சொல்லப்படுகின்றன, இச் சுவடியிலும் சுரங்களுக்கான மருந்துவகைகள் பல சொல்லப்பட்டுள்ளன. தெளிவுடன் காணப்படும் சில மருத்துவக் குறிப்புகளை மட்டும், சில சுரவகைகளை மட்டும் தேர்ந்தெடுத்து முறைப்படுத்திக்கொடுத்திருக்கிறது இப்பதிப்பு. இனி இந்நோய்களுக்குரிய மருத்துவக் குறிப்புகளைச் சுவடி சுட்டியவாறு காண்போம்.

உடல் உஷ்ணம் (இளநீர்த்தைலம்)

இளநீர் மரக்கால் 1, நெல்லிக்காய்ச்சாறு படி-2, கையாந்தகரை படி-2, எண்ணெய் படி-1, ஏலம், லவங்கப்பட்டை, சிறுசெண்பகப்பூ, செங்கழுநீர், கோட்டம், மல்லி, மஞ்சிட்டி, வெட்டிவேர், விலாமிச்சு, முத்தக்காசு, சந்தனம், சதகுப்பை, பச்சிலை, சிறுநாகப்பூ, நன்னாரிவேர், தாமரைவளையம், கடுகுரோகணி, வகைக்கு பலம் $\frac{1}{4}$, அரைத்திட்டு வடித்து முழுகவும், பித்தம் 40-ம் உடல் உஷ்ணமும் கண்ணெரிவும் திரும். குளிர்ச்சி உண்டாகும்.

எரிவு, வாய்நாற்றம், அழலை

ஆமணக்கெண்ணெய் படி-1, விழுதி, மயிர் மாணிக்கம், சிறுசெருப்படி, கீழாநெல்லி, சீந்தி, கத்தாழை, மணத்தக்காளி, சம்பழம், கோவை, வெங்காயச்சாறு, வகைக்கு சாறு படி ½, பசுவின் பால் படி ½ இளநீர் படி 1, மிளகு, சீரகம் வகைக்கு பலம்-5, தேற்றாங் கொட்டை பலம்-4, அரைத்துக் குழப்பி எரித்து (ஆவாரை விறகால் எரிப்பு) மெழுகுபதம் செய்து தினம் ஒரு பலம் ஒரு மண்டலம் உண்டுவர நீர்ச்சுருக்கு, கண்ணெரிச்சல், புகைச்சல், பித்தம், உடம்பனத்தல், நமச்சல், வாய்நாற்றம் ஆகியன நீங்கும். பத்தியமில்லை.

கண்ணெரிவு: (கரிச்சாலை எண்ணெய்)

குறுந்தொட்டி, சிறுகாஞ்சொறிவேர், கரிச்சாலை நீர்படி ½, நெல்லிக்காய்ச்சாறு படி ½, பசும்பால் படி ½, நல்லெண்ணெய் படி 1, அதிமதுரம் பலம் 1½, காய்ச்சி வடித்துத் தலைமுழுக கண்ணெரிவு பித்தமறும்.

உடல், கண்ணெரிவு: (இளநீர் எண்ணெய்)

இளநீர் படி-3, எண்ணெய் படி-1, பால் படி-1, அதிமதுரம், சந்தனம், குங்குமம், நன்னாரிவேர், செங்கழுநீர், கோட்டம், ஏலம், லவங்கப்பட்டை, பச்சிலை, நெய்ச்சிட்டி, மாஞ்சி, சதாவரி, விலாமிச்சவேர், கச்சோலம், கடுகுரோகிணி,தேவதாரம், அகில், சண்பகப்பூ, அரத்தை, சாதிக்காய், தக்கோலம், தாமரை வளையம், வெட்டிவேர், வகைக்குப் பலம் ¼, முத்தக்காசு பலம் ½, அரைத்துக் கரைத்து 4 நாள் சூடுகாட்டி மறு நாளெரித்து முழுக மேகம், பித்தம், வறட்சி, கண்ணெரிவு போம்.

கண்நோய்: (திருமூலர் கண்மாத்திரை)*

இந்துப்பு வராகனெடை -1, திப்பிலி வராகனெடை -2, பிதரோகணி வராகனெடை -3, நந்தியாவட்டைப் பூச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து குளிகை செய்து நிழலுலத்தி மேற்படி பூச்சாற்றிலுரைத்துக் கண்ணுக்கிட கண் வியாதிகள் போம்,

---

* கண்களுக்கான மருந்துகளைத் தயாரிக்கும்போது செய்முறைகளில் மிகுகவனத்துடன் தூய்மை போற்றவேண்டும். இல்லையேல் தீய விளைவுகளை அவை உண்டாக்கிவிடும்.

கண் மாத்திரை (வேறு)

துத்தம், துரிசு, இந்துப்பு, பீதரோகணி, அதிமதுரம், திப்பிலி, கடுக்காய்ப்பருப்பு, தாரம், சிலை, வெண்சங்கு, புங்கம் பருப்பு, சண்பகமொட்டு, மிளகு, சுக்கு, பொன்னாங்காணிவேர், சிறு கீரைவேர், வெண்சாரணைவேர், நெல்லிப்பருப்பு, நந்தியா வட்டைப்பூச்சாறு விட்டு அரைத்து குளிகை செய்து 3 நாள் உலர்த்தியெடுத்து முலைப்பாலிலுரைத்திட கண்நோய் 96-ம் போம்.

கண்புகைச்சல்:

இலந்தைச்சாறு படி -1, எள்ளெண்ணெய் படி-1, செவ்விள நீர் படி-1, 3-ம் கூட்டி அடுப்பிலிட்டெரித்து, (சாமம்-2 எரிப்பு), மெழுகு பதத்தில் வடித்து அதில் குங்குமப்பூ, கோரோசினை, சாதிக்காய், ஏலம், மிளகு, சாதிபத்திரி வகைக்கு வராகனெடை $1\frac{1}{4}$, வறுத்து, பொடித்திட்டு புதன் சனி முழுகவும். இப்படி மாதம் -2, முழுகிவர கண்புகைச்சல் தீரும், சாளேசிரம்போம்.

வெள்ளெழுத்து:

வெள்ளைச்சாரணைவேரைப் பாலில் காய்ச்சியுலத்தி தேனிலுரைத்துக் கண்ணிலிட வெள்ளெழுத்தறும்.

கை, கால், கண், குலை எரிவு:

எலுமிச்சம்பழம் -50, சட்டியிலிட்டு வதக்கி சாறுபிழிந்து, அதில் சீனி பலம்-2 போட்டுப் பாகுசெய்து சீரகம், மிளகு, வகைக்குப் பலம்- $1\frac{1}{2}$, சுக்கு, திப்பிலி, கோட்டம், தாளிசபத்திரி, சாதிக்காய், ஏலம் வகைக்கு வராகனெடை-2, அதிமதுரம், அரத்தை, சிறுநாகப்பூ, அமுக்கிரா, கிராம்பு, சித்திரமூலம், தேற்றாவிதை, விளங்கம், திராட்சம், திரிபலை, வகைக்கு வராகனெடை-2, வறுத்திடித்து சூரணம் பண்ணி பாகிற்றூவி கிண்டி, பசுவினெய் பலம்-2 விட்டு லேகியம் செய்து. பாக்களவு ஒரு மண்டலம் உண்டுவர கண், கைகால், குலை எரிச்சல்களும், வாந்தி, வாய்நீர், பித்தம், எரிகுன்மம் இது முதல் போம். நெல்லிக்காய் தைலம் முழுகவும். புளி தள்ளவேண்டும்.

செவி நோய்: (தைலம்)

நல்லெண்ணெய் படி-2, ஆட்டின் மூத்திரம் படி-2, எருக்கு, நொச்சி, முருங்கையிலை, இஞ்சி, ஊமத்தை, உத்தாமணி, அவுரி, தாழை விழுது, பசு மஞ்சள், நல்லவேளை, நிலப்பனை இச்சாறுகள் வகைக்கு படி $\frac{1}{2}$, எல்லாங்கூட்டி உள்ளி, வசம்பு, கடுகு, சுக்கு, தேவதரு, கோட்டம், இந்துப்பு, வகைக்கு வராகனெடை $1\frac{1}{4}$ அரைத்திட்டுக் காய்ச்சி வடித்து காதில் விட்டடைக்கச் செவிநோய் 25-ம் போம்.

(வேறு)

எருக்கம்வேர், முருங்கை, நொச்சி, வெண்டோன்றிக் கிழங்கு, துளசி, விழுதி, மிதிபாகல், இஞ்சி, வகைக்கு படி 1/8, எண்ணெய் படி-1, இவற்றைக் கூட்டி எரித்து, வடித்துக் காதிலடைக்க செவிநோயறும்.

செவிடு: (தைலம்)

பூநாகம், நண்டிறைச்சி, முசுறுமுட்டை, கோழிமுட்டை மஞ்சட்கரு, வசம்பு, வெள்ளுள்ளி, குக்கில் வகைக்கு கழஞ்சு-1, வேப்பெண்ணெய் படி $\frac{3}{4}$, பலம் $2\frac{1}{2}$, பதமாய்க் காய்ச்சிக் காதில் குத்தி துணியாலடைத்துப் போட்டு வர செவிடு நீங்கும்.

தந்த (பல்) நோய்: (புலிப்பாணியில் கண்ட தந்தப் பொடி)

அரப்பொடி பலம்-1, பீங்கானிலிட்டு கடுக்காய், தான்றிக் காய், மாசிக்காய், சீனாக்காரம், கொறுக்காய்ப்புளி, துரிசு, காசுக்கட்டி, வகைக்கு வராகனெடை -3, இதனைப் பொடி பண்ணிப் பீங்கானிலிட்டுப் பழச்சாறு விட்டு ரவியில் வற்றமட்டும் வைத்து, அம்மியிலிட்டரைத்து மைபோலரைத்துப் பொடி பண்ணி பல்விளக்க தந்தநோய் பலவும் போம்.

(வேறு)

அரக்கு, சீனாகாரம், துரிசு, கடுக்காய், மாசிக்காய் வகைக்கு வராகனெடை -1, அரப்பொடி, தான்றிக்காய், கடுக்காய் வகைக்கு வராகனெடை -3, சம்பழச்சாறு விட்டரைத்து காயவைத்துப் பொடிபண்ணி பல் விளக்கிவர புழுவெல்லாம்

சாகும். ஈறு வளரும், பல்லசைவு, பற்குத்து, வாய்ப்புண், நாற்றம் முதல் பல் நோய் பலவும் தீரும். பல்லொளி உண்டாகும்.

தந்த வாய்வு: (உப்பு பற்பம்)

கல்லுப்பு பலம் 10, சேராங்கொட்டை பலம்–2, எருக்கம் பழுப்பு –50, எல்லாமிடித்து ஓட்டிலிட்டு வறுக்கவும். சாமம் அஞ்சில் தூளாம். தூளை வேளைக்கு பலம் $\frac{1}{2}$, பல் விளக்க (10 நாள்) தந்தநோய் போம்.

(வேறு)

காட்டாமணக்கம்பால் கறந்து கழஞ்சு-3, உள்ளங்கையிலிட்டு தேய்க்க வெண்ணெய் போலாம். அந்தி சந்தி பல்லிலிட்டுத் தேய்த்துக் கொப்பளிக்க நோயறும்.

பல்லீற்றின் புண்:

பிராம்பட்டை, ஆலம்பட்டை, சமனெடை தட்டிக் கடாய மிட்டுக் கொப்பளிக்க (மண்டலம்–1) பல்லீற்றின் புண்ணாறும்.

மயிர் வளர: (முக்கூட்டெண்ணெய்)

நல்லெண்ணெய் படி $\frac{3}{4}$ சித்தாமணக்கெண்ணெய் படி $\frac{1}{4}$, பசுநெய் படி $\frac{1}{4}$, எலுமிச்சம்பழம்–30, பொன்னாங்காணி 1 பிடி, சித்தாமுட்டிவேர் பிடி–1, செங்கழுநீர், கோட்டம், மதுரம், செவ்வள்ளிக்கொடி, ஏலம், இலவங்கப்பூ, அரத்தை பலம் $1\frac{1}{4}$, சந்தனம் சம்பழமிரண்டத்தனை, சீந்திற்கசாயம் படி 3/4, பசும்பால் படி 3/4, எண்ணெயிலிட்டு நாள் 3 சூரியபுடம்வைத்து நாலாநாளெரித்து வடித்துத் தலைமுழுகிவர மயிர் வளரும். பித்தம், வறட்சி, கைகால் எரிவு, மண்டைச்சூலை, நாவறட்சி, நரியுரிஞ்சல், மிடறு பொருமல் இவை முதலானதும் தீரும்.

நரைமுடி:

நிலப்பனை கிழங்கு பாலிலரைத்து பாக்களவு பாலில் குடித்துவர நரை மாறும்.

கணம்: (கணத்தெண்ணெய்)

விளக்கெண்ணெய் படி-1, கரிச்சாலைச்சாறு, கற்பூரவள்ளி, பொன்னாங்காணி, கற்றாழை, வல்லாரை, யானைநெருஞ்சி, கோவைத்தண்டினீர், மணித்தக்காளி, சீந்தித்தண்டு, ஈருள்ளிச் சாறு, புளியாரைச்சாறு வகைக்கு படி $\frac{1}{4}$, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், மாசிக்காய், கோஷ்டம், வெந்தயம், லவங்கபத்திரி, லவங்கப்பட்டை, வகைக்கு பலம் $\frac{1}{4}$, பாலாலரைத்திட்டுக் காய்ச்சி வடித்துக் கற்கண்டு பலம்-2, பொடித்திட்டுக் கறண்டி நிறையுண்ண கணம் 18-ம் போம். (சம்பழச்சாறு படி-$\frac{1}{4}$ கூடவிடவும். கோரோசினை வராகனெடை 1, பொடித்திடவும்).

சுரம்: (சுரங்களுக்கு அபினி குளிகை)

அபினி வராகனெடை-6, சுக்கு வராகனெடை-7, திப்பிலி வராகனெடை-8, சீரகம் வராகனெடை-9, மிளகு வராகனெடை -10, ஆக 5-ம் வராகனெடை-40, விட்டுணுகாந்தி கடாயத்தால் சாமம்-4 அரைத்து குன்றியளவுண்டை நிழலுலத்தி (நாள்-3) வில்வவேர், விட்டுணுகாந்தி, சீரகம், வெற்றிலைக்காம்பு, 4-ம் கூட்டி கடாயமிட்ட குளிகையை 6 வேளை கொடுக்க சகல சுரமறும். கழிச்சல் தாபசுரம் போம். புளி தள்ளவும், புளியாகாது.

சுரசுரம்:

முருங்கைப்பூ வராகனெடை-1, திப்பிலி வராகனெடை-1 அரைத்து பூனாகம் பலம்-1, சட்டியில் விட்டெரித்து சாம்பலாக்கி அதில் பசும்பால் படி $\frac{1}{2}$ விட்டு அரைக்காற்படியாக சுண்ட எரித் துண்ண சுரங்கள் மாறும். புளி, புகை தள்ளவும்.

(வேறு)

வெள்ளெருக்கம்பட்டை, சுக்கு, பூண்டு வகைக்கு பலம் $\frac{1}{4}$ நீர் படி-1, 8ல் 1க்கு படி 1/8 கடாயமிட்டு உண்ண சுரம்போகும். புளி தள்ளவும்.

(வேறு)

புங்கிலை 13, (முதிர்ச்சி யிளசு ரெண்டுமல்லாத நடுத்தர மானயிலை) 13 உரித்த உள்ளி வைத்தரைத் துண்டை-3 செய்துண்ண (காலை-1 மத்தியானம்-1 சாயந்திரம்-1) குளிர்சுர முதலான பலசுரமும் போம்.

(கரிசாலை, தூதுவளை, நொச்சி, சங்கு, கிராம்பு வகை-3, ஏலம், சாதிக்காய், ஓமம், விளங்கம், கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, இந்துப்பு, வாலுழுவையரிசி, செந்தொட்டிவேர், லவங்கப்பட்டை, இவை 15-ம் சுரத்தில் கூட்டுவது).

சுரம்: (சுர குளிகை)

தூதுவளை, கண்டங்கத்திரி, முத்தக்காசு, விலாமிச்சு, வெட்டிவேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி, துளசி, தும்பை, விட்டுணுகரந்தை, நல்லவேளை, குமிழ்-2, அவுரிவேர், நன்னாரி வேர், ஆடாதோடை, சித்திரமூலம், வில்வம், சிறுகாஞ்சோறி, சீந்தித்தண்டு, பற்பாடகம், பேய்ப்புடல், வேப்பம்பட்டை, நெய்ச்சிட்டி ஆக 24-ம் பலம் $\frac{1}{4}$. வேர்களை சூரணம் பண்ணி வடிகட்டி கல்வத்திட்டு சிற்றரத்தை, அதிமதுரம், கோஷடம், சிறுநாகப்பூ, ஏலம், கிராம்பு, திரிகடுகு, நிலவேம்பு, சீரகம், ஓமம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, சிறுதேக்கு, தாளிசபத்திரி கண்டதிப்பிலி, வாய்விளங்கம், கொத்தமல்லி, செவ்வியம், சந்தனம் லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஆக 23-ம் வகைக்கு பலம் $\frac{1}{4}$ ஆக 47-ம் பலம் 10-களும் சூரணித்து வடிகட்டி கல்வத்திட்டு, அவிரிச்சாறு, ஆடாதோடைச்சாறு, கரிசாலை, சிறுபுள்ளடி, மிதியார் கூந்தல், ஆக அஞ்சுசாறும் சாமம் அஞ்சு, அரைத்துண்டை பண்ணி நிழலுலத்திய (அனுபானம்: இஞ்சிநீர் முலைப்பால், வெந்நீர், இல்லாவிட்டால் நொச்சி, சுக்கு கடாயம். சங்கிலை நீர், தேனில்) குளிகையுரைத்துண்ண, எலலாச் சுரமும் அஸ்தி சுரம், மாந்த சன்னி, மாந்தம், பித்தம், இருமல், குளிர் சுரம், ஊதுகணம், மாந்தை உப்பிசம் முதல் போம்.

மாந்த சன்னி:

வேளைவேர், உத்தாமணிவேர், மாவிலங்கப்பட்டை, முருங்கப்பட்டை, சித்திரமூலம், எருக்கம்வேர்ப்பட்டை, நொச்சிப்

பட்டை, இஞ்சி, கண்டதிப்பிலி எல்லாமரைத்து சாறுபிழிந்து சட்டியிலிட்டு முறித்து, அதில் திரிகடுகு பொடி செய்திடவும், முன்னொன்பதும் வகைக்கு பலம் 1 திரிகடுகு வராகனெடை -1 இதில் தகுந்த மாத்திரையிழைத்தூட்டவும். மாந்த சன்னி போம். குப்பைமேனி வேருமாகும்.

சருவதாகம் (கடாயம்)

தூதுவளை, கண்டகாலி, நிலவேம்பு, முத்தம், ஆடாதோடை, விட்டுணுகாந்தி, பற்பாடகம், கடலிராஞ்சிப்பட்டை, சீந்தித் தண்டு, சிற்றாமுட்டிவேர், சிறுகாஞ்சோறி வேர், வேப்பம் பட்டை, முசுமுசுக்கை, பேய்ப்புடல், தும்பைவேர், நாய்த்துளசி, இதில் கிடைக்காததற்கு வேறு: முத்தக்காசு, வெட்டிவேர், விலாமிச்சு, நன்னாரி, செவ்வியம், முக்காவேளை, சித்திரமூலம், வில்வ மிதுகளில் ஏதாவது கூட்டவும். சரக்குகள்: சிறுதேக்கு, தாளிசபத்திரி, சுக்கு, சிற்றரத்தை, திப்பிலி, மோடி, இதுவும் வேறு சரக்குள்: கடுக்காய், கொத்தமல்லி, அதிமதுரம், செவ்வியம், திராட்சம், கற்சூரம், ஏலம், கிராம்பு, தேவதாரம், கோஷ்டம், மூலிகைவேர்கள் வகைக்கு பலம்-1, உரலிலிட்டிடித்து சரக்குகள் வகைக்கு வராகனெடை 3, எல்லாங்கூட்டி, இடித்து ஆறுபங்கு செய்து நீர்படி-2, 8-ல் 1 வடித்து நாள்-3 உண்ணவும், புளி, புகை, மோர் தள்ளவும். இதில் சுரம் நிற்காவிடில் கற்கம், திப்பிலி, சுக்கு, சிற்றரத்தை, கண்டதிப்பிலி கோஷ்டம், சிறுதேக்கு, அதிமதுரம், கிராம்பு, கருஞ்சீரகம், வாய்விளங்கம், தாளிசபத்திரி, முத்தம், மிளகு, சீரகம், அக்கிராகாரம், அதிவிடயம், வகைக்கு வராகனெடை-1, பொன்னிறமாய் வறுத்துப்பொடிபண்ணி இஞ்சி சுரசத்தில் விரற்கடி தூளிட்டு 3 நாள் உண்ணத்தீரும். இதில் மீறினால் தோஷம் சன்னி ஆனால், மாவிலங்கு, நொச்சி, முருங்கை, கொடிவேலி, சங்கு இவைகளின் வேர்ப்பட்டை, இஞ்சி, சிற்றரத்தை, கணடதிப்பிலி இவைகளை சுரசம் பண்ணி பூநாகம் வறுத்துப் பொடிசெய்திட்டு வராகனெடை-1, விரற்கடி முன்பொடியிலிட்டு தேன் வராகனெடை-1, குத்தி இதனுடன் முலைப்பால் உள்ளித்தைலம் முசுறுமுட்டைப் பிழிந்தபால், இன்டம்பால், கோழி முட்டைத்

தைலம், கஸ்தூரி, கோரோசினை, கூட்டி ஆறுவேளை கொடுக்க சாந்தமாம் .வலிப்பு, சன்னியும் சுரமும் போம்.

தாகம்

விளாவிலை, ஆடாதோடை, அரசங்கொழுந்து வகைக்கு பிடி-1, மணல் அரைப்படியிட்டு, கொடிமுந்திரி, அதிமதுரம், வகைக்கு வராகனெடை-1 இவைகள் கருகும்வரையில் வறுத்து தண்ணீர்விட்டு குறுகக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்க தாகந் தீரும். (நாள் 3) சுரதாகம், உஷ்ணதாகம், அந்திரதாகம், பாவைதாகம், குடிநீர் உண்ணப்போம்.

(வேறு)

(1500-ல்) கற்றாழைசோறு, செண்பகப்பூ, லவங்கப்பட்டை, நல்லவெல்லம் கூட்டியுண்ண தாகம் போம்.

(வேறு)

நெருஞ்சிக்காய், பச்சையோலை, வில்வப்பழச்சதை, நெற் பொரி, சீரகம், ஏலம் வகைக்கு வராகனெடை-1, கிழிகட்டி சட்டியிலிட்டு மாந்துளிருங் கூடயிட்டு, சலம்விட்டு சாப்பிட்டுவர தாகம் போம்.

பித்தம், பித்தமயக்கம்:

கரிச்சாலை படி-1, நெல்லிக்காய் நீர் படி-2, இளநீர் படி-1, அதில் சந்தனம் கோட்டம், ஏலம், லவங்கப்பட்டை பச்சிலை, சிறுநாகப்பூ, அதிவிடயம், மாஞ்சி, செவ்வள்ளிக்கொடி, கடுகு ரோகணி, சதகுப்பை, சாதிக்காய், கச்சோலம், கண்டில் வெண்ணெய், அதிமதுரம், திராட்சம், வெந்தயம், தாமரை வளையம், செங்கழுநீர்க்கொடி, நெய்தற்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சு, இலுப்பைப்பூ, நன்னாரிவேர் வகைக்கு 2 பலம் அரைத்துக் கரைத்து, பசுவின்பால் படி-2, நல்லெண்ணெய் படி நாலு பதத்தில் வடித்து புனுகுசட்டமிட்டு முழுகவும், பித்த மயக்கம் தியக்கம், தலை கனத்தல் முதலியன தீரும்.

3. சுவாசநோய்கள்

உயிரினங்களுக்கு உணவினும் இன்றியமையாத பொருள் காற்றாகும். காற்றை உள்ளிழுத்து வெளியிடும் உறுப்புகள் ஒவ்வொரு உயிரினத்துக்கும் அடிப்படை உறுப்புகளாகக் காணப் படுகின்றன. அந்தவகையில் மனித இனத்தின் சுவாச உறுப்பு களும் அவற்றின் செயற்பாடுகளும் உயிரோட்டத்தில் சிறந்த தோர் இடத்தைப் பெற்றிருக்கின்றன என்றால் அது மிகை யாகாது. சித்தமருத்துவர்கள் சுவாச உறுப்புகள் அவற்றின் செயற்பாடுகள் குறித்து மிக ஆழமாகச் சிந்தித்திருக்கின்றனர். தமிழ்நாட்டில் சுவாசத் தொடர்பான நோய்கள் பரவலாகவும், மிகுதியாகவும் காணப்படுகின்றன. எனவே, சித்தர்களின் ஆய்வு இந்நோய்களில் அதிகமாகச் சென்றிருக்கிறது. பல்வேறு ஆய்வு களின் முடிவாக அவர்கள் பலவற்றைச் சொல்லியுள்ளனர்.

இச் சுவடியிலும் சுவாசத் தொடர்பான பலநோய்களும் அவற்றுக்குரிய மருத்துவக் குறிப்புகளும் காணப்படுகின்றன. நோய்ப்பெயரும். மருத்துவக்குறிப்பும் தெளிவாகக் காணப் படுகின்ற செய்திகளை மட்டும் தொகுத்து இம்மூன்றாம் பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இருமல், காசம், பீனிசம், தலைவலி, ஆகிய நோய்களுக்கான மருத்துவக் குறிப்புகள் இங்கே இடம்பெற்றுள்ளன. எளிதான குடிநீர், நசியம் புகையூட்டல் போன்ற மருந்துவகைகளுடன் சூரணம், குளிகை, லேகியம், தைலம் போன்ற மருந்துவகைகளும் இங்கே சுட்டப்பட்டுள்ளன.

பீனிச வகைநோய்க்குத்தான் எத்தனை மாற்றுமருந்துகள்: அனைத்தும் எளிய மருந்துகளே, சூரணம், தைலம், லேகியம் போன்ற மருந்துகளைவிட இந்நோய்க்கு நசியமருந்தும் புகை மருந்தும் சிறப்பாகப் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன. இச்சுவடி, இந்நோய்க்கு நசிய வகையில்மட்டும் 6 மருந்துக்கும் மேற்பட்ட

நிலையில் மாற்று மருந்துகளைக் கூறியுள்ளது. (நசியம் என்பது மூக்கால் உறிஞ்சப்படும் (பொடிபோடுவது போல) மருந்துவகை யாகும்) அவ்வாறே இந்நோய்க்கு ஒன்றுக்கு மேற்பட்ட புகை மருந்துகளைப் பரிந்துரைத்திருப்பதும் காணத்தக்கதாம். மருந்துப்பொருள்களைத் துணித்திரியில் ஏற்றி அதனை விளக்குச்சுடரில் கொளுத்தி அதனின்றெழும் புகையை மூக்கால் உள்ளுக்கிழுக்கும் இம்முறை சித்தமருத்துவத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாம்.

குழந்தைகளும் விரும்பியுண்ணும் நிலையில் இந்நோய்க்கு இனிப்பு வடகம் ஒன்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறது இச்சுவடி. இந்நோய்க்கு மருந்துகளைச் சொல்லும்போது, பீனிசத்தோடு தொடர்புடைய பிறநோய்களையும் குணப்படுத்தும் குறிப்பை இச் சுவடியில் காணமுடிகிறது. காது, மூக்கு, தொண்டை நோய்கள் ஒன்றோடொன்று தொடர்புடையன என்னும் இக் காலத்து அறிவியலார் கண்ட உண்மையை நம் மருத்துவமும் கண்டிருந்தது என்பதற்குக் கட்டியம் கூறுவதுபோல் இவற்றைக் காணமுடிகிறது. இனி, இச் சுவடி தரும் குறிப்புகளைக் காண் போம்.

இருமல் காசம்: (அமுக்கிரா எண்ணெய்)

அமுக்கிராவேர் பலம் – 17, குறுந்தொட்டிவேர் பலம் $8\frac{1}{2}$ இடித்து, நீர் மரக்கால் – 4 சேர்த்து வடித்து (வடிப்பு மரக்கால் –1) அரத்தை, சதகுப்பை, கோட்டம், தேவதாரம், சடாமஞ்சி, மஞ்சள், ஆனைத்திப்பிலி, மிளகு, தகரம், மாதளைவேர், பொன்மெழுகு, மதுரம், இந்துப்பு, முத்தக்காசு வகைக்கு வராகனெடை 4, எண்ணெய் படி 4, அரைத்திட்டு வடித்துண்டு தலைமுழுகக் காசம், உடம்புவெக்கை, உட்காய்ச்சல், இருமல் தீரும்.

இருமல்: (கற்பூர குளிகை)

பச்சைக்கற்பூரம், சீரகம், மான்கொம்பு, கோரோசினை, கெந்தகம், சாம்பிராணி, வகைக்கு கழஞ்சு-1 பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, நெருஞ்சி, நீர்முள்ளிவிதை, இளநீரிலிட்டு காய்ச்சிய கடாயம் விட்டு அரைத்து மெழுகாக்கி

குன்றியளவுண்டை செய்து நிழலுலத்தி 15 நாள் அந்தி சந்தி உண்ண சயம் இருமல் போம்.

சுவாச நோய்கள்: (சுவாச குடோரி)

கோட்டம், சீரகம், சிறுதேக்கு, சித்திரம், சாதிக்காய், லவங்கவகை 3, கடுக்காய், திரிகடுகு, அரத்தை, கண்டதிப்பிலி, அதிமதுரம், ஏலம், வெங்காரம், ஆக 15-ம், தாளிசபத்திரி வராகனெடை-17, கூட்டி ரவி - சூரணம் பண்ணி - தேன் இஞ்சி நீர், நெய் கூட்டியுண்ண சுவாசம் தொடர்பான 96 பிணிகளும் நீங்கும். இவற்றுடன் நற்சிந்தூரம் வைத்துண்ணப் பயன் அதிகமாகும்.

சுவாச குடோரி சூரணம்

திரிகடுகு, சிற்றரத்தை, அக்கிராகாரம், வால்மிளகு, கண்டதிப்பிலி, வெங்காரம் வகைக்கு பலம்-1, தாளிசபத்திரி பலம்-2. கூட்டி ரவியுலத்தி சூரணம் பண்ணி தேன், இஞ்சிநீர், நறுநெய்யிலுண்ணவும். சுவாச நோய்கள் 96-ம் போம். இவற்றுடன் நல்லசிந்தூரமிட்டுண்ணப் பயன் அதிகமாகும்.

(வேறு)

அதிமதுரம், அதிவிடயம், சுக்கு, திரிபலை, கல்நார், குராசாணி, ஓமம், ஏலம், லவங்கம் - 3 வகை, கொத்தமல்லி, சாதிக்காய், தாளிசபத்திரி சமன்கூட்டி, சூரணித் துண்ணவும், தேன் அநுபானமாகக் கொள்ளுதல் வேண்டும்.

சுவாசகாசம்: (சுவாசகாச லேகியம்)

ஆடாதோடைவேர் பலம்-10, கண்டங்கத்திரி சமூலம் பலம்-10, கருந்துளசிவேர், குப்பைமேனிவேர், சிறுகாஞ்சோறி வேர், நாகமல்லிவேர், நாவற்பட்டை, வெள்ளிண்டவேர், வெண்ணொச்சிவேர், விளாவேர், வகைக்கு பலம்-5, இடித்து நீர் மரக்கால் 4 விட்டு 8ல் 1க்கு படி-2, கடாயம் வடித்து, வெல்லம் (செங்கரும்பு வெல்லம்) பலம்-20 போட்டு பாகு செய்ததில் சிற்றரத்தை, கண்டதிப்பிலி, ஏலம், தாளிசபத்திரி, தான்றிக்காய், குந்திரிக்கம், மரமஞ்சள், லவங்கப்பத்திரி, அரிசித்திப்பிலி, பெருஞ்சீரகம், மிளகரணைவேர், வெண்சாரணைவேர்,

திராட்சப்பழம், சாதிக்காய் வகைக்கு பலம்-1, இடித்துச் சூரணம் வடிகட்டி பாகிற்றூவிக் கிளறி தேன்படி $\frac{1}{2}$, நெய் படி $\frac{1}{4}$ விட்டு லேகியம் பண்ணிப் பாக்கள வுண்ணவும், இத்துடன், நாகபற்பமாவது காந்த மண்டூரம் கூடின சிந்தூரமாவது வைத்துண்ண சுவாச காசம், இருமல், சயம் முதலானது போம்.

(வேறு)

திரிகடுகு, கொடிவேலி, கோரைக்கிழங்கு, திரிபலை, லவங்கப்பட்டை, சமன் இதற்குச் சமன் சுத்தித்த குக்கில் கூட்டிச் சூரணித்து நெய் சேர்த்துண்ண வாதங்கள், கபம், சுவாச காசம், போம்.

சுவாசகாசம்: (கடாயம்)

ஆடாதோடைவேர், கண்டங்கத்திரி சமூலம், சிறுகாஞ் சோறிவேர், துளசிவேர், நாகமல்லிவேர், வெண்ணொச்சிவேர் வகைக்கு பலம்-2, தாளிசபத்திரி, சிற்றரத்தை, கண்டதிப்பிலி தான்றிக்காய், லவங்கபத்திரி, திப்பிலி, பெருஞ்சீரகம், சிறுதேக்கு வகைக்கு பலம்-1, இடித்து கடாயம் 8-இல் 1 வடித்து இதில் குளிகையொன்றுரைத்து தேன் குத்திக் கொடுக்கவும். சுவாச காசம் இருமல் முதலானது போம்.

பீனிசம்: (பீனிசத்தைலம்)

கரிசாலை, கற்றாழை, நெல்லிக்காய், முசுமுசுக்கை, மிளகு தக்காளி, பொன்னாகாணி, பசுமஞ்சள், வெற்றிலைநீர், நொச்சிச் சாறு, நாரத்தம்பழநீர், எலுமிச்சம்பழநீர், ஆதண்டை, முடக் கற்றான் வகைக்கு சாறு படி $\frac{1}{4}$, எண்ணெய் படி-1, திரிகடுகு, மதுரம், கோட்டம், சீரகம், கஸ்தூரி மஞ்சள், மல்லி, விளங்கம், அரத்தை, சித்திரம், வால்மிளகு, சாதிக்காய், கோரோசினை, சண்பகப்பூ, தாளிசபத்திரி, வகைக்கு பலம் $\frac{1}{4}$ லவங்கப்பட்டை, சங்கம்வேர், எல்லாம் வெள்ளாட்டுப் பாலால் அரைத்திட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகவும். பீனிசமெல்லாம் போம்.

(வேறு)

எள்ளெண்ணெய் படி-2$\frac{1}{2}$க்கு, கரிசாலை, நெல்லிக்காய், கற்றாழை, பொன்னாங்காணி, நொச்சி, தூதுவளை, முசு

முசுக்கை, சிறுகீரை, சதாவரி, சீந்தில், ஆலவிழுது, கண்டங் கத்திரி, கோவை, வகைக்கு சாறு படி $\frac{1}{4}$, இவற்றின் கடாயம் படி-2, வில்வவேர், நன்னாரி, சிற்றாமுட்டி. வெட்டிவேர், விலாமிச்சு, முத்தக்காசு, அறுகங்கிழங்கு, வகைக்கு பலம்-5, நீர் மரக்கால் -4, 8ல் 1க்கு படி 2,பால் படி-2. இளநீர் படி-1, எல்லாங் கூட்டி, ரவியில் வைத்து மறுநாளெரிக்கவும். மூன்று நாள் வைத்திருந்து மீண்டும் சிறுதீ யிட்டெரித்து, நாலாநாள் வடிக் கவும். திரிகடுகு, ஏலம், கிராம்பு,மதுரம், சாதிக்காய், சாதிபத்திரி, கோட்டம், சந்தனம், சண்பகப்பூ, சிறுநாகப்பூ, செவ்வள்ளிக் கொடி, சீரகம், தாமரைத்தாது, தாமரை வளையம், கஸ்தூரி மஞ்சள், லவங்கப்பட்டை, கொத்தமல்லி, அரத்தை, தாளிச பத்திரி, சடாமஞ்சி, தேவதாரம், கிளியூரம்பட்டை, பூலாங் கிழங்கு, வகைக்கு பலம் $\frac{1}{4}$, எல்லாம் அரைத்திட்டு, மெழுகுபதம் வடித்து முழுக தலைவலி, பீனிசம் எல்லாம் போம்.

(வேறு)

விழுதிச்சாறு படி-1, பசும்பால் படி-1. நல்லெண்ணெய் படி-1, விழுதிவேர் பலம்-1, அரைத்திட்டுக் காய்ச்சி வடித்து முழுகவும்.

(வேறு)

விழுதிச்சாறு, நெல்லிக்காய் நீர், கரிசாலை நீர், பசும்பால், எண்ணெய் வகைக்குப் படி-1, அதிமதுரம் பலம்-1, மிளகு பலம்-1, சீரகம், கருஞ்சீரகம், அரத்தை, கோட்டம், வகைக்கு பலம் $\frac{1}{2}$, அரைத்திட்டுக் காய்ச்சி வடித்து முழுகவும். பீனிசமறும்.

(வேறு)

சவுரிப்பழச்சாறு, பொடுதலைச்சாறு, பசுவின்பால் வகைக்கு படி-1, எண்ணெய் படி-1. மிளகு பலம்-1, மதுரம் பலம்-1, கஸ்தூரிமஞ்சள் பலம்-1, அரைத்திட்டுக் காய்ச்சி வடித்து முழுகவும். பீனிசமெல்லாம் தீரும்.

(வேறு)

சித்திரமூலம் பலம்-1, கத்தாழம்வேர்ப்பால் விட்டரைத் துருட்டி நல்லெண்ணெய் படி-1, அதிலிட்டு மெழுகு பதத்தில் வடித்துத் தலைமுழுகவும், பீனிசம் எல்லாம் போம்.

பீனிசயெண்ணெய் (வேறு)

நல்லெண்ணெய் பலம்-8, வெள்ளெருக்கம்பூ பலம்-10, கறண்டியிலிட்டுத் தீயிற் காய்ச்ச பூ பொன்னிறமாய் வரும்போது எடுத்துத் தலைக்கு மட்டும் தேய்த்து நீரளாவாத வெந்நீர் விட்டு முழுகவும், உடனே சாப்பிடவும். தலைமுழுகிய நாளில் புளி, மோர், பழையது தள்ளவும். பீனிசமெல்லாம் தீரும்.

பீனிசத்தைலம் (வேறு)

நல்லெண்ணெய் படி-1, கரிசாலை, நொச்சி, வெற்றிலை, சம்பழநீர், முசுமுசுக்கை, ஆதண்டை, பசுமஞ்சள், கொடுப்பை, நெல்லிக்காய்ச்சாறு, கண்டங்கத்திரி, பசும்பால் வகைக்கு படி $\frac{1}{4}$, அதிமதுரம், அரத்தை, சுக்கு, மிளகு, சதகுப்பை, கோட்டம், திப்பிலி, கத்தூரி மஞ்சள், ஏலம், சண்பகப்பூ, சீரகம், மஞ்சள் தேவதாரம், சந்தனம், நன்னாரிவேர், லவங்கப்பட்டை, தாளிச பத்திரி, சிறுதேக்கு, கிராம்பு, விளங்கம், கொத்தமல்லி, சாதிக்காய், சித்திரமூலம், வகைக்கு பலம் $\frac{1}{4}$, பசுவின்பால் விட்டரைத்திட்டு எண்ணெய் சாற்றில் கலந்து சிறு தீயாய் நாள்-3, எரித்து நாளாநாள் வடித்துச் சூட்டில் அபின் வராகனெடை $2\frac{1}{2}$, இட்டு தானியபுடம் 10 நாள் வைத்தெடுத்து நாலு நாளைக்குத் தலை முழுகவும். முழுகின அன்று - செவிநாசியில் தைலம் விடவும் புளி, தயிர், மோர், புகையிலை, கசப்பு, பயறு, பலகாரங்கள், இறைச்சி, பழ வருக்கம், தள்ளவும். பீனிச வகைகள் கண்ணோய், பித்தம், கரப்பன், வாயு, கபாலநோய், சிரநோயறும்.

பீனிசத்தைல நசிய எண்ணெய் (வேறு)

நல்லெண்ணெய் படி-1, சம்பழநீர் படி-1, துளசிச்சாறு படி-1, நன்னாரிநீர் படி $\frac{1}{2}$, மிளகு, சீரகம், அரத்தை, சதகுப்பை, வகைக்கு பலம்-1, அவுரிச்சாறு படியொன்று விட்டெல்லா

மரைத்து எண்ணெயில் குழப்பிச் சூரிய புடமாய் வைத்து வரவும். மெழுகு பதமாய் வரும்போது கற்பூரவாசம் வீசும். அப்பதத்திலெடுத்து தலைக்கிட்டு நாசியிலும் நசியஞ் செய்யவும். பீனிசம் போம்.

தலைவலி:

சுக்கு பலம்-2, நீர் மரக்கால்-1, 8-ல் 1க்கு கடாயம் படி $\frac{1}{2}$, தேங்காய்ப்பால் படி 1/8, குங்குமப்பூ வராகனெடை-1, நெய் வடித்துக் குங்குமப்பூ பொடித்திட்டு நசியமிட பீனிசத்தால் வரும் தலை வலி போம்.

பீனிச நசியம் (வேறு)

அறுகவேர்ச்சாறு, முலைப்பால், தேங்காய்ப்பால், மாதளம் பூச்சாறு, குறட்டைப்பழச்சாறு, துளசிச்சாறு, வகைக்கு பலம்-1 கூட்டியிதில் அதிமதுரம், கோஷ்டம், ஏலம், லவங்கப் பட்டை, கருஞ்சீரகம், மஞ்சள், விளங்கம், லவங்கப்பத்திரி, வகைக்கு வராகனெடை-1, அரைத்திட்டுக் காய்ச்சி வடித்துச் சூட்டில் குங்குமப்பூ வராகனெடை $\frac{1}{4}$, குங்கிலியம் வராகனெடை $\frac{1}{4}$, பொடித்திட்டு மெழுகு பதத்தில் வடித்து நசியமிட பித்தவலி, கண் சிவப்பு, கண்வாதம், நீர்ப்புல்லம், கண்ணீர்ப்பாச்சல்-பீனிசம் போம்.

கண்ணில் சிறு சூடாயிருக்கும்போது தேன்கலந்து சாரை விடவும்.

(வேறு நசியம்)

நல்லெண்ணெய் பலம்-4, உள்ளிப்பூண்டின் சாறு, அகத்தியிலைச்சாறு, துளசியிலைச்சாறு, வகைக்கு நீர் பலம்-2, கூட்டிக் காய்ச்சி வடித்து இதில் இந்துப்புப் பொடி, குங்கிலியம், குங்குமப்பூ, 3-ம் பொடிபண்ணி வராகனெடை கூட்டிப் பொடியிட்டு நசியமிடவும்.

(வேறு நசியம்)

துளசிச்சாறு படி-1, எண்ணெய் படி-1, காய்ச்சி வடித்து அதில் குங்குமப்பூ வராகனெடை $1\frac{1}{4}$, குங்கிலியம் வராகனெடை $1\frac{1}{4}$, பொடித்திட்டு நசியமிட பீனிசமறும்,

(வேறு-சிவந்தபாத நசியம்)

சுக்கு, திப்பிலிமூலம், கோட்டம், விளங்கம், திராட்சம் வகைக்கு பலம்-1, நீர் படி ரெண்டிவிட்டு 4-க்கு 1, படி $\frac{1}{2}$, கடாயம் வடித்து எண்ணெய், நெய் வகைக்கு-ஒவ்வொரு பலம் கூட்டி, சுக்கு, திப்பிலி மூலம், கோட்டம், வாய்விளங்கம், திராட்சம் வகைக்கு வராகனெடை $1\frac{1}{4}$, கற்கமிட்டுக் காய்ச்சி வடித்து நசியமிட விரண முதல் நாசிரோகம் போம்.

(பீனிசத்துக்குத் திரி (வேறு)

பூவரசம்வேர், வெள்ளெருக்கம் வேர், மலைதாங்கி வேர், கஸ்தூரி மஞ்சள், சிறுநாகப்பூ, வெடியுப்பு, புனுகு வகைக்கு வராகனெடை-1, புகையிலை நீர்விட்டரைத்துச் சீலையிற் தடவி; திரட்டி யுலத்தித் தீயில் கொளுத்தி நாசியில் புகையேற்றப் பீனிசம் நீங்கும்.

(வேறு திரி)

அரிதாரம், எருக்கம்வேர், பழச்சாறு விட்டரைத்து சீலையிற் றடவி ரவியுலத்தி தீபத்தில் கொளுத்திப் புகையை நாசியில் ஏற்றவும். பீனிசம், கபாலசூலை, கரப்பன், செவிநோய் போம்.

(வேறு - பிரமமுனியில் திரி)

மிளகை வெற்றிலைச்சாறு விட்டரைத்து பாக்களவு மேற்படி சாற்றில் கரைத்து சீலைத்துணியை நனைத்து நனைத்து காய வைத்து உலத்தி, அதனைக் குறட்டைப்பழத்துள்ளிட்டுத் திணித்து 8நாள் சென்றபின்னெடுத்தால் நற்றுணிபோ லிருக்கும். அதைப் பயிற்றங்காய் மொத்தம் அஞ்சுவிரல் நீளமாக திரி திரித்து நிழலுலத்தி, தீபத்தில் கொளுத்திப் புகையை நாசியி லேற்றவும், அந்தி சந்தி 8 நாள் இப்படிச் செய்ய பீனிசம் போம்.

பீனிசத்துக்குச் சூரணம் (வேறு)

சங்கம்வேர், கண்டங்கத்திரி-செங்கத்தாரிப்பட்டை, சித்திர மூலப்பட்டை, பெருமரத்துவேர், கடுகுரோகணி, சண்பகப்பூ கடுக்காய், திரிகடுகு, கஸ்தூரி மஞ்சள், சீரகம்-2, வகை யொன்றுக்கு பலம்-1, சூரணம் பண்ணி விரற்கடியளவு 8 நாள், உண்ண பீனிச நோயறும்.

(வேறு - பீனிச வடகம்)

திரிகடுகு, தாளிசபத்திரி, செவ்வியம், புளி, புளியம்பூ, சங்கம்வேர், அமுக்கிராவேர், ஏலம், லவங்கப்பட்டை, மருக் காரையிலை, வன்னி, சமனிறை சூரணித்துப் பழவெல்லம் பலம்-48 கூட்டி பாகாக்கி, பாகில் சூரணந்தூவி, வடகம் பண்ணி அந்தி சந்தி யுண்ண பீனிசம் போம்.

[illegible]

4. தோல் நோய்கள்

நம் உடல் முழுவதும் பரவியிருக்கும் உறுப்பு நம்உடலைப் போர்த்தியுள்ள தோலாகும். இத்தோலின் நன்னிலையே ஒரு வகை அழகாக்கும். இதன் நலக்கேட்டால் வரும் துன்பங்கள் பலவாகும். இன்றைய அறிவியல் அறிஞர்கள் தோலின் நலத்தைப் பாதுகாக்கும் உயிர்ச்சத்துகளை இனங்காட்டியுள்ளனர். இன்னின்ன உணவுப்பொருள்களில் தோல் நலத்தைப்பாது காக்கும் இன்னின்ன சத்துகள் அடங்கியுள்ளன என்பதை நம் சித்தமருத்துவர்களும் ஆராய்ந்திருக்கின்றனர். அவர்கள் சுட்டி யுள்ள பொருள்களில் தோல் நலம்பயக்கும் இன்றைய வகையின் உயிர்ச்சத்துகளாம் ஏ,பி,சி போன்றன இருப்பது வியப்பாக இருக்கிறது.

உயிர்ச்சத்துக்கள் குறைவதோடு கிருமிகள் தொற்றுவதால் தோன்றும் நலக்கேடு தோலைப் பெரிதும்பாதிக்கின்ற சூழலை நாம் காணலாம். சொறி, சிரங்கு, படர்தாமரை, விஷக்கடிகள் போன்றன தோலைப்பாதிக்கின்ற நோய்களாம். இந்நோய்களின் இருப்பிடமும் தோல், பாதிப்பதும் தோல் என்ற சூழலில் மிக கவனமாக இவற்றைப் போக்கவேண்டும் என்பதில் நம் மருத்துவம் தலைநின்றது. இச்சுவடியில், தோல் நோய்களுக்கான பல மருத்துவக்குறிப்புகள் காணப்படுகின்றன. சில உள்ளுக்குச் சாப்பிடும் மருந்தாகவும் பல வெளியில் பயன்படுத்தவேண்டிய மருந்தாகவும் இருநிலைகளில் காணப்படுகின்றன. எண்ணெய் வடிவமருந்துகள் ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப் பகுதியில் பொதுவாகக் காணப்படும் சொறி, சிரங்கு, படர்தாமரை, விஷக்கடி போன்றவற்றுக்குமட்டும் மருத்துவக் குறிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. மேக நோய்களை அடிப் படையாகக் கொண்ட பிற தோல் நோய்களை வேறொரு பகுதியில் மேகநோய்கள் என்னும் தலைப்பில் காணலாம்.

படர்தாமரை என்னும் நோய்க்கு இப்பகுதி பல மருந்துகளைப் பரிந்துரைக்கிறது. எளிமையாகச் செய்யமுடிந்த அவை நல்ல பயனைத் தந்திருப்பதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

விடம் தீண்டின பேருக்கு வெளியிலே பயன்படுத்தக்கூடிய மருந்தொன்றை இச்சுவடி சிறப்பாகப் பரிந்துரைத்திருக்கிறது. இவற்றை இனி சுவடிகாட்டியவாறு காண்போம்.

சொறி சிரங்கு

எருக்கம்பூவைப் பறித்து அரிந்து முத்தின தேங்காய்த் திருகல் எருக்கம்பூவத்தனை போட்டுப் பிசைந்து அதில் கெந்தகம் அல்லது நீரடிமுத்து அல்லது சாம்பிராணி கெந்தகம் வராகனெடை $1\frac{1}{4}$, மற்றது வகைக்குப் பலம் $\frac{1}{4}$, பொடித்திட்டுப் பிசைந்து ஆமணக்கிலையில் பொதிந்து நெற்குள் புதைத்து வைத்தெடுத்து கலத்திலப்பி வெய்யிலில் வைத்துப் பிசைந்து பிழிந்து மூன்று நாள் பூச–சொறி சிரங்கு நீங்கும்.

சொறி சிரங்கு (கோமூத்திர எண்ணெய்)

கோமூத்திரம் படி $\frac{1}{2}$, எண்ணெய் படி $\frac{1}{2}$, கொடிவேலிவேர், கள்ளிவேர், கையாந்தகரை விதை, எருக்கம்பால், எருக்கிலைச் சாறு, கோட்டம், தேவதாரம், வெப்பாலைப்பட்டை, இந்துப்பு வகைக்கு 1 பலம் அரைத்திட்டு வடித்து மேலிற்பூசவும். சிறுசொறி, பெருஞ்சிரங்கு, துட்டவிரணம், புண், கடிவிடம், கணக்கன் சொறி. குஷ்டம்போம்.

படர்தாமரை

நீரடிமுத்தின்பருப்பு,புரசங்கொட்டைப்பருப்பு, தகரைவிதை, பொன்னாவாரை வேர், சலாசத்து பற்பம், எல்லாம் சமனிறுத்து எலுமிச்சம் பழச்சாறுவிட்டு சாமம்–4 அரைத்துக் குளிகை செய்து நிழலுலத்தி, பழச்சாற்றிலுரைத்திடவும். தொடர்ந்து 20 நாள் இட்டுவர அவை காய்ந்துபோம்.

(வேறு)

மஞ்சள், அருகம்புல், எருக்கஇலை, முல்லையிலை, வெற்றிலை, ஊமத்தையிலை, ரசம், நெல்லிக்காய், கெந்தகம், வகைக்கு ரூபாயெடை, இதையெல்லாம் சேர்த்து நல்லெண்ணெய்

படி-$\frac{1}{4}$, தேங்காயெண்ணெய் படி $\frac{1}{4}$, கூட்டித் தாம்பிர சட்டியில் குழைத்துச் சூரியபுடம் வைத்துத் தடவி வர படர் தாமரை நீங்கும்.

படர்தாமரை: (குளிகை)

நீரடிமுத்தின் பருப்பு, புரசங்கொட்டைப்பருப்பு, தகரை விதை, தகரைவேர், கற்பூர சலாசத்து, எல்லாம் சமன்-பழச் சாற்றால் 4 சாமம் அரைத்துக் குளிகை செய்து நிழலுலத்தி சம்பழச் சாற்றிலுரைத்துப் படர்தாமரையிலிடவும். தொடர்ந்து 20 நாள் இட்டுவர அவை காய்ந்துபோம்.

பவுத்திரம்

குப்பைமேனி சமூலம் வாங்கி நிழலுலத்தி பொடிபண்ணி வடிகட்டி, விரற்கடியுண்ண வெண்ணெயில் குழைத்துண்ண, (மண்டலம்-1) நீர்ப்பாச்சலறும். கொஞ்சநாள் வியாதிக்கு 20 நாள் உண்ணவேண்டும். நெய், பால் ஆகும். மற்றது ஆகாது.

வண்டுகடி படர்தாமரை:

தகரைவிதை பலம்-$\frac{1}{4}$, குமரிச்சாற்றிலூ றப்போட்டு நாள்-1, குமரிச்சாற்றாலரைத்து பூவரசமொட்டு பலம் $\frac{1}{4}$, சிறுநாகப்பூ வராகனெடை-2, ரசகற்பூரம் வராகனெடை $\frac{1}{4}$, வாதாங் கொட்டை பலம்-1, கற்பூர சலாசத்து பற்பம் பலம்-1, பசும்பால் விட்டரைத்து 3 நாள் பூசவும். இதில் நீரடிமுத்து விதைப்பருப்பு பலம் $\frac{1}{4}$ கூட்டலாம். மூன்று நாளிலேயே வண்டுகடி படர்தாமரை முதலிய சரும நோய்கள் நீங்கும்.

வண்டுகடி-படர்தாமரை-சில்விடம்:

நீர்வெடிமுத்தின் பருப்பு, தகரைவிதை சமனிறுத்துச் சம்பழச் சாற்றாலரைத்துத்தொடர்ந்து 21 நாள்கள் பூசிவர, அந்தி சந்தி பத்திட வண்டுகடி, படர்தாமரை, சில்விடம் ஆகியன அற்றுப் போம்.

எலிக்கடி:

குப்பைமேனிச்சாறு படி 1/8, எள்ளெண்ணெய் சமன் கலந்து 3 நாள் உண்ண, எலிக்கடியால் நேர்ந்த நோய்கள் நீங்கும். உப்பு, புளி, புகை நீக்கவேண்டும்.

விடம்:

சிறுகாஞ்சோறி இலையைச் சம்பழச்சாறுவிட்டு நாலு சாமம் அரைத்து உண்டை செய்து நிழலுலத்தி விடம் தீண்டினபேருக்கு, கடிவாய் அல்லது கடிவாயடுத்தவிடத்தில் வளையல் ஓட்டால் கீறி உண்டை வைக்கப் பிடித்துக்கொள்ளும். விடம்போம்.

5. மகளிர் நோய்கள்

மகளிர் நோய்கள் என்னும் இப்பகுதி மகளிர் நோய்களுள் இரண்டே நோய்களுக்கான மருத்துவக் குறிப்புகளைக் கொண்டுள்ளது. தாய்மையுறும் நிலையே மகளிரை ஆடவரிட மிருந்து வேறுபடுத்துவதாம். பிற அனைத்தும் இருபாலார்க்கும் பொதுவான நிலைகளேயாம். பொதுவாகக்கூறப்பட்ட நோய்கள் பலவும் இருபாலாரையும் பிணிக்கும் நிலைமைத்தாதலின் அவற்றுக்கான மருத்துவக்குறிப்புகளும் இருபாலார்க்கும் பொது நிலையிலேயே அமைந்துள்ளன.

தாய்மைத் தொடர்பான பல குறைகளும் நோய்களும் இச் சுவடியில் குறிக்கப்பட்டுள்ளன. சில முடித்துக்காட்டப்பெறாமல் உள்ளன. சிலவற்றுக்கான மருத்துவக் குறிப்புகள் தெளிவில் லாமல் உள்ளன. எனவே அவற்றையெல்லாம் ஈண்டுத் தொகுக் காமல் தெளிவுடன் இருப்பதாக உணர்ந்த பரிந்துரைகள் மட்டும் இப்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

தாய்மைக்குரிய முதல் அடிப்படை பெண் வயதுக்கு வருவ தாகும். தமிழ்நாட்டுச் சூழல் பெண்கள் வயதுக்குவரும் நிலைகளில் தடைகளையும், தாமதங்களையும், உருவாக்குவ தில்லை. அரிதாகச் சிலருக்குத் தாமதம் ஏற்படுவதுண்டு. பெற்றவர்கள் உரிய வயதாகியும் நம் பெண் இன்னும் வயதுக்கு வரவில்லையே எனப்பெரிதும் வருந்துவர். அவர்களுக்கு வழி கூறுவதுபோல இரண்டு மருந்துகளை இச்சுவடி பரிந்துரைக் கிறது.

மகளிர் வயதுக்குவருதல், திருமணம்புரிந்து இல்லறம் நடத்துதல் ஆகிய அனைத்தும் தாய்மையுறுதற்கேயாம், திருமணவாழ்வில் தாய்மையுறாத நிலை பெருங்குறையைக் காட்டுவதாம். நம் சித்தமருத்துவர்கள் தாய்மையுறா நிலைக ளுக்கான காரணங்களை விரிவாக ஆய்ந்து பல்வேறு வகைப் பட்ட மருத்துவக் குறிப்புகளைப் பரிந்துரைத்திருக்கின்றனர்.

கருப்பையில் ஏற்பட்டுள்ள நோயின் காரணமாகத்தான் பெரும் பாலான மலட்டுத்தன்மைகள் அமைகின்றன என்னும் உண்மையை அவர்கள் கண்டுள்ளனர். எனவே கருப்பையைப் பற்றிய நோய்களைப் போக்குவதற்கான வழிமுறைகளைச் சுட்டினர்.

இச் சுவடியில் மூன்று எண்ணெய்கள் பரிந்துரைக்கப் பட்டன. எண்ணெய்களைத் தயாரித்துப் பத்தியமிருந்து பயன் படுத்தும் குறிப்புகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. கருப்பை நோய்களால் ஏற்படும் வயிற்றுவலி, சூதகவலி, சூலை முதலியனவும் நீங்குவதாக அக்குறிப்புகள் காணப்படுகின்றன. கருப்பையில் உண்டான கிருமிகளும் மடிந்துவிடும் என்று வீழியெண்ணெய் பாராட்டப்படுகிறது. இனி அக்குறிப்புகளைச் சுவடிகாட்டியவாறு காண்போம்.

பெண் திரள:

1. திரளாத பெண்ணுக்குப் பூசணிக்காய்ச் சாறும் நல்லெண்ணெயும் சமன் கூட்டி மூன்று நாள் கொடுக்கத் திரளுவாள்.

2. நாவற்பூவை யரைத்துப் பாலில் மூன்று நாள் குடித்து வரத் திரளுவாள்.

கெற்ப ரோகம்: (எண்ணெய்)

ஏரண்டத்தெண்ணெய் படி $\frac{1}{2}$, தைவேளை, ஏரண்டத்திலை, மஞ்சள், கடுக்காய், இந்துப்பு, வெங்காரம், வெள்ளைப்பூண்டு, கடுகு, விழுதி, நிலாவாரை, வகைக்கு பலம் 3, அம்மியில் மைபோலரைத்து எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி மெழுகுபதம் வடித்துக் குப்பியிலடைத்து, வடிக்குமுன் கழஞ்சுநிறை, கள்ளிப் பால் விட்டு வடித்து கரண்டிநிறையுண்ணவும். நாள் 4 முதல் மூன்றுநாளுண்ணவும். உப்பில்லாப்பத்தியம். இப்படி மூன்று முறை கொடுக்கவும். சூதகவாய்வு, குத்து, பக்கசூலை, வயிற்றுவலி போய் கெற்பமுண்டாம்.

கெற்ப நோய்: (புலிப்பாணி - 500ல்)

வீழியிலைச்சாறு படி $\frac{1}{2}$, தைவேளைச்சாறு-நாழி, பிரமி யிலைச்சாறு படி $\frac{1}{2}$, கொட்டையிலைச் சாறு படி $\frac{1}{2}$, நிலவாகைச்

சாறு படி $\frac{1}{2}$, பசும்பால் படி $\frac{1}{2}$, கூட்டி - சரக்கு:மஞ்சள், கடுகு, இந்துப்பு, வெங்காயம், கடுக்காய், வெள்ளைப்பூண்டு, ஆண் வசம்பு, சுக்கு, வகைக்கு வராகனெடை–3, பொடித்திட்டு விளக்கெண்ணெய் படி $\frac{1}{2}$, மெழுகுபதமாய் வடித்துக் கணபதியைப் பூசித்து மாதவிடாயான 3ம் நாள் தலைமுழுகி கரண்டியெண்ணெய் கொடுக்க (3 நாள். தொடர்ந்து) வேண்டும். உப்பில்லை. மறுபத்தியம் ஒரு நாள், ஐந்தா நாளில் தலைக்கு நீர் வார்க்கவும். வறுத்தவுப்பு, பொரிச்சாறு, மற்ற நாளெல்லாங் கூட்டவும்.

வீழியெண்ணெய் (வேறு)

முத்தெண்ணெய் படி 1, பசுவினெய் படி1, விழுதிச்சாறு படி1, திரிகடுகு, வசம்பு, ஈருள்ளி, கோஷ்டம், லவங்கம், ஏலம், வெள்ளுள்ளி வகைக்கு பலம் $\frac{1}{4}$, பசுவின் பால் விட்டரைத்து நெய்யில் கரைத்து எரித்து மெழுகு பதத்தில் வடித்து கலசத்திட்டு 3ம் நாள் காலையில் சேர்கால் வீதமாக 6 நாள் கொள்ளவும். பத்தியம் உப்பாகாது. கெற்பவாய்வு போம். சூதகவலி, கெற்பப் புழு போம். சூலை போம். இசிவு சந்திடுப்பு சூலை போம். கெற்பமுண்டாம்.

6. மேகநோய்கள்

தோல், எலும்பு, நரம்புமண்டலம் போன்ற பலஉறுப்புகளையும் பாதிக்கும் நோய்களுள் மேகநோய்கள் முதலிடம் பெறுகின்றன என்பர். பெரும்பாலும் அவை தோற்பகுதிகளில் தம் தீமையைப் பெரிதுபடுத்திக்காட்டும் நிலையிலேயே காணப்படுவதால் இன்றைய மருத்துவர்கள் அவற்றைத் தோல்நோய்களுள் அடக்கி ஆய்வர். தவறான நடத்தை கிருமிதொற்றுதல், பரம்பரைத் தொடர்பு, எதிர்ப்புசக்தியின்மை போன்ற பல காரணங்களால் ஏற்படும் இந்நோய்கள் மனிதனைப் பெரும்பாட்டுக்கு ஆளாக்கிவிடுவன என்றால் அது மிகையாகாது.

மேகநோய்களான கிரந்தி, குட்டம், பிரமியம் போன்ற கொடிய நோய்களை ஆய்வுசெய்து மருந்துகளைக் கண்ட நம் முன்னோர், அம்மருந்துகளை நம்மவர்க்குப் பரிந்துரைத்துச் சென்றுள்ளனர். இச் சுவடியில், மேகநோய்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அந்நோய்களுக்கான மருத்துவக்குறிப்புகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. பல மருந்துகள் பற்பம், பாஷாணம் என்ற முறைகளில் அடங்கி நம்மை மருட்டுகின்றன. கடினசெய்முறைகள் நம்மைத் தொலைவில் நிறுத்தி வேடிக்கை பார்க்கின்றன. ஆயின், சில குறிப்புகள் நமக்கு நம்பிக்கையூட்டி அருகழைத்து அரவணைக்கின்ற நிலையில் எளிமையாகக் காணப்படுகின்றன. அத்தகு எளிய குறிப்புகள் மட்டும் இங்கே தொகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

கரப்பன்புண், குட்டம், பிரமியம், மேகம், மேகதோடங்கள், சகலமேகம், மேகஊறல், மேகஉஷ்ணம், மேக வாய்வு போன்ற நோய்களுக்கான மருத்துவக்குறிப்புகளாக அவை தெரிந்தெடுக்க பட்டுள்ளன. பறங்கிப்பட்டையை அடிப்படை மருந்துப் பொருளாகக் கொண்ட பல மருந்துகள் ஈண்டுப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. பறங்கிப்பட்டையை, சூரணமாக, லேகியமாக, இரசாயனமாக எண்ணெயாகப் பல்வேறு வடிவங்களில் பயன்

படுத்தி நோய்களைப்போக்கும் முறை இப்பகுதியில் காட்டப் பட்டுள்ளது. மேகநோய்களுக்கு எண்ணெய் வகைகள் சில உறுதியாகக் கூறப்பட்டுள்ளன. பிரமிநெய், சடைச்சி எண்ணெய், பூவரசு எண்ணெய், போன்றன மேகங்களைப் போக்குவதில் தலைசிறந்த மருந்துகளாகப் பிற நூல்களிலும் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

சித்தமருத்துவம் இயற்கை மருந்துகளைக்கொண்டு நோய்களைக் குணப்படுத்துவது போலவே - ஆகாத பொருள்களைத் தள்ளிவைத்து நோய்களை விரட்டுவதிலும் முன்னிற்பதாம். பத்தியம் அனுபானம் என்ற நிலைகள் இம்மருத்துவத்தில் இன்றியமையாதனவாய்க் காணப்படுகின்றன. மேகநோய்களைப் போக்கும் சித்தமருத்துவக்குறிப்புகளிலும் பத்தியவகை தெளிவாக சுட்டப்பட்டுள்ளது. புளி, உப்பு இவற்றைத் தள்ளவேண்டும்; கரப்பன் பொருள்களாகவுள்ள சில காய்கறி வகைகள், சில மாமிச வகைகள போன்றவற்றை நீக்கவேண்டும் என்று கடுமையாக ஆணையிட்டநிலையில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இனி அவற்றைச் சுவடியில் கண்டவாறு காண்போம்.

கரப்பன் புண்:

வேப்பெண்ணெய் பலம் 5, மிருதார்சிங்கி பலம்-2, அரைத்து மேற்படி எண்ணெயிலிட்டுக் கூட்டிப் புண்ணிலிட்டுவர கரப்பன் காயும்.

குட்டம்: (குஷ்டத்திற்குச் சூரணம்)

கொடிவேலிவேர், ஆடாதோடைவேர், வெள்ளறுகு சமூலம், சிவனார்வேம்பு, சாரணைவேர், நிலையாவாரை, குப்பைமேனி, அப்பைக்கிழக்கு, சமன்கூட்டி சூரணம் செய்து தேனில் ஒரு மண்டலம் உண்டுவர கடி, திமிர், குஷ்டம், ஊறல் போம்.

குட்டம்: (வல்லாதி)

சேராங்கொட்டை பலம்-12 எடுத்து (சுத்தி: எருமைச்சாணிப் பால், புளியிலைநீர் கற்றாழை, காடி, இளநீர் அஞ்சிலும் மேற்படி கொட்டையிட்டு ஒவ்வொன்றில் கொதிப்பித்து அஞ்சு தடவையுமுலத்தவும்) சுத்தி செய்து பின்பு மூக்குவெட்டிப்

போட்டதனை, இருபிளப்பாய் வெட்டி ஒரு நெய்ச்சட்டியில் கொட்டையிட்டு நெய்படி யரைவிட்டுக் கொட்டை மிதக்கக் காய்ச்சவும். பின்பு கொட்டையை எடுத்துக்கொண்டு, நெய்யை வேறொரு சட்டியிலிறுத்து, வேறு பசுவின்னெய் படி ½ விட்டு முன்போலக் காய்ச்சி வடித்து, முன்னெய்யிலிதுவிட்டு மேற்படி கொட்டையை முன்போல சட்டியிலிட்டு வேறு நெய்படி ½ சட்டியிலிட்டு முன் போலெரிக்கவும். இப்படி மூன்றுவிசை எரிப்பு. நெய் படி 1½, ஒன்றில் வைத்துக் கொண்டு முன் கொட்டையை யின்னமும் சட்டியிலிட்டு சுத்த சலம் படி ¼ விட்டு எரிக்கக் கொட்டையுண்ட நெய்யையும் தனது எண்ணெயையும் கக்கி விடும். பின்பு கொட்டையை எறிந்துபோட்டு நீரில் மிதக்கின்ற நெய்யை எடுத்து முன்னெய்யில் விடவும். மறுபடி பசும்பால் படி-1, சர்க்கரை பலம்-18, போட்டுக் கரைத்துச் சர்க்கரையின் கோதுகளைத் தள்ளி வடிகட்டியதை சட்டியில் விட்டு அடுப்பில் வைத்து அடிபற்றாமல் திராவித் திராவிப் பாகுபதமாக்கிப் பாகில் அமுக்கிரா, பரங்கிப்பட்டை, நெல்லிமுள்ளி வகைக்கு பலம்-5, திரிகடுகு, இரண்டோமம், செவ்வியம், ஏலம், சடாமாஞ்சி, கடுகுரோகணி, லவங்க வகை-3, சனனலவங்கப்பட்டை, கார் போகரிசி, வாய்விளங்கம், கொத்தமல்லி, கருஞ்சீரகம், திரிபலை, வாலுழுவையரிசி, திப்பிலி, திப்பிலிமூலம், சித்தரத்தை, நிலப்பனை, சாதிக்காய், சாதிபத்திரி, ஆக வகைக்கு பலம்-½, ரவியுலத்திச் சூரணித்து முன்பாகிலிட்டுக் கிளறி, முன் கொட்டையிட்டெரித்த நெய்யையதில் விட்டு தேன் படி-3/4 விட்டு கிளறிக் கிளறித் திரட்டி விநாயகபூசை பண்ணியெடுத்து நற்காலத்தில் மருந்துண்ணவும், (கழற்காயளவு பட்சம் 3க்கு நாள் 45-இச்சா பத்தியம்) இதற்கு எலுமிச்சம் பழம் 6 மாதம் உண்ணாமல் தள்ளி வைக்கவும். மேகவூறல், விடகடி, திமிர், ஊறல், சிட்டை படலம், புள்ளி-வெள்ளை, கருப்புப்புள்ளி, குஷ்டம், 18-ம் போம்.

குட்டம்: (சடைச்சி எண்ணெய்)

சடைச்சிவேர் பலம்-48, சாரணை மூக்கறட்டைவேர், சதுரக் கள்ளிவேர், கொடிவேலிவேர், மாவிலங்கவேர், சங்கங்குப்பிவேர், கழற்கொடி, எருக்கம்வேர், மகிழாவேர், கோங்கிலவவேர், பேயத்திவேர், புங்கவேர், ஆயிலப்பூ, வேங்கைப்பட்டை,

வெண்ணொச்சி வேர், வகைக்குப் பலம்-10, கருநொச்சிவேர், தழுதாழை வேர், வேலிப்பருத்திவேர், ஊமத்தைவேர், உகாய வேர், சிறுவழுதலைவேர் பலம்-10, இவை துவைத்துப் பானையிலிட்டு மரக்கால்-8, நீர்விட்டு நாலில் ஒன்றாக வடித்து, கோமூத்திரம் பதக்கு, காடி நானாழிகூடவிட்டு, பிராய்வேர், கொன்றைவேர், பிரண்டைவேர், எருக்கம்வேர் தூதளைவேர், பேய்ப்புடல், வேப்பவேர், பேய்ப்பீர்க்கவேர். பேய்ச்சுரை இது வகைக்கு 8 பலம் அரைத்துக் கஷாயத்தில் கரைத்து மரமஞ்சள் குளவிந்தமஞ்சள், விழாலரிசி, கார்போகரிசி, புங்கம்விதை, தகரைவிதை, அறுகு, கொன்றைவிதை, கடுகுரோகணி, நில வேம்பு, ஒட்டடை, கல்லூரிகடுகு, நெல்லி, தான்றி, வேப்பவிதை, பெருங்காயம், மனோசிலை, கெந்தகம், ஓமம், குக்கில், கரித் திப்பிலி, சுக்கு, கருஞ்சீரகம் வகைக்கு 8 பலம் அரைத்து கடாயத்தில் கரைத்து வேப்பெண்ணெய் படி-1, நல்லெண்ணெய் படி-1, நெய் படி-1, புங்கயெண்ணெய் படி $\frac{1}{2}$, சித்தாமணக் கெண்ணெய் படி $\frac{1}{2}$, கடாயத்தில் விட்டுக் கலந்து பதத்தில் வடித்துப் பூசிவர குட்டம்போம். பத்தியம் முருங்கைக்காய், கீரை, கோழி, குறவைமீன், கைப்பு, புளி, உப்பு தள்ளவும். தன்படுக்கை.

பிரமியம்:

பூவந்திவடவேர்ப்பட்டை, கதண்டு, தேன்விட்டரைத்து யிருபோது பாக்களவு உண்ண நீரழிவு போம். புளி தள்ளவும், சிவந்த அரிசியும், பூவந்தியிலையுங் கூட்டி யிடித்து களிகிண்டி வெள்ளெண்ணெய் விட்டு பிசைந்து யிருபொழுது எண்ணெயில் தோய்த்து 3 நாள் சாப்பிட பிரமியம் எட்டும் போம். புளி, புகை, உப்பு, மெய்யசைவு, நடை, காத்து, வெய்யிலாகாது. வென்னீரன்ன முண்ணவும்.

(வேறு)

பசுவின்பால் படி-$\frac{1}{2}$, பூவந்தியிலை, வெங்காயம் 3-ம் கூட்டி யிடித்து சாறுபிழிந்து 3 நாள் கொள்ளவும். அடுத்துண்ணவும். புளி, புகை, உப்பு தள்ளவும், மறுபத்தியம் நாள்-3. எட்டுவகை பிரமியந் திரும்.

(வேறு)

தேற்றாவிதை, அமுக்கிராவேர், பறங்கிப்பட்டை, புளியம் விதை, வகைக்கு பலம்-1. சூரணித்துப் பலம் $\frac{1}{4}$, தேனில் 8 நாள் உட்கொள்ள சீ, ரத்தப்பிரமியம் போம். முளைக்கீரை பருப்புண்ணவும்.

குட்டம், மேகம்: (பறங்கிப்பட்டை சூரணம்)

பறங்கிப்பட்டை பலம்-10, பாலில் சுத்தித் துலத்தி, செங்கத் தாரிப் பட்டை, சங்கம்வேர், சங்கங்குப்பி, சித்திரமூலப்பட்டை, சிவனார்வேம்பு சமூலம், மூக்குரட்டைவேர், நிலப்பனை, மாவிலங்கப்பட்டை, அமுக்கிரா மூலம், வெண்ணொச்சிவேர், முதுவேப்பம்பட்டை, முதுபூவரசம்பட்டை, முருங்கவேர்ப் பட்டை, கண்டங்கத்திரிவேர், முத்தக்காசு, வெள்ளறுகு, மிளகறணைவேர், கடலிராஞ்சிப்பட்டை, ஆடாதோடைவேர், வகைக்கு பலம் $\frac{1}{2}$, இடித்துப் பாலில் சுத்திபண்ணி யுலத்தி எடுத்துக்கொண்டு, திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, கடுக்காய், வால்மிளகு, ஏலம், கிராம்பு, சிற்றரத்தை, சீரகம், கருஞ்சீரகம், கண்டதிப்பிலி, கோஷ்டம், ஓமம், கடுகுரோகணி, அதிமதூரம், மஞ்சள், வாலுழுவையரிசி, வாய்விளங்கம், அக்கிராகாரம், இந்துப்பு, கொத்தமல்லி, தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, உள்ளி காயம், லவங்கப்பட்டை, கடுக்காய், கார்போகரிசி, சாதிலிங்கம், கெந்தகம், கல்நார், வசம்பு, வகைக்கு பலம் $\frac{1}{4}$, பாலிற் சுத்திபண்ணி யுலத்தி 3 வகையுங்கூட்டி சூரணித்து, துணியால் வடிகட்டி, பாதி சீனிகூட்டி, தேனில் நெய்யில் 45 நாள் குழைத்துண்ண, மேகவாய்வு, சூலை, குட்டம், வாதம் வாய்வு போம். பத்தியம்: இச்சாபத்தியம்.

(பரங்கிப்பட்டை லேகியம்)

சங்குபுட்பி சாறும், வெங்காயநீர், வெள்ளறுகின் சாறும் வெண்ணொச்சி, ஆடாதோடை, முருங்கைவேரிடித்தசாறு, பூவரசங்காய் அல்லது பட்டை நீர், கண்டங்கத்திரிச்சாறு, வகைக்கு சாறு படி $\frac{1}{2}$, மற்ற வேர்களும் சரக்கும் (முன்சூரணத்தில் சொன்ன பொருள்கள்) பொடிபண்ணி, வடிகட்டி, சீனி பலம்-25, பாகுசெய்து, நெய் படி-1, தேன் படி $\frac{1}{2}$, கூட்டி லேகியம் செய்தும் பயன்படுத்தலாம்.

(இதில் சுருக்கமான சூரணம்)

பரங்கிப்பட்டை பலம்-8, செங்கத்தாரிப்பட்டை, மாவிலங்கப் பட்டை, சங்கம் வேர், அமுக்கிரா, சிவனார்வேம்பு சமூலம், அஞ்சும் வகைக்கு பலம்-1, திரிகடுகு, சாதிக்காய், கடுக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம், கண்டதிப்பிலி, ஓமம், வாலுமுவையரிசி, சாதிலிங்கம், கெந்தகம், கல்நார் வகைக்கு பலம் $\frac{1}{2}$, சுத்திபண்ணி சூரணித்துண்ண (நெய் சேர் $1\frac{1}{2}$ சேங்கொட்டை ஒரு பலமிட்டு காய்ச்சி அந்த நெய்யிலனுபானித் துண்ணவும்) மேற்படி நோய்கள் தீரும். இவ்விரண்டு வகையிலும் சேராங்கொட்டை சேர்ப்பது நலம்.

பரங்கிப்பட்டை ரசாயனம் (வேறு)

சங்கம்வேர், சங்கபுட்பி, சித்திரமூலம், நிலப்பனை, அமுக்கிரா, இருகுமிழ்வேர், நெருஞ்சிவேர், பூவரசம்பட்டை, செங்கத்தாரிப் பட்டை, வகைக்குத் தூள் பலம்-1, திரிகடுகு, ஓமம், கோஷ்டம், சிறுநாகப்பூ, அரத்தை, இஞ்சி, சன்னலவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, வகைக்குப் பலம் $\frac{1}{2}$, பரங்கிப்பட்டை பலம்-5, சர்க்கரை பலம்-10, நெய், தேன் படி-$\frac{1}{2}$, வார்த்துப் பிசைந்து கலசத் திலடைத்து முள்ளிக்காயளவு அந்தி சந்தி 40 நாள் பத்தியம் காத்து (மிளகு, கடுகு, வாழையிலை கரப்பன் வஸ்து ஆகாது - தள்ளவும்) உண்டுவர, மேகம், சூலை, விரணம், கிரந்தி, வாயிலுள்ள நோய், குஷ்டம், பிரமியம், குன்மம், வாய்வு, மூர்ச்சை, வாய் நாற்றம், அக்கினிமந்தம் போம்.

சுருக்கமான பரங்கிப்பட்டை சூரணம் (வேறு)

பரங்கிப்பட்டை பலம்-5, சித்திரமூலப்பட்டை, அமுக்கிராக் கிழங்கு, சங்கம்வேர், செங்கத்தாரிப்பட்டை, சங்கபுட்பி வேர், பூவரசம்பட்டை, வகைக்குப் பலம் 1, திரிகடுகு, கடுக்காய், சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, கெந்தகம், சாதிலிங்கம், ரசகற்பூரம், கல்நார், சீரகம்-2, அரத்தை, கோஷ்டம், ஓமம், மதுரம், வாலுழுவை, திப்பிலிமூலம், வகைக்கு பலம்-$\frac{1}{4}$, இடித்து பாலிற் புட்டவித்து உலத்தி சீனி கூட்டி நெய்யில் உண்ணவும். சூலை, புண் முதலறும்.

பரங்கிப்பட்டை சூரணம் (வேறு)

பரங்கிப்பட்டை பலம்-8, செங்கத்தாரி வேர், சங்கவேர், கொடிவேலிவேர், சிவனார் வேம்பு, நிலவாகை, மிளகுசாரணை வேர், வகைக்கு பலம்-2, பொடி பண்ணி, திரிகடுகு, சாதிக்காய், கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம், சித்தரத்தை, கோட்டம், கடுகுரோகணி, அதிவிடயம், ஓமம், கத்தூரிமஞ்சள், செவ்வள்ளிக்கொடி வகைக்கு வராகனெடை-3, திரிபலையுங்கூட்டி சூரணம் பண்ணி, பரங்கிப்பட்டையுங் கூட்டி தேனிலுண்ண குடற்சூலை, வாத சூலை, கட்டுசூலை, புண் கிரந்தி முதலானதெல்லாம் போம். இச்சாபத்தியம்.

பரங்கிப்பட்டை சூரணம் (வேறு)

பரங்கிப்பட்டை பலம்-5, அமுக்கிரா, சங்கு, பிரப்பங்கிழங்கு, சரக்கொன்றைப்பட்டை, வெண்சாரணைவேர், கொடிவேலிவேர், முருங்கவேர்ப்பட்டை, மாவிலங்கப்பட்டை, நொச்சிவேர், வேப்பம்பட்டை, ஆடாதோடைவேர், கண்டங்கத்திரி, மூக்குறட்டை, பூவரசம்பட்டை, பெருமரப்பட்டை வகைக்கு பலம்-1, எல்லாமிடித்து பாலில் புட்டவித்துலத்தி எடுத்து, அதிமதுரம், ஓமம், கொத்தமல்லி, மிளகு, சிற்றரத்தை, அக்கிரகாரம், திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, கண்டத்திப்பிலி, விளங்கம், வாலுழுவையரிசி, வகைக்கு பலம் $\frac{1}{2}$, ரவியுலத்திப் பொடிபண்ணி பொடிக்குப் பாதி சீனிகூட்டியுண்ணவும். விரணம், கரப்பன், சூலை, வாதம், வாய்வு வெட்டை, அக்கினிமந்தம், கிராணி, உப்பிசம், வயிற்றிரைச்சல், கரப்பன் சிரந்தி, குட்டம் போம். கைப்பு புளி தவிர்க்கவும்.

மேகம்: (பிரமிப்பூண்டுநெய்)

பசுவினெய் படி-1, திரிகடுகு, சீரகம், பெருஞ்சீரகம், திராட்சப் பழம், கண்டங்கத்திரிப்பழம், தேற்றாவிதை, நெல்லிமுள்ளி, இந்துப்பு, கொத்தமல்லி, சிவதைவேர், வகைக்கு பலம் $\frac{1}{4}$, பாலாலரைத்திட்டு மூன்று நாள் சிறு கொதியிட்டு நாலா நாள் வடித்துண்ண (கைப்பு புளிதள்ளி) ஒரு கரண்டியளவுண்ண வாய்வு, அக்கினிமந்தம் போம். மேகமறும், தீபன முண்டாம். கபமறும்.

மேகம், குட்டம்: (இடிவல்லாதி)

சேங்கொட்டை பலம்-10, மூக்கை வெட்டி சாணிப்பாலில் 3 நாள் ஊறவைத்துக் கழுவியுலத்திக் கல்லுரலிற் போட்டு எள்ளு படி-1, கொப்பரைத் தேங்காய் இரண்டு, நைய நன்றாய் 3-ம் இடித்து - பரங்கிப்பட்டை, அமுக்கிரா, சித்திரமூலம், கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள், வாலுழுவை, குரோசாணியோமம், வெற்றிலைக் காம்பு, கடுக்காய், திப்பிலி, கோஷ்டம் வகைக்கு பலம்-1 சூரணம் பண்ணி, கல்லுரலிலிட்டு, மெழுகுபோலிடித்து ரசகற்பூரம், வராகனெடை-5, பொடித்திட்டு, பனைவெல்லம் பலம்-5 போட்டு மெழுகுபோலிடித்து அந்தி சந்தி வெறுகடி ஒரு மண்டலம் உண்ண, குஷ்டம், கிரந்தி, சூலை அரையாப்பு, மேககுன்மம்-8, சுக்கிலவாய்வு, ரணம், கிரந்தி போம்.

இச்சா பத்தியம் - உப்பு வறுத்துக் கூட்டவும். தயிர், மோர், நெய், துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, வல்லாரை, பொன்னாங் காணி, இவை ஆகும். கரப்பன் வஸ்துக்கள் ஆகாது. விளக் கெண்ணெய் தேய்த்து முழுகவும.

மேக தோடங்கள்: (தைலம்)

நல்லெண்ணெய் படி-4, மிளகு படி 1, ஏலம் படி$\frac{1}{2}$, உப்புச் சுண்ணம் பலம்-1, எல்லாங்கூட்டி பொடிபண்ணி, துணியில் பொட்டணங்கட்டி எண்ணெயிலிட்டு ரவியில் வைத்து வரவும். தலை முழுகும்போது மேற்படி பொட்டணத்தைப் பிழிந்து தலைக்கிட்டு முழுகிவர (சீயக்காய், அரப்பு வெந்நீராம்) 8 நாளுக்கு ஒரு முழுக்கு. அன்று புளி தள்ளவும். உட்டணம், கால் கை மெய்யெரிவு, அசதி, வாய்வு, கபநீர், பித்தநீர், மேகம், மேகத்தால் வந்ததோஷம், பித்தம், வாதம், தாகம், வறட்சி, பீனிசம் போம். தேககாந்தியுண்டாம் தந்தமிறுகும். தாது விருத்தியுண்டாம்.

சகலமேகம்:

விளக்கெண்ணெய் படி-25, சங்கபுட்பி, சிறுசெருப்படி, வெள்ளறுகு. கழுதைலத்தி, கழற்கொடி, சங்கிலை, நெருஞ்சி, நெல்லிக்காய், பொடுதலை, பொன்னாங்காணி, சிறுகீரை,

கற்றாழை, சதாவரிநீர், வல்லாரை, முத்தெருக்கஞ்செவி, ஆடுதீண்டாப்பாளை, சிவகரந்தை, கரிசாலை, குப்பைமேனி, தென்னம்பாளை, ஓரிலைத்தாமரை, பூவரசங்காய், அவுரிச்சாறு, கொடிக்கள்ளி, ஊழலத்தி, கோழியவரை, மணித்தக்காளி, பிரமியப்பூண்டு, கிரந்திநாயகம், சின்னி, விழுதி, கற்பூரவள்ளி, கோவைத்தண்டு, சீந்தித்தண்டு இவற்றின் சாறு வகைக்குப் படி-1, (சரக்கு பலம்-$2\frac{1}{2}$, நீர்படி-1) வெங்காயச்சாறு, பசும்பால், தேங்காய்ப்பால், வகைக்கு படி-2, பூவரசம்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, கொடிவேலிவேர், சிவனார்வேம்பு, சீந்தித்தண்டு, வேப்பம்பட்டை, வெட்டிவேர், கருவேல், கருங்காலி, நாயுருவி வேர், மாவிலங்கப்பட்டை, அத்திப்பட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, இச்சிப்பட்டை, நாவற்பட்டை, புங்கம்பட்டை, இலுப்பைப்பட்டை, விடத்துவரைவேர், ஆவாரம்பட்டை மிளகரணைவேர், விலாமிச்சவேர், நொச்சிவேர், நுணாப்பட்டை, பூதகரப்பன்பட்டை, கோரைக்கிழங்கு, முத்தக்காசு, கொல்லன் கோவை, சிறுபூளை, சங்கம்வேர், அமுக்கிரா, கடலிராஞ்சிப் பட்டை, ஆயிற்பட்டை, நிலப்பனங்கிழங்கு, நன்னாரிவேர், பொன்முசுட்டை வேர், கண்டங்கத்திரி, சிற்றாமுட்டிவேர், சத்திசாரணை, சாரணை, பரங்கிப்பட்டை, வகைக்கு பலம்-5, கடுக்காய், சேங்கொட்டை, தேற்றாவிதை, எட்டிவிதை, முள் பரங்கிப்பட்டை இந்த 5-ம் வகைக்கு பலம்-8, இந்த விரண்டும் கடாயமிடவும்.

வேறுவேறாக முன்பட்டை வகை 36க்கு பலம் 180க்கு- நீர் மரக்கால் 16க்கு 4க்கு-1, மரக்கால்-4, கடுக்காய் வகையறா 5-க்கு பலம் 40க்கு நீர் மரக்கால் 4க்கு-1, கடாயம் படி-4 ஆக கடாயம் மரக்கால் 5, முன்சாரெண்ணெயில் விட்டு கொதிக்கும் போது, கற்கம் நீர் மரக்கால் 16க்கு மரக்கால்-4 நீர் மரக்கால் 4க்கு மரக்கால் 1ஆக மரக்கால்-5 திரிகடுகு, திரிபலை, சீரகம், கருஞ்சீரகம், கார்போகரிசி, கத்தூரிமஞ்சள், கடுகுரோகணி, கிராம்பு, சமுத்திராபழம், கோஷ்டம், புளிவிதைத்தோல், சாதிக்காய், சாதிபத்திரி, பருத்திப்பருப்பு, சிறுநாகப்பூ, அரத்தை, உள்ளிப் பூண்டு, வசம்பு, ஓமம், சந்தனம், ஏலம், கூகைநீறு, கண்டதிப்பிலி, மஞ்சள், பரங்கிப்பட்டை, சித்திரமூலம், லவங்கப்பட்டை,

திராட்சம், வாலுழுவையரிசி, அதிமதுரம், நீர்முள்ளிவிதை, பூனைக்காலிவிதை, நிலப்பனங்கிழங்கு, வால்மிளகு, குராசாணி ஓமம், பெருஞ்சீரகம், வில்வவிதை, விளாவிதை, விளாம்பிசின், இலவம்பிசின், கருவப்பிசின், முருங்கைப்பிசின் வகைக்கு பலம்-1, புங்கம்பால்விட்டரைத்து எண்ணெய் கடாயத்திட்டு 3 நாள் ரவியில் வைத்து நாலாநாள் சிறுதீயிட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து மேற்படி எண்ணெயில் சாதிக்காய், சாதிபத்திரி, குங்குமப்பூ, கோரோசினை, பச்சைகற்பூரம், கல்நார்பொடி, ரசகற்பூரம், சாதிலிங்கம், வகைக்கு வராகனெடை -1, பொடித்திட்டுக் கலக்கி வேடுகட்டி தானியப்புடம் 10 நாள் வைத்தெடுக்கவும். இதில் கரண்டி நிறையுண்டுவர மேகம் 20 முதல் வாதபித்த கபரோகம், சூலை, குன்மம், மூலம் முதல் சகல ரோகமும் போம். உப்பில்லாத பத்தியமும், இச்சாபத்தியமும், ரோகத்துக்குத் தக்கது செய்யவும். ஆகாத பதார்த்தந் தள்ளவும்.

பலரோகம்: (பல வல்லாதிகளை சோதித்த வல்லாதி சேராங்கொட்டை வல்லாதி)

சேங்கொட்டை சுத்திபண்ணி பலம்-10, சித்திரமூலம் பலம் 2½, நிலப்பனைங்கிழங்கு, திரிகடுகு, திரிபலை, ஓமம்-2, கண்ட திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், கிராம்பு, ஏலம், உள்ளிப்பூண்டு பேரீச்சங்காய், சதாவரிமூலம், கஸ்தூரிமஞ்சள் வாலுழுவையரிசி, கோட்டம், கார்போகரிசி, சிவன்வேம்பு வெள்ளறுகு, சங்கம்வேர், சங்கங்குப்பிவேர், அமுக்கிராமூலம், மாவிலங்கப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, சித்தரத்தை, கொத்தமல்லி, சன்னலவங்கப் பட்டை, வெப்பாலையரிசி லவங்கப்பத்திரி, மேற்படி பட்டை, கடுகுரோகணி, வாய்விளங்கம், சடாமஞ்சி, வகைக்கு பலம்-1, குங்குமப்பூ வராகனெடை-1, கோரோசினை வராகனெடை-2, சேங்கொட்டை, சுத்திபண்ணி பலம்-10, வறுத்திடித்து ஆக-40, சரக்கெல்லா மிளவறுப்பாய் வறுத்து சூரணித்துப் பனைவெல்லம் பலம்-8, எள்ளு படி-2, கொப்பரைத் தேங்காய்-2, எல்லாம் உரலிலிட்டிடித்து (இடிப்பு சாமம்-4) மெழுகு போலிடித்து கொட்டைப்பாக்களவு உண்ணவும். அந்தி சந்தி ஒரு மண்டலம் உண்ணவும் பத்தியம் உப்பு வறுத்துக் கூட்டவும். புளி புகை தள்ளவும். இதில் கெந்தகம், குக்கில், சூதம், ரசகற்பூரம்

வகைக்கு பலம் ¼, கூட்டலுமுண்டு. பத்தியம் அபத்தியம் வெள்ளாட்டு வற்றல், சுறாமீன், காடை, வரால், உடும்பு, முயலும்; அவரை, முருங்கை, புடலம்பிஞ்சுகளும், சிறுபயறு, துவரம்பருப்பு, அரைக்கீரை, சிறுகீரை, தூதுவளை முதலான கறிகளும், பசுவின் மோர், தயிர், பால், நெய்யும், நெல்லிக்காயும் ஆகும்- பத்தியம் ஆகாத பத்தியம். வறுக்காத பச்சையுப்பும், புளி, புகையிலை கைப்பும், ஸ்ரீசங்கம், மிளகாய், கரப்பன் பதார்த்தமுமாகாது.

தீரும் வியாதி: கைகால் முடக்கு, கிரந்தி, குட்டம், சூலை, வாய்வு, வாதம், புண், புரை, பவுத்திரம், உட்குத்து, மாரடைப்பு, கரப்பன், யோனிப்புற்று, அரையாப்பு, சூசிகாகிராணி, குன்மம், கெற்பரோகம், கண்ணோசி, கண்டமாலை, உருத்திரவாய்வு. நாசிகாபீடம், பிளவை, விப்புருதி, முதலான பலரோகம் போம்,

மேகம்: (கஷாயம்)

ஊழலத்திப் பட்டையை யிடித்து அமுரியிலிட்டுப்பிசைந் தாவது-இல்லாவிட்டால் வெந்நீர்விட்டுப் பிசைந்து நாள் 1க்கு படி ½ உண்ண (3 நாள்) மேகம், கிரந்தி, யரையாப்பு, வெட்டை பிறமேகவாய்வு, வாதம், சூலை, குன்மம் போம். பத்தியம் இச்சாபத்தியம். புகையிலை, புளி தள்ளவும். வாய்வு பதார்த்தம் தள்ளவும். உப்பு வறுத்துக் கூட்டவும். பத்தியம் 6 நாள் ஏழாம் நாள் தலைமுழுகி எல்லாங் கூட்டவும். வெள்ளாட்டுக்கறி கொழுப்புண்ணவும். கைகால் முடக்கு, கடுப்பு, குத்தல், திமிர் வாய்வு, மேகம் முதலியன தீரும்.

மேகம்: (மேகத்தெண்ணெய்)

(திருமூலர் திருமந்திரம்-100-ல் மேகத்தெண்ணெய்)

விளக்கெண்ணெய் படி-1, வெங்காயச்சாறு படி-1, சங்கபுட் பிச்சாறு படி ½, கழுதை லெத்திச் சாறு படி ¼, கூட்டி எரித்து பதத்தில் வடித்து வேளைக்கு சேரரைக்கால் உண்ணவும். காலையில் 3 நாள் உண்ணவும். மூலச்சூடு போம். பத்தியம் உப்பில்லை. வெந்நீரன்ன முண்ணவும். இப்படி நாள் -3 மறுபத்தியம் நாள் 3 ஏழாநாள் கஞ்சி தேய்த்து வெந்நீர் விட்டு

முழுகவும். பிராயிலை போட்டு உப்பு வறுத்துக் கூட்டவும். முருங்கைப்பிஞ்சு கத்திரிப்பிஞ்சாம். மேகம், கிரந்தி, மேலூறல் போம்.

மேகத்தெண்ணெய் (வேறு)

விளக்கெண்ணெய் படி-1, கரிசாலை, கற்பூரவள்ளி. பொன்னாங்காணி, கற்றாழை, வல்லாரை, யானை நெருஞ்சி, கோவை, சம்பழநீர், மணிதக்காளி, சீந்தித்தண்டு, ஈருள்ளிச்சாறு, வகைக்கு படி-$\frac{1}{4}$, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, சீரகம்-2, அதிமதுரம், மாசிக்காய், கோட்டம், வெந்தயம், சித்திரம், பரங்கிப்பட்டை, வகைக்கு பலம்-$\frac{1}{4}$, அரைத்திட்டு, காய்ச்சி வடித்து கற்கண்டு பலம்-2, பொடித்திட்டு கரண்டிநிறை யுண்ண மேகவகையெல்லாம் போம்.

மேகத்தெண்ணெய் (வேறு)

விளக்கெண்ணெய் படி-2, சங்கங்குப்பிச்சாறு படி-1 ஊழலாத்திச்சாறு, பிரமியபூண்டு, கோழியாவாரை, கிரந்தினாயகம், சின்னி, சிறு செருப்படி, வல்லாரை, உத்தாமணி, பூவரசங் காய், கழுதைலெத்தி. கழுதைப்பால், கழுதைநீர். கழச்சி, பேய்க் குமட்டி, ஆடாதோடை, கருணொச்சி, சிவனார்வேம்பு, பூவரசம் பட்டை, சித்திரமூலம் வகைக்குப் பலம்-2, நீர் படி-2, எட்டில்-1, கசாயம், சாறுவகை 1க்குப் படி $\frac{1}{2}$, திரிகடுகு. திரிபலை, கருஞ் சீரகம், வாலுழுவையரிசி, கார்போகரிசி, யானைத்திப்பிலி, வலம்புரிக்காய், யிடம்புரிக்காய், அக்கிராகாரம், கோஷ்டம். வாளம், தாளிசபத்திரி, கிராம்பு, வால்மிளகு, லவங்கப்பட்டை, சாஸ்திரபேதி, நவச்சாரம். எவச்சாரம், சத்திசாரம், சுத்தித்த கெந்தகம்,சுத்தித்த தாளகம்,வகைக்கு வராகனெடை-2, மேற்படி கியாசத்தில் அரைத்து எண்ணெயில் போட்டு வெங்காரம் முதலான சரக்குகளைப் பொடிப்பண்ணிப் போடவும். எண்ணெய் காய்ச்சிவடித்து அதில் பூரம் வராகனெடை 1, பாதரசம் வராகனெடை-1, வெற்றிலைச்சாறு விட்டு அரைத்து மெழுகாக்கி மெழுகை எண்ணெயில் கரைத்துப் பேடவும். பத்து நாள் தானியபுடம் வைத்துச் சாப்பிட (அளவு: எண்ணெய் சேர் 1/8) 5-நாள்) உப்பு வருத்திட்ட பத்தியம் - புளி தள்ளவும். நாலுநாள்

புளிதள்ளிய மறுபத்தியம். பச்ச உப்பு சேர்க்கலாம், நாள்-6 புளியில்லை மேக வகை எல்லாம் போம்.

மேகம், மேகவூறல் குட்டம்: (பூவரசு யெண்ணெய்)

விளக்கெண்ணெய் படி,-3 ஆடுதீண்டாப்பாளை, கரிசாலை, கற்றாழை, பாச்சானை, வெள்ளறுகு கோடகசாலை, சங்கங்குப்பி, சரக்கொன்றைப்பூ, செப்புநெருஞ்சி, மருதம்பட்டை, யானை நெருஞ்சி, வெட்டிவேர், வகைக்கு படி ¼, பூவரசம் பட்டை இடித்தசாறு படி-1, பூவரசங்காய்ச்சாறு படி-1, ஆக சாறு படி-5, திரிகடுகு, திரிபலை, வாலுழுவையரிசி, சடாமஞ்சி, லிங்கம் வகைக்கு பலம்-1, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம் வகைக்கு பலம் ¼, சேங்கொட்டை பலம்-3, எட்டிவிதை பலம்-3, பரங்கிப் பட்டை பலம்-3, சேங்கொட்டையை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி எண்ணெய் கக்கினதும் கொட்டையை எடுத்திட்டு எட்டி விதையும், பரங்கிப்பட்டையையும் மற்ற சரக்குகளையும், அரைத் திட்டுக் காய்ச்சி வடித்து, ஒரு பலமெண்ணெய் உண்ணவும். பத்தியம் உப்பு புளி தள்ளவும். நாள்-6. மறுமுறை நாளாறு. புளிதள்ளி எண்ணெய் சாப்பிடவும். பத்துநாள் விட்டுவிட்டு மூன்று நாலுமுறை உண்ண மேகம், குட்டம், ஊறல் முதலறும்.

(பரிபூரணம் 400ல் மேகயெண்ணெய்) (வேறு)

விளக்கெண்ணெய் படி-1, வெங்காயச்சாறு, எலுச்சம்பழநீர், செப்புநெருஞ்சி, கரிசாலை, கற்பூரவள்ளி, பூவரசங்காய்ச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, வகைக்கு சாறு படி-1/8 யெரித்து மெழுகு பதம் வடித்துண்ண-நாள்-7, உப்பில்லாப் பத்தியம், உள்ளுருக்கி மேகநோய் உட்டணம், கிரந்தி அரையாப்பு, யோனிப்புண், வெடிசூலை, மேகவாயு எல்லாம் தீரும்.

மேகசஞ்சீவி லேகியம் (வேறு)

சிவனார்வேம்பு, அறுகம்வேர் சமன் பாண்டத்திலிட்டு அடைத்து சட்டிமூடி சிலைசெய்து அடியில் துவாரமேழிட்டு சந்துவாய் சீலை செய்து, தூரில் கலசம் வைத்து, பொருந்த சீலை செய்து, கசபுடமிட்டாறி எடுக்கத் தைலம் வரும். தைலத்தில் சமன் சீனிகூட்டி பாகு செய்து, வால்மிளகு, கசகசா,

மிளகு, சுக்கு, சாதிக்காய், சிற்றரத்தை, தானிக்காய், கருஞ் சீரகம், கண்ட திப்பிலி, கோட்டம், நற்சீரகம், கிராம்பு, லவங்கப் பட்டை, மதுரம், ஏலம், பொற்கடுக்காய், சாதிபத்திரி, தாளிச பத்திரி, கார்போகரிசி, கடுகுரோகணி, வகைக்குப் பலம் $\frac{1}{4}$, சூரணம்பண்ணி வடிகட்டி, முன்பாகிற்றூவி பதத்திலிறக்கி, பசுவினெய் பலம்-6 விட்டுக்கிளறி எடுத்து கொட்டைப்பாக்களவு உண்ண-(அந்தி சந்தி இரு நேரம் ஒரு மண்டலம்) மேகம், வெண் மேகம், கருமேகம், ஊறல் தீரும். முருங்கைப்பிஞ்சு, சிறுபயறு, பசும்பால், தயிர், நெய், குரவை, விரால், முயல், புளி, உப்பு, ஆகும்.

சஞ்சீவி லேகியம் (வேறு)

சிவனார்வேம்பு, வெள்ளறுகு, சமனிடை பாண்டத்திலிட்டு, குழித்தைலமிறக்கி, சீனி சமன் கூட்டி பாகு செய்து பாகில், வால்மிளகு, கசகசா, மிளகு, சுக்கு, சாதிக்காய், சிற்றரத்தை, தானிக்காய், கருஞ்சீரகம், மோடி, கோஷ்டம், சீரகம், லவங்கம், லவங்கப்பட்டை, மதுரம், ஏலம், பொற்கடுக்காய், சாதிபத்திரி, தாளிசபத்திரி, சிறுதேக்கு, கடுகுரோகனி, வகைக்கு கழஞ்சு-1, சூரணித்து வடிகட்டி பாகிற்றூவிக் கிளறி நெய் பலம்-6 விட்டு லேகியம் செய்து பாக்களவு இரு நேரம் ஒரு மண்டலம் உண்ண மேக வெள்ளை, கருப்பு, ஊறல், போம். முருங்கைப்பிஞ்சு, சிறுபயறு, பசும்பால், தயிர், நெய், குரவை, வரால் முயல், புளி, உப்பு, ஆம்.

மேக லேகியம் (வேறு)

வால்மிளகு பலம்-1, கசகசா பலம்-2, இவற்றை இளவறுப்பு செய்து சூரணம் ஆக்கி பசுவின்பால் சேர்-1, சீனிசர்க்கரை பலம்-4, பாகுசெய்து பாகில் தூவிட சூரணம். நெய் பலம்-1க்கு லேகியம் செய்யவும். இதில் பாக்களவு காலை மாலை 10 நாள் உண்ணமேகம் 21ம் தீரும்.

உஷ்ணரோகம்: (ஏலாதி குளிகை)

ஏலம், சாதிலிங்கம், கோரோசினை, கல்நார், கல்மதம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, திப்பிலி, கடுகுரோகணி, கூகைநீறு, திராட்சம், வெந்தயம், திரிபலை, சிறுநாகப்பூ,

நன்னாரிவேர், கற்கடகசிங்கி, தாளிசம், மிளகு, சுக்கு, கொத்தமல்லி, சோம்பு, கற்சூரம், கண்டதிப்பிலி, நிலப்பனை, சதாவரி, மாசிக்காய், விழல்வேர், வில்வவேர், மாதளம்பழநீர், செவ்விளநீர், செங்கரும்பு, பன்னீர் இவற்றை சாமம்-4 அரைத்துக் கடலைபோல் உண்டை செய்து நிழலுலத்தி யநுபானங்களில் கொள்ள அனேக உட்டண ரோகமெல்லாம் போம். தகுந்த அநுபானத்திடவும்.

மேகம்: (மேகத்துக்கு லேகியம்)

பசுவின்பால் மரக்கால் -2, குறுணியாகக் காய்ச்சி அதில் சங்கம் வேர் சீவி யரைத்து விழுது நாரத்தங்காயளவு, அதிமதுரம் பலம்-1, அரைத்துப் பாலிற்கரைத்து காய்ச்சி லேகிய பதத்திலிறக்கி கற்சட்டி யல்லது பீங்கானில் வைத்து தினம் அந்தி சந்தி புன்னைக்காயளவு 8 நாள் உண்ண எந்த மேகமுந் தீரும்.

(வேறு)

பறங்கிப்பட்டை பலம்-2, சூரணம் பண்ணி பசுவினெய் படி 1-ல் காய்ச்சி மெழுகுபதத்திலிறக்கி அந்தி சந்தி கரண்டி நிறை யுண்ண (-8 நாள்) மேகமறும்.

மேக வாய்வு

மிளகரணைவேர்ப்பட்டை, கடலிராஞ்சிப் பட்டை, கல்நார், சீரகம், வால்மிளகு, அதிமதுரம், கோஷ்டம், ஏலம், லவங்கப் பத்திரி, குராசாணி, ஓமம், தாளிசபத்திரி, அக்கிராகாரம், சிறுநாகப்பூ, வகைக்குப் பலம் $\frac{1}{2}$, பறங்கிப்பட்டை பலம் -3, சாதிலிங்கம் பலம் $\frac{1}{4}$, சாதிபத்திரி வராகனெடை $1\frac{1}{4}$, கிராம்பு பலம் $\frac{1}{4}$, முன் கன்னாரை சிறுக யீர்க்கு போலுடைத்து ஆவாரை பஞ்சகத்தூளில் அல்லது தழையில் பரத்தி மேலிலையிட்டு மூடி சட்டியை அடுப்பில் வைத்து சாமம்-2 எரிக்க பற்பம். பற்பத்துடன் எல்லாங் கூட்டி சூரணித்து விரற்கடி இஞ்சி நீரில் நாள் 3 வெந்நீரில் நாள் 30 உண்ண சூலை, மேகவாய்வு, மேகவாதம், மேகவாய்வு மேகபவுத்திரம், மேல்கடுப்பு போம். கைப்பு புளிப்பு தவிரவும். மேகம் 21-ம் போம்.

நன்னாரிவேர், தீக்கட்டைப்பிசின், காசினிப்பூ, மிளகு, சுக்கு, கொத்தமல்லி; சீரகம், கசகசா, கடுகுரோகிணி, திப்பிலி, சுக்கு, மாசிக்காய், ஜாதிக்காய், ஏலக்காய், வால்மிளகு, கோஷ்டம், கோரைக்கிழங்கு, வசம்பு, இந்துப்பு, கிராம்-4 அரைத்துச் சுடுநீரில் உண்ண மேகம் தீரும். பசும்பாலில் கொடுக்க அதிசாரம் நீங்கும், தேகபலமுண்டாகும், அங்கப் புஷ்டியாகும்.

மேகம்; (மேகத்துக்கு லேகியம்)

பவளபற்பம் மாத்திரை -2, குங்கிலியக் காரம் அரைத் தேக்கரண்டி பசும்பால் சர்க்கரையுடன், காலைமாலை சாப்பிட -1, அரைத்து பால்கஷாயத்துடன் காலை மாலை சாப்பிடவும் மேகம் தீரும். இரவு வேளையில் பசுவின் நெய் விட்டு அரைத்துச் சாப்பிடவும் 3 நாள் சாப்பிடவும் மேகம் தீரும்.

(வேறு)

வாய்ப்புண் மாத்திரை -2, வெண்ணெய் பழச்சாறு உடன் கொள்க, வாய்ப்புண் மேகம் தீரும், நெய் அரைத்து (-5 நாள்) கொள்ளவும்.

மேக வாயு

மாதுளம்பழச்சாறு, கரிசாலைச்சாறு, நெல்லிச்சாறு, சீரகம், மாம்பருப்பு, அதிமதுரம், கொத்தமல்லி, ஏலம், வெந்தயம், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, தேன், கோரோசனை, வகைக்குப் பலம் 1, கஸ்தூரி மாத்திரை பலம் -3, அரைத்துப் பலம் 1 பசும்பாலில் கலந்து வடிகட்டவும். 14, வெல்லம் பலம் 1, நெய் பலம் கலந்து லேகியம் போல் பதமாகக் கிண்டி வைத்துக் கொண்டு காலை மாலை சாப்பிடவும். தேக்கரண்டி அளவு பசும்பாலுடன் காலம்-2 வேளை கொடுக்க, மேகம் சம்பந்தமான சகல நோய்களும் தீரும். இதன் கூடவே 3 வேளைக்கு தினம் 30 கிராம் சுண்ணாம்பு, வெண்ணெய், பொன்னாங்கண்ணி கீரையைச் சாப்பிட்டு வர, எல்லா மேக வாயு நோய்களும் மறையும். சீக்கிரம் 21-ம் நாள்.

7. வயிற்று நோய்கள்

மனிதன் பிறந்தது முதலாக இறப்பதுவரை தொடர்ந்து செயற்படும் உறுப்புகளுள் உணவுப்பாதை உறுப்புகள் முதலிடம் பெறுகின்றன. உயிரோட்டத்துக்குக் காரணமானது சக்தி; அதனை உண்டாக்கித்தரும் மகத்தான பணியில் ஈடுபட்ட உறுப்புகள் வாய், வயிறு, குடல் போன்ற உணவுப்பாதை உறுப்புகளாம். கால்கள் ஊனமாகி ஒருவன் வாழமுடியும், கை ஒடிந்தும், கண்கெட்டும், காது செவிடாகியும் கூட வாழ முடியும். ஆனால் வயிறுபோனவனைக் காண்பதரிது. வயிறுபோய் விட்டால் எல்லாம் போய்விட்டதே- இவ் இன்றியமையா உறுப்பு களைப் பற்றும் பிணிகளும் பீடிக்கும் நோய்களும் ஏராளமாக உள்ளன. அவ்வளவு நோய்களையும் பட்டியலிட்டுக் குறிப் பெழுதுவது இச்சிறுநூலில் ஏலாததாம்.

செரியாமை தொடர்பாகத் தோன்றும் சாதாரண நோய்கள் முதலாக மூலம், இரத்தமூலம் இறுதியாக உள்ள நோய்கள் பலவும் இச்சுவடியில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் தெளிவான குறிப்புகளைக் கொண்டவை மட்டும் இங்குத் தெரிந்து பதிப் பிக்கப்பெற்றன.

வாயுத்தொல்லை, வயிற்றுக்கடுப்பு, கிராணி, வயிற்றிரைச்சல் சூலை, பொருமல், மூலம், இரத்தமூலம், மூலக்கடுப்பு, பேதி, மலக்கட்டு போன்ற நோய்களுக்கான மருத்துவக்குறிப்புகள் இப்பகுதியில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. இந்நோய்களுக்கு எளிதில் கிடைக்கும் பொருள்களால் தயாரிக்க முடிந்த சூரணம், லேகியம், வடகம், மாத்திரை மற்றும் எண்ணெய் வகைகளை அக்குறிப்புகள் பரிந்துரைத்திருக்கின்றன.

பிரண்டை, சுக்கு, சீரகம், கடுக்காய், ஓமம், திரிகடுகு, இஞ்சி போன்ற பொருள்கள் பெரும்பாலான மருந்துகளில் இடம் பெற்றுள்ளன. இத்தகு பொருள்களைக்கொண்டு வயிற்றுக்கடுப்பு, மூலம், இரத்தமூலம் போன்ற கொடிய நோய்களைத் துரத்த

முடியும் என்ற நம்பிக்கையை வலுவாக ஊட்டும்நிலையில் அக்குறிப்புகள் காணப்படுகின்றன.

மலக்கட்டு, மலச்சிக்கல் போன்ற தொல்லைகட்கு மிகச் சிறந்த மருந்துகளைப் பரிந்துரைத்துள்ளது இச்சுவடி. இனி அவற்றை முறையே-சுவடியில் கண்டவாறு காண்போம்.

வாயுத்தொல்லை: (அசுவகந்தி சூரணம்)

அமுக்கிரா பலம்-16, சுக்கு பலம்-8, சங்கம்வேர் பலம்-4, சித்திரமூலம் பலம்-2, கண்டத்திப்பிலி பலம்-1, நல்லமிளகு பலம்-6, ஓமம், அரிசிதிப்பிலி, பொற்கடுக்காய், சிறுதேக்கு, தாளிசபத்திரி, தானிக்காய், கடுகுரோகணி, வாய்விளங்கம், கடுகு, கருஞ்சீரகம், சீரகம், மல்லி, கார்போகரிசி, பற்பாடகம், பரங்கிப்பட்டை, வகைக்கு பலம்-1, லவங்கம், லவங்கப்பட்டை, பெருஞ்சீரகம், கோஷ்டம், சாதிக்காய், சாதிபத்திரி, குராசாணி, அரத்தை, மதுரம், மஞ்சள், வால்மிளகு, ஏலம் வகைக்கு கழஞ்சு -1, வறுத்து சூரணம் பண்ணி, சீனி சமன் கலந்துண்ண (பலம் ½ மண்டலம்-1) வாயுவென்றதெல்லாம் போம், வாதம் சூலையும் போம்.

வச்சிரவல்லி சூரணம் (வேறு)

பிரண்டை பலம்-6,ஆறுபலத்தைஇரண்டங்குலமளவு நறுக்கி, பசுவின் பால் படி ½, இட்டவித்து உலத்தி, சுக்கு, பரங்கிப் பட்டை, மிளகு, கருஞ்சீரகம், அதிமதுரம், கண்டதிப்பிலி, சிறுதேக்கு, சீரகம், மல்லி, வால்மிளகு, ஏலம், கடுகுரோகணி, லவங்கப்பட்டை, வாய்விளங்கம், கடுக்காய் தான்றிக்காய், சித்தரத்தை, பேரரத்தை, கோஷ்டம், தாளிசபத்திரி, வகைக்கு பலம்-1, கிராம்பு, குராசாணி, ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, சோம்பு, கோரோசினை, அக்கிராகாரம், அசுவகந்தி, வகைக்கு கழஞ்சு-1, உலத்தி இடித்துப் பொடித்து வடிகட்டி சீனி சமன் கலந்துண்ண (இருபோது மண்டலம்-1 நேரம் 1-க்கு பலம் ½) பொருமல், மூலவாய்வு, வயிற்றிரைச்சல், உட்டண வாய்வு போம்.

(வேறு)

சங்கம்வேர், முக்காவேளை, சித்திரமூலம், பரங்கிப்பட்டை, சுக்கு, வாய்விளங்கம், சிறுதேக்கு, கொத்தமல்லி, அமுக்கிரா வேர், வகைக்கு பலம் $\frac{1}{4}$ இடித்துப் பாண்டத்திட்டு நீர் விட்டு 8-ல் -1 ஆக்கி யுண்ண மிளகு வராகனெடை-1, பொடித் திட்டுண்ண, விளக்கெண்ணெய் துட்டிடை விடவும். நாள்-3, ஆறுவேளை-புளி, புகை தள்ளவும். வாயு, மேகவாயு, மேல்கடுப்பு, புளித்தேப்பம், வாயுவெல்லாமறும்.

இதை மிளகு, சீரகம் கூட்டிச் சூரணித்துச் சமன் சீனி கூட்டியு முண்ணலாம்.

நிலாவாரைச்சூரணம் (வேறு)

நிலாவாரை-பலம் 10, முடக்கற்றான் பலம்-5, கடுக்காய் பலம்-5, சுக்கு, இந்துப்பு, வாய்விளங்கம், வகைக்கு பலம்-1, சூரணம்-பாலில் வேடுகட்டி சுத்திபண்ணி சூரணித்து பனை வெல்லம் பலம்-20, பால் படி-1, அல்லது பிரமிப்பூண்டுச் சாறு படி-1, அதில் பனை வட்டு போட்டு பாகுசெய்து அதில், சூரணந்தூவிக் கிண்டி, நெய் படி $\frac{1}{2}$ விட்டு லேகியஞ்செய்யவும், வேளைக்குப் பாக்களவுண்ண மலக்கட்டறும். வாய்வுகள் பித்தம், கரப்பன், நீர்க்கட்டறும். தகுந்த பற்பமிட்டுண்ணவும்.

சூடு, தீபனம், வாயு: (தீபனத்துக்கு சுண்டியாதி)

சுக்கு, சீரகம், திராட்சம், பெஞ்சீரகம், கல்நார், தேற்றா-விதை, கண்டங்கத்திரிப்பழம், நுணாவேர், மருதாணிப்பூ, திப்பிலி, மிளகு, வகைக்கு வராகனெடை-1, கொத்தமல்லி சமன் கூட்டி அதற்குச் சர்க்கரை சமன் சேர்த்துண்ண சூடுகளெல்லாம் தணியும், தீபனமாம்.

தீபன லேகியம் - புளிப்பு லேகியம் (வேறு)

கருப்பு உப்பு-பலம் 1, சீரகம் பலம்-1, திரிகடுகு, ஓமம், பெருஞ்சீரகம், 5-ம் வகைக்கு பலம் $\frac{1}{2}$, பொடிபண்ணிப்பிரமியப் பூண்டுச்சாறு படி $\frac{1}{2}$, அதில் போட்டு காய்ச்சிக் குழம்பாய் வரும் பொழுது, எலுமிச்சம்பழச்சாறு படி $\frac{1}{4}$, இஞ்சிநீர் படி $\frac{1}{4}$,

மேற்படி குழம்பில் விட்டு காய்ச்சி லேகியமாகும்போது தேன் படி 1/8, நீர் படி 1/8 விட்டு மெழுகறக் காய்ச்சி மெழுகை யெடுத்துவிட்டு நீர்வற்றினதேன் நீர் படி 1/16 விட்டால் போதும். இந்தத் தேனை லேகியத்தில் விட்டுக் கிளறி இறக்கி, பாக்களவுண்ணவும். பித்தம், பித்தவாய்வு, உட்டண வாய்வு' வயிற்றுவலி போம். தீபனமாம்.

இஞ்சிவடகம் (வேறு)

இஞ்சி பலம்-1, சீரகம், மிளகு, ஓமம், திப்பிலி, சித்திரமூலம், முக்காவேளை, கடுகு, பெருஞ்சீரகம், வசம்பு, கடுக்காய் ஆக பத்தும் வகைக்கு வராகனெடை-1, இந்துப்பு வராகனெடை-5, எலுமிச்சம்பழச் சாறுவிட்டரைத்து உண்டை பண்ணி நிழலுலத்தி பாக்களவுண்டை வாயிலிட்டு மென்று தின்று பசுவின் மோர் குடிக்கவும். தீபனமுண்டாம். பித்தவாய்வு போம்.

திரிகடுகு சூரணம் (வேறு)

திரிகடுகு, ஏலம், சீரகம், பெருஞ்சீரகம், ஓமம், கொத்தமல்லி, தாளிசபத்திரி, காட்டாத்திப்பூ, பூலாங்கிழங்கு, தேற்றாம்விதை, மஞ்சள், கத்தூரி மஞ்சள், திராட்சம், கல்நார், விளாவரிசி, வெப்பாலையரிசி, வசம்பு, முக்காவேளை, வால்மிளகு, வகைக்கு பலம்-$\frac{1}{4}$, ஆடாதோடைவேர், கண்டங்கத்திரிப்பழம், பிரண்டை, சிவனார்வேம்பு, இலந்தைவேர், சிறுபுள்ளடி, செருப்படி, நுணா, வேர், நாரத்தங்கச்சல், முசுமுசுக்கை வேர், மருதாணிப்பூ, நெய்ச்சிட்டி, களாவேர், பிரமியப்பூண்டு, சாரடையிலை, மிளகரணை, வில்வவேர், வேளைப்பூ, சுண்டைவற்றல், கஞ்சா யிலை, வகைக்கு பலம் $\frac{1}{4}$, சரக்குகள். பச்சிலைகளை நிழலுலத்தி சூரணம் பண்ணி இருவகையுங் கூட்டியிடித்து வடிகட்டி பாதி சர்க்கரையும், பாதி கற்கண்டுங் கூட்டி சூரணத்துக்குச் சமனாகக் கூட்டி உண்ணவும். உட்டணம், உட்டணவாய்வு, பித்தம், பித்தவாய்வு, வாய்வு, சூலை, வயிற்றுவலி, கிராணி, அதிசாரம் போம். தீபனமுண்டாம்.

கழிச்சல் சூசிகவாய்வு: (மதூகமலர் லேகியம்)

இலுப்பைப்பூ படி-2, நீர்படி 3 விட்டு ஊறவைத்து இடித்துச் சாறுபிழிந்து வடிகட்டி சட்டியிலிட்டு அடுப்பிலிட்டு சுண்ட

வெரித்து, சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டதிப்பிலி, இந்துப்பு, வகைக்கு பலம் $\frac{1}{4}$, லவங்கப்பட்டை பலம் $\frac{1}{2}$, ஓமம் பலம்-2, இந்துப்பு தவிர மற்றது வறுத்து சூரணம்பண்ணி தென்னகருப் பட்டி பலம்-8 முன் பாகிலிட்டு இளகி பதமான பாகில் சூரண மிட்டுப் பக்குவமாய் முறுகாமல் பதமாய்க் கிளறி எடுத்து அந்தி சந்தி பாக்களவு உண்ண சூசிகா வாய்வு, கழிச்சல், உதிரவாய்வு, சூசிகாக்கிராணி தீரும்.

வயிற்றுக் கடுப்பு:

தேங்காய்ப்பால் ஒருமூடி திருகின பாலில் கடுக்காய்ப்பூ பலம்-$\frac{1}{4}$, அரைத்துக் குழப்பி யுண்ண சீதவயிறு கடுப்பறும்.

(வேறு)

கண்டத்திப்பிலி, கடுக்காய்ப்பூ, கிராம்பு 3-ம் எருமை மோரிலரைத்து வில்லை தட்டி மேற்படி மோரில் வேகவைத்து அரைத்து மறுபடி வேகவைத்து இப்படி அஞ்சுமுறை செய்தெடுத்து ஒரு வில்லை பலம் $\frac{1}{2}$, தேனில் குழைத்துண்ண நாள்–3 வயிற்றுக கடுப்பறும்.

வெள்ளாட்டுப்பால் சம்பழநீர் விட்டுக் கலந்து சீக்கிர முண்ண நாள்-3 கடுப்பறும்.

கருவயிலை, சீரகம், வெங்காயம் 3-ம் கடாயமிட்டு வெந்தயம் பொடித்துப் பொடியிட்டு 3 நாள் உண்ண வயிற்றுக் கடுப்பு போம்.

(வேறு)

கடுக்காய்ப்பூ வறுத்து சூரணம் பண்ணி, அதற்கு 4-க்கு 1 அதிவிடயம் வறுத்துக் கூட்டி சமன் பனங்கருப்பட்டி கூட்டி அரைத்து 3 நாள் பாக்களவுண்ண வயிற்றுக் கடுப்பறும்.

(வேறு)

கடுக்காயைப் பசுவின்நீரில் நாழிகை 30 ஊறவைத்து எடுத்துத் தட்டி மேற்றோலை நிழலுலத்தி வைத்துக் கொள்ளவும். நெய் செய்யுங் காலத்தில் மேற்படி கொட்டை முதல் கப்பியை யிடித்துத் தூளாக்கிக் கப்பி பலம் 1, கஷாயமிட்டு வடித்துப் பசுவினெய் பலம் 8 ல் கஷாயம் விட்டு தோல் சூரணம் பலம் $\frac{1}{2}$

போட்டு இளம் பதத்தில் வடித்துக் கொள்ளவும், கல்லா யுறைந்துப்போம். சாக்கிறதையாகச் செய்யவும். இதில் கரண்டி நிறை யுண்ண வயிற்றுக்கடுப்பறும்.

(வேறு)

வாளம், இந்துப்பு, கடுக்காய், காயம், உள்ளிப்பூண்டுரித்தது, காயம், கொடிவேலிவேர், அபின், அதிவிடையம், சாதிக்காய், திப்பிலி, ஓமம், சுக்கு, சீரகம் வகைக்குப் பலம் $\frac{1}{2}$, எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத் துருட்டி சதுரக்கள்ளியைப் பிளந்ததற்குள் வைத்து, சாணத்தால் கவசமாக மூடி எரிதணலில் புதைத்துக் கருகவெந்ததை அரைத்து உண்டை பண்ணி சிறு பிள்ளைகளுக்கு மிளகளவு தயிரிலிடவும், வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

திரிகடுகாதி லேகியம் (வேறு)

திரிகடுகு வகை 1க்கு பலம்-1, சீரகம், கிராம்பு, ஏலம் வகைக்கு பலம் $\frac{1}{2}$, சுத்திபண்ணி சூரணித்துப் பனைவெல்லம் பலம்–5 பாகுசெய்து சூரணம் தூவி கிண்டி நெய்படி 1/8 விட்டு கிளறி, தேன் பலம் $1\frac{1}{4}$ விட்டு லேகியம் செய்துண்ண 20 நாள் (அந்தி சந்தி பாக்களவு) வாதம், வாய்வு, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுவலி. இளைப்பு, எரிச்சல், பேதி போம்.

கிராணி - அதிசாரம் - வயிற்றுக்கடுப்பு:

திரிகடுகு, சீரகம், ஓமம்–2, அதிமதுரம், இந்துப்பு, கிராம்பு, கடுக்காய், உள்ளிப்பூண்டுரித்தது, பெருங்காயம். சித்திரமூல வேர்ப்பட்டை, அதிவிடயம், சாதிக்காய், சாதிபத்திரி, கஞ்சா, அபினி, கண்டதிப்பிலி, கோட்டம், சாதிலிங்கம், காட்டாத்திப்பூ, கசகசா, லவங்கப்பட்டை, முத்தக்காசு, ஆக 25–ம் வகைக்கு வராகனெடை-1, ஊமத்தஞ்சாறு விட்டரைத்து, மாதளங் காயைக் குடைந்து, அதனுள் வைத்து காயிரண்டு மூன்று முதல் கொண்டது அடைத்து மேற்படி சக்கையால் மூடி சாணியாவது அல்லது துவர்ப்பட்டைகளையாவது அரைத்து காயைப் பொதிந்து லகுபுடமிட்டெடுத்து அரைத்துக் குளிகை தூதளங் காயளவு நிழலுத்தி வாழைப்பூ புட்டவியலிலாவது தேனிலாவது தயிரிலாவது ஒருவுண்டை கொடுக்கவும். பத்தியம் உரைப்பாகாது.

இது பலவிதமாகவுஞ் செய்யலாம். மெழுகு லேகிய முதல் ஆகும். கிராணி, அதிசாரம், வயிற்றுக்கடுப்பு முதலியன போம்.

(வேறு)

அதிவிடயம், சிறுநாகப்பூ, கசகசா, கற்கடகசிங்கி, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம் வகைக்கு பலம்-$\frac{1}{4}$, சுக்கு பலம்-1, பனைவேரின் கடாயத்தாலரைத்து அபினி பணவிடை-3 கூட்டி எரித்துக் களிகிண்டி, பசுவினெய் விட்டு அடிபற்றாமல் எடுத்துப் புன்னைக்காயளவுண்ண (நாள்-3 அந்தி சந்தி) சீதம் வயிற்றுவலி, உதிரம், பேதி, கிராணி, ஆசன கடுப்பறும். காரம் தள்ளவும். தயிரன்ன முண்ணவும்.

(வேறு)

நெல்லிமுள்ளி, அபின், மாங்கொட்டைப்பருப்பு மாதளம் பழத்தோல், கிராம்பு, சாதிபத்திரி, சாதிக்காய், புளிவிதைத் தோல், தேற்றாவிதை, வெங்காயம், இதெல்லாம் சமன் நிறுத்து அரைத்து இத்துடன் பசுவின் வெண்ணெய் கண்ட எடைக்குச் சமன் கூட்டி அரைத்துண்ண வயிற்றுக் கடுப்பறும். புளி புகை தள்ளவும். சிறு பயறு கூட்டியுண்ணவும்.

சூடு, கடுப்பு, வெள்ளை, அநுபோக சூடு: (அவிழ்தம்)
(வேறு)

ஆமணக்கெண்ணெய் படி-1, தேங்காய்ப்பால், பழச்சாறு, ஈருள்ளிச்சாறு, பசுவின்பால், பருத்திப்பால், புங்கம்பால், வகைக்குப் படி-$\frac{1}{4}$, பாண்டத்திட்டு காய்ச்சி மெழுகுபதம், கோரோசினை, குங்குமப்பூ, வகைக்கு வராகனெடை 1, கருகாமல் பொடித்திட்டுண்ண, சூடு, கடுப்பு, வெள்ளை நீங்கும். 5 நாள் உண்ணவும். புளி, புகை தள்ளவும்.

(வேறு)

இளந் தென்னம்பாளை மலரிடித்து சாறு பிழிந்து படி-1/8 சமன் தயிர்கூட்டி பழநீர் பலம்-1, நாள்-3, இருநேரம் உண்ண இரத்தம், சீ, வயிற்றுக்கடுப்பு - பெரும்பாடு - நீர்ச்சுருக்கு போம். பெரும்பாட்டுக்குப் புளி தள்ளவும்.

வயிற்றுக்கடுப்பு, மூலக்கிராணி:

திரிகடுகு, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, கிராம்பு, கடுக்காய், கண்டதிப்பிலி, உரித்த உள்ளிப்பூண்டு, அதிமதுரம், சித்திரமூலப்பட்டை, சாதிக்காய், வசம்புக்கரி, காயம் வகைக்கு வராகனெடை $2\frac{1}{2}$, தேன்விட்டரைத்து மாதளம்பழத்துள் வைத்து, சாணியப்பி புடமிட்டு மாதளம்பழநீர்விட்டரைத் துருட்டி நிழலுலத்தி வாழைப்பூ - புட்டவியல் நீர் முதலான அநுபானத்திடவும். வயிற்றுக்கடுப்பு மூலக்கிராணி நீங்கும்.

கபாடமாத்திரை (வேறு)

சாதிக்காய், சாதிபத்திரி, பெருங்காயம், சீரகம், அதிவிடயம், கிராம்பு, அபினி, கஞ்சா, வெந்தயம், கழச்சிப்பருப்பு, குராசாணிஓமம், ஆக 11-ம், சமனிறை கஞ்சாயிலைச்சாறுவிட்டு சாமம்-4 அரைத்து இலந்தை விதையளவு குளிகை செய்து எருமைத் தயிரில் நாள்-3, தேனில் நாள்-3, வாழைப்பூ புட்டவியல் நீரில் உண்ண இரத்தமூலம் சீக்கிராணி, சலக்கிராணி, சதக்கிராணி, வாய்வுகிராணி, சூதகவாய்வு ஆசீரணகிராணி, வயிற்றுக்கடுப்பு, பாண்டு, வலிகிராணி, அதிசாரக் கடுப்பு போம். புளி கூட்டிப் பத்தியமுண்ணவும்.

கட்டுவாதி மாத்திரை (வேறு)

சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கிராம்பு, கோஷ்டம், மதுரம், அதிவிடயம், லவங்கப்பட்டை, இலவம்பிசின், விளாம் பிசின், சமனிரை கூட்டியரைத்து மாதளங்காய்க்குள் வைத்து சீலை பொதிந்து மேலே சாணி பொதிந்து எருவிற் புடமிட்டெடுத்து காய் வேகாமல் சாணியில் தீப்பிடித்து வெந்ததைப் புடந்தள்ளி கவசநீக்கி, கல்வத்திட்டு கஞ்சாயிலைச் சாறு விட்டரைத்து சுண்டைக்காய்வுண்டை, நிழலுலத்தி வடி தயிரில் உண்ண இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு, இரத்த மூலம் போம். தேனிலிட அதிசாரம் பேதி போம். பத்தியம் புளியாம். மிளகாய் தள்ளவும்.

வயிற்றிரைச்சல், கடுப்பு:

சுக்கு பலம்-1. மோர்விட்டு மைபோலரைத்து அரசிலையில் வைத்து தைத்து மோர்விட்டு வேகவைத்து இந்தப்படி ஏழுவிசை

வேகவைத்து தயிர்வடிகட்டி சமன் கூட்டி தயிரிலிட்டுண்ண, அல்லது தயிர்க் கட்டியில் வைத்து விழுங்க வயிற்றிரைச்சல், கடுப்பு முதலறும்.

அதிவிடய சூரணம் (வேறு)

அதிவிடயம், பெருங்காயம், சிறுநாகப்பூ, திப்பிலி, சாதிக்காய், சாதிபத்திரி, முக்கழஞ்சு, ஆனைத்திப்பிலி - கழஞ்சு - 5, சுக்கு கழஞ்சு-8, கடுகு, வெள்ளுள்ளி கழஞ்சு-8, நாய்க்கடுகு-10 திப்பிலி, மூலம் - 10, அபினி கழஞ்சு-2, வறுத்து சூரணம், செய்து சீனி பலம்-5 கூட்டி, விரற்கடி யந்தி சந்தி (அனுபானம் முத்தக்காசு - கடாயம், தேன், இஞ்சிச்சாறு) உட்கொள்ள கிராணி-6ம் போம். இதுமுதல் அனுபானம் அனேகம் பார்க்கவும்.

சூலை, பொருமல்: உள்ளியாமணக்கெண்ணெய்

சிவதைவேர், வெண்காக்கறட்டான், திருகுகள்ளிவேர், சாரணைவேர், மூக்கறட்டைவேர், கத்தாழம்வேர், கொடிவேலி வேர், காட்டுக்கரணைக்கிழங்கு, மருள்கிழங்கு, புளியரணைக் கிழங்கு, பிரண்டைவேர் வகைக்குப் பலம்-1 துவைத்து நீர் மரக்கால் 2 விட்டு குறுணியாக வடித்து வெள்ளைப் பூண்டு உரித்தது படி ½, அரைத்திட்டு கடாயத்தில் கரைத்து காய்ச்சி படி ¼ ஆக வற்றியதில் சித்தாமணக்கெண்ணெய் படி ½ விட்டுக் கலக்கி திரிபலை, திரிகடுகு, கடுகுரோகணி, நேர்வாளம், செவ்வியம். திப்பிலிமூலம், காயம், இந்துப்பு, சீனம் கற்பூரத் திலை, ஓமம், கருஞ்சீரகம், கார்போகரிசி, கடுகு இவை வகைக்குப் பலம்-1 அரைத்திட்டுக் கரைத்து எருக்கம்பால் படி ஆழக்குவிட்டு பதத்தில் வடித்துண்ண சூலை - சூலை பட்ச வாதம், அண்டவாதம், வயிறு பொருமல், மந்தாக்கினி மூலந் தீரும்.

மூலம்: அடிதள்ளினதுக்கு

வெள்ளுள்ளி மிளகுகூட்டி அரைத்து துணியிற்றடவி ஆசனத்தில் செலுத்தி வழைப்பூவால் கட்டவும்.

(வேறு)

பசும்பால் படி-½, உள்ளிப்பருப்பு பலம்-1. காய்ச்சி உள்ளுக்கு நிதம் வைத்திட நாள்-7 இருநேரம்-புகை, புளி, உப்பு தள்ளவும். சாமைச்சோறுண்ணவும். அடிதள்ளின துள்ளுக்குப் போம்.

எண்ணெய் (வேறு)

ஆமணக்கெண்ணெய் படி-1, பழச்சாறு, வெங்காயச்சாறு, கத்தாழஞ்சாறு, வகைக்கு படி ½, நற்சீரகம் பலம்-1, அரைத்து எண்ணெயிற் கூட்டி மெழுகு பதத்தில் வடித்துண்ண பலம்-1, நாள்-6, சீ மூலம், இரத்தமூலம், கடுப்பு, ஆசனக்கடுப்பு, உள் காய்ச்சல், உள்மூலம், வெளிமூலம் போம். புகை, புளி, உப்பு, மச்ச மாமிசம் தள்ளவும். தயிர் மோர் நெய் வெந்நீரன்னமாம்.

இரத்த மூலம்:

விலாமிச்சம்வேர் பலம்-10, செந்நாயுருவிவேர் பலம்-10, அததிப்பிஞ்சு, நாகமல்லிவேர், பிரண்டை, புளியாரை,மரமஞ்சள், காட்டாத்திப்பூ, சந்தனம், இரு சதை, திப்பிலி, நிலவேம்பு வகைக்கு பலம்-2, (இருசதை என்பது உள்ளிப்பூண்டு), வெங்காயம் ஆக-2. எல்லாமிடித்து நீர் மரக்கால்-2 விட்டு 8-ல் 1க்கு படி-1, கடாயம் வடித்து அதில் கருணைக் கிழங்கை அமுரியில் வைத்தவித்து அரைத்து இதனுடன் விடத்துவரைக் கொழுந்தும், பிரண்டைக் கொழுந்தும், பருத்திவேர்ப் பட்டையும் கூட்டியரைத்து பவள அறுகின் துளிர் வகைக்கு சம்பழத்தளவு, இதற்கு கருணைக் கிழங்கிரண்டு பங்கு கூட்டி கடாயத்தில் குழப்பி திருபலை, இந்துப்பு வகைக்கு பலம்-1, பொடித்திட்டு வெல்லம் பலம்-10, போட்டு பாகிலிதனைப் போட்டு கிளறி பசுவினெய் படி ½ விட்டு லேகியம் பண்ணிப் பாக்களவுண்ண இரத்தமூலம் போம்.

(வேறு)

பருத்திவேர்ப்பட்டை ஒரு எலுமிச்சம்பழத்தளவு, சமன் வெண்ணெய் கூட்டி 6 நாள் உண்ண இரத்தமூலம் போம்.

வச்சிராதி லேகியம் (வேறு)

பரங்கிப்பட்டை பலம்-10, சுத்தித்து அதிமதுரம் பலம்-5, சீரகம் பலம்-5, ஏலம் பலம்-2, சித்திரமூலம் பலம்-2, கோஷ்டம் பலம்-2, சாதிக்காய் பலம்-1, வால்மிளகு பலம்-1, கசகசா பலம் -1, கிராம்பு பலம்-1, அமுக்கிரா பலம்-1, சங்கம்வேர் பலம்-1, அக்கிராகாரம் பலம்-1, இரவியிலிட்டு சூரணம் பண்ணி வடிகட்டி பசுவினெய் யுலையாக வைத்து சூரணந்தூவி குங்குமப்பூ வராகனெடை $1\frac{1}{4}$, கோரோசனை பலம் $\frac{1}{4}$, பொடி பண்ணி தூவிக் கிண்டி லேகியமாக்கிய போது சம்பழச் சாற்றில் சர்க்கரை பலம்-10 போட்டுக் கரைத்து ஊற்றி யூற்றி யிளகாமற் கிண்டி மெழுகு பதத்தில் வாங்கி யுண்ணவும். உடலிலுள்ள மந்தவாயு குன்மம் 8 - மேகசூலை, உள்மூலம் உட்டணநோய் 325 - போம். தாது விருத்தியாம்.

கபாட லேகியம் (வேறு)

அரசு, அத்தி, நாவல், கருங்காலி, ஒதியம்பட்டை வகைக்கு பலம்-10 இடித்து நீர் மரக்கால்-4, 8-ல் 1, வடித்து பனை வெல்லம் பலம்-10 போட்டுப் பாகாக்கிச் சுத்திச்செய்த கஞ்சா. பலம்-1, மிளகு, சுக்கு, சீரகம், ஓமம், குராசாணிஓமம், கற்கடக சிங்கி, காட்டாத்திப்பூ, வால்மிளகு, சிறுநாகப்பூ, மல்லி, ஏலம், கிராம்பு, சாதிபத்திரி, சாதிக்காய், அதிவிடயம், திப்பிலி வகைக்குப் பலம்-1, இளவறுப்பு செய்து, சூரணித்து பாகிற்றூவி தேன், நெய்விட்டுக் கிண்டி, பாக்களவு ஒரு மண்டலம் உண்ண சூசிகாகிராணி, வாய்வு, வயிற்றுக்கடுப்பு, பாண்டு, கிராணி, பேதி, உட்டணவாய்வு, மூலக்கிராணி, வாய்வுகள், கிராணி எல்லாம் போம்.

கிராணி:

சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கடுக்காய்ப்பூ, சீரகம், அதிவிடயம், கிராம்பு, வெந்தயம், அபினி, கசகசா, கோராசினை வகைக்கு வராகனெடை-1, முலைப்பால் விட்டரைத்து மிளகு போலுண்டை செய்து நிழலுலத்தி தேனில் உட்கொள்ள கிராணி எல்லாம் போம். வெண்ணெயுமாகும். ரத்தகிராணிமுதல் போம்.

கபாட லேகியம் (வேறு):

ஆலரசு, அத்தி, நாவல், மாம்பட்டை, கருவப்பட்டை, வெள்வேல், விடத்துவரை வேர், தென்னம்பூ ஆக-9-ம் வகைக்குப் பலம்-2, நீர் மரக்கால்-1, 8-ல் 1 வடித்து பூண்டுரித்தது பலம்-8 போட்டு வேகவைத்து நீர் குறுகினதே மத்திட்டுக் கடைந்து பனைவெல்லம் பலம்-4 போட்டுப் பாகில் சாதிக்காய், அபினி. ஓமம் வகைக்கு வராகனெடை-2, பொடி செய்திட்டுக் கிண்டி பாகு இளக்கமாயிருக்கில் சலம் வற்றக் கிண்டும்போது பசுவினெய் கொஞ்சம்விட்டு லேகியமாய்த் திரட்டி யெடுக்கவும். இதில் நெல்லிக்காயளவுண்ண-அந்தி சந்தி, நாள்-20 மூலம், கடுப்பு, இரத்தம், சீழ், மூலக்கிராணி மூலத்தை யடுத்த நோய்கள் போம். காரம் மட்டாய்க் கூட்டவும். புளி கூட்டவும். பத்தியமில்லை.

மூலக்கடுப்பு:

பசும் நெய் படி-$\frac{1}{2}$, சித்தாமணக்கெண்ணெய் படி-$\frac{1}{2}$, பால் படி-1$\frac{1}{2}$, ஈரவெங்காயச்சாறு படி-3, சிறுகுமிழம்வேர் பலம் $\frac{1}{4}$, சண்பகப்பூ கழஞ்சு-3, அரைத்து பசுவின் நெய் படி$\frac{1}{2}$ யிட்டு காய்ச்சி மெழுகுபதம் வடித்துண்ண அந்தி சந்தி கறண்டி நிறை பத்தியம்-பாலும் சோறும். மற்றது ஆகாது. இதனால் மூலக் கடுப்பறும்.

தேற்றாங்கொட்டை லேகியம் (வேறு)

தோற்றாங்கொட்டை பலம்-5, பஞ்சதாரை பலம்-4, திரி கடுகு, திரிபலை, சீரகம், அரத்தை வகைக்கு பலம் $\frac{1}{2}$, பொடி பண்ணி, பால் படி-1ல் சர்க்கரை விட்டு பாகு செய்து தூள் தூவி கிளறிப் பசுவினெய் படி-$\frac{1}{4}$, தேன் படி 1/8 விட்டு லேகியம் செய்து பாக்களவு - நாகபற்பம் வைத்துண்ண நாள் - 20, இருபொழுது-மூலம், சயம், அஸ்திசுரம், வாதம், அக்கினிமந்தம், மூலவாயு போம். புளி புகை தள்ளவும்.

நாயுருவிநெய் (வேறு)

நாயுருவி பலம்-100, கொடிவேலிவேர், சிவனைதவேர், பொன் முசுட்டை, சிறுகாஞ்சோறி வேர்களும், ஆயிற்பட்டை, புங்கம்

பட்டை, அரசம்பட்டை, மருள்கிழங்கு, பிரண்டைவேர், காட்டுக் காரணைக்கிழங்கு, புளி நரளைகிழங்கு, இதுகள் வகைக்கு பலம்-10 இடித்து மரக்கால் 8 நீர்விட்டு 4க்கு 1 மரக்கால் 2 வடித்து, திரிகடுகு, வாளம், சிவதைவேர், இந்துப்பு, மஞ்சள், திரிபலை, கடுகு, இரண்டுவகை 1க்கு பலம்-1, பால்விட்டரைத்து நெய் விட்டுப் பதத்தில் வடித்துக்கொள்ளவும். பசுநெய் மரக்கால் 1 சேர்க்கவும். இந்த நெய்யை உட்கொள்ள மூலமெல்லாம் போம்.

(வேறு)

தேற்றாங்கொட்டை பலம்-10, திரிகடுகு, சீரகம், சித்திரம், ஏலம், கிராம்பு, மதுரம், ஓமம், திப்பிலிமூலம், கடுக்காய். இந்துப்பு, கோட்டம், சாதிக்காய், சாதிபத்திரி, அரத்தை, வாய் விளங்கம், நெல்லிமுள்ளி வகைக்கு பலம்-½, சர்க்கரை பலம்-8, பால் படி 1-ல் போட்டு பாகானதும் சூரணம் தூவிக் கிளறி நெய்படி ½, தேன் படி ¼, விட்டு லேகியம் உண்ணவும். மூல மறும்.

(வேறு)

இதில் சாதிக்காய், பத்திரி, மதுரம், சந்தனம், கார்போகரிசி, கருவப்பிசின், விளாம்பிசின், குங்கிலியம் கூட்டில் வெட்டைக்கு மாம்.

மூலவாயு:

காயம், வாழைப்பூ, காசுக்கட்டி, களிப்பாக்கு, ஓமம், கருஞ் சீரகம், சீரகம், கஞ்சாயிலை, அபின், பெருங்காயம், மல்லி, சுக்கு, கடுகு, மிளகு, வெந்தயம் இதுகளை எருமைமோர் விட்டரைத்து, மேற்படி மோரில் குழம்பாகக் காய்ச்சி யுண்ணவும். மூலவியாதி, மூலக்கிராணி, கழிச்சல் தீரும்.

பேதி: (சௌக்கியமான லேகியம்) (பிரமியாதி லேகியம்)

பிரமிப்பூண்டுச் சாறு படி-1, கற்றாழை நீர்படி-1, கொட்டைக் கரந்தைச்சாறு படி-1, முடக்கற்றான் நீர் படி-1. நெல்லிக்காய் நீர்படி-1, நிலாஆவாரை கடாயம் படி-1, ஆக

வகையேழும் வகைக்கு சாறு படி-1, பசும்பால் படி-1, தேங்காய்ப் பால் படி-1, வல்லாரைச்சாறு படி-1, அல்லது சிறுசெருப்படி ஆக வகை 10-ம் படி-10 சட்டியிலிட்டு சுண்டக் குழம்பான பின்பு திரிகடுகு, திரிபலை, கடுகுரோகணி, வாய்விளங்கம், இந்துப்பு, ரோசாமொட்டு வகைக்கு பலம்-1, ஆக பலம்-10 பொடிபண்ணி, வடிகட்டி குழப்பில் தூவி விளக்கெண்ணெயாவது அல்லது பசுவினெய்யாவது சேர்-1, விட்டுக்கிளறி எடுத்துண்ணவும். வாய்வு, சூடு, பித்தம், மலக்கட்டு, மேகம் முதலான அனேக ரோகம் போம்.

இதில் வெள்ளறுகுச்சாறு, புங்கம்பால் படி$\frac{1}{2}$, பருத்திக் கொட்டைப் பால் படி-1, பனங்கற்கண்டு பலம்-8 கூட்டி நெய்விட்டு லேகியம் பண்ணி உண்ண வெட்டை போம். கசகசா பலம்-2 கூட்டவும்.

மலக்கட்டு: (சிவதை சூரணம்)

சுத்தித்த சிவதைவேர் பலம் 32க்கு ரவியுலத்தி சூரணஞ் செய்து அதில் திரிகடுகு, திரிபலை, கடுகுரோகணி, கண்டத் திப்பிலி, இந்துப்பு, முத்தக்காசு, இருசீரகம், சிறுநாகப்பூ, லவங்கவகை-3, கோஷ்டம், வாய்விளங்கம் ஆக 18-ம் வகைக்கு, பலம்-1, ரவுயுலத்தி சூரணம் செய்து முன் சிவதை சூரணமுங் கூட்டிக் கலந்து சூரணத்துக்குப் பாதி சீனி பலம்-25 கூட்டியுண்ண பலம்$\frac{1}{2}$, சலக்கட்டு, பழமலம், பித்தம், வாய்வு முதலானது போம். (ஒன்றுக்கு மூன்று கூட்டுவதும் சிலதிலுண்டு)

கிருமிகளுக்கு (வேறு)

விளக்கெண்ணெய் படி-$\frac{1}{2}$, பசுவினெய் படி-$\frac{1}{2}$, இரண்டுங் கலந்து அதில் விழுதிச்சாறு, ஆடுதீண்டாப்பாளை, கொட்டைக் கரந்தை, நெல்லிக்காய், பிரமிப்பூண்டு, முடக்கற்றான், பிரண்டை இச்சாறுகள் வகைக்கு படி $\frac{1}{4}$, நெய் எண்ணெயில் விட்டு திரி பலை, வாய்விளங்கம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, இந்துப்பு, புரசங்கொட்டைப்பருப்பு, சிவதைவேர், வெண்காக்கணவேர், மூக்குரட்டைவேர், வகைக்கு பலம் $\frac{1}{4}$, கற்றாழை நீர்விட்டரைத்து, எண்ணெயிலிட்டுக் குழப்பிப் பதமாயெரித்து கரண்டி நிறை யுண்ணவும். கற்கண்டு பொடித்திட்டுண்ணவும். பேதியாம். கிருமிகள் கூட்டோடே விழும்.

8. வாதநோய்கள்

வாதநோய்கள் மனித இனத்தைக் கலங்கச்செய்யும் நோய்களுள் முதலிடம் பெறும் கொடிய நோய்களாகும். சித்த மருத்துவம் கணக்கிட்ட, நோய்களுக்கான மூவடிப்படையில் ஓர் அடிப்படையைக்கொண்ட இந்நோய்கள் குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரையும் பீடிப்பதாகும். உலகைக்கலக்கிக் கொண்டிருந்த இளம்பிள்ளை வாதம் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். இன்று தடுப்புமருந்துகளால் அந்நோய் கட்டுப் பட்டிருப்பது மகிழ்வுக்குரிய செய்தியாகும்.

இப்பகுதியில் காணப்படும் நோய்களும், மருத்துவக்குறிப்புகளும் பெரும்பாலும் பெரியவர்களைத்தாக்கும் வாதநோய்களே என்னுமாறு தொகுக்கப்பட்டுள்ளன. பட்சவாதம், முழங்கால் வாதம், பிறவாதரோகங்கள், அண்டவாதம், விதைவாதம் போன்ற வாதநோய்களுக்கான எளிய மருத்துவக் குறிப்புகளைச் சுவடியில் கண்டவாறு இப்பகுதி பெற்றிருக்கிறது.

இவ்வாதநோய்களுக்கும் பல்வேறு வகைப்பட்ட மருந்து வகைளைச் சுட்டியிருக்கிறது இச்சவடி. சூரணம், லேகியம், எண்ணெய், மெழுகு போன்ற வடிவங்களில் மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பிறநோய்களுக்கில்லாத நிலையில் இந்நோய்களுக்கென்றே ஒத்தடம் செய்வதற்கும், பூசுவதற்கும், பரிந்துரைக்கப்பட்டுள்ள எண்ணெய் வகைகள் சிறப்பாகக் கருதத்தக்கன. விஷமுட்டித் தைலம், சவுரித்தைலம், தசமூலாதிச்சூரணம் போன்ற சிறப்பு மருந்துகள் இப்பகுதிக்கு அருமை சேர்ப்பனவாய்க் காணப்படுகின்றன.

மேலுக்கு ஒத்தடம், துவளையிடல் போன்ற சிறப்பு மருத்துவக்குறிப்புகளைக் காட்டும் இப்பகுதி வாதநோய்களுக்கு வேதுவிடும் முறையையும் சிறப்பித்துச்சொல்லியிருக்கிறது. வாதநோயாளிகள் விலக்கவேண்டிய பொருள்களைச் சில

குறிப்புகள் பட்டியலிட்டுக் காட்டுகின்றன. வாதத்துக்கு ஆகாத பொருள்கள் எவை எவை என்பதை உணர விரும்புவார்கு அப்பட்டியல் பெரிதும் துணை செய்வதாம். விதை வாதத்துக்கு இங்குக் குறிப்பிடப்பட்ட மருந்துகளும் மருத்துவக் குறிப்புகளும் பிற நூல்களாலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எளிய அம்மருந்துகளும் முறைகளும் பலர்க்குப் பெரிதும் பயன்படத்தக்க நிலையில் காணப்படுவனவாம். பக்க விளைவுகளை உண்டாக்காத அவற்றைப் பற்றிய ஆய்வும் பயன்பாடும் பரவலாக்கப்பட வேண்டும். இவ்அறிமுகத்துடன் இச்சுவடி தரும் குறிப்புகளைக் காண்போம்.

பட்சவாதம்:

எள்ளெண்ணெய் பலம்-8, சித்திரமூலம், நல்லவேளை வேர்ப் பட்டை, குப்பைமேனி வேர்ப்பட்டை, மாவிலிங்கப்பட்டை வகைக்கு பலம்-1. சேங்கொட்டை பலம்-5, வசம்பு, கருஞ்சீரகம், கத்தூரிமஞ்சள், வகைக்கு பலம் $\frac{1}{4}$, எல்லாமரைத்திட்டுக் காய்ச்சி வடித்து பிடிப்புகளுக்கிட்டு தீயில் வாட்டிப் பிடிக்கவும். வாய்வு, பிடிப்பு முதலானது போம்.

முழங்கால் வாதம்:

சித்தாமணக்கெண்ணெய் படி-$\frac{3}{4}$, பூணாகம் படி $\frac{3}{4}$, மிளகு, இந்துப்பு, கழஞ்சு 1 கூட்டிப் பதத்தில் வடித்துப் பூசவும், முழங்கால் வாதம் போம்.

வாதம்: (தசமூலாதி சூரணம்)

பெருவாகை வேர்த்தூள், முன்னைவேர்த்தூள், வில்வவேர்த்தூள் பெருங்குமிழ்வேர்த்தூள், முள்ளி, கண்டங்கத்திரி, கொன்றை வேர்ப்பட்டை, மாவிலங்கப்பட்டை, சங்கம்வேர்ப் பட்டை, தூதுவளை வேர், வெள்ளறுகு சமூலம், முருங்கை வேர்ப்பட்டை, முது வேப்பம்பட்டை, எருக்கன்வேர்ப்பட்டை, தழுதாழைவேர், அமுக்கிராக்கிழங்கு, வெள்ளைச்சாரணை மூலம் சிவனார் வேம்பு சமூலம், முக்காவேளை, நெருஞ்சிவேர், மூக்குரட்டை, சிற்றாமுட்டிவேர், நன்னாரிவேர், ஆடாதோடைவேர், சங்கபுட்பிவேர், வெண்ணொச்சிவேர், செங்கத்தாரிப்பட்டை, கோவைத்தண்டு, சீந்தித்தண்டு, நிலவேம்பு, சவுரிக் கொத்து,

சிற்றாமணக்குவேர், வகைக்குப் பலம் $\frac{1}{4}$, திரிகடுகு, திரிபலை, ஓமம், அரத்தை, கொடிவேலிவேர், கிராம்பு, பஞ்சலவணம், திப்பிலிமூலம், ஏலம், மரமஞ்சள், சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை, பெருங்காயம், செவ்வியம், அதிமதுரம், லவங்கப்பூ, சாதிக்காய், மந்திட்டி, சந்தனம், வாய்விளங்கம், கடுகுரோகணி, கத்தூரி மஞ்சள், கண்டதிப்பிலி. வாலுழுவையரிசி, பறங்கிப்பட்டை, தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, கொத்தமல்லி, குரோசானியோமம், கோட்டம், இலுப்பைப்பூ, அதிவிடயம், மஞ்சள், கடுகு, சிறு தேக்கு, அக்கிராகாரம், வகைக்குப் பலம் $\frac{1}{4}$, பரங்கிப்பட்டை பலம்–5, வெள்ளைப்பூண்டுரித்தது பலம்–1, வசம்பு பலம்–1, நிலவாகைசமூலம் பலம்–1. எல்லாங்கூட்டி யிடித்து சூரணம் பண்ணி விரற்கடி தேனிலுண்ண அல்லது நாலிலொன்று சீனி கூட்டி நெய்யில் குழைத்துண்ண வாதம், 80–ம் சூலை 18–ம், உன்மத்தம், பாண்டு, குன்மம் முதலானது போம். பத்தியம்: சம்பாவரிசி, பூசணி, புடல், கத்திரி, பாகல், பச்சைப்பயறு, உளுந்து, எள்ளு, முள்ளிக்காய், கொள்ளு, கரணைக்கிழங்கு, கக்கிரிக்காய், பழைய நெல்லரிசி, சீரகம், காயம், வெந்நீர் ஸ்நானம், தயிலம் முழுக்கு, இவை நல்ல பத்தியம்.

வாதங்ளுக்கு அவபத்தியம்: உப்பு, அவரை, கடுகு, கடலை, துவரை, மொச்சை, கம்பு, தூரநடை, அடிபடுதல், பயறு, திரிகடுகு, கேழ்வரகு, பொன்னாங்காணிகீரை, பெரும் பயறு, குளிர்ந்த தண்ணீர், குரூரவற்கம், புதுதானியம். சுரை, வெள்ளரி, திராயக்கீரை, வாழைக்காய், வாழைப்பழம், காற்று, மழை, பனி, வள்ளிக்கிழங்கு, வாய்வு பதார்த்தம், மச்சம், மாமிசம் ஈரமானது, பட்டினி, உட்டணம், மெய்வருந்தும் தொழில்கள் பீர்க்கு, புளி, இவைகள் அவபத்தியம்.

வாதம், வாய்வு: சூரணம்

சங்கம்வேர், அமுக்கிரா, முருங்கவேர்ப்பட்டை, மாவிலிங்கப் பட்டை, வெள்ளறுகு, சிவனார்வேம்பு, கண்டங்கத்திரி, வெண்ணொச்சி, வெஞ்சாரணை வேர், நன்னாரிவேர், கழற் பருப்பு, முக்காவேளை, சித்திரமூலம், சிற்றாமுட்டிவேர், ஆடா தோடை, தூதுவளை, சங்குபுட்பி, செங்கத்தாரி, நிலவாகை,

நிலப்பனை, பிரண்டை, கோவைத்தண்டு, சீந்தித்தண்டு, அப்பைக்கிழங்கு, வெருகங்கிழங்கு, ஆக 25 வேர்களும், வசம்பு, கண்டத்திப்பிலி, திரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம், ஏலம், கிராம்பு, ஓமம், பஞ்சலவணம், காயம், அதிமதுரம், விளங்கம், கடுக்காய், திப்பிலிமூலம், செவ்வியம், கொத்தமல்லி, கடுகுரோகணி, காந்தம், அரப்பொடிகிட்டம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, குராசாணி, ஓமம், அரத்தை, கத்தூரி மஞ்சள், அக்கிராகாரம், கார்போகரிசி, சிறுநாகப்பூ வகைக்கு பலம் $\frac{1}{2}$, பரங்கிப்பட்டை பலம்-5, உள்ளிப்பூண்டு உரித்தது பலம்-2, எல்லாம் சூரணித்து விரற்கடி தேனிலுண்ண அரை மண்டலம் (சர்க்கரை பலம்-4 கூட்டியுண்ணவும்) வாதம், வாய்வு, பித்தம், பைத்தியம், பித்தகுன்மம், சூலைவாய்வு, மேகவாய்வு, சத்திகுன்மம், வலிகுன்மம், வாதம் 80-ம் போம். இதனை லேகியமும் செய்யலாம்.

வாதம்: (தைலம்)

மாவிலங்கு, எருக்கிலை, ஊமத்தை, சதுரக்கள்ளி, ஆவாரை விறகு ஆக 5-ம். இந்த அஞ்சுவிறகும் சமன் நறுக்கி நன்றாயுலத்தி சட்டியிலிட்டு நெருப்பிட்டெரித்து, வெந்த சாம்பலில் கள்ளிப் பால் விட்டுப் பிசைந்து உருட்டி நாரத்தங்காயளவு எண்ணெயிற் கரைத்து கொதிக்கும்போது, சந்தனம், ஏலம், கோட்டம், மஞ்சள், ஆக-4 அரைத்து எண்ணெயிற் கரைத்துக் கிண்டி நெருப்பில் வைத்துக் காய்ச்சி பதத்தில் ஊத்தை திரண்டாப்போல திரளில், வடித்துக் காசிடை யுண்ண (நாள்-21) வாதம்-80-ம் போம்.

விஷமுட்டித்தைலம் (வேறு)

எட்டிவிதைத்தூள் படி $\frac{1}{2}$, இந்தப்பழச்சதை பலம்-4, காடியில் பிசைந்து, வடிகட்டிக்கொண்டு, எலும்பிச்சம்பழச்சாறு படி $\frac{1}{2}$, நல்லெண்ணெய் படி 1, விளக்கெண்ணெய் படி-1, எல்லா மொன்றாய்க் கூட்டிக் கொதித்து கடுகு திரளும் பதத்தில், தைலம் வடித்துப் பூசில், சந்து வாதம், உள்வலிப்பு, புறவலிப்பு, நடைகூடாத வாதம், 80-வாதம் போம்.

வாதத்துக்குத் தைலம் (வேறு)

நல்லெண்ணெய் படி-4, பசுநெய் படி-2, விளக்கெண்ணெய் படி-2, வெப்பெண்ணெய் படி-1, தேங்காயெண்ணெய் படி-1, ஆக எண்ணெய் படி-10. கஷாயவகை: சித்திரமூலம், வெள்ளைச் சாரணைமூலம், மாவிலங்கப்பட்டை, புங்கம்வேர்ப்பட்டை, ஆபிற்பட்டை, பெருமரப்பட்டை, முருங்கைவேர்ப்பட்டை, தழுதாழைவேர், சங்கம்வேர், வெண்ணொச்சிவேர், முதுவேப்பம் பட்டை, அமுக்கிராகிழங்கு, தேவதாரம், சிறுகாஞ்சொறிவேர், சரக்கொன்றைப்பட்டை, சிவனார்வேம்பு, அழிஞ்சிவேர், சீந்தித் தண்டு, பெருங்குமிழ்வேர், சவுரிக்கொத்து, ஆடாதோடை, தூதுவளை, கண்டங்கத்திரி, மூக்குறட்டை, பெருவாகைவேர்த் தூள், மஞ்சள், மரமஞ்சள், முன்னைவேர்த்தூள், வில்வ வேர்த்தூள், பூவரசம்பட்டை, நன்னாரிவேர், முக்கா வேளை, பொன்முசுட்டை, ஆதண்டைவேர், செம்முள்ளி, ஆக வேர் வகை 35-ம் வகைக்கு பலம் 10-க்கு நீர் மரக்கால் 8க்கு 8-ல் 1க்கு கஷாயம் மரக்கால் 1. 6 மாதகாடி படி-4, பசும்பால் படி-4, குப்பைமேனிச்சாறு, சிவகரந்தைச்சாறு, ஆடுதீண்டாப்பாளை உத்தாமணி, வெள்ளறுகு, முடக்கொற்றான், தண்ணீர் விட்டான், கற்றாழம்சாறு, கரிச்சாலைச்சாறு, நல்லவேளைச் சாறு, பிரண்டைச்சாறு, செம்முள்ளிச்சாறு, கழற்கொடிச்சாறு, பிரமிப் பூண்டுச்சாறு, அவுரி இலைச்சாறு, இஞ்சிச்சாறு, பழச், சாறு, நெருஞ்சிச்சாறு, பர்ட்டஞ்சாறு, புளியாரைச்சாறு, பொடு தலைச்சாறு, மணித்தக்காளி, மஞ்சள்நீர், சிறுசெருப்படி, மலை தாங்கிப் பூண்டு ஆக 25-ம் சாறுவகை 1க்கு சாறு படி-1, கடாயம் எண்ணெயில் விட்டு ஒன்றாய்க் கலக்கி ரவியில் வைக்கவும். கற்கவகை: திரிகடுகு, திரிபலை, திப்பிலிமூலம், கண்டத்திப்பிலி, வசம்பு, ஏலம், கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், கோஷ்டம், இந்துப்பு, வாய்விளங்கம், கடுகுரோகணி, லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, சாதிக்காய், அதிமதுரம், சந்தனம், கடுகு, அக்கிரகாரம், வெட்டிவேர், விலாமிச்சவேர், ஓமம், கல் நார், சடாமாஞ்சி, வாலுழுவையரிசி, சதகுப்பை, மயிலிறகு, கத்தூரிமஞ்சள், கச்சோலம், தாமரைமூலம், மஞ்சிட்டி, தக் கோலம், கார்போகரிசி, இலுப்பைப்பூ, செவ்வள்ளி, வெட்பாலை

அரிசி, சிறுநாகப்பூ, கொத்தமல்லி, செண்பகப்பூ, சீதேவிசெங்கழுநீர், பூலாங்கிழங்கு, குராசானி ஓமம், வால்மிளகு, ஆக வகை 48 -வகைக்கு பலம் ½, இவற்றைப் பசுவின் பாலாலரைத்திட்டு, காய்ச்சி வடித்து தானியபுடமிட்டு எடுத்து முழுகவும். உள்ளுக்கும் கொள்ளவும். வாதம் 80-ம், சூலை 18-ம், மேகம் 20-ம், குட்டம் முதல் பல வியாதிகள் போம். பத்தியம் இச்சா பத்தியம், ஒரு விறகாலெரிப்பு தைலத்தில் புனுகு, கோரோசினை, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ பொடித்திடவும், நசிய முதல் எல்லா கிரிகைகளாம்.

மேலுக்குத் துவளை

வேப்பெண்ணெய் படி-1, விளக்கெண்ணெய் படி ½, நல்லெண்ணெய் படி ½, கள்ளிப்பட்டை, எருக்கவேர்ப்பட்டை, கார்த்திகைக்கிழங்கு, தில்லைவேர், சதுரக்கள்ளிச்சாதம், சிவதைவேர், வகைக்கு பலம் 10, நீர் மரக்கால்-4, 8-ல் 1க்கு படி-2, எருக்கம்பால், கள்ளிப்பால், திருகுகள்ளிப்பால், சதுரக்கள்ளிப் பால், தில்லம்பால், காட்டுள்ளிநீர், நொச்சிச்சாறு, புளியிலைச் சாறு, ஆட்டுப்பால், வெள்ளாட்டுநீர், பசுவினீர், கொடிக்கள்ளி வாட்டிப் பிழிந்தநீர், வகைக்கு படி ¼, எண்ணெய், கடாயம், பால் 3-ம் கூட்டி கற்கவகை குக்கில், உள்ளிப்பூண்டு, காயம், கெந்தகம், எட்டிவிதை, சேங்கொட்டை, சாம்பிராணி, நாவி கழற்சிப்பருப்பு, வசம்பு, வகைக்கு பலம் ½, அரைத்திட்டுக் காய்ச்சி வடித்து துவளையிடவும். காடியாலரைத்திடவும். வேது விடவும். ஒத்திடம் கொடுக்கவும். நசியம் விடவும். தைலம் முழுகவும். உள்ளுக்கு மருந்துண்ணவும். வாதம் 80-ம் போம்.

சவுரித்தைலம் (வேறு)

வேப்பெண்ணெய் படி-4, ஆறுமாசக்காடி படி 4, பழச்சாறு படி-2, குமரிச்சாறு படி-1, மயிலிறகு பலம்-1, வெண்சாரணை வேர் பலம்-1, பிரண்டை வேர் பலம்-1 இவையெல்லாம் சிவகரந்தைச் சாற்றாலரைத்திட்டு, வேப்பெண்ணெயில் 4க்கு 1 பசுநெய் படி-1, கூட்டி சாறும் வேரும் எண்ணெயுங்கூட்டி கற்கமுதலானதும், திப்பிலிமூலம், திரிகடுகு, ஓமம், காயம் வகை பலம் ¼, முலைப்பாலாலரைத்திட்டு, கமலாக்கினியாயெரிக்கவும்.

பதத்தில் வடிக்கவும். வேப்பெண்ணெய் கசப்பற்று நெய்யாம். எண்ணெய் வடித்தபின் 4-க்கு -1, பசுநெய் கூட்டவும். கூட்டி முத்தின **வேம்பின்** பட்டைத்தைலம் 4-க்கு-1, கூட்டவும். இதைக் கண்டத்தின் கீழ்ப் பூச வாதம் 80-ம் போம். முடக்கின கைகால் முடக்கறும். காசிடைதைலத்தில் தேன் காசிடை கூட்டி, சீனி விரற்கடி கூட்டி, அப்பிரக சிந்தூரம், குன்றியிடை சேர்த்துண்ண நாள்-3, வாதமறும். மேற்படி தைலத்தில் தாளக பற்பம் ரசபற்பம் கூட்டி யுண்ண (மண்டலம்-1) குட்டம் 18-ம், வாதத்தில் பித்தநீரும் பலநோயறும்.

(வேறு)

எள்ளெண்ணெய் படி-8, வேப்பெண்ணெய் படி-1, விளக் கெண்ணெய் படி-2 தேங்காய் நெய் படி-1 ஆக படி 12, ஒன்றாய்க் கூட்டி இருப்புச் சட்டியில் விட்டு அதில் அமுரிச்சாறு படி-1, சந்தனத் தூள் பலம்-5, தேவதாரம் பலம்-1, எண்ணெய்க்குள்ளரைத்திட்டு; கற்கம், ஓமம், சீரகம், அதி மதுரம், கண்டத்திப்பிலி, திரிகடுகு, கொத்தமல்லி, சிறுநாகப்பூ, செண்பகப்பூ, கிராம்பு, ஏலம், பச்சிலை, பேய்ப்புடல், பேய்ப் பீர்க்கு வகைக்குப் பலம் $\frac{1}{4}$, பழச்சாற்றாலரைத்திட்டு, மெழுகு பதத்தில் எரித்து வடித்து இதில் பசுவின் பால் படி-2, கரிச் சாலைச்சாறு படி-1, செவ்விளநீர் படி-4, பழச்சாறு படி-1, நொச்சிச்சாறு படி-1, குப்பைமேனிச்சாறு படி-1, செருப்படிச் சாறு படி-1, உத்தாமணிச்சாறு படி-1, நெல்லிக்காய்ச்சாறு படி-1, எண்ணெயில் விட்டு வடிக்கவும். வடிகலசத்தில், பச்சைக் கற்பூரம், சவ்வாது, கோரோசனை, கஸ்தூரி, குங்குமப்பூ வகைக்கு வராகனெடை $1\frac{1}{4}$, பொடித் திடவும். பூநீற்றுக்குரு கலசத்தில் வராகனெடை 1 போடவும். முழுகிவர கபாலவாயு, வாதம், மற்ற நோயறும். சருவாங்கமுமிட்டு முழுகவும். சீயக்காய் பச்சைப்பயறு அரைப்பாம். தசையிலுள்ள நோய், தேகவலி போம்.

வேம்பின் தைலம் (வேறு)

நூறு வருடத்து வேம்பின் பட்டை தைலமிறக்கியதில் பொரிமாவிட்டு புண்ணைக்காயளவு தாம்பூர சிந்தூரம் பண விடை வைத்து மண்டலமுண்ண வாதம், 80-ம் போம்.

வாதத்துக்கு ஒத்தடம் - பொட்டணம் (வேறு)

சுரபுன்னை விதைப்பருப்பு, ஆமணக்குவிதை, வேப்பம் பருப்பு, மகிழவிதை, கழச்சிவிதை, இலுப்பைப் பருப்பு, அகத்தி விதை, முற்றின தேங்காய், இந்துப்பு, பஞ்சலவணம், அரத்தை புங்கம் விதை, பருத்தி விதை, முருங்கை விதை, கோட்டம், பச்சைக்கடலை, வெண்கடுகு, அழிஞ்சிவிதை, வசம்பு, எள்ளு, கொள்ளு, பெருங்காயம், சுக்கு, உள்ளி, கடுகுரோகணி, சமன் கூட்டியிடித்து சூரணமாகச் செய்து புங்கெண்ணெய், எள் ளெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பையெண்ணெய், ஏரண்டயெண்ணெய், சமன் கூட்டிப் பொடியில் விட்டுப் பிசைந்து முத்தை செய்து சீலையில் கிழிகட்டி எரியிற் சட்டி காய்ச்சி பொட்டணத்தைச் சட்டியில் வைத்தெடுத்து உடம் பிலொத்த, நோகுமிடத்திலொத்த வாதமெல்லாம் போம்.

இதற்குத் துவனை - பூச்சு லேபன எண்ணெய் (வேறு)

கடுகுரோகணி, சிறுபுள்ளடிவேர், ஓமம், கடுகு, கொடிவேலி வேர், வசம்பு, திரிகடுகு, எருக்கு, ஆயிற்பட்டை, முருங்கைவேர், இந்துப்பு, சந்தனம், தேவதாரம், மாவிலங்கு, அரத்தை, மாகந்தி, மஞ்சள், சமன்கூட்டி, நொச்சி, சதிரக்கள்ளி, எருக்கு இச்சாற்றிலு மரைத்து, வாகைச் சாற்றில் குழப்பி உடலுக்கு லேபனம் பண்ண வாதம் எல்லாம் போம்.

வாதத்துக்கு வேதுவிட (வேறு)

எருக்கு, நொச்சி, சதுரக்கள்ளி, திருகுகள்ளி, சிற்றரத்தை, மாவிலங்கை, கருநொச்சி, சாரணை, மஞ்சள், (2) சரக் கொன்றைப் பட்டை, தேவதாரம், கோட்டம், இந்துப்பு, சித்திர மூலம், திரிகடுகு, முருங்கைவேர், வாய்விளங்கம், சிறுபேய்த் திம்மிட்டி, மிளகரணை, கண்டங்கத்திரி, முதுவேப்பம்பட்டை, வாகைப்பட்டை, குத்துக்காரன்சம்மட்டி, இதுகள் சமனிடித்து ஆட்டுப்புழுக்கையு மிடித்துக் கூட்டி நீர்விட்டு அட்டபாகமாகக் காய்ச்சி வேதுவிடவும். வாதமெல்லாம் போம்.

சகலமான வாதங்கள்: (புடயெண்ணெய்)

பூவரசின் வேர் பலம்-30, கருஞ்சீரகம் பலம்-10, வெள்ளுள்ளி பலம்-10, வசம்பு பலம்-10, விளக்கெண்ணெய் படி-6, சூரிய

புடமாக மண்டலம்-1, வைத்து ஒருபல யெண்ணெய் உண்ண (நாள்-15) வாயு, தோள் வாதம், மேகசூலை, வாய்வாதம், பல், வாதம், தொண்டைவாதம், குடல்வாதம், இடைவாதம், உருளைவாதம், துடைவாதம், சந்துவாதம், குதிவாதம், முழங்கால் வாதம், தண்டுவாதம், இளம்பிள்ளை வாதம், கெண்டைவாதம், இப்படி சருவாங்க வாதமுந்திரும்.

லேகியம் (வேறு)

சித்திரமூலம், ஆயிற்பட்டை, புங்கம்வேர், மாவிலங்குப்பட்டை, தலைசுருளிவேர், நொச்சி, கண்டங்கத்திரி, தூதுவளைவேர், முள்ளிவேர், நுணாவேர், அமுக்கிரா, உசிலம்பட்டை, முருங்கப் பட்டை, தழுதாழைவேர், அப்பைமூலம், கொறட்டை, புரசம் பட்டை, வீழிவேர், வாகப்பட்டை இவைகள் வேரும் பட்டை களும் ஒவ்வொன்றும் எலுமிச்சங்காயளவு மேற்படி வேரும், கொம்புகளும் நறுக்கி, மடாவில் போட்டு நீர் படி-8ல் 1க்கு படி-1, பின்பு நொச்சிவேர் ஒரு சுமை நறுக்கி இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு நீர் படி-8 விட்டு, எட்டில் ஒன்றாய் வடித்து முன் கசாயமும் யிக்கசாயமும் ஒன்று கூட்டி, குறுணி யாகக் காய்ச்சி அதில் முன் அரைத்த மருந்தைக் கரைத்து, இதில் திரிகடுகு திப்பிலிமூலம், கடுகு, ஓமம், விளங்கம், மர மஞ்சள், மல்லி, தேவதாரம், அரத்தை உள்ளி வகைக்கு வராகனெடை-4, பொடிபண்ணி வடிகட்டிய சூரணத்தை கியாழத்திலிட்டு அடுப்பேற்றிக் காய்ச்சிக் கிண்டவும் அதில் வேப்பெண்ணெய் படி $\frac{1}{2}$, விட்டுக் கிளறி, மெழுகு பதத்தில் யெரித்து பாக்களவு யிருபோதுண்ண வேது விட்டு குளித்து வர சனிவந்த சூலை, முடக்கு வாதம், சுருக்குவாதம், திருகுசன்னி, கூட்டுசூலை, இந்த வாதங்கள் தீரும்.

லேகியம் (வேறு)

பொற்கடுக்காய் பலம்-8, பொடிசெய்து பனைவட்டு பலம்-16, ஆமணக்கெண்ணெய் சமனிடை விட்டு லேகியம் போலக் கிளறி மறு பாண்டத்தில் வைத்து மண்டலம்-1, சாப்பிடவும். நிதமிருவேளைக்கு பலம் $\frac{1}{2}$, வாதம் போம். பத்தியம்: ஆட்டிறைச்சி, மச்சம், மேதிப்பால், தயிர், மோர், நெய், பாகல், அகத்தி, வாய்வு வஸ்துகள் தள்ளவும்.

வாதரோகம்: (துவளை எண்ணெய்)

வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், புன்னை எண்ணெய், எள்ளெண்ணெய், ஆக அஞ்செண்ணெய் வகை 1க்குப் படி ½, வெள்ளுள்ளி, நாபி வசம்பு, காயம், திரி கடுகு, ஓமம், கிராம்பு, சதகுப்பை, கடுகுரோகணி, சித்திரமூலம் வகைக்குப் பலம் ½, காடியாலரைத்திட்டு காடி படியிரண்டில் படி ¼ விட்டு, மெழுகுபதமாய் வடித்து, மேற்படி பூசி, பிடித்துக் காய்ச்ச வாதம் 80-ம் போம். மேகவகை சூலை, திமிர்வாதம், புறவீச்சு, இசிவு, நடுக்குவாதம், சிறுகடுப்பு இவை, காசிடை உள்ளுக்குண்டால் வாதமெல்லாம் போம். தேகவலி போம். துவாலையிடவும்.

வாதமிஞ்சிய முடக்கு

புனலித்தண்டு, திருகுகள்ளி, துத்தி, தழுதாழை, முடக் கொத்தான், வேப்பம்பட்டை, சங்கு, உத்தாமணி, வெண்ணொச்சி, குதிரைக்குழம்பு, பச்சிலை, வெள்ளிண்டு, பிரம்பு, ஆக 12-ம் வகைக்கு பலம்-10, நீர் மரக்கால் 18-விட்டு அடுப்பேற்றி எரித்துக் காய்ச்சி ஆறு மரக்காலாக சுண்ட கடாயம வடித்து வேதுவிடவும். உள்ளுக்கொருசேர் கொள்ளவும். மேலில் விட்டுப் பிடிக்கவும். இப்படி நாள்-3 செய்து ஆனைலெத்தி, ஒட்டைலெத்தி, வெள்ளாட்டின் புழுக்கை, தேள்கொடுக்கு, கழச்சி, தேங்காய்ப்பூ, எருக்கம்பூ. இவைகள் வறுத்து நாள்-3 ஒத்தடமிடவும். வாதம், மேகம், வாய்வு, அண்டவாய்வு, விரை வாதம் போம். பத்தியம் ஒன்றுமாகாது. ஏழாநாள் வறுத்து உப்பு கூட்டவும். எட்டாநாள் தலைக்கு நீர்விட்டு புளி கூட்டவும்.

(வேறு)

திருகுகள்ளி கொண்டு வந்து வரகு வைக்கோலில் வாட்டிப் பிழிந்து கள்ளிச்சாறு, அந்த எடைக்கு நல்லெண்ணெய் கூட்டி யுண்ணவும். வாதம், வாயு, சூலை, குறுக்குவலி, முடக்குவலி, குதிகால்வாதம் போம். நாள்-3 உப்பில்லாப்பத்தியம் நாளாறு பத்தியம் பிடிக்கவும். மேகவெட்டை, வெள்ளையும் போம்.

அண்டவாதம்:

கோழிமுட்டை 3 சமூலம், வெண்கரு மட்சட்கரு விரண்டும் உடைத்து பீங்கானில் விட்டு கழச்சிப்பருப்பு பலம் ½ பொடிபண்ணி யதிலிட்டு லிங்கம் வராகனெடை-1, ரசகற்பூரம் வராகனெடை-1, பொடி பண்ணி பீங்கானிலிட்டுக் கிளறி ஒரு நாள் நாழிகை-30, வெய்யிலில் வைத்துக் கிண்டி அதனை ஒரு சட்டியல் விட்டு அடுப்பில் வைத்துத் தீயாமல் கிளறி பசுவின் நெய் பலம்-1, அதில் விட்டுக் கிண்டவும். கிண்டில் நீர்ச்சுண்டி மெழுகுபோல தீயாமல் வரும் பொழுது எடுத்து கல்வத்திட்டு அரைத்து ஒரு டப்பியிலடைத்து ஒரு வேளைக்கு சுண்டைக் காயளவாக நாள்-3 அந்தி சந்தி கொடுக்கவும். பத்தியமில்லை. அண்டவாய்வு போம்.

விதைவாதம், அண்டவாதம்:

கழற்சி கொண்டை -60, உடைத்துக் காயவைத்து, பருப்பை முளைபோக்கி ரவியுலத்திப் பொடிபண்ணி மூன்று பங்கு செய்து கோழிமுட்டையாறு. 1 கோழிமுட்டையுடைத்து வெள்ளைக்கரு சட்டியில் விட்டு, முன் கழற்காய் பொடியி லொருபங்கெடுத்ததில் தூவி, அடுப்பில் வைத்துக் கிளறி யுண்டை செய்து காலையில் ஒரு வேளை கொடுக்கவும். சாயந்திரத்துக்கு, முன் சட்டியை நன்றாய்க் கழுவி அடிப்பில் வைத்துக் காய்ந்த பின், இன்னம் ஒரு அண்டம் உடைத்து சட்டியில் விட்டு முன் பொடியில் ஒரு பங்கிட்டுக் கிளறி பொரிந்தபின்னுருட்டிக் கொடுக்கவும். மறுநாள் கலையிலுமிப்படியே செய்யவும். மருந்துக்கு அண்டம்-3 சரி. மற்ற 3-அண்டமும் மூன்று வேளைக்கு மூன்று அண்ட வெண்கரு சும்மா அவித்து மஞ்சற் கரு தள்ளி வெண்கருவை மட்டும் சாப்பிடவும். இப்படி மூன்று அண்டம் சும்மா சாப்பிடுவது வாயின் கசப்பறும். உப்பில்லாப் பத்தியம். வேளை. மூன்றுக்கு நாள் ஒன்றரை மறு பத்தியம். நாள் ஒன்றரை ஆக நாள்-3 ஆனபின் உப்பு வறுத்து சாப்பிடல் மூன்று வேளை. உப்பில்லாப் பத்தியம் நாள் ஒன்றரையானபின் மற்ற ஒன்றரைநாள் உப்பு வறுத்துக் கூட்டல் ரெண்டாம் பட்சம். நாள் 3 வரைக்கும் உப்பில்லாம லிருந்து நாலாநாள் உப்பு வறுத்துக் கூட்டுவதே நன்மை.

நாள் மூன்று கழிந்த பின்பு கஞ்சி தேய்த்து வெந்நீரில் முழுகவும். உப்பில்லாப் பத்தியத்துக்கு பச்சரிசிக்கஞ்சி உப்பில்லாமற் சாப்பிடவும். பருப்பு வறுத்து மிளகாய் கூடவைத்து பொடி பண்ணி-தொட்டுக் கொள்ளவும்.

விதைவாதம்

இப்படி பத்தியம் நாள்-3 சென்ற பின்பு கஷாயம்: பொன்னாங்காணி சமூலம் இரண்டுகுத்தளவு, பொடுதலை, வல்லாரை, அம்மான்பச்சரிசி, தென்னங்குரும்பை, கீழாநெல்லி வேர் வகைக்கு பிடி-2, உரலிலிட்டு நறுக்கி நைத்து, ஒரு பானையிலிட்டு நீர்படி-15, விட்டு ஏழுபடியாகக் குறுகக் காய்ச்சி வடித்து சீசாவில் அடைத்துக் கொண்டு தினம் அந்தி சந்தி சாப்பிடவும். பத்தியமில்லை. படியேழும் ஆகுமளவும் உண்ணவும். பத்தியத்துக்கு முன்னே பேதிக்குக் கொடுப்பதற்கு, சுக்கு, கடுக்காய், சூரத்தாவாரை, கடுகுரோகணி எல்லாமொரு பங்கும், முடக்கற்றானிடித்தது ஒரு பங்கும் கூட்டி கஷாயம் செய்து பூரக்கட்டத்திலிழைத்துக் கொடுக்கவும். பேதியாம். எண்ணெயில் பேதிக்குச் சாப்பிடலாகாது. மறுநாள் பத்திய மருந்து சாப்பிடவும்.

விதைவாதம் - விதையேறி சோகம் போடல்:

கழச்சிப்பருப்பு, சுண்ணம், வெல்லம், திப்பிலி வகைக்கு கழஞ்சு-1, அரைத்து நாள்-3 கொள்ளவும். கழச்சியிலை, வசம்பு, உள்ளி நறுக்கி வறுத்து ஒத்திடமிட்டுக் கட்டவும் தீரும். வாயுவஸ்து தள்ளவும்.

(வேறு)

மிளகு பலம்-1, ரசகற்பூரம் கழஞ்சு-1, சாதிலிங்கம் கழஞ்சு $\frac{1}{4}$, தேன்விட்டரைத்து மெழுகாக்கி தூதுவளங்காயளவு அந்தி சந்தி நாள்-5, உண்ண விதைவாதம் போகும். பத்தியம்: உப்பு, புளி, புகையிலை தள்ளவும்.

(வேறு)

சீரகம் பலம்-12, வாய்விளங்கம், ஏலம், மிளகு, கண்ட திப்பிலி, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, தாளிசபத்திரி, வகைக்கு பலம்-1, வறுத்திடித்து சூரணம் பண்ணி வடிகட்டி, பேரீச்சங் கனி வித்தகற்றி பலம்-48, முன் பொடியிட்டுப் பிசைந்து வேளைக்கு பலம் ½ சாப்பிடவும். (மண்டலம்-1) விதைவாதம் போம். பொருமலறும். வாய்வு வஸ்து தள்ளவும். உப்பு, புளி ஆகும், வெந்நீர் அன்னம் சர்க்கரையாம்.

(வேறு)

9. வெட்டைநோய்கள்

பாலியலோடு தொடர்புடைய நோய்களுள் வெட்டை வெள்ளை போன்ற நோய்கள் குறிப்பிடத்தக்கனவாம். இரு பாலாரையும் பிடிக்கும் இந்நோய் கிருமிகாரணமாகவும் பிற காரணங்களாலும் ஏற்படுவதாம். ஆளை அழிக்கக்கூடிய கொடிய நோய் என்று சொல்லமுடியாத நிலையில் இந்நோய் இருப்பினும், ஆளை உருக்கித்துலைப்பதில் இது குறிப்பிட்ட இடத்தைப் பெறுவதாம்.

கிருமி நோய்கள் பலவற்றை ஆய்ந்து மருந்துகளைக் கண்ட நம் முன்னோர், வெட்டைநோய்களையும் இனங்கண்டு மருத்துவக் குறிப்புகளைப் பரிந்துரைக்கின்ற செய்தி வியப்பைத் தருவதாக உள்ளது. இச் சுவடியில் வெட்டை நோய்கள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. சில அரிய மருந்துகளையும் அரிய பக்குவங்களையும் கொண்டதாகக் காணப்படுதலின், அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, எளிய மருத்துவக் குறிப்புகளை மட்டும் இப்பகுதி தேர்ந்திருக்கிறது.

வெட்டை, வெட்டைச்சூடு, வெள்ளை, வெட்டைப்புண் ஆகிய நோய்கள் இங்கு எடுத்துக்காட்டப்பட்டு, அவற்றுக்குரிய மருத்துவக்குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. குடிநீர், சூரணம், லேகியம், ஆகிய மூன்று மருந்துவகைகள் இந்நோய்களுக்குச் சுட்டப்பட்டுள்ளன.

மேகநோய்களுக்குப் பத்தியப்பொருள்கள் பல சுட்டப் பட்டமை போலவே காரம் நீக்குதல், புளி, புகை தள்ளுதல் போன்ற பத்தியமுறைகள் வெட்டை நோய்களுக்குக் கடுமையான ஆணையுடன் சொல்லப்பட்டுள்ளமை சிந்தித்தற்குரியதாம். பருத்திக்கொட்டையைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்து வெட்டைப்புண்ணை ஆற்றும் வல்லமை கொண்டதாக ஒரு குறிப்பு காணப்படுகிறது. வெட்டையுடன் கூடிய வயிற்றுவலி,

வயிற்றுக்கடுப்பு, நீரெரிவு, அசதி, உடல் உஷ்ணம் போன்ற நோய்களுக்கும் இப்பகுதியில் மருந்துகள் சுட்டப்பட்டுள்ளன. அறுகம்வேர், நெருஞ்சிவேர், முருங்கை ஈர்க்கு, சிறுகீரைவேர், ஓரிலைத்தாமரை ஆகிய எளிய மருந்துப்பொருள்களைக் கொண்டு வெட்டையை ஓட்டமுடிந்த குறிப்பொன்றும் காணப்படுகிறது. இனி சுவடிதரும் இக்குறிப்புகளை முறைப்படியே காண்போம்.

வெட்டை:

பூவந்தி வடவேர்ப்பட்டையை, வெந்நீர்விட்டரைத்து நாள் 3 போதுண்ண வெட்டையால் தோன்றும் நீர்க்கடுப்பறும். புளி, புகை, உப்பு தள்ளவும். வெந்நீரன்னம் உண்ணவேண்டும்.

(வேறு)

வால்மிளகு பலம்-1, கசகசா பலம்-2, பொன்னிறமாய் வறுத்து பொடிபண்ணி, பசுவின் பால் பலம்-8, சீனி பலம்-4, பாகில் தூள் தூவி நெய் பலம்-$1\frac{1}{2}$, லேகியம் செய்து பாக்களவு இருபோது 10 நாள் கொள்ள மேகம் வெட்டை, தீரும். பத்தியமில்லை.

(வேறு)

ஈருள்ளிச்சாறு பலம்-6, கழற்கொடிச்சாறு பலம்-3, எள்ளெண்ணெய் பலம்-6, கூட்டித் தயிலமாக்கியுண்ண (6 நாள் பத்தியம் ஒன்றுமாகாது. வென்னீரன்னம்) நீர்ச்சுருக்கு, மேக வெட்டை, நீரெரிச்சல் போம்.

வெட்டைக்குச் சூரணம்

சந்தனம், அகிற்கட்டை, ஏலம், லவங்கப்பட்டை, கிராம்பு, பெருஞ்சீரகம், அதிமதுரம், கார்போகவரிசி, வெப்பாலை, தேற்றான்விதை, அறுகம்வேர், சிற்றாமுட்டிவேர், ஆக 12-ம் வகைக்கு பலம் $\frac{1}{2}$, ரவியுலத்தி சூரணம் பண்ணி சமனிடை கற்கண்டு கூட்டி வெறுகடி அந்தி சந்தி நெய்யிற் குழைத்துண்ண பசுவெண்ணெயில் (ஒரு மண்டலம்) கொள்ள ஓடுகிற வெள்ளை தீரும். நீரெரிவு, பேதியும் தீரும். பத்தியம்: காரமாகாது.

வெட்டை

வெள்ளைகண்டால் பழம்பாசியை இடித்துச் சலத்தைவிட்டுப் பிசைந்து இறுத்துக் கொண்டு அதில்- நற்சீரகம் ஈருள்ளி ரெண்டும் வகைக்குப் பலம் ¼, அரைத்ததில் கலக்கி நல்லெண் ணெய் சாறளவுக்குப் பாதிவிட்டு சக்கரை பலம் ¼ போட்டு இப்படி 3 நாள் கொள்ள வெள்ளை, பிரமேகம், வெட்டை போம்.

வெட்டை: (வேறுவகை)

பழமிளகு 32, கொடிக்கள்ளிக்கொழுந்து எலுமிச்சங்காயளவு கூட்டிக் கூட்டி அரைத்து அந்தி சந்தி வேளைக்கு அரைக் கொட்டைப்பாக்களவு கொள்ள 3 நாள் வெட்டை தீரும். பத்தியம் பசுமோருஞ் சோறும்.

(வேறுவகை)

புங்கம் பூ படி-1, சட்டியிலிட்டு பசுவினெய் சேர்-2, உண்ண உண்ண விட்டு வறுத்து எடுத்து பூவில் நெய்யெல்லாம் சோரக் குடித்த பின்பு பிரட்டிப்பிரட்டி வறுத்துக் காலையில் தினம் அந்தி சந்தி வெறுகடி பூ கொள்ளவும். புளி, புகை தள்ளவும். வெள்ளாட்டு வற்றல் பசுவின்பால் நெய் அதிகமாகக் கூட்டிக் கொள்ளவும். மேகவெடி, மேகப்புண், மேகசூலை பிரமேகம், வெட்டை போம்.

வெட்டைச்சூடு: (ஏலாதி சூரணம்)

ஏலம், அதிமதுரம், சந்தனம், தான்றிக்காய், செப்புநெருஞ்சி வேர், சதாவரிக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, கழச்சியிலை, இலவம்பிசின், எலிச்செவிக்கீரை, மணித்தக்காளி, நாகமல்லி, தென்னம்பூ, நெய்சிட்டியிலை, பழம்பாசி, பாதிரிவேர், புளி விதைத்தோல், பொடுதலை, மொந்தன் வாழைக்கிழங்கு, மாதளம்பூ, மேற்படி விதை, மலாக்காய், சாம்பிராணி, கண்டத் திப்பிலி எல்லாம் வகைக்கு பலம் ¼, கூட்டி, பாலாலரைத்திட்டு, நெய் படி1-ல் போட்டுக் காய்ச்சி, வடித்து, கற்கண்டு பலம்-1, பொடித்திட்டுண்ண வெட்டை, வெட்டைச்சூடு போம்.

வெட்டைச்சூடு: (குடிநீர்)

இளநீர் படி-3, எலுமிச்சம்பழச்சாறு படி $\frac{1}{2}$, சுண்ணநீர்த் தெளிவு படி $\frac{1}{2}$, குமரிச்சாறு பலம்-6, சீரகம் பலம்-1, ஏலம் பலம் $\frac{1}{2}$, பொடித்திடவும். புது சட்டியில் விட்டு மணலிட் டூரஞ்செய்து, அது மேல் சட்டி வைத்து ஈரச்சீலையால் மூடி பகல் முழுதும் வைத்து இராத்திரிக்குப் பனியில் வைத்து மறுநாள் காலை எடுத்துண்ண, (கால் மண்டலமிப்படி, காலமே கால்படியளவு, அந்தி சந்தி, குமரிச்சாறு பலம்$\frac{1}{4}$, உட்கொள்ள) நீரெரிவு, இரத்தம், வெள்ளை, உள்ளெரிவு, கடுப்பு, காங்கை போம்.

குடிநீர் (வேறு)

அறுகம்வேர், நெருஞ்சிவேர், முருங்கை யீர்க்கு, சிறுகீரை வேர், வகைக்கு பிடி-1, ஓரிலைத்தாமரையுமாகும். வகைக்கொரு பிடி வேர் பொடி பொடியாய் நறுக்கி பொன்போல வறுக்கும் போது சீரகம், மிளகு, கசகசா வகைக்கு வராகனெடை -2 போட்டு சலம்விட்டு நீர்படி-1, 8-ல் 1-க்கு படி 1/8,பசு வெண்ணெய் கழஞ்சு போட்டு உண்ண, உட்டணம், காந்தல், உட்டண வயிற்றுவலி. கடுப்பு (இப்படி நாள்-3) உட்டண காங்கை தீரும் (இதில் சிறுகீரை, ஓரிலைவேர் யுத்தியால் கூட்டினது).

தீராத வெட்டை:

சேங்கொட்டை உடல் பலமறிந்து 2-3-4 கொட்டைகளை நீரிலூர விட்டு நாள்-1 நவ்வாலுதுண்டாய் நறுக்கி பசுவின் பால் பலம்-2ல் போட்டுக் காய்ச்சி, 3 நாள் மூன்று பொழுது சாப்பிடவும். இச்சா பத்தியம், தீராத வெட்டையறும்.

(வேறு)

அமுக்கிராக்கிழங்கு, பரங்கிப்பட்டை, புளியம்விதை, வகைக்குப் பலம்-1, இடித்து சூரணம், சூரணத்தில் நெய், தேன் விட்டுப் பிசைந்து நாள்-8 உண்ண வெட்டை தீரும். முளைக்கீரை, பருப்பு பத்தியம், தேற்றாவிரை சமன் கூட்டவும். ஏலம், கிராம்பு, மிளகு, வால்மிளகு, சாதிக்காய், மதுரம், சாதி பத்திரி, சீரகம், சந்தனம், கோரோசினை, சாதிலிங்கம், தேற்றா

விதை, கசகசா, மாசிக்காய், திரிபலை எல்லாவற்றையும் பனங்கள்ளில், மாதளம்பழநீரில் பசுநெய்யில் இதுகளில் ஒவ்வொன்றுக்கு சாமம்-4 அரைத்து தூதளங்காயளவு உண்டை செய்து உண்டுவர அநுபான விசேடணத்தால் வெட்டை முதலானது அறும். ஏலமுதல் சாதிலிங்கம் வரைக்கும் 11-ம் கூட்டி கஸ்தூரியும் அந்த எடைப்படி கூட்டி அரைத்துண்ண நாலு காண்டம் 1200-ன்படி அனேக ரோகம் தீரும். அனேக அனுபானம். கஸ்தூரி கிடையாததினால் கஸ்தூரி மஞ்சள் கூட்டியரைப்பது சிலருடைய கைபாகமாகச் செய்து வருகிறார்கள்.

வெள்ளை (சூரணம்):

சந்தனம், கிராம்பு, அகிற்கட்டை, ஏலம், சன்னலவங்கப் பட்டை, சோம்பு, மதுரம், கார்போகவரிசி, வெப்பாலையரிசி, தேற்றாவிதை, அமுக்கிராவேர், அறுகம்வேர், சிற்றாமுட்டிவேர், ஆக 12-ம் வகைக்கு பலம்-1, ரவியுலத்தி சூரணம் செய்து சமனெடை கற்கண்டு கூட்டி விரற்கடி காலை மாலை பசு வெண்ணையில் உண்டுவர (மண்டலம் -1) வெள்ளை, நீரெரிவு போம். காரமாகாது, பத்தியம். ஒரிலைத் தாமரைவேர் பலம்-1, சீரகம் பலம்-1, செஞ்சந்தனம் பலம்-1, இடித்துச் சூரணம் செய்து நெய்யிலுண்ண எல்லாச் சூடும் போம்.

வெட்டை (தேற்றாங்கொட்டை லேகியம்)

தேற்றாங்கொட்டை 60, அம்மியிலிட்டு நைய நறுக்கி இள நீரிலாவது பாலிலாவது 3 நாள் ஊறவைத்து அரைத்து பலம்-8 பால் படி 1ல் கரைத்து, பனங்கற்கண்டு பலம் 8, விளாம் பிசின் பலம் 1, சீரகம், ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், சந்தனம், கசகசா, வால்மிளகு, கூகைநீறு, தாளிசபத்திரி, மிளகு, யாளிவிதை, இசுக்கோல்விதை. கடுக்காய், நெல்லிமுள்ளி, நிலப்பனை, ஒரிலைத்தாமரை, வெள்ளைக்குங்கிலியம், சன்னலவங்கப்பட்டை, முள்ளிலவம்பிசின் வகைக்கு பலம் $\frac{1}{4}$. அரைத்திட்டுக் காய்ச்சி லேகிய பதத்தில் நெய் சேர்-1, விட்டுக் கிளறி பாக்களவு உண்டுவர வெட்டைச்சூடு, கால், கையெரிவு, மூலச்சூடு, நீரெரிவு, அசதி முதல் போம்.

வெட்டைப்புண்: (பருத்திக்கொட்டை லேகியம்)

பருத்திக்கொட்டை சேர்-5, நீர்விட்டிடித்துப் பிழிந்தபால் படி-1, பசுவின் பால் படி-1, புங்கம் வேரிழைத்தபால் படி-1, தேங்காய்ப்பால் படி-1, ஆக பால் படி 4-க்கு கசகசா பலம்-10. முன் பசுவின் பாலிலூரவிட்டு அரைத்துப் பிழிந்தபால், முன் தேங்காய்ப்பாலில் தேற்றாங்கொட்டையூறவைத்து அரைத்து பாலிற் குழப்பிப் பிழிந்தது படி-1, ஆக நாலும் படிநாலு காய்ச்சிக் குழம்பாய் வரும்போது, சூகைநீறு பலம்-4 போட்டு பனங்கற்கண்டாவது பனைவட்டாவது பலம்-8 போட்டு லேகியமாய்க் கிளறிக் கொட்டைப் பாக்களவுண்ண வாய் வேக்காடு, வெட்டைப்புண் முதலான சூடெல்லாம் போம்.

பின்னிணைப்பு: 1

சித்த மருத்துவ நூல்களில் கூறப்படும் மருந்துகளின் பழைய அளவைகளும் அவற்றுக்கு நிகரான தற்கால அளவைகளும்

1	ஆழாக்கு	—	168 மி லிட்டர்
1	உரி	—	672 மி. லிட்டர்
1	உழக்கு	—	336 மி. லிட்டர்
1	கலம்	—	64.5 லிட்டர்
1	கழஞ்சு	—	5.1 கிராம்
1	காசெடை	—	165 மி. கிராம்
1	குறுணி	—	5.3 லிட்டர்
1	குன்றி	—	130 மி. கிராம்
1	சாமம்	—	3 மணி நேரம்
1	சேர்	—	280 கிராம்
1	துட்டெடை	—	165 மி. கிராம்
1	துலாம்	—	3.5 கிலோ கிராம்
1	தூக்கு	—	1.7 கிலோகிராம்
1	தூணி	—	21. 5 லிட்டர்
1	நாழி	—	1.3 லிட்டர்
1	படி	—	1.3 லிட்டர்
1	பணவெடை	—	488 மி. கிராம்
1	பதக்கு	—	10.7 லிட்டர்
1	பலம்	—	35 கிராம்
1	மண்டலம்	—	40, 41, 45 நாள்கள்
1	மரக்கால்	—	1 (குறுணி) 5.3 லிட்டர்
1	வராகனெடை	—	4.2 கிராம்
1	வீசை	—	1.4 கிலோகிராம்.

பின்னிணைப்பு: 2

மருந்து செய்முறையும் மருந்து வகைகளும்

இன்றைய அல்லோபதி மருத்துவமுறையில் பல்வேறு வகைப் பட்ட மருந்துவகைகள் கையாளப்படுகின்றன. சில மருந்துகள் மாத்திரைகளாகத் தரப்படுகின்றன. சில திரவப்பொருள்களாகத் தரப்படுகின்றன. சில ஊசிமூலம் இரத்தத்தில் ஏற்றப்படுகின்றன. சில மேற்பூச்சாகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்படிப்பல வகைகளில் நோய்களுக்குத் தக்க வண்ணமும், நோயாளிக்குத் தகுந்த வடிவிலும் தரப்படுகின்றன. நம் பண்டைய சித்த மருத்துவ முறையிலும் பல்வேறு வகைப்பட்டமருந்துவகைகளை-வடிங்களைப் பயன்படுத்தி நோய்களைப் போக்கிய தன்மையை நாம் காணமுடிகிறது. இன்றைய அல்லோபதிமுறையை விட, கூடுதலான மருந்துவகைகள் சித்தமருத்துவத்தில் கையாளப் பட்டன என்று சொல்லுமாறு மருந்துவகைகளில் நம் சித்த மருத்துவம் தலைசிறந்தது எனலாம்.

சித்தமருத்துவம் ஒரு சிறந்த வேதியியலாகவே இங்கு வளர்ந்திருக்கிறது. இம் மருத்துவத்தின் மூலப்பொருள்கள் நான்கு: 1. தாவரங்கள் (Vegetable origin), தாதுப்பொருள்கள் (Mineral origin), உலோகங்கள் (Metal origin), உயிர்ப் பொருள்கள் (Animal origin). இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகைப்பட்ட மருந்துகளைத் தயாரித்தனர்.

மருத்துவர், மருந்துப்பொருள்களின் குணமறிதல், மருந்து களைக் கையாளும் முறை உணர்தல், நோய்க்கான மருந்துகளைத் தேடும் மருந்தியல் தெளிதல் என்னும் மூவகை அறிவிலும் சிறந்திருக்கவேண்டும். சித்தமருத்துவர் இம்மூன்று நெறிகளை உணர்வதுடன் நோயாளியை உணர்வதிலும் வல்லவராய் விளங்குல் வேண்டும். இன்றைய அல்லோபதி மருத்துவமுறை யிலும் பதார்த்தகுணம் (Pharmacognosy) மருந்தாளுகை (Pharmacy), மருந்தியல் (Pharmacology) என்னும் மூவகை உணர்வும் வலியுறுத்தப்படுகிறது என்பது சிந்தித்தற்குரியது.

மருந்துகளின் வடிவங்களை மாற்றுவதாலும், மருந்துகளுடன் உண்ணப்பெறும் குடிக்கப்பெறும் அனுபானங்களை மாற்றுவதாலும் வெவ்வேறு பயனைப் பெறமுடியும் என்பதைச் சித்த மருத்துவம் உணர்த்துகிறது. தண்ணீர், வெந்நீர், பால், மோர், தயிர், வெண்ணெய், நெய், தேன், வெல்லப்பாகு, இளநீர், எண்ணெய் போன்றன அனுபானங்கள் எனப்படும். இவ்வனுபானங்கள் கூட சில நேரங்களில் மருந்துகளாகவே செயற்படுகின்றன. சில நேரங்களில் கிரியா ஊக்கிகளாகத் துணை நிற்கின்றன. சில நேரங்களில் மருந்துகளின் வேகத்தால் ஏற்படும் பக்கவிளைவுகள், பின்விளைவுகளைத் தடைசெய்யவும் துணை நிற்கின்றன.

தூதுவளை சமூலத்தை நெய்யுடன் இணைத்து உட்கொள்ளும்போது ஒரு பயனும் அதனைத் தேனுடன் கலந்து உண்ணும்போது மற்றொரு பயனும் விளையும் என்பதைச் சித்தமருத்துவம் உணர்த்தியிருக்கிறது. எனவே சித்தமருத்துவ மருந்துகளின் அனுபானங்களையும், வடிவங்களையும் உணர்வது இன்றியமையாததாகிறது.

நம் பண்டைய சித்தர்கள், மருத்துவர்கள், சித்தமருந்துகளை இருபெரும் பிரிவுகளில் அடக்கியுள்ளனர். அவை உள்ளுக்குச் சாப்பிடும் அக மருந்துகள் எனவும், வெளியில் பூச்சாகவும், தேய்ப்பாகவும். பிறவாகவும் பயன்படும் புறமருந்துகள் எனவும் அழைக்கப்பெறும். அக மருந்துகள் 32 வகையின. அவ்வாறே புறமருந்துகளையும் 32 வகையினுள் அடக்கிக் காட்டுகின்றன நம் சித்தமருத்துவ நூல்கள்.

அக மருந்துகள்: அடை, இலேகியம் (இளகம்), உட்களி, உருக்கு, எண்ணெய், கட்டு, கடுகு, களங்கு, கற்கம், கற்பம், குடிநீர், குளிகை, குழம்பு, சத்து, சாறு, சுண்ணம், சுரசம், சுவைப்பு, (இரசாயனம்), சூரணம், செந்தூரம், தீநீர், தேனூறல், பற்பம் (வெண்ணீறு), நெய், பக்குவம், பதங்கம், பிட்டு, மணப்பாகு, மாத்திரை, மெழுகு, வடகம், வெண்ணெய், என 32 ஆகும்.

புற மருந்துகள்: அட்டைவிடல், அறுவை, உறிஞ்சல், ஊதல், ஒற்றடம், கட்டுதல், கலிக்கம், களி, களிம்பு, காரம், கிறல், குருதி வாங்கல், கொம்புகட்டல், சலாகை, சீலை, சுட்டிகை, தொக்கணம், நசியம், நாசிகாபரணம், நீர், பசை, பற்று, பீச்சு, புகை, பூச்சு, பொட்டணம், பொடி, பொடிதிமிர்தல், முறிச்சல், மை வர்த்தி, வேது என 32 ஆகும்.

மருந்து வகைகளை நெடிதாகச் சிந்தித்து உருவாக்கிய நம் முன்னோர் மருந்துகள் தயாரிக்கும் முறை, உபகரணங்கள் பற்றியும் தெளிவாக ஆய்வு செய்திருக்கின்றனர். மருந்துகளின் குணங்களில் பக்கவிளைவுகளையோ, திரிபையோ உண்டாக்காத உபகரண செய்முறைகளை அவர்கள் பரிந்துரைத்திருப்பது சிந்தித்துப் பாராட்டுதற்குரியது எற்றால் அது மிகையாகாது.

மருந்து செய்முறை

தேரையர் தைலவர்க்கம் என்னும் நூல் மருந்தியற்றுவான் திறம், மருந்து செய்யும் உபகரணங்கள், தீ வகை, புடவகை, பத்திய முறைகள் போன்றவற்றை முறையாகத் தெரிவிக்கின்றது. மருத்துவமனை அமைய வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுப்பது கூட விரிவான ஆய்வுக்குப் பின்பே நடக்க வேண்டும் என்கிறது அந்நூல். ஆகமமுறைப்படி அமைக்கப்பெறும் கோயில்களுக்குரிய இடங்களை மண்ணின் மணம், திடத்தன்மை, சுவை போன்றவற்றையும் அந்நிலத்தைத் தோண்டும்போது கிடைக்கின்ற பொருள்களையும் ஆய்வு செய்த பின்னரே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பர். மருத்துவமனைக்கும் அத்தகு ஆய்வுகள் இன்றியமையாதனவாக அந்நூல் குறிப்பிடுகிறது.

மருந்து செய்யும் உபகரணங்களை இயற்கைப் பொருள்களாக அமைத்துக்கொள்வதையே சித்தமருத்துவம் வலியுறுத்துகிறது. மண்பாத்திரங்களைப் பயன்படுத்துதல், இயற்கை தரும் விறகுகள், எரு ஆகியவற்றைப் பயன்படுத்தித் தீ உண்டாக்குதல், அரைப்பதற்கும் இடிப்பதற்கும் கருங்கல் உரல் அம்மி, மற்றும் மர உலக்கைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றையே சித்த மருத்துவம் வலியுறுத்துகிறது. பொன், வெள்ளி, வெண்கலம்

போன்ற உலோகங்கள் தீமை குறைந்த உலோகங்களாகக் கருதப்படுதலின் சிலபோது அவற்றைப் பயன்படுத்தலாம் என்றும் பரிந்துரைக்கின்றது.

இவ்வாறே கரண்டிகள், தட்டுகள், மூடிகள், அகப்பைகள் ஆகியவற்றையும் மண், மரம், தேங்காய் ஓடு ஆகியவற்றால் செய்யவேண்டும் என்றே நம் மருத்துவம் சுட்டுகிறது. (மரம் என்று குறிப்பிடும்போது தேக்கு போன்ற உயர்வகை உறுதி காட்டும் மரங்களையே சுட்டும்)

மண்பாத்திரங்களுக்குக்கூட இலக்கணம் சுட்டியிருக்கின்றன நம் சித்தமருத்துவ நூல்கள். நன்னீரைத்தரும் இடத்தில் மண்ணை எடுத்து நான்கில் ஒரு பங்கு மணலைக் கலந்து அரைத்து, துவர்ஏற்றிப் புளிக்க வைக்கவேண்டும். அதனை 15 நாள்கள் மிதித்துப் பக்குவப்படுத்தவேண்டும். அப்படிப் பக்குவப் படுத்தப்பட்ட மண்ணால் செய்யப்பட்ட பாத்திரமே மருந்து செய்வதற்குச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

ஒவ்வொரு மருந்துக்கும் பாத்திரத்தைத் தனித்தனியே பயன்படுத்தவேண்டும். ஒரு மருந்து செய்த பாத்திரத்தில் வேறொரு மருந்தைச் செய்வது கூடாது. ஒரு குறிப்பிட்ட மருந்தையே கூட தொடர்ந்து பலமுறை ஒரே பாத்திரத்தில் செய்யக்கூடாது என்பன போற்றற்குரிய சில சுகாதார முறை களாக இம்மருத்துவத்தில் காணமுடிகிறது.

வறட்டியும் விறகும்

மருந்துகள் செய்வதற்கு வேண்டிய தீயை உருவாக்குவதற் கான மூலப்பொருள்களையும் நம் மருத்துவம் சிந்தித்திருக்கிறது. இதில் சாண எருவால் உண்டாக்கப்பெறும் நெருப்பு முதலிடம் பெறுகிறது எனலாம். சாண எருவிலும் வகை சுட்டப் பட்டிருக்கிறது. பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட வறட்டி உத்தமமானது,எருமைச்சாண வறட்டி இரண்டாந்தரமுடையது. கலப்பு சாண வறட்டி மூன்றாந்தர முடையது. சாணத்துடன் பிற குப்பை கூளங்களைச் சேர்த்துத் தட்டிய வறட்டி கடைத்தர முடையது. ஆட்டுச்சாணத்தால் செய்த வறட்டி சிறப்புடையது என்று நம் மருத்துவம் பரிந்துரைக்கின்றது. (வறட்டி என்பது

ஆறு அங்குல விட்டமும் ஒரு அங்குல கனமும் கொண்டிருப்பதாகும்) அழுகல் சாண வறட்டி முற்றிலும் விலக்கப்பட்டதாம்.

வறட்டி கொண்டும் விறகு கொண்டும் மூட்டப்பெறும் தீயின் அளவு (வெப்ப அளவு) மருந்துக்கு மருந்து வேறுபட்ட நிலையில் தேவைப்படுவதாகும். சிறு தீயாக எரித்து, நன்றாக எரித்து என்றெல்லாம் பொதுவான சொற்களைப் பயன்படுத்திக் கூறியமுறை ஒரு புறமிருக்க, தொழில்நுட்பக் கருத்துணர்வுடன் வெப்ப அளவு தெளிவாகக் குறிப்பிட்ட சூழல்களையும் நாம் சித்தமருத்துவச் சுவடிகளில் காணலாம். ஒரு விறகைக்கொண்டு எரிக்கும் தீ, இரு விறகால் உண்டாக்கப்பெறும் தீ, மூன்று விறகால் உண்டாக்கப்பெறும் தீ, நான்கும் அதற்குமேலும் விறகுகளைக் கொண்ட பெருந்தீ என விறகின் அளவைக் கொண்டு வெப்ப அளவு வகைப்படுத்தப்பட்டுள்ளது. (ஒரு விறகு என்பது 2 விரல் கனம் கொண்டதாகும்). அவை வருமாறு:

1 தீபாக்கினி — விளக்கின் சுடர்போல் மெலிந்து எரியும் தீயை உண்டாக்குவது (1 விறகு),

2 கமலாக்கினி — பூத்த தாமரை போல் எரியும் தீயைத் தருவது (2 விறகு),

3 கதலியாக்கினி — வாழைப்பூபோல் எரியும் தீயைத் தருவது (3 விறகு)

4 காடாக்கினி — மிகுதியான தீயைத் தருவது (4ம் அதற்கு மேற்பட்ட விறகையும் கொண்டெரிப்பது)

தீயின் அளவு - வெப்பத்தின் அளவு பற்றிச் சிந்தித்த நம் முன்னோர் தீயை உண்டாக்கும் விறகுகளின் தன்மையையும் நன்கு சிந்தித்திருந்தனர். சில நோய்களுக்குரிய மருந்துகளைத் தயாரிக்கும்போது சில விறகுகள் சிறப்பானதாகக் கருதப்பட்டன. சில விலக்கப்பட்டன. பதார்த்த குணமறிந்த நம் முன்னோர் தீயை உண்டாக்குவதிலும் கவனமாக இருந்தனர் எனலாம்.

விறகு வகையில் சில: வாதநோய்களுக்கான மருந்துகளைத் தயாரிக்கும்போது வன்னி, மாவிலங்கம், நுணா போன்ற மரங்களின் விறகுகள் சிறந்தன. இந்நோய்களுக்கான குடிநீர், தைலம் ஆகியவற்றைக் காய்ச்சும்போது வேம்பு, பூவரசு, அரசு போன்ற விறகுகளும் சிறப்பிடம் பெறுகின்றன.

பித்த நோய்களுக்கான மருந்துகளைத் தயாரிக்க - நெல்லி, வேம்பு, விளா முதலிய விறகுகளும், கப சம்பந்தமான நோய்களுக்கான மருந்துகளில் உசில், வேல், கொன்றை, வேங்கை போன்ற விறகுகளும் சிறப்பிடம் பெறுகின்றன.

தோல் தொடர்பான நோய்களுக்கும் வெப்புநோய்களுக்கு முரிய மருந்துகளைச் செய்யும்போது ஆவாரை, சிற்றாமுட்டி விறகுகள் போற்றப்படுகின்றன. கண், மூக்கு, செவி முதலிய வற்றுக்கான தைலங்களைச் செய்யும்போது உசில், இலந்தை விறகுகள் பயன்படுத்தப்படுகின்றன. தசைப்பிடிப்புகள் மற்றும் சூடுண்டாக்கவேண்டிய பூச்சுகளைச் செய்யும்போது இலுப்பை, புளி விறகுகள் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன.

பொதுவாக, எந்த மருந்தைச் செய்யும்போதும் ஒரே வகையான விறகே பயன்படுத்தப்பெறவேண்டும் என்பது பொதுவிதியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. முருங்கை, அகத்தி விறகுகள் சித்தமருந்துகள் தயாரிப்பதில் முற்றிலும் விலக்கப் பட்டன என்பதும் கவனித்தற்குரியது.

புடம் - வறட்டிகளைக்கொண்டு உண்டாக்கப்பெறும் வெப்பத்தின் அளவும், விறகின் வெப்பளவை வகைப்படுத்தியது போலவே மருந்துக்குத் தக்கபடி பல்வேறு புடவகைகளாகச் சுட்டியிருக்கின்றன நம் சித்தமருத்துவச் சுவடிகள். அவற்றுள் சில பறவைப்பெயர்களையும் சில விலங்குப்பெயர்களையும் பெற்றுள்ளன.

1 காடைப்புடம் — ஒரு வறட்டி கொண்டு எரிக்கப் படும் புடம்.

2 கவுதாரிப்புடம் — மூன்று வறட்டிகள் கொண்டு எரிக்கப்படும் புடம்.

3 கோழிப்புடம் — பத்து வறட்டிகள் கொண்டு எரிக்கப்படும் புடம்.

4 பன்றிப்புடம் — 50 வறட்டிகள் கொண்டு — எரிக்கப்படும் புடம்.

5 மணல்மறைவுப்புடம் — 90 வறட்டிகள் கொண்டு — எரிக்கப்படும் புடம்.

6 பயிற்புடம் — 100 வறட்டிகள் கொண்டு எரிக்கப்படும் புடம்.

7 கனப்புடம் — 800 வறட்டிகள் கொண்டு எரிக்கப்படும் புடம்.

8 கசப்புடம் — 1000 வறட்டிகள் கொண்டு எரிக்கப்படும் புடம்.

நெருப்பின் வெப்பத்தால் செய்யப்படும் புடம் பலவகைப் படுவது போலவே இயற்கையின் தட்பவெப்பத்தைக் கொண்டும் சில மருந்துகள் புடமிடப்படுகின்றன. அவை வருமாறு:

1 உமிப்புடம் — உமியில் மருந்தைப் புதைத்து வைத்து எடுக்கும் புடம் மற்றும் உமியின் நெருப்பால் செய்யப் படும் புடம் என இது இரு வகைப்படும்.

2 தானியப்புடம் — மருந்தை (கவச மிட்டு) நெல் போன்ற தானியத்துக்குள் குறிப் பிட்ட கால அளவு வைத் திருந்து எடுப்பது.

3 சூரிய புடம் — மருந்தை வெய்யிலில் காய வைத்து எடுத்தல்.

4 சந்திர புடம் — மருந்தை சந்திர ஒளியில் குளிர்வித்தெடுத்தல்.

5 பருவப் புடம் — மருந்தை முழுநிலவன்று திறந்த வெளியில் வைத்தெடுத்தல்.

6 அமாவாசைப் புடம் — அமாவாசையிருட்டில் திறந்த வெளியில் மருந்தை வைத்தெடுத்தல்.

7 பனிப்புடம் — பனியில் மருந்தை வைத்தெடுத்தல்.

8 மரப்புடம் — குறிப்பிட்ட மருந்தை, குறிப்பிட்ட மரத்தில் குறிப்பிட்ட நாள் பொதிந்து (மரத்தைத் துளைத்து) வைத்து எடுத்தல்.

மருந்துண் முறை

மருந்துக்குரிய மூலப்பொருளை இயற்கைப்பொருளாகவே சித்தமருத்துவம் கண்டது. மருந்து செய்வதற்குரிய உபகரணங்களாக இயற்கையினின்று கிடைக்கும் மண்பாத்திரம், விறகு போன்றவற்றையே பயன்படுத்தியது. அது போலவே மருந்து வைக்கப்பெறும் பாண்டங்களையும் எடுத்துண்ணும் கலங்களையும் இயற்கையினின்று உருவாக்கிய மண்பாத்திரங்களாகவே பரிந்துரைக்கிறது சித்தமருததுவம். சில குறிப்பிட்ட நோய்களுக்கு உலோகப்பாத்திரங்களும் கரண்டிகளும் கூட பரிந்துரைக்கப்பட்டுள்ளன. வாதநோய்களுக்கு வெண்கலப் பாத்திரமும், கபநோய்களுக்குச் செப்புப்பாத்திரமும், பித்த நோய்களுக்குத் தங்கப்பாத்திரமும் சொல்லப்பட்டுள்ளன. எனினும் எல்லாவற்றிலும், எல்லா நோய்களுக்கும் சிறந்ததாகக் கருதப்படுவன மண்பாத்திரங்களே எனலாம்.

பெரும்பாலான சித்தமருந்துகள் காலையில் உட்கொள்ள வேண்டிய நிலையிலேயே பரிந்துரைக்கப்படுகின்றன. எனினும் நோய்களுக்குத் தக்க வண்ணம் உணவுக்கு முன்னும் பின்னும் உட்கொள்ளும் முறையும் அந்தி சந்தி வேளையில் உட்கொள்ளும் முறையும் இரவில் மட்டும் உட்கொள்ளும் முறையும் சிறப்பாகச் சுட்டப்பட்டுள்ளன. வாதநோயாளிகள் தமக்கு வழங்கப்பெற்ற

மருந்தை உணவு உட்கொள்ளும் முன்பாகவும், பித்த நோயாளிகள் உணவுடனும், கப நோயாளிகள் உணவுக்குப் பின்னும் உட்கொள்ளுதல் வேண்டும் என்பர். இவ்வாறே மருந்துண்ணும் தொடர்நிலையும் நோய்க்குத் தகுந்த வண்ணம் ஒரு வேளை, மூன்று வேளை, இரண்டுநாள், மூன்றுநாள், 20 நாள்,40 நாள் என மாறுபடுகின்றன. சில குறிப்பிட்ட/நீண்டகால நோய்களுக்கு 6 மாதம் ஒரு வருடம் எனத் தொடர்ந்து மருந்துண்ண வேண்டிய சூழலும் சித்தமருத்துவத்தில் காணப் படுகிறது. மருந்துண்டபின் வாயிலுள்ள (மருந்தின்) சுவையை மாற்ற சில பொருள்களை உட்கொள்ள சித்தமருத்துவம் அனுமதிக்கிறது பாக்கு, தேன், திராட்சைப்பழம், வெற்றிலைக் காம்பு, இலவங்கம் பழைய நெற்பொரி இவை உண்ட மருந்தின் குணத்தைச் சிதைக்காமல் வாய்சுவையை மாற்றுவனவாம். சர்க்கரையும் சில மருந்துகளில் பயன்படுத்தலாம்.

பத்தியம்

சித்தமருத்துவம் மருந்து, அனுபானம், பத்தியம் என்ற மூன்று நிலைகளை அடிப்படையாகக் கொண்டு நோய்களை விரட்டுவதில் தலைநிற்பதாகும். மருந்து நோயைக் குணப்படுத்து வது. அனுபானம் மருந்தின் தன்மையைக் காப்பது; எதிர் விளைவு பக்க விளைவுகளைத் தடுத்து மருந்தின் செயற்பாட்டை ஊக்குவிப்பது. பத்தியம் என்பது மருந்தின் தன்மை கெடாமல் மருந்தின் குணத்தை முறிக்காமல் காப்பதாகும். இன்ன நோய்க்கு இன்ன மருந்து, இன்ன அனுபானம் என்பது போலவே இன்ன நோய்க்கு - இன்ன மருந்துக்கு இன்னின்ன எதிரிகள்; இன்னின்ன கேடுவிளைப்பன; இன்னின்ன முறிப்பான்கள், இன்னின்ன துணையாவன என்பதை உணர்த்தி அவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதில் பெரிதும் அக்கறை காட்டுவது சித்தமருத்துவமாகும். ஆகாத பொருள்கள் பயிர்களைத்தாக் கும் பூச்சிகளைப் போல நோய்களை மிகுவித்து மருந்துகளை முறித்து அழிக்கவல்லன என்னும் அறிவில் நம் முன்னோர் தலைசிறந்து விளங்கினர் என்றால் அது மிகையாகாது. பொது நிலையில் அகத்தி,பாகல் போன்ற கசப்புப்பொருள்கள் மருந்து களை முறிப்பன என்பர். எனவே மருந்துண்ணும் காலத்தில்

அவை விலக்கப்பெற வேண்டும். மா, பலா, வாழை, புகையிலை. கள் ஆகியவற்றை நீக்கவேண்டும். பகலில் தூங்கக்கூடாது' இனச்சேர்க்கை தவிர்க்க வேண்டும்.

இச் சுவடியில் ஆங்காங்கு பத்தியமுறை காணப்படுகிறது. இன்னின்ன ஆகும் பொருள்கள், இன்னின்ன ஆகாப் பொருள்கள் எனப் பொருள்களைச் சுட்டிய நிலையிலும், பொருளைச் சுட்டாநிலையில் - கடும்பத்தியம், இச்சாபத்தியம் போன்ற குறிப்புநிலையிலும் பத்தியமுறை கூறப்பட்டுள்ளது. சித்த மருத்துவ நூல்களில் பொதுவாகக் காணப்படும் பத்தியமுறைகள் குறித்து ஈண்டுக்காண்போம்.

மிகு கடும்பத்தியம்-இப்பத்தியம் சுட்டப்பட்ட மருந்துகளை உண்ணும் போது உப்பு, புளி போன்றன அறவே நீக்கப்பெற வேண்டும். அரிசியைப் புது மண்பாத்திரத்தில் உப்பின்றிச் சமைத்துண்ண வேண்டும். உப்புநீர், கடற்காற்று, புளியமரநிழல் போன்றன உடலிலும் படக்கூடாது என்பர்.

கடும்பத்தியம் - இதில் வறுத்த உப்பு சேர்த்துக் கொள்ள லாம். மறு பத்தியத்தில் வறுத்த உப்பு, சுட்டபுளி, கத்தரிப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சுகளைச் சேர்த்துக்கொள்ளலாம்.

இச்சாபத்தியம் - இப்பத்தியமும் கடும்பத்தியம் போன்ற கடுமை உடையதே. இதில் நீக்கத்தக்கன - கடுகு, எள், எண்ணெய், கலியாணப்பூசணிக்காய், கள், கடலை, தேங்காய், மாங்காய், பலா, காயம், உள்ளிப்பூண்டு, கொள், பாகல், அகத்தி, புகையிலை, பெண்சேர்க்கை என்பனவாம். இதில் கொள்ளத்தக்கன - பசும்பால், நெய், மோர், எலுமிச்சம்பழம், பருத்தவரால், கருங்குறவை, உள்ளான், காட்டுப்புறா, காடை, கலைமான், வெள்ளாடு ஆகியவற்றின் இறைச்சிகளும் ஆகும்.

உப்பில்லாபத்தியம் - இதுவும் மிகு கடும்பத்தியம் போல் உப்பை அறவே நீக்கிய உணவு முறையைக் குறிப்பிடும் பத்திய மாகும்.

மருந்தெண்ணெய்களில் தலைமுழுகிய நாளில் நீக்கத்தக்க பொருள்கள்: (இப்பொருள்கள் சாதாரணமாக எண்ணெய் தேய்த்துக் குளித்தவன்றும் நீக்கத் தக்கனவேயாம்) பூசணி

வகைகள், மாங்காய், தேங்காய், கீரைத்தண்டு, அறுகீரை, அகத்தி, சேம்பு, பாகல், பிற கசப்புப்பொருள்கள், கத்தரி, கொத்தவரை, கனிவகைகள், மாப்பண்டங்கள், மொச்சை, எள், கொள், கடலை, உளுந்து, வெங்காயம், கடுகு, புளி, பால், தயிர், புகையிலை, வெல்லம், குளிர்பானங்கள், பகல் தூக்கம், வெயில், புணர்ச்சி, மிகுகாற்று, நண்டு, மீன், கோழி, ஆடு, பன்றி, கடமான் போன்றன.

தலைமுழுக்காடிய நாட்களில் உண்ணத்தக்க பொருள் களையும் நம் சித்தமருத்துவக் குறிப்புகள் சுட்டுகின்றன. அவரை, கத்தரி, முருங்கை இவற்றின் பிஞ்சு, தூதுளங்காய், மணித் தக்காளி, சுண்டை வற்றல், பொன்னாங்காணி, சிறுகீரை, கறிவேப்பிலை, துவரை, சிறுபயறு, மிளகு, சீரகம், வெந்தயம், லவங்கம், பட்டை, ஏலம், சருக்கரை, பசுவின்நெய், கௌதாரி, காடை, உடும்பு போன்றன கொள்ளத்தக்கன. உப்பு வறுத்துக் கொட்டிய சட்டியில் ஊற்றி முறித்தமோர்,சிறுபுளிப்பு,தாம்பூலம், முயல், வெள்ளாடு, ஏரிமீன், அயிரை ஆகியவற்றையும் கொள்ளலாம்.

இச்சுவடியில் காணப்படும் சில பத்தியப் பொருள்கள்: (ஏடு.91)

கெற்பரோக முதலான வியாதிக்கு - மருந்துக்குப் பத்தியத் துக்கான பதார்த்தங்கள் என்னும் தலைப்பில் வரும் செய்தி பின்வருமாறு:

கட்டின உப்பு, புளியாரை, சீயக்காய்க்கொழுந்து, நெல்லிக் காய், அரிநெல்லிக்காய், வெள்ளாடு, முயல், ஆமை, ஊர்க்குருவி, காடை, மான், மரை, சுறாமீன், மயரை, குரவை, வரால், தேனீ, கௌிறு, மிளகு, சர்க்கரை, தேன், சிறுகீரை, ஆவின்பால், நெய், சிறுபயறு, துவரை, பொன்னாங்காணி, அவரைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, கதலிவாழைப்பழம், கொதிதண்ணீர், அத்திப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பறட்டைக்கீரை, முள்ளிப்பிஞ்சு, தூதுவளை சமூலம், வழுதுணம்பிஞ்சு, கண்டங்கத்திரிப்பிஞ்சு முதலியவைகள் வியாதிகளை விலக்கும்.

மருந்திற்கு முறிவான பதார்த்தங்கள்: கொள்ளு, காடி, கொம்மட்டி, கோழி, பன்றி, கொக்கு, செம்பலியாடு, சேம்பு, சீனியவரை, சுரைக்காய், பாகற்காய், பயற்றங்காய், பூசணிக்காய், கடலை, அவரை, பெரும்பயறு, காட்டுப்பாகற்காய், பழுபாகற் காய், மாங்காய், புளி, கடுகு, தேங்காய், மேதிப்பால், மேதி நெய் (மேதி-எருமை), சாராயம், தென்னங்கள்ளு, பனங்கள்ளு, உழுவை, விலாங்கு, கூனி, கெண்டைகள், கயல்மீன் முதலான கரப்பன் பதார்த்தங்களும் எள்ளுப்பிரமாணம் தின்றாலும் மருந்து முறிந்து உடலிற்பிணி பலக்கும்.

இவ்வாறே வாதநோய்களுக்குரிய பத்தியத்தை நல்ல பத்தியம் (கொள்ளவேண்டுவன), அவபத்தியம் (தள்ள வேண்டுவன) என இரண்டாகப் பிரித்துக் கூறுகிறது மற்றோர் இடத்தில் (ஏடு: 12)

'பத்தியம்: சம்பாவரிசி, பூசணி.புடல்,கத்தரி, பாகல், பச்சைப் பயறு, உளுந்து, எள்ளு, முள்ளிக்காய், கொள்ளு, கரணைக் கிழங்கு, கக்கரிக்காய், பழையநெல்லரிசி, சீரகம், காயம், வெந்நீர்க்குளியல், தைலம் முழுக்கு, இவை நல்ல பத்தியம்'.

'வாதங்களுக்கு அவபத்தியம்: உப்பு, அவரை, கடுகு, கடலை, துவரை, மொச்சை, கம்பு, தூரநடை, அடிபடுதல், பயறு, திரிகடுகு, கேழ்வரகு, பொன்னாங்காணிகீரை, பெரும் பயறு, குளிர்ந்த தண்ணீர், குருரவற்கம், புதுதானியம், சுரை, வெள்ளரி, திராயக்கீரை, வாழைக்காய், வாழைப்பழம், காற்று, மழை, பனி, வள்ளிக்கிழங்கு, பிற வாய்வு பதார்த்தம், மச்சம், மாமிசம் ஈரமானது, பட்டினி, உட்டணம், மெய் வருந்தும் தொழில்கள், பீர்க்கு, புளி இவை அவபத்தியம்'.

வேறோர் இடத்தில் வாதநோய்களுக்கு, 'ஆட்டிறைச்சி, மச்சம், மேதிப்பால், தயிர், மோர், நெய், பாகல், அகத்தி, வாய்வுப் பதார்த்தங்கள் தள்ளவும்' என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பொருள்களைச் சுட்டிக் கூறாமல் உப்பில்லாப்பத்தியம் என்றும், வாயு வஸ்து தள்ளவும் என்றும் உப்பு, புளி, புகையிலை தள்ளவும் என்றும், கடும்பத்தியம், இச்சாபத்தியம் என்றும்

குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்ற இடங்களும் இச்சுவடியில் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் உற்றுநோக்கும்போது மருந்தை எவ்வெவ்வாறு பயன்படுத்தவேண்டும், எவ்வெவ்வாறு பயன் படுத்தக்கூடாது என்பவற்றில் நம் முன்னோர் எவ்வளவு துல்லியமாக இருந்தனர் என்பதை நாம் உணரலாம். ஆம், மருந்தால் மட்டும் நோய் போய்விடாது. அதை உணர்ந்து பயன்படுத்தும்முறை தெரிந்து பயன்படுத்தினால் மட்டுமே முழுப்பலனையும் அடையமுயும். இனி, இந்நூலில் கூறப்பட்டுள்ள மருந்துவகைகளை வடிவங்களைக் காண்போம்.

இரசாயனம் (சுவைப்பு)

சொல்லப்பட்ட பொருள்களைச் சூரணஞ்செய்து, சாக்கரை, நெய் இவற்றை எடைப்படி கூட்டி இளகலாகப் பிசைந்து வைத்துக்கொள்வதாகும். சில மருந்துகளுக்கு இதுவே குழம் பாகவும் செய்து வைக்கப்பெறும். இவ்வாறு செய்யப்பெறும் இரசாயனங்கள் ஆறு திங்கள் அளவே முழுப்பயனைத் தரவல்லன சான்றாக:

பரங்கிப்பட்டை ரசாயனம் - சங்கம்வேர், சங்கபுட்பி, சித்திரமூலம், நிலப்பனை, அமுக்கிரா, இருகுமிழ்வேர், நெருஞ்சி வேர், பூவரசம்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, வகைக்குத் தூள் பலம்-1, திரிகடுகு, ஓமம், கோஷ்டம், சிறுநாகப்பூ, அரத்தை, இஞ்சி, சன்னலவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி - வகைக்குப் பலம் $\frac{1}{2}$, பரங்கிப்பட்டை பலம்-5, சர்க்கரை பலம்-10, நெய், தேன் படி-$\frac{1}{2}$, வார்த்துப் பிசைந்து கலசத்தில் அடைத்து முள்ளிக்காயளவு அந்தி சந்தி 40 நாள் பத்தியம் காத்து உண்டு வர மேகம், சூலை, விரணம், கிரந்தி, வாயிலுள்ள நோய், குஷ்டம், பிரமியம், குன்மம், வாய்வு, மூர்ச்சை, வாய் நாற்றம், அக்கினி மந்தம் போம்.

இலேகியம் (லேகியம், இளகம்)

இலை, வேர், பட்டை போன்றவற்றின் சாறு வகைகள், சில குடிநீர் வகைகள் ஆகியவற்றைத் தனித்தனியாகவோ,

கலந்தோ வைத்துக் கொண்டு சொல்லப்பட்ட அளவில் சர்க்கரை கூட்டி, அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து வற்றிவரும் நேரத்தில், சூரணம் செய்து வைத்துள்ள பிற பொருள்களை அதில் சிறுகச் சிறுகத்தூவி சொல்லப்பட்ட அளவில் நெய்யும் தேனும் விட்டுக்கிளறிப் பக்குவத்தில் எடுத்து வைத்துக்கொள்வதாகும். முதலில் வெல்லம் அல்லது சர்க்கரை யின் பாகைத் தயார் செய்துகொண்டு சூரணங்களைத்தூவி நெய், தேன் இவற்றைவிட்டுக் கிளறிக்கொள்ளும் வேறுமுறையும் இதில் உண்டு. இவ்வகை மருந்தும் ஆறுதிங்களே வன்மை பெற்றிருக்கும். சான்றாக:

திரிகடுகாதி லேகியம் – திரிகடுகு வகைக்குப் பலம்–1, சீரகம், கிராம்பு, ஏலம் வகைக்குப் பலம்–$\frac{1}{2}$, சுத்திபண்ணிச் சூரணித்துப் பனைவெல்லம் பலம்-5 பாகு செய்து அதில் இச்சூரணத்தைத் தூவிக் கிண்டி நெய் படி-1/8 விட்டுக்கிளறி தேன் பலம்–1$\frac{1}{4}$ விட்டு லேகியம் செய்துண்ண வாதம், வாய்வு, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுவலி, இளைப்பு, எரிச்சல், பேதி போம்.

எண்ணெய் (தைலம்)

வித்து, கொடி, பட்டை, கிழங்கு, பசு முதலிய விலங்குகளின் பால் ஆகியவற்றின் உட்கிடையாயுள்ள நெய்ப்புப்பொருள் நெய் எனப்படுவதாம். எள்ளினின்று எடுக்கப்பெறும் நெய் எண்ணெய் எனப்படும். தில் (எள்) என்னும் வடசொல்லினின்று வந்தது தைலம். எனவே எண்ணெய், தைலம் எனப்படும் இடங்களில் எல்லாம் எள்ளினின்று எடுக்கப்பெற்ற நெய்யையே கருத வேண்டும் என்பதை முதற்கண் உணர்தல் வேண்டும்.

சொல்லப்பட்ட சரக்குகளுடன் எண்ணெய்யைக் கூட்டிக் காய்ச்சி வடித்தெடுக்கப்படும் மருந்து எண்ணெய் வடிவினதாம். இது மருந்துகளையோ, நோய்களையோ அடியாகக்கொண்டு சந்தனாதித்தைலம், வல்லாரை எண்ணெய், மேகத்தெண்ணெய் எனப்பெயர் பெறும். சான்றாக:

வாத தைலம் – மாவிலங்கு, எருக்கிலை, ஊமத்து, சதுரக் கள்ளி, ஆவாரை விறகு இந்த ஐந்தும் சமன் நறுக்கி, நன்றா

யுலத்தி, சட்டியிலிட்டு நெருப்பிட்டெரித்து, வெந்த சாம்பலில் கள்ளிப்பால்விட்டுப் பிசைந்து உருட்டி நாரத்தங்காயளவு எண்ணெயிற்கரைத்து கொதிக்கும்போது சந்தனம், ஏலம், கோட்டம், மஞ்சள், நான்கையும் அரைத்து எண்ணெயிற், கரைத்துக்கிண்டி நெருப்பில் வைத்துக்காய்ச்சி பதத்தில் ஊத்தை திரண்டாற்போல் திரளில் வடித்துவைத்துக்கொள். இதில் காசெடை 21 நாள் உண்ண வாதம் 80ம் போம்.

ஒத்தடம் - ஒற்றடம் (பொட்டணம்)

இது புறமருந்துகளில் அடங்கும். சுண்ணாம்புக்காரை, தவிடு, செங்கற்பொடி,கொள்ளுமா,ஓமம், மணல், சில இலைகள், வேர்கள் போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றையோ அல்லது சில வற்றையோ வறுத்துத் துணியில் முடிந்து நோயுள்ள இடங்களில் சூட்டுடன் ஒற்றி எடுக்கப்படுவதாம். சூடுள்ள வரையே பயன்படும். சான்றாக:

வாதத்துக்கு ஒத்தடம் - சுரபுன்னை விதைப்பருப்பு, ஆமணக்கு விதை, வேப்பம்பருப்பு, மகிழவிதை, கழச்சிவிதை, இலுப்பைப்பருப்பு, அகத்திவிதை, முற்றினதேங்காய், இந்துப்பு, பஞ்சலவணம், அரத்தை, புங்கம்விதை, பருத்திவிதை, முருங்கை விதை, கோட்டம், பச்சைக்கடலை, வெண்கடுகு, அழிஞ்சிவிதை, வசம்பு, எள், கொள்ளு, பெருங்காயம், சுக்கு, உள்ளி, கடுகு ரோகணி சமன் கூட்டி இடித்துச் சூரணமாகச் செய்து புங்கெண்ணெய், எள்ளெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பை யெண்ணெய், ஏரண்டயெண்ணெய் சமன் கூட்டிப் பொடியில் விட்டுப் பிசைந்து முத்தை செய்து சீலையில் கிழிகட்டி எரியிற் சட்டி காய்ச்சி, பொட்டணத்தைச் சட்டியில் வைத்தெடுத்து நோயுள்ள இடமெல்லாம் ஒற்ற வாதமெல்லாம் போம்.

கட்டுதல்

இதுவும் புறமருந்துகளின் வகையுள் ஒன்றாகும். இலை களையோ, பட்டைகளையோ, பறவைகளையோ, நைய இடித்தோ, அரைத்தோ, வதக்கியோ, புளித்தநீர் முதலிய வற்றில் வேகவைத்தோ நோய்கண்டவிடத்தில் வைத்துக் கட்டுமுறை கட்டுதல் எனப்படும். சான்றாக:

அடிதள்ளினதுக்குக் கட்டுதல் - வெள்ளுள்ளி மிளகு கூட்டி அரைத்துத் துணியிற் தடவி ஆசனத்தில் செலுத்தி வாழைப் பூவால் கட்டவும். அடி தள்ளினது உள்ளுக்குப் போம். மூலம் தீரும்.

கடாயம் (கஷாயம், குடிநீர்)

இது மருந்துநீர், உண்ணீர் என்றும் அழைக்கப்படும், கசாயம் என்பது ஆயுர்வேதப்பெயர். உலர்ந்த சரக்குகளையோ, ஈரமாயுள்ள சரக்குகளையோ, இடித்து அளவின்படி தண்ணீர் விட்டு இரண்டுக்கு ஒன்றாக, நான்குக்கொன்றாக, ஆறு, எட்டு, பதினாறுக்கொன்றாகக் காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொள்ளும் திரவமருந்தாகும். இது மூன்று மணி நேரமே கெடாதிருக்கும். சான்றாக:

தாகக்கசாயம் - விளாவிலை, ஆடாதோடை, அரசங் கொழுந்து வகைக்குப் பிடி 1, மணல் அரைப்பிடியிட்டு கொடி முந்திரி, அதிமதுரம் வகைக்கு வராகனெடை 1 இவை கருகும வரை வறுத்துத் தண்ணீர்விட்டு குறுகக்காய்ச்சி வடிகட்டிக் கொடுக்க தாகந்தீரும். சுரதாகம், உஷ்ண தாகம், அந்திரதாகம், பாவை தாகம் போன்றவை தீரும்.

வெட்டைச்சூட்டுக்குக் குடிநீர் - இளநீர் படி - 3, எலுமிச்சம் பழச்சாறு படி $\frac{1}{2}$, சுண்ணநீர்த்தெளிவு படி $\frac{1}{2}$, குமரிச்சாறு பலம் - 6, சீரகம் பலம் - 1, ஏலம் பலம் - $\frac{1}{2}$, பொடித்துப் புதுச் சட்டியில் விட்டு மணலிட்டு ஈரஞ்செய்து அதுமேல் சட்டி வைத்து ஈரச்சீலையால் மூடி பகல் முழுதும் வைத்து இரவு பனியில் வைத்து மறுநாள் காலை எடுத்துண்ண (கால்மண்டலம் இப்படி, காலையில் கால்படி அளவு, அந்தி சந்தி குமரிச்சாறு பலம் - $\frac{1}{4}$, சேர்த்து) நீரெரிவு, இரத்தம், வெள்ளை, உள்ளெரிவு, கடுப்பு, காங்கை போம்.

கடுகு

நெய், எண்ணெய் முதலியவற்றில் மருந்துப் பொருள்களைச் சேர்த்துக் காய்ச்சி, அவை திரண்டு வரும் பக்குவத்தில் எடுத்து

அக்கடுகை உள்ளுக்குச் சாப்பிட்டுத் தைலத்தை மேலே பூசுவது. இதுவும் எண்ணெய் போல் ஓராண்டு வன்மை பெற்றிருக்கும். சான்றாக வாதரோகங்களுக்கான எண்ணெய், மேகங்களுக்கான எண்ணெய்களில் இது காணப்படும்.

குழம்பு

சாறுகள், அல்லது தனிச்சாறை சட்டியிலிட்டு சர்க்கரை கூட்டிச் சில பொருள்களைப் பொடி செய்து துணியில் வடிகட்டி அதில் போட்டுக் குழம்புப் பதத்தில் காய்ச்சி வடித்து எடுத்துக் கொள்வதாம். சில பொருள்களை நெய்ப்பசையுள்ள பொருள் களைக்கொண்டு அரைத்துக் குழம்பு பக்குவத்தில் எடுத்துக் கொள்ளும் மருந்து. இது ஐந்தாண்டுகள் வரை பயன்தரத் தக்கது. சான்றாக

மூலவாயுக்குழம்பு – காயம், வாழைப்பூ, காசுக்கட்டி, களிப் பாக்கு, ஓமம், கருஞ்சீரகம், சீரகம், கஞ்சாயிலை, அபின், மல்லி, சுக்கு, கடுகு, மிளகு, வெந்தயம் இவற்றை எருமை மோர் விட்டரைத்து மேற்படி மோரில் குழம்பாகக் காய்ச்சி உண்ணவும்,

குளிகை (மாத்திரை, உண்டை)

சொல்லப்பட்ட பொருள்களைச் சேர்த்து இலைச்சாறு களிலோ, இஞ்சிச்சாற்றிலோ, குடிநீர்களிலோ, முலைப்பாலிலோ, ஆவின்பாலிலோ பிறவற்றிலோ அரைத்துப் பல அளவுகளில் உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்வதாம். மாத்திரை என்பது அளவாகும். எந்த அளவு மாத்திரை தரப் படவேண்டுமோ அந்த அளவுக்கே செய்து வைத்துக்கொள்ளப் பெறுவதால் இப்பெயர் பெற்றது. இது ஓராண்டுவரை வன்மை யுள்ளது. சான்றாக:

ஏலாதி குளிகை – ஏலம், சாதிலிங்கம், கோரோசினை, கல்நார், கல்மதம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, திப்பிலி, கடுகுரோகணி, கூகைநீறு, திராட்சம், வெந்தயம், திரிபலை, சிறுநாகப்பூ, நன்னாரிவேர், கற்கடகசிங்கி, தாளிசம், மிளகு, சுக்கு, கொத்தமல்லி, சோம்பு, கற்சூரம், கண்டதிப்பிலி, நிலப்பனை, சதாவரி, மாசிக்காய், விழல்வேர், வில்வவேர், மாதளம்பழநீர்,

செவ்விளநீர், செங்கரும்பு, பன்னீர் இவற்றை 4 சாமம் அரைத்துக் கடலைபோல் உண்டை செய்து, நிழலிலுலத்தி அனுபானங்களில் உண்ண அனேக உட்டணரோகமெல்லாம் போம்.

திருமூலர் கண்மாத்திரை – இந்துப்பு வராகனெடை–1, திப்பிலி வராகனெடை–2, பீதரோகணி வராகனெடை–3, நந்தியாவட்டைப்பூச்சாறு விட்டு 4 சாமம் அரைத்துக் குளிகை செய்து நிழலிலுலத்தி மேற்படி பூச்சாற்றில் உரைத்துக் கண்ணுக்கிட கண்வியாதிகள் போம்.

சாம்பல்

சில கொடிகள், வேர்கள், பட்டைகள், இறகுகள் போன்றவற்றை முறைப்படி எரித்து அதிலிருந்து கிடைக்கும் சாம்பலை மருந்தாகத் தேன், நெய் போன்ற அனுபானங்களில் இழைத்துக் கொடுக்கப்படும். மயிலிறகைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் குழைத்துக்கொடுப்பதும், வசம்பு முதலியவற்றைக் கருக்கிச் சாம்பலாக்கித் தருவதும் ஈண்டு நினையத்தகும். இவை சில திங்களே வன்மையுடன் இருக்கும்.

சாறு

இலை, வேர், பட்டை, பூ, காய், கனி ஆகியவற்றைத் தனித்தனியாவோ, அல்லது சேர்த்தோ இடித்துப் பிழிந்தாவது, இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தாவது, அரைத்துப் பிழிந்தாவது எடுத்துக்கொள்வதாகும்.

இது அவ்வப்போது செய்துகொள்ள வேண்டுவதாம். மூன்று மணிநேரமே வன்மை பெற்றது. பின் திரிந்துவிடும் தன்மை கொண்டது.

சூரணம்

மருந்துப்பொருள்களை உலர்ந்த நிலையில் இடித்துத் துணியால் வடிகட்டி வைத்துக்கொள்வது சூரணம் எனப்படும். உலர்ந்த பொருளானால் அப்படியே இடித்தும் ஈரப்பதம் கொண்டதானால் உலர்த்தித் தூய்மை செய்து வறுக்க வேண்டியவற்றை வறுத்தும், வறுக்கக் கூடாதவற்றை அப்படியே எடுத்துக் கொண்டு தனித்தனி இடித்துத் (மரஉலக்கை, இரும்புலக்கை

கொண்டு உரலில் இடித்து) துணியில் வடிகட்டி எடைப்படிக் கூட்டிக் கலந்துகொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செய்யப்பெறும் சூரணங்கள் மூன்று திங்கள் வரை பயன்தரவல்லன என்பர்.

அதிவிடயசூரணம் - அதிவிடயம், பெருங்காயம், சிறுநாகப்பூ, திப்பிலி, சாதிக்காய், சாதிபத்திரி, முக்கழஞ்சு, ஆனைத்திப்பிலி கழஞ்சு-5, சுக்கு கழஞ்சு 8, கடுகு, வெள்ளுள்ளி கழஞ்சு-8, நாய்க்கடுகு-10, திப்பிலிமூலம்-10, அபினி கழஞ்சு-2, வறுத்து இடித்துச் சூரணம் செய்து சீனி பலம்-5 கூட்டி விரற்கடி சந்தி அந்தி உட்கொள்ள கிராணி 6ம் போம். அனுபானம் முத்தக்காசு குடிநீர், இஞ்சிச்சாறு, தேநீர்.

இவ்வாறு செய்யப்படும் சூரணங்கள் தூய்மை செய்யப் பெற்றால் சிறப்பாகச் செயற்படும் நுட்பத்தை நம் முன்னோர் கண்டனர். இடித்துத் துணியால் வடிகட்டிய சூரணத்தைப் பால்விட்டுப் பிசைந்து, ஒரு மண்சட்டியில் பாலும் தண்ணீரும் சமமாகக் கலந்தூற்றி, அச்சட்டியின் வாயைத் தூய துணியால் சிறிது பள்ளமாகும்படி கட்டி அதில் மேற்படி பிசைந்த சூரணத்தை பிட்டுமா வைப்பது போல வைத்து மூடி (காற்றுப் புகாமல் துணி சுற்றி வைத்து) அடுப்பேற்றி பால் சுண்டுமளவுக்கு எரித்தெடுக்கவேண்டும். இவ்வாறு வெந்த பிட்டுமாவை வெயிலிலுலர்த்திப் பின் மீண்டும் இடித்துத் துணியால் வடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும். இது சூரணம் சுத்தி செய்யும் முறைகளுள் தலைசிறந்ததாகும்.

திரி (புகை)

இது, மருந்துப் பொருள்களைத் திரவ நிலையில் துணியில் நனைத்துக் காயவிட்டுப் பின் அதனைத் திரியாகத் திரித்துச் சிற்றாமணக்கு நெய்யில் தோய்த்துக் கொளுத்திப் புகை யுண்டாக்கி, அப்புகையை புற மருந்தாகப் பயன்படுத்துதல் எனப்படும்.

புகை உண்டாக்கத் திரிவகையேயல்லாமல் விலங்குகளின் கொம்புச்சீவல், பாம்புச்சட்டை, பன்றிப்பட்டை முதலியவை களை இடித்து நெருப்பிலிட்டுப் புகை உண்டாக்கி (உள்ளுக்கு இழுத்து) அதைப்புற மருந்தாகப் பயன்படுத்துவதும் உண்டு.

பீனிசத்துக்குத்திரி - அரிதாரம், எருக்கம்வேர், பழச்சாறு விட்டரைத்துச் சீலையிற் தடவி ரவியுலத்தி தீபத்தில் கொளுத்திப் புகையை நாசியில் ஏற்றவும். பீனிசம், கபாலசூலை, கரப்பன், செவிநோய் போம்.

துவளை (துவாலை)

மருந்துகள் அடங்கிய நெய்யை, தைலத்தை உடலில் பூசிக் கொண்டு பின்னர் தேய்த்துக் குளித்துவிடும் புற மருந்து துவாலை எனப்படும் தைலம் தேய்த்தபின் சூடுபடுத்துவதும் உண்டு.

வாதத்துக்கு துவளை எண்ணெய் - வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், புன்னை எண்ணெய், எள்ளெண்ணெய் வகைக்குப் படி - $\frac{1}{2}$, வெள்ளுள்ளி, நாபி, வசம்பு, காயம், திரிகடுகு, ஓமம், கிராம்பு, சதகுப்பை, கடுகு ரோகணி, சித்திரமூலம் வகைக்குப் பலம் - $\frac{1}{2}$ இவற்றைக் காடியாலரைத்திட்டு மெழுகுபதமாய் வடித்து மேற்பூசி பிடித்துக் காய்ச்ச வாதம் 80-ம் போம்.

இதுவே சூடு பண்ணாத நிலையில் பூச்சு, லேபனம் என்றும் அழைக்கப்பெறும்.

வாதத்துக்கு லேபன எண்ணெய் - கடுகுரோகணி, சிறு புள்ளடிவேர், ஓமம், கடுகு, கொடிவேலிவேர், வசம்பு, திரிகடுகு, எருக்கு, ஆயிற்பட்டை, முருங்கைவேர், இந்துப்பு, சந்தனம், தேவதாரம், மாவிலங்கு, அரத்தை, மாகந்தி, மஞ்சள் இவற்றைச் சமன்கூட்டி நொச்சி, சதிரக்கள்ளி, எருக்கு இச்சாற்றிலுமரைத்து வாகைச்சாற்றில் குழப்பி உடலுக்கு லேபனம் பண்ண வாதம் எல்லாம் போம்.

நசியம்

மருந்துப்பொருள்களை, தைலங்களை மூக்கின்வழி இழுக்கச் செய்வது நசியம் எனப்படும். இது மாத்திரையாக்கப்பட்ட மருந்துகளை முலைப்பால், சாறுகளில் ஊறவைத்தும், பூக்கள், இலைகளைப் பிழிந்தும் தைலம் முதலியவைகளை மூக்கில் விட்டும் செய்யப்படும் புறமருந்து வகையினதாம்.

பீனிசத்திற்கு நசியம் - நல்லெண்ணெய் பலம்-4, உள்ளிப் பூண்டின் சாறு, அகத்தியிலைச்சாறு துளசியிலைச்சாறு வகைக்கு நீர் பலம்-2, கூட்டிக் காய்ச்சி வடித்து, இதில் இந்துப்புப்பொடி, குங்கிலியம், குங்குமப்பூ மூன்றும் பொடிபண்ணி வராகனெடை கூட்டிப் பொடியிட்டு நசியமிட பீனிசமெல்லாம் போம்.

நெய்

எண்ணெய், தைலம் ஆகிய மருந்து வகைகளைப் போன்றதே இது. எள் தொடர்பை விட்டுப் பிற பொருள்களினின்று எடுக்கப் பெறும் நெய் - நெய் எனச் சுட்டப்பெறும். தைலம் இறக்குவது போலவே சரக்குகளுடன் சொல்லப்பட்ட நெய்யைக் கூட்டி எரித்து வடிப்பதாகும். இதுவும் நோய்ப்பெயராலும், மருந்துப் பொருட்பெயராலும் மேகநெய், வல்லாரை நெய் என அழைக்கப்பெறும்.

இது பிறப்பு வகையால் பல வகைப்படும், கொதிநெய் - ஆமணக்கு போன்றவற்றின் விதைகளை வறுத்து, இடித்துத் தண்ணீரில் கலந்து கொதிக்க வைத்து எடுக்கப்பெறுவதாம். தண்ணீருக்கு மேல் நெய் திரண்டுவரும். உருக்கு நெய் வெண்ணெய், கொழுப்பு, முட்டைக் கரு ஆகியவற்றை உருக்குவ தால் பெறுவதாம். புடநெய் அல்லது குழிப்புடநெய் - சேங் கொட்டை, சிவனார் வேம்பு போன்ற பொருள்களைச் சொல்லப் பட்ட முறையில் அடியில் சிறு சிறு துளைகள் உள்ள குடத்தில் போட்டு, மேல் மூடியைச் சீலை செய்து (சீலை செய்தல் - காற்றும் புகாமல் துணி, செம்மண் கொண்டு மூடுதல்) அடியில் பீங்கான் கிண்ணம் இருக்குமாறு பள்ளத்தில் வைத்துப் புடமிடக் குழியில் நெய் வடியும். இவ்வாறு புடமிட்டெடுக்கப்பெறும் நெய்யே புடநெய் எனப்படும். தீநீர்நெய் - சந்தனம் போன்ற மணமுள்ள மரங்களைத் தாவரப்பொருள்களைத் தூளாக்கிப் பானையிற்போட்டு, தண்ணீர் விட்டுப் பட்டிகட்டி இறக்குகிற தீநீரில் பிறப்பது.

சூரியபுடநெய் — எள்ளுடன் சில மருந்துப் பொருட்களைச் சேர்த்தரைத்த மருந்தை நல்ல வெயிலில் வைக்க, அச் சூட்டால் இளகித் தோன்றும் நெய்.

மண் நெய்	—	பூமிக்குள்ளிருந்து தானே கொப்பளித்துத் தோன்றும் நெய்.
மர நெய்	—	மரத்தை வெட்டப்படும் இடத்திலிருந்து வடியும் நெய்.
சிலைநெய்	—	உயரிய மலைகளிலிருந்து வழியும் ஒரு வகை நெய்.
நீர்நெய்	—	புழுகுச்சட்டம் முதலியவற்றை நன்றாக நசுக்கித் தண்ணீரில் ஊற வைப்பதால் தோன்றும் நெய்.
ஆவி நெய்	—	மட்டிப்பால், சாம்பிராணி முதலியவற்றை நெருப்பில் காய்ந்த மண்சட்டியில் போட்டு அதன் மேல் தண்ணீர் நிறைந்த தட்டு ஒன்றை வைக்க அந்தப்புகை படிவதால் தோன்றும் நெய்.
சுடர் நெய்	—	கந்தகம் முதலியவற்றை சொல்லப்பட்ட நெய்யால் அரைத்து ஒரு புதுத்துண்டைத் தண்ணீரில் நனைத்துக் கசக்கி (கஞ்சியைப் போக்க) உலர்த்தி – அந்தத்துணியில் தடவி, இரும்புக் கதிரில் சுற்றிக்கூட்டி ஒரு முனையில் கொளுத்திப் பிடிக்கச் சுடருடன் இறங்கும் நெய்.
பொறி நெய்	—	செக்கு முதலிய கருவிகளால் ஆட்டி எடுக்கப் பெறும் எண்ணெய், நெய் முதலியன பொறி நெய் எனப் பெறும்.

இவை தலைக்குத் தடவப்பயன்படுவன, குடிக்கப் பயன் படுவன, உடலில் தடவப்பயன்படுவன, உடற் தொளைகளின் வழி செலுத்தப்பயன்படுவன எனப் பயன்பாட்டாலும் பல வகையாக அழைக்கப்பெறும். இவை ஓராண்டு வரை வன்மை பெற்றிருக் கும். சான்றாக:

நாயுருவி நெய் - நாயுருவி பலம் 100, கொடிவேலி வேர், சிவதைவேர், பொன்முசுட்டை வேர், சிறுகாஞ்சோறிவேர், ஆயிற்பட்டை, புங்கம்பட்டை, அரசம்பட்டை, மருள்கிழங்கு, பிரண்டைவேர், காட்டுக்கரணைக்கிழங்கு, புளிநரளைக்கிழங்கு, வகைக்குப் பலம்-10 இடித்து 8 மரக்கால் நீர் விட்டு (4 க்கு 1) மரக்கால் -2 வடித்து, திரிகடுகு, வாளம், சிவதைவேர், இந்துப்பு. மஞ்சள், திரிபலை, கடுகு வகைக்குப் பலம்-1 பால்விட்டரைத்து நெய்விட்டுப் பதத்தில் வடித்துக்கொள்ளவும். பசுநெய் மரக்கால்-1 சேர்க்கவும். இந்த நெய்யை உட்கொள்ள மூலமெல்லாம் போம்.

பற்பம்

பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களையோ, பாஷாணங்களையோ, பிற ரசங்களையோ குறிப்பிட்ட இலைச் சாறுகளிலோ உப்புப்புகை நீரிலோ, செயநீரிலோ அரைத்துப் புடமிட்டேனும், வறுத்தேனும், எரித்தேனும், ஊதியேனும் வெளுக்கும்படி செய்து எடுக்கும் மருந்து வகையாம். இது நீறுபூத்ததுபோல் இருப்பதால் நீறு, வெண்ணீறு, எனவும் அழைக்கப்படும். சித்தமருந்துகளில் இதுவே அதிக காலம் வன்மை பெற்றதாகும். சில பற்பங்கள் 100 ஆண்டுகள் வரையிலும் வன்மை பெற்றிருக்கும் என்பர்.

பொடி

மருந்துப் பொருள்களைச் சொல்லிய அளவுக்குத் தனித் தனியேனும், கலந்தேனும் நிழலுலர்த்தி இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்வது. இது சூரணம் போலவே சில திங்கள்களே வன்மை பெற்றிருக்கும்.

தந்தப்பொடி - அரக்கு, சீனாகாரம், துரிசு, கடுக்காய், மாசிக்காய் வகைக்கு வராகனெடை - 1, அரப்பொடி, தான்றிக் காய் வகைக்கு வராகனெடை - 3 சம்பழச்சாறு விட்டரைத்துப் பொடிபண்ணி பல் விளக்கி வர புழுவெல்லாம் சாகும். பல்நோய் பலவும் தீரும்.

மணப்பாகு (சர்பத்)

சொல்லப்பட்ட மருந்துப் பொருள்களையோ, வேர் களையோ, பூக்கள், பழச்சாறுகள், கொடிகளையோ தனித்தனிக் குடிநீர் செய்து மண் சட்டியில் விட்டு, அதற்குத் தகுந்த கற்கண்டோ, வெள்ளைச் சர்க்கரையோ, சர்க்கரையோ எடைப்படி சேர்த்து காய்ச்சி, மணம் வரும் பக்குவத்தில் இறக்கி ஆறவைத்துப் பயன்படுத்துவதாகும். இப்பாகு ஆறு திங்கள் வரை கெடாதிருக்கும் வன்மையுடையது.

மெழுகு

மெழுகு பதத்தில் செய்யப்படும் மருந்துகள் மெழுகு எனப் படும். அரைப்பு மெழுகு, சுருக்கு மெழுகு என அது இருவகைப் படும். இரசக்கலப்புள்ள மருந்துப் பொருள்களை கடைச்சரக்கு களுடன் சாறு, தேன் போன்றவற்றில் அரைத்து மெழுகுபதத்தில் எடுத்துவைப்பது அரைப்பு மெழுகு எனப்படும். இரசக்கலப்புள்ள பொருள்களை, பாடாணங்களை உரிய சாறுகளில், நெய்ப்புப் பசையுள்ள தைலங்களில் சுருக்குக்கொடுத்து அவை இளகும் பதத்தில் குழிக்கல்லில் வைத்து அரைத்து எடுப்பது சுருக்கு மெழுகு எனப்படும். இது ஐந்தாண்டுகள் வரை வன்மை கொண்டதாக இருக்கும். சான்றாக:

அண்டவாத மெழுகு - கோழிமுட்டை 3 வெண்கரு, மஞ்சட் கரு இரண்டும் உடைத்து பீங்கானில் விட்டு கழச்சிப்பருப்பு பலம் ½, பொடிபண்ணி அதிலிட்டு லிங்கம் வராகனெடை-1, ரச கற்பூரம் வராகனெடை-1 பொடிபண்ணி பீங்கானிலிட்டுக் கிளறி ஒரு நாள்-30 நாழிகை வெயிலில் வைத்துக்கிண்டி அதனை ஒரு சட்டியிலிட்டு அடுப்பில் வைத்துத் தீயாமல் கிளறி பசுவின் நெய் பலம்-1 விட்டு கிண்டி (நீர்ச்சுண்டுமாறு) மெழுகுபோல் தீயாமல் வரும்போது எடுத்து வழித்துத் கல்வதிட்டு அரைத்து ஒரு டப்பியிலடைத்து ஒரு வேலைக்குச் சுண்டைக்காயளவாக 3 நாள் அந்தி சந்தி உண்டுவர அண்டவாய்வு போம்.

வடகம்

மருந்துப் பொருள்களைத் தனித்தனியே இடித்து துணியில் வடிகட்டி அத்துடன் நாட்டுச்சர்க்கரை அல்லது வெல்லம்

சொல்லிய அளவில் பாலும் தண்ணீரும் கலந்து ஊற்றிய சட்டியிலிட்டு பிட்டு வைத்து எடுத்தபின், அது சூடாறுமுன்னே உரலிலிட்டு இடித்து வேண்டியளவு உருட்டி உலர்த்திக் கொள்வதாகும். இதுவே, வெல்லத்தைப் பாகாக்க சூரணங்களைத்தூவி உருட்டி உலர்த்தி எடுக்கின்ற முறையிலும் செய்யப்பெறும்.

பீனிச வடகம் - திரிகடுகு, தாளிசபத்திரி செவ்வியம், புளி, புளியம்பூ, சங்கம்வேர், அமுக்கிராவேர், ஏலம். லவங்கப்பட்டை, மருக்காரையிலை, வன்னி இவற்றைச் சமனிறை சூரணத்தில் பழ வெல்லம் பலம் 48 கூட்டிப் பாகாக்கிப் பாகில் சூரணம் தூவி வடகம் பண்ணி அந்தி சந்தி யுண்ண பீனிசம் போம்.

வேதுவிடல்

மருந்துப்புகையை, ஆவியை உள்ளே வாங்கி வியர்வை உண்டாக்கிக் கொள்வதே வேதுவிடல் எனப்படும். இது வெந்நீரிலாவது, நொச்சி, மஞ்சள்பொடி முதலியவையிட்டுக், காய்ச்சிய குடிநீரிலாவது செங்கல்லைச் சிவக்கக்காய்ச்சி அதிலிட்டு அதனின்றெழும் ஆவியை முக்காடிட்டுப் பிடிப்பதாகும். இது வேப்பநெய்யில் சரக்குகளைத் தோய்த்த திரியைக் கொளுத்தி அதனின்றெழும் புகையை உள்ளுக்கிழுத்து வேர்வை உண்டாக்கிக் கொள்ளும்படி பிற வகையிலும் செய்யப்படும்.

வாதத்துக்கு வேதுவிடல் - எருக்கு, நொச்சி, சதுரக்கள்ளி, திருகுக்கள்ளி சிற்றரத்தை, மாவிலங்கை. கருநொச்சி,சாரணை, மஞ்சள், சரக்கொன்றைப்பட்டை, தேவதாரம், கோட்டம், இந்துப்பு, சித்திரமூலம், திரிகடுகு, முருங்கைவேர், வாய்விளங்கம், சிறுபேய்த்திம்மிட்டி, மிளகரணை, கண்டங்கத்திரி, முதுவேப்பம்பட்டை, வாகைப்பட்டை, குத்துக்காரன்சம்மட்டி, இதுகளைச் சமனாக இடித்து ஆட்டுப்புழுக்கையும் இடித்துக்கூட்டி நீர்விட்டு அட்டபாகமாகக் காய்ச்சி வேதுவிட வாதமெல்லாம் போம்.

—O—

பின்னிணைப்பு: 3

அருஞ்சொல்லடைவு

[எண்கள் - பக்க எண்கள்]

அகத்தியர் 4
அகத்தியர் குழம்பு 17
அகத்தியர் சாலத் திரட்டு 4
அகத்தியர் பாலவாகடத் திரட்டு 5
அகத்தியர் பூரணம்-400 14
அகத்தியர் வாலை வாகடம் 4
அகத்தியர் வைத்திய காவியம் 4,26
அகத்தியர் வைத்திய சூத்திரம் 8
அகத்தியர் வைத்திய பூரணம் 4
அகப்பை 133
அக மருந்துகள் - 32 131
அஞ்சு சுண்ணம் 7
அஞ்சு நீர் 7
அட்ட பாகம் 116,154
அட்டைவிடல் 132
அடிபடுதல் 141
அடை 131
அந்தி சந்தி 56,63,68,69, 73,84,86,88, 92,93,99,100, 103,106,145
அநுபானம் 16,63,102
அப்பர் 27
அபத்தியம் 89
அம்மி 132
அமாவாசைப் புடம் 137
அமிலத்தன்மை 30
அமிலம் 30
அயிரை 140
அரைத்தல் 11,91,125,128
அரைப்பு மெழுகு 153
அல்லோபதி 130
அவபத்தியம் 141
அவித்தல் 104
அவிழ்தம் 101
அழுகல் சாணம் 134
அறிவியல் அறிஞர்கள் 13
அறிவியல் பார்வை 4
அறுவை 132
அனுபானம் 31,80,103,127, 138,147,148
ஆகம முறை 132
ஆகாத பத்தியம் 89
ஆகாத பதார்த்தம் 88
ஆசனம் 103
ஆட்டுச் சாணம் 133
ஆடு 140

ஆதியங்கடவுள் 7
ஆமை 46,140
ஆயுர்வேதம் 145
ஆழாக்கு 103,129
ஆனி 41
இச்சாபத்தியம் 81,83,85,86, 88,89,126,139
இம்மி 26
இரகசியமுறை 10
இரசாயனம் 79,142
இரட்டைக் கொம்பு 17
இரத்தினச் சுருக்கம் 14
இராமதேவர் 4
இராமதேவர் சூத்திரம் 9
இராஜன் பாபு 25
இருதூணி 39
இருப்புச் சட்டி 115
இரும்புலக்கை 147
இலந்தை விதையளவு 102
இலேகியம் ....131,142....
இளகாமல் கிண்டுதல் 105
இளம்பதம் 40
இளவறுப்பு 88,92,105
இறைச்சி 66
இனிப்பு வடகம் 62
ஈரச்சீலை 126,145
உட்களி 131
உடல் ஒளி 48
உடற்கட்டு 35,43
உடும்பு 46,89,140
உணவுப்பாதை 95
உண்டை 74,98
உண்டை பண்ணுதல் 100
உணவே மருந்து - மருந்தே உணவு 4
உத்தமம் 133
உப்பில்லாபத்தியம் 76,88, 91,118,139,141
உப்பு 2,77....
உமிப்புடம் 136
உயிரச் சத்துகள் 71
உயிர்ப் பொருள்கள் 130
உரி 129
உருக்கிக்குலைத்தல் 123
உருக்கு 131
உலை 105
உலோகங்கள் 130
உழக்கு 129
உழலை 141
உழுவை 46
உள்ளான் 46,139
உறிஞ்சல் 132
ஊத்தை திரண்டாப்போல 112,144
ஊதல் 132
ஊதுமுறை 7
ஊர்க்குருவி 140
ஊறல் 92
ஊறவைத்தல் 43
எட்டிலொன்றாக்குதல் 36,42,44,48,49
எடை 17
எரித்துக் காய்ச்சல் 118
எரிதணல் 100
எரு 132
எருமைச்சாண வறட்டி 133

எருவிற்புடமிடல் 102
எலும்பு 79
எலுமிச்சங்காயளவு 117,125
எழுதுவித்தவர் 13
எழுத்து நிலை 16
எழுநூற்றுச் சில்வானம் 7
எள்ளுப் பிரமாணம் 141
ஏக மூலிகுணம் 14,29
ஏடுடையார் பெயர் 13
ஏடெழுதிய காலம் 13
ஏடெழுதியோர் பெயர் 13
ஏட்டின் மூலம் 13
ஏட்டு வடிவம் 23
ஏரி மீன் 140
ஒத்தடம் 109,114,118,144
ஒற்றடம் 132,144
ஓலைச்சுவடி 1
ஔவை நடராசன் 25
கக்கிவிடுதல் 81
கசப்புடம் 91,136
கட்டு 131
கட்டுதல் 132
கட்டைப்புத்தகம் 14
கடமான் 140
கடலை போல் உண்டை 93
கடாயம் 42,48,58,82
கடிவாய் 74
கடும்பத்தியம் 139,141
கடைச்சரக்கு 30,153
கடைதல் 106
கருகாமல் பொடித்தல் 101
கண்ணையன் 26
கண் மாத்திரை 14
கணபதி 77
கதலியாக்கினி 134
கப நோயாளி 138
கபாடலேகியம் 105,106
கம்மாறு 44
கமலாக்கினி 114,134
கயல்மீன் 141
கரண்டி 108
கரண்டி நிறை 76,90
கரப்பன் பொருள் 24
கரப்பன் வஸ்து 86
கருக் குறவை 139
கருக வேகுதல் 100
கருகும் வரை வறுத்தல் 60
கருங்கல் உரல் 132
கருப்புப் புளி 12
கருப்பை 76
கல்வம் 58,102,119,153
கல்லுரல் 86
கலசம் 91
கல்ப்பு சாணம் 133
கலம் 129
கலிக்கம் 132
கலைமான் 139
கலோரி அளவு 12
கவசம் 100
கவுதாரிப் புடம் 135
கழஞ்சியளவு 48
கழஞ்சு 17,22,46,55,92,96
129
கழஞ்சு நிறை 76
களி 132
களி கிண்டுதல் 82,101
களிம்பு 132
கற்கமிடுதல் 68

கற்கவகை 113
கற்சட்டி 93
கற்பூரவாசம் 67
கனப்புடம் 136
கன்னிராசி 1
காசெடை 115,118,129,144
காடாக்கினி 134
காடி 80,82,112
காடியாலரைத்தல் 118,149
காடை 89,139,140
காடைப்புடம் 135
காட்டுப்புறா 139
காப்புச் சட்டம் 13
காப்பேடு 15
காய்கறி 80
காயசித்தி 37,38,43
காரம் 29,124,132....
